# கீதா மகரந்தம்

**சுவாமி வித்யா பிரகாஸானந்தா**



தமிழாக்கம்:

பேராசிரியர். கே. சர்வோத்தமராவ்

திருமலை திருப்பதி தேவஸ்தானம் வெளியீடு.

# கீதா மகரந்தம்

[ சுவாமி வித்யா பிரகாஸானந்தா ]

## நான்காம் பகுதி

***(10, 11, 12, 13, 14, 15 அத்தியாயங்கள்)***

**தமிழாக்கம் :**

பேராசிரியர். கே. சர்வோத்தம ராவ்

திருமலை திருப்பதி தேவஸ்தானம்,

திருப்பதி.

**GITA MAKARANDAM - Vol. IV**

By

**SWAMY VIDYAPRAKASHANANDA**

*Tamil Translation*

Dr. K. SARVOTHAMA RAO

T.T.D. Religious Publication Series No. 575

© All Rights Reserved

First Edition : 2000

Copies : 2000

Price :

Cover Page : Sri P. Narayanagiri Dattu

*Published by*

**Dr. I.V. Subba Rao, I.A.S.,**

Executive Officer,

Tirumala Tirupati Devasthanams,

Tirupati - 517 507

*Printed at*

Keerthi Offset

103, Prakasam Road, Tirupati

# பதிப்புரை

''எதனைத் தின்றால் பித்தம் தெளியும் '' என்ற நிலையில் மனிதன் இன்று விளங்குகின்றான். ஆம், பிரச்சனைகளே அவனது வாழ்க்கையாக விளங்கிவிட்டது. எது பிரச்சனை? பிரச்சனைகளுக்கு யார் காரணம்? பிரச்சனைகள் தீர வழி என்ன? எனும் கேள்விகளை மனிதன் ஒருநாளும் நடுவுநிலையில் நின்று தன்னைக் கேட்டுக் கொண்டதில்லை. அதுபோது அவனே அவனுக்கு ஒரு பிரச்சனையாகத் திகழ்கின்றான்! அவ்வாறின்றி ஒருமுறை அமைதியாக அவன் தன்னைப்பற்றி அறிந்துகொள்ள முயற்சித்தானாயின் வாழ்க்கை அவனுக்கு ஒரு பூந்தோட்டமாக விளங்கிவிடும். அன்பு, இரக்கம், தியாகம், பொறுமை, கடமை, நேர்மை எனும் பண்புக்கூறுகள் அவனுள் இல்லாவிட்டால், அவற்றை தன்னுள் வளர்த்துக்கொள்ளாவிட்டால், பொறாமை, கோபம், ஏமாற்றம், தோல்வி ஆகியனவே அவனிடம் குடிகொள்ளும். இதனால் உறவுகள் கசந்திடும்; காண்பனவும், கேட்பனவும் எரிச்சலையே தரும். இறுதியில் இவற்றின் விளைவாக அவன் பிறர்க்கும் தனக்கும் பிரச்சனைகளின் மொத்த உருவமாக இருந்திடுவான்.

ஏதோ மனிதனின் பிரச்சனைகள் இந்த யுகத்தில் மட்டுமே ஏற்பட்டன என்பது இல்லை. உலகம் தோன்றியது முதல், அவனுள் ஆசைகள் பிறந்தது முதல், அவ் ஆசைகளை அடக்கத் தவறியது முதல் பிரச்சனைகள் தோன்றின என்றே கூறவேண்டும். ஆம் ஆசைகளை அடக்கத்தவறியதால் கடமையை மறந்தான்; கோபத்தைத் துறக்க மறந்ததால், பெருமையை இழந்தான்; அன்பினைக் காட்டத் தவறியதால் வன்முறைக்கு வழி தந்தான். இதனால் தவறுகளை செய்து கொண்டே போக, சுயநலத்திற்கு அடிமையாகி தீவிரவாதத்திற்குத் துணையாகி ஏமாற்றங்களுக்கு இருப்பிடமாகி இறுதியில் அவன் ஒரு 'சமூக பிரச்சனை'யாக விளங்கிவிட்டான்.

அத்தகு மனிதனை திருத்திடும் வகையில் அவனுள் இறை நம்பிக்கையினையும், தன்னம்பிக்கையினையும், கடமை உணர்வினையும் விளங்கச் செய்து அவனுக்குத் தியாகத்தின் பெருமையினையும், அன்பின் அருமையினையும், தொண்டின் சீர்மையினையும், ஆன்றோர் மற்றும் சான்றோர் நட்பின் அவசியத்தையும் உணர்த்தி அவன் தன் பிறவி பயனுள்ளதாகத் திகழவே அக்கண்ணபெருமான்'கீதை' எனும் வாழ்க்கை இலக்கண அமுதினை, போர்க்களத்தில் கடமையை மறந்து, பாசத்திற்கும் இடையில் அகப்பட்டு அமைதி இழந்து, குழப்பத்தின் உச்சியில் இருந்த அர்ச்சுனனுக்கு உபதேசிக்கும் முகத்தான், நமக்கு அளித்துள்ளான்.

அத்தகு பெருமைமிகு கீதைக்குக் காலம் காலமாக ஆசார்யர்களும், அடியார்களும் அறிஞர்களும் பல மொழிகளில் பல விளக்கவுரைகளை வழங்கி அக்கீதைக்கு உயர்வு தந்து தங்களை இனங்காட்டிக் கொண்டனர்.

இனிப்பு என்றாலே நமக்கு உடன் நினைவுக்கு வருவது தேன் ஆகும். பல மலர்களிலிருந்து சேகரித்துப் பெறப்படும் தேன் ஒரு மருந்தாகவும் பயன்படுகிறது. அதை உண்பதற்கு வயது வரம்பில்லை அத்தகு தேனாக - இந்து சமயத்தேனாக - ஒப்பற்ற ஆன்மீகத்தேனாக - வாழ்க்கை இலக்கணத் தேனாக கீதைக்கு ஓர் அருமையான விளக்கவுரையினை'கீதா மகரந்தம்' எனும் தலைப்பில், திருப்பதி அடுத்துள்ள திருக்காளத்தி நகரை ஒட்டி ஓடிடும் ஸ்வர்ணமுகி நதிக்கரையில் அமைந்துள்ள ஸ்ரீசுகப்பிரம்ம ஆஸ்ரமத்தின் ஸ்தாபகரும், அதன் தலைவருமாக விளங்கி ஒப்பற்ற சமயத்தொண்டினைத் தன் இறுதி மூச்சு உள்ள வரை மேற்கொண்டு, அண்மையில் மறைந்த ஸ்ரீவித்யா பிரகாஸானந்த சுவாமிகள் நமக்கு வழங்கி அதனால் படித்து அறிந்து நாம் உயர்ந்திட , நமக்கு ஓர் அரிய வாய்ப்பினை நல்கியுள்ளார். அவர்தம் மூல நூலான இத்தெலுங்கு கீதா மகரந்தத்தினை டாக்டர் எம். சர்வோத்தமராவ் அவர்கள் தமிழில் தெளிவாகவும், எளிமையாகவும் மொழிபெயர்த்து தமிழர்களின் 'கீதா தாகத்' தினை தீர்த்து வைத்துள்ளார் எனில் அது மிகையாகாது. இந்நூலுக்கு நூலாசிரியர் தந்துள்ள முன்னுரையே ஒரு நூல் அளவில் வெளியிடும் அளவிற்கு கீதையின் பெருமையும், சிறப்பும் பரக்கப்பேசப் பெற்றுள்ளன. கீதை எனும் மாளிகையின் அடித்தளமாக சுவாமிகளின் முன்னுரை அமைந்துள்ளது.

வேதங்களின் சாரமாகத் திகழ்ந்திடும் கீதையின் பெருமை பேசும் இக்கீதா மகரந்தம் எனும் இந்நூலினை திருப்பதி தேவஸ்தானம் தன் வெளியீடாக வெளிக்கொணர்வதில் மிகவும் பெருமிதம் கொள்கிறது. இந்நூலின் முதல் இரண்டு மூன்று பகுதிகள் ஏற்கெனவே வெளிவந்துள்ளன. தற்போது 10, 11, 12, 13, 14, 15 அத்தியாயங்கள் கொண்ட நான்காம் பகுதியாக இந்நூல் வெளிவந்துள்ளது. ஒவ்வொரு தமிழர் வீட்டிலும் இருக்க வேண்டிய இந்நூலினை அனைவரும் பெற்றுப் பயன்பெறுவார்களேயாயின் அதுவே தி.தி. தேவஸ்தானம் தனது சமய நூல் வெளியீட்டுப் பணியில் தன்னை அர்ப்பணித்துக் கொண்டதில் முழு வெற்றி அடைந்துள்ளது என்றே கருதும்.

**செயலாட்சித்தலைவர்,**

**திருமலை திருப்பதி தேவஸ்தானம்.**

ஓம்

# ஸ்ரீ பகவத் கீதை

## பத்தாம் அத்தியாயம்

## விபூதி யோகம்

### இந்த அத்தியாயத்தின் பெயர் விளக்கம்

'விபூதி யோகம்' - விபூதி என்றால் ஐசுவரியம், மகிமை, அதிசயம். இவ்வுலகில் அசையும் அசையாப் பொருட்களனைத்தும் இறைவனின் புறத்தோற்றமேயாகும். எனவே அவையனைத்தும் அவனது விபூதியேயாகும். அவனது சிறந்த மகிமையேயாகும். கடவுளின் வைபமான இவ்வுலகின் நிலைத்திருக்கும் பொருள்கள், மனிதர்கள் ஆகியோரைப் பற்றி வர்ணிக்கும் அத்தியாயமாதலால் இதற்கு விபூதி யோகமென்ற சிறப்புப் பெயர் உண்டாயிற்று.

### இந்த அத்தியாயத்தில் கூறப்பட்டுள்ள முக்கிய விஷயங்கள்

*1.* இறைவனது விபூதிகளின் வர்ணனை, அவற்றையுணர்வதால் ஏற்படும் நன்மை *(1 முதல் 7 சுலோகங்கள் வரை)*

2. பக்தியோகத்தினை அதன் பலன் மகிமைகளைக் கூறி நிரூபித்தல் *(8 முதல் 12 வரை)*

3. அர்ஜுனன் கண்ணனைத் துதித்தல், அவரது விபூதியையும் யோகத்தையும் விரிவாக வர்ணிக்குமாறு வேண்டுதல் *(13 முதல் 18 வரை)*

*4. இறைவன் செய்யும் விபூதி வர்ணனை (19 முதல் - 42 வரை)*

## இவ்வத்தியாயத்திற்கும் முன் அத்தியாயத்திற்குமுள்ள தொடர்பு

*7, 8, 9 ஆம் அத்தியாங்களில் ஆங்காங்காங்கே பகவான் தனது விபூதிகளைப் பற்றிச் சுருக்கமாகக் குறிப்பிட்டிருக்கிறார். பக்தர்கள் உபாசிப்பதற்கேற்ற வகையில் இவ்வத்தியாயத்தில் தனது வைபங் களை விரிவாக எடுத்துரைக்கும் பொருட்டுத் தொடங்குகிறார். இத்த கைய இறைவனின் விபூதியினை அறியும் மெய்யறிவால் எங்கும், எதிலும் இறைவனைக் காணும் பாங்கு ஏற்பட்டு அதனால் பக்தி நன்கு செழித்து வளர்ந்து, முன் அத்தியாயத்தின் இறுதியில் சொல் லப்பட்ட, 'மன்மனா பவமத் பக்தோ' என்ற இறையுணர்வு நன்கு பெருகும். அத்தகைய நிரந்தர ஆன்மீகப் பார்வைக்காகவே இறைவ னின் விபூதியைக் குறித்த அறிவு துணைப்படும். ஆகையினால் இவ் விபூதி யோகம் ஆரம்பிக்கப்பட்டது. இதற்கு முன் தான் சொல்லிய விபூதிகளையே தான் விரித்துக் கூறப்போவதாக முதலில் பகவான் அர்ஜுனனுக்குத் தெரிவிக்கிறார்-*

### ஸ்ரீ பகவானுவாச

*பூய ஏவ மஹாபாஹோ ச்ருணுமே பரமம் வசஹ!*
*யத்தே அஹம் ப்ரீயமாணாய வக்ஷ்யாமி ஹிதகாம்யயா!! - (1)*

### ஸ்ரீ பகவான் சொன்னது

**சொற்பொருள்**

*மஹாபாஹோ!-பெருந்தோளுடையாய்! ப்ரீயமாணாய-(எனது மொழியில்) விருப்பமுடைய, தே-உனக்கு, ஹிதகாம்யயா- நலமளிக்கக்கூடிய வகையில், பூயஹ ஏவ-மறுபடியும், யத்-எந்த, பரமம்-மேன்மையான, வசஹ-வாக்கியத்தினை, அஹம்-நான், வக்ஷ்யாமி-சொல்லக் கருதியுள்ளேனோ, மே-என்னுடைய (த்தவ சஹ-அவ்வாக்கியத்தினை) ச்ருணு-கேள்.*

**கருத்துரை**

*பெருந்தோள்களுடைய அர்ஜுன! எனது மொழியைக் கேட் கும் விருப்பமுள்ள உன் நன்மையைக் கருதி இனி நான் சொல்லப் போகும் சீரிய சொற்களைக் கேட்பாயாக!*

**விளக்கம்**

குருநாதர் கூறுபவற்றை சீடன் மிக்க ஈடுபாட்டுடன் விரும்பிக் கேட்பின் குருவிற்கு ஊக்கம் மிகுந்து கருணையுடன் இன்னும் அதிக அளவில் மேன்மை பொருந்திய சீரிய போதனைகளைச் செய்வார். எனவே ஈடுபாடு மிகவும் அவசியம். ஈடுபாடின்றிக் கேட்பது கேட் காததற்கு ஒப்பேயாகும். அளிக்கப்படும் போதனையும் அளிக்கப்ப டாததற்கு ஒப்பேயாகும். அர்ஜுனன் பகவானது சொற்களை அமு தத்தைப் பருகுபவன் போல் மிகுந்த ஈடுபாட்டுடன் விரும்பிக் கேட் டான். எனவேதான் 'ப்ரியமானுடா' என்ற சொல் கையாளப்பட்டது. ஸ்ரீ கிருஷ்ணரின் போதனை அர்ஜுனனின் வேதனையைப் போக்கி யது. எனவேதான் அவனுக்குப் பகவான் சொல்வதைக் கேட்பதில் விருப்பம் மிகுந்தது. இதனையுணர்ந்தே பகவானும் இறைவனது விபூதியினை உபதேசித்தல் நன்றெனக் கருதி மீண்டும் உபதேசிக்கத் தொடங்குகிறார். (பூயஹ-மீண்டும்) ஆன்மீக வித்தையினை மறுபடி யும் மறுபடியும் பலமுறை கேட்டு, கேட்டதை நன்கு நினைத்துப் பார்த்து, அதனைக் குறித்தே (தியானம்) எண்ணி வந்தால் அது மனத் தில் நன்கு பதிந்து விடும். இதற்கு முன் சொன்னதையே மறுபடியும் பகவான் சொல்லக் கருதுவதற்கு இதுவுமொரு காரணமாகும். இப்ப டிப்பட்ட பாவ புண்ணிய விசாரணையினால் கேள்வி ஞானத்தி னால் இறைவனின் தன்மை இதயத்தில் நன்கு பதிந்துவிடும் என்ற காரணத்தால் இங்குச் சொன்னதையே மீண்டும் சொல்லுதல் என்பது நிகழ்கிறது.

'ஹித காம்யயா'-ஆர்வமுடைய சீடனுக்கு குரு நன்மை செய் யக் கருதுவார். எல்லாவற்றையும் விட மிக்க நன்மையைத் தருவது பந்தத்தினின்றும் விடுபடுதல் என்பதே, அது உலகப் பொருட்க ளுக்கு அளிக்கப்படும் முக்கியத்துவத்தால் ஏற்படாது. அது ஆன்மீக ஞானத்தால் மட்டுமே நிகழக்கூடியது. எனவே அர்ஜுனனுக்கு மிகச் சிறந்த நலனை அளிக்கக் கருதி பகவான் இறைத்தத்துவத்தைப் போதிக்கத் தொடங்கினார்.

'பரமம் வசஹ'-என்று சொல்வதால் கண்ணபிரான் கூறும் மொழிகள் சாதாரணமானவையல்ல வென்பதும், பண்டை நாளிலி ருந்தே நம்மைத் தொடர்ந்து வரும் அஞ்ஞானப் பேரிருளை அகற் றும் ஆற்றலுடைய மொழிகள் என்பதும் புலனாகின்றது. எனவே அறிவாளியானவன் வீணான உலகியல் சொற்களைக் கேட்டு வாழ்

நாளை வீணாகக் கழிக்காமல், பிறவித்துன்பத்தினின்றும் விடுபட வழிகாட்டக்கூடிய சிறந்த மொழிகளைக் கேட்க வேண்டும்.

**வினா :** பகவான் கூறப்போகும் வாக்கியங்கள் எப்படிப்பட்டவை?

**விடை :** மிகச் சிறந்த மேன்மையான வாக்கியங்கள்.

**வினா :** பகவான் அர்ஜுனனுக்கு இறை ஞானத்தை ஏன் மீண்டும் போதிக்கக் கருதினார்.

**விடை :** இறைவனது மொழிகளில் அர்ஜுனன் மிகுந்த ஆர்வம் காட்டினான். எனவே உலக நன்மையைக் கருதி பகவான் சொல்லத் தொடங்கினார்.

**வினா :** உலகிலுள்ள எல்லா நன்மைகளைக் காட்டிலும் எது சிறந்தது?

**விடை :** பரம்பொருள் ஞானத்தைப் பகுத்தறிவதேயாகும்.

*நமே விதுஹ ஸுரகணாஹ்ப்ரபவம் மஹர்ஷயஹ!*
*அஹமாதிர்ஹி தேவானாம் மஹர்ஷீணாம் சர்வஷஹ!! - (2)*

**சொற்பொருள்**

மே-என்னுடைய, ப்ரபவம்-தோற்றத்தை (அவதார ரகசியத்தை பெருமையை) ஸுரகணாஹ்-தேவர் குழுமங்கள், மஹர்ஷயஹ-மகரிஷிகளும், ந விதுஹ்-அறிய மாட்டார்கள், அஹம்-நான், தேவானாம்-தேவர்களுக்கும், மஹர்ஷீனாம்-மகரிஷிகளுக்கும், ஸர்வஸ்ஹ-எல்லாவிதத்திலும், அதிஹி-முதன்மையானவன் (காரணமானவன்) அல்லவா?

**கருத்துரை**

என்னுடைய தோற்றத்தை! அவதார இரகசியத்தை அல்லது தன்மையை) தேவர்களும், மகரிஷிகளும் உணரார். ஏனெனில் அத்தேவர்களுக்கும் மாமுனிவர்கட்கும் முற்றிலும் முதற்காரணம் நானே.

**விளக்கம்**

பரமாத்மா மிகவும் தொன்மையானவன். அனைவருக்கும்

முழு முதலானவன், காரணமானவன். தேவர்கட்கும், மகரிஷிகளுக்கும், இன்னும் எல்லா உயிர்கட்கும் மூலமானவன்; ஆதியில்லாதவன். அவனிடமிருந்தே தேவர்களும் மகரிஷிகளும் தோன்றினார்கள். எனவே அவர்கள் அப்பரம்பொருள் தோற்றத்தையும் தன்மையையும் முழுமையாக அறிய இயலாதவர்களாய் இருக்கின்றனர். உயிரினங்களை எடுத்துக் காட்டுவதற்கு மிகச் சிறந்த இரு இனங்களை (தேவர், மகரிஷிகள்) எடுத்துக் கொண்டார். அத்தகைய உயர்ந்த இனத்தவர்க்கே இறைவனின் தோற்றம், மகிமை, இயல்பு இவற்றை ஊகித்து அறிய இயலாததாக இருக்கையில் ஏனையோரால் எங்ஙனும் இயலும் என்று பொருள்படும்படி இங்ஙனம் கூறினார் எனலாம். வரையறைக்குட்பட்ட மனித புத்தியினால் வரையறையேயில்லா அந்தப் பரம்பெருளின் மகிமைத் தோற்றம் இவற்றை எவரும் அளக்கவியலாது, அப்பரம்பொருளின் மேல் மனத்தை தியானம் முதலியவற்றால் ஒன்றச் செய்து, அப்பரமாத்மாவின் வடிவினையே அடைதல் ஒவ்வொரு ஜீவனின் கடமையுமாகும்.

வினா : இறைவன் எப்படிப்பட்டவன்?

விடை : தொன்மையானவன், தேவர்களுக்கும், மகரிஷிகளுக்கும், எல்லா உயிர்களுக்கும் முழுமுதற் காரணன்.

வினா : ஜீவனது கடமையென்ன?

விடை : பக்தியுடன் மனத்தை இறைவனிடத்து ஒன்றச் செய்தலேயாகும்.

முன்னுரை

இறைவனைத் தொன்மையானவனாக உணர்பவன் எல்லா பாவங்களினின்றும் விடுபடுகிறான் என்று இங்குக் கூறுகிறார்.

*யோ மாமஜனாதிம் ச வேத்தி லோக மஹேச்வரம்!*
*அஸம் மூடஹ ஸ மர்த்யேஷு ஸர்வபாபைஹ ப்ரமுச்யதே!! - (3)*

சொற்பொருள்

யஹ் - யார், மாம் - என்னை, அஜம் - பிறப்பற்றவனாக, அநாதிம்ச - ஆதியில்லாதவனாக, லோக மஹேச்வரம் - உலகமனைத்திற்கும் தலைவனாக, வேத்தி - அறிகிறானோ, ஸஹ் - அவன், மர்த்யேஷு - மானுடர்களுள், அஸம்மூடஹ - மயக்கமில்லாதவன், ஸர்வ

*பாபைஹ-பாபங்கள் அனைத்தினின்றும், ப்ரமுச்யதே- விடுபட்டவனாகிறான்.*

**கருத்துரை**

*எவனொருவன் என்னை ஆதியில்லாதவன் என்றும், பிறவாத வன் என்றும், உலகுக்குத் தலைவன் என்றும் அறிகிறானோ, அவன் மானுடருள் மயக்கமில்லாதவன். அவன் பாவங்களைத்தினின்றும் விடுபடுகிறான்.*

**விளக்கம்**

*உயிர்களனைத்தினுள்ளும் மனிதன் சிறந்தவன். அவர்களுள்ளும் அஞ்ஞானம் நீங்கியவனே மிகச் சிறந்தவன். இறைத்தத்துவத்தை நன்கு உணர்ந்தவனே சிறந்தவன். அத்தகைய மெய்யறிவினால் அவனது பாபங்களனைத்தும் நீங்கி விடுகின்றன என இங்குச் சொல்லப்பட்டது. உலகிலுள்ள அனைத்துப் பொருள்களும் தோற்றமுடையவை, தொடக்கமுடையவை. இறைவனோ தோற்றமும் தொடக்கமுமில்லாத வடிவினன். ஆதலால் ஜீவன் எதனை அண்டியிருத்தல் வேண்டும்? அழியும் பொருளையா? தொடக்கமும் முடிவுமற்ற நிலையான பொருளையா? தேசத்திற்கும், காலத்திற்கும் அப்பாற்பட்ட, எங்கும் இவ்வுலகில் நிலையானவன். உலகனைத்துக்கும் தலைவன் அவனேயாவான். மாயையை ஆட்டிப் படைப்பவன். ஏனையோர் மாயைக்குக் கட்டுப்பட்டவர்கள். கடவுளின் இத்தன்மையை யுணர்வதால் அவன் மீது நம்பிக்கையோடு பக்தி ஏற்பட்டு, அவனையே அடைக்கலமாகப் புகுந்து அதனால் இடைவிடாத தியானம் முதலியவற்றால் அவனை நேரில் கண்டு எல்லா பந்தங்களினின்றும் விடுதலை பெற்று, பாவங்களினின்றும் விடுதலையும் அடைகிறார்கள். எனவே கடவுளின் உண்மை தத்துவத்தையுணர்பவன் உண்மையில்லாதவற்றை (காணும் காட்சிப் பொருள்களின் மீது விரக்தியுற்று) விடுத்து, உண்மையையே கடைபிடிப்பதால், இருளை அகற்றி ஒளிபெறுவதால், மடமை நீங்குவதால் மனிதர்களுள் மேன்மையானவனாக ஆகிறான். எத்தகைய செல்வம் படைத்தவராயினும் அவன் மாயைக்கு உட்பட்டு இருப்பதால் அற்பனாகவே கருதப்படுவான். மூடனாகவே அவன் கருதப்படுவான்.* ***இறை தத்துவத்தையுணர்ந்து அம்மடமையைப் போக்கிக் கொள்பவன் சிறந்தவனாகிறான் என்பதை 'அஸம் மூட ஹ ஸமவர்த்தேஷு' என்ற சொற்றொடரால் பகவான் தெளிவுபடுத்துகிறார். பகவானின்***

பார்வையில் எவன் சிறந்தவன் என்பது இங்குக் காட்டப்பட்டிருக்கிறது. இறைவனது உண்மையியல்பை அதாவது பிறப்பற்றவன், தொடக்கமும் முடிவுமில்லாதவன் என்றுணர்பவனே மனிதர்களில் உயர்ந்தவன் என்று கீதாச்சார்யார் குறிப்பிட்டுள்ளார். ஆதலால் ஏனைய உலகில் சிறப்புக்கள் இருப்பினும் இல்லாவிடினும் இறையுணர்வு மட்டும் கண்டிப்பாகயிருத்தல் வேண்டுமென்பது இதனால் பெறப்படுகின்றது.

மனிதன் பல பிறவிகளாகத் தொடர்ந்து வரும் பாவங்களுடன் கூடியவனாக இருக்கிறான். அப்பாவங்களனைத்தையும் அழிக்கக் கூடிய உபாயத்தினை இங்கு பகவான் இச்சுலோகத்தில் கூறியுள்ளார். ஒரு பெரிய விறகுக் கட்டடைகளின் குவியலானாலும் ஒரு பொறி நெருப்பினால் உருக்குலைந்து போவதைப் போல் எத்தனை பாவங்களாயினும் இறை தத்துவத்தைப் பற்றிய மெய்ஞானம் என்ற சிறுபொறியினால் சாம்பலாகிவிடும். (ஸர்வபாவைஷ ப்ரமுக்யதே) எனவே இறை தத்துவத்தையுணர்வதால் பக்தி தோன்றி, பக்தியால் காட்சிப் பொருள்களின் மீது விரக்தி ஏற்பட்டு இறைநிலை கைகூடும். அதனால் பாவங்களினின்றும் பந்தங்களினின்றும் விடுதலை பெற்று வீடுபேறு சித்திக்கும். இவ்வாறாக இறைஞானம் வீடுபேற்றிற்கு வழி செய்யும்.

விடை : மனிதர்களுள் எவன் விவேகமுடையவன்? எவன் சிறந்தவன்?

விடை : இறைவனைப் பிறப்பற்றவனாகவும், முழு முதலாகவும், உலகமனைத்திற்கும் தலைவனாகவும் உணர்பவனே விவேகமுடையவன் சிறந்தவன்.

வினா : மனிதருள் சிறந்தவனாக என்ன செய்தல் வேண்டும்.

விடை : கடவுளின் உண்மைத் தன்மையை உணர்வதே மனிதருள் சிறந்தவனாகும் வழி

வினா : பாவங்களினின்றும் விடுபடும் உபாயம் யாது?

விடை : இறைத்தத்துவத்தை யுணர்தலேயாகும். அதனால் பக்தி, பக்தியினால் தியானம், தியானத்தினால் இறைவனது காட்சி, காட்சியினால் பாவங்கள் அனைத்தும் அழிதல், பந்தங்களினின்றும் விடுதலை ஆகியவை கிடைக்கும்.

*புத்திர் ஞானமஸம் மோஹஹ க்ஷமா ஸத்யம் தமஹ சமஹ!*
*ஸுகம் துக்கம் பவோ அபாவோ பயம் சாபயமேவச!! - (4)*

*அஹிம்சா ஸமதா துஷ்டிஸ்தபோ தானம் யசோ அயசஹ!!*
*பவந்தி பாவா பூதானாம் மத்தஏவ ப்ருதக் விதாஹ் - (5)*

### சொற்பொருள்

புத்தி-புத்தி (நுட்பமானவற்றை அறியும் தன்மை), ஞானம்-ஞானம், அஸம்மோஹஹ-மோகமின்மை, க்ஷமா-பொறுமை, ஸத்யம்-உண்மை, தமஹ-புலன்களின் காட்சிகளை யகற்றுதல், விமஹ-உட்புலனின் ஆசைகளை அகற்றுதல், சுகம்-சுகம், துக்கம்-துன்பம், பவஹ-பிறவி, அபாவஹ-இறப்பு, பயம்-அச்சம், அபயம் யாவச-அச்சமின்மை, அஹிம்சா-அஹிம்சையும், ஸமதா-சமத்துவம், துஷ்டி-திருப்தி, தபஹ-தவம், தானம்-தானம், யசஹ்-புகழ், அயசஹ-இகழ்ச்சி, பூதானம்-உயிர்களின், ப்ருதர் விதாஹ்-பல விதங்களான, பாவாஹ்-தன்மைகள், மத்தம் ஏவ-என்னால் மட்டுமே, பவந்தி-உண்டாக்கப்படுகின்றன.

### கருத்துரை

புத்தி, ஞானம், மயக்கமின்மை, பொறுமை, சத்தியம், அடக்கம், அமைதி, இன்பம், துன்பம், பிறப்பு, இறப்பு, அஞ்சுதல், அச்சமின்மை, அஹிம்சை, மனநடுவு நிலைமை, திருப்தி, தவம், தானம், புகழ்ச்சி, இகழ்ச்சி ஆகிய பல தன்மைகள் உயிர்களுக்கு என்னாலேயே உண்டாகின்றன.

### விளக்கம்

இந்த இரண்டு சுலோகங்களிலும் புத்தி, ஞானம் முதலிய பதினாறு நற்குணங்களும், துக்கம், அறிவு, அச்சம், இகழ்ச்சி முதலிய எதிர்மறை குணங்களும் சொல்லப்பட்டுள்ளன. இவையனைத்தும் இறைவனால்தான் உண்டாகின்றன என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அதன் உட்பொருள் யாது? உண்மையில் இறைவன் உயிர்களுக்குத் தீங்கினை விளைவிக்கக்கூடிய எதிர்மறையான குணங்களை உண்டாக்குவதில்லை. உயிர்களின் செயல்களுக்கு ஏற்ற பலனை மட்டும் கொடுப்பவனே இறைவன். அதாவது கர்மபலனைத் தருபவர். உயிர்

கள் கர்மங்களைச் செய்பவர்கள். புகழ்ச்சி, இகழ்ச்சி, சிலருக்குத் துன்பம், சிலருக்கு மகிழ்ச்சி ஆகியவை அவரவர் முற்பிறவி வினைத் தொடர்பால்தான் ஏற்படுகின்றன. அவனவன் விதைத்தையே அறுப்பான். இறைவன் நிமித்த மாத்திரனேயாவன். தீய செயல்களைச் செய்தவர்களுக்குத் துக்கமும், நற்கர்மங்களைச் செய்பவர்க்கு இன்பமும் அளித்தல் என்பது இறைவனால்தான் ஏற்படுகின்றது என்று சொல்லப்பட்டது.

மேலும், விவகாரங்கள் மனத்தளவின, மனம் இயல்பாகவே ஜடப்பொருளாகும். அதற்கு ஆதாரமாக, இயக்கமாக ஆன்மா இருக்கிறது. காந்தத்தின் முட்களின் முன் ஊசி அசைவதைப் போல் ஒளியுடைய ஆன்மாவின் சன்னிதானத்தில், மனம் செயல்படுகின்றது. இவ்வாறாக மனத்திற்கும் அதன் விகாரங்களுக்கும் இறைவனே ஆதாரமாதலால், எல்லாம் இறைவனாலேயே ஏற்படுத்தப்படுகின்றன என்று கூறப்பட்டது. அவ்வளவேயன்றி மனம் சம்பந்தப்பட்ட செயல்களைத் தூண்டுவதோ, செயல்படுகிறதோ ஆன்மாவிற்கு (இறைவனுக்கு) இல்லை. (சூரியனுக்கு உலக நடப்பிலும், நாடகத் திரையிலுள்ள விளக்கத்திற்கு நாடகத்திலும் பங்கு இல்லாததைப் போல).

*மஹர்ஷயஹ ஸப்த பூர்வே சத்வாரோ மனவஸ்ததா!*
*மத்பாவா மானஸ ஜாதாயேஷாம் லோக இமாஹ ப்ரஜாஹ!! - (6)*

சொற்பொருள்

லோகே-இவ்வுலகில், இமாஹ ப்ரஜாஹ-இந்த மக்கள், யேஷாம்-யாருடைய (சந்ததிகளாக இருக்கிறார்களோ), பூர்வே-பூர்விகர்களாகிய, மஹர்ஷிகள்-ரிஷிகள், ஸப்த-எழுவரும், ததா-அவ்வாறே, சத்வாரஹ-சனகாதி முனிவர்கள் நால்வரும், மனவ-மனுக்களும், (14 பேர்), மத்பாவாஹ-என்னுடைய பிரபாவத்தையுடையவர்களாய் (தெய்வத்தன்மை) மானஸா காதாஹ-என்னுடைய சங்கற்பத்தினால் பிறந்தார்கள்.

கருத்துரை

உலகிலுள்ள மக்கள் யாருடைய வம்சாவளிகளாக இருக்கின்

*றாரோ அப்படிப்பட்ட முன்னோர்களாகிய மஹரிஷிகள் எழுவரும் சனகாதி தேவமுனிவர் நால்வரும், பதினான்கு மனுக்களும் என்னு டைய இயல்பை (தெய்வத் தன்மை) உடையவராய் எனது சங்கல்பத் தில் தோன்றினார்.*

**விளக்கம்**

*சப்தரிஷிகள் - 7*
*சனகாதி முனிவர் - 4*
*மனுக்கள் - 14*

*இவர்களனைவரும் மிகவும் தொன்மையானவர்கள். இவர்கள் இறைவனது சங்கற்பத்தினால் தோன்றியவர்கள். இவர்களிடமி ருந்தே உலக மக்கள் அனைவருமே தோன்றினார். இவர்களை மூல புருஷர்கள் என்பர். இவர்கள் இறைவனது இயல்பு உடையவர்கள் என்றால் இறை பக்தி, ஆன்ம ஞானம் உடையவர்கள் என்று பொருள். இந்தச் சுலோகத்தினால் கீழ்க்கண்ட இரகசியங்கள் வெளி யாகின்றன.*

*இறைவன் எல்லையற்ற ஆற்றலுடையவன் என்பதும், நினைத்த மாத்திரத்திலேயே உலகங்களையும், மக்களையும் படைக்க வல்லவன் என்பதும் 'மனஸா ஜாதாஹ' என்ற தொடரி னால் உணரக்கூடும். மேற்கூறப்பட்ட சப்தரிஷிகள் முதலானோரை இறைவன் தனது சங்கற்பத்தினால் உருவாக்கினார். அப்படிப்பட்ட சர்வ வல்லமை பொருந்திய இறைவனை வணங்கி அவன்பால் பக்திபூண்டொழுகுவதே உயிர்களின் கடமையாகும்.*

*(2) மேற்கூறப்பட்ட மகரிஷிகள் முதலானோர் சாமான்யர்களல் லர். தெய்வ நினைப்புடனேயே எப்போதும் இருப்பவர்கள். அப்ப ழுக்கற்ற தூய்மையான பக்தியுடையவர்கள். எனவேதான் அவர் களை 'மகாத்மா' எனக் குறிப்பிட்டார். மஹா பக்தி பூண்ட ஆன்மஞா னச் செல்வர்கள் அவர்கள். இறைவனது நேரடி அனுபவம் பெற்றவர் கள். அப்படிப்பட்ட மகான்களிடமிருந்தே மக்கள் தோன்றினார் என்று கூறப்பட்டது. அங்ஙனமிருக்கையில் அப்படிப்பட்ட மகான்க ளுக்குப் பிறந்த இவர்கள் இறைவனைப் பற்றிய எண்ணமே இல்லா மல் இருப்பது வேடிக்கையல்லவா? இவர்களும் அவர்களது மூதா*

தையரைப் போன்று இறை எண்ணத்துடன் செயல்பட்டால்தான் ஒளிபொருந்தியவர்களாய் இருப்பர். அவர்களது வயிற்றில் பிறந்து அஞ்ஞானிகளாக இருத்தல் நகைப்பிற்குரியதாக இருக்கும். ஒருகண மும் இறைவனை மறவாதவர்களுக்குப் பிறந்து இரவும் பகலும் காட்சிப் பொருள்களின் மயக்கத்தில் வீழ்ந்து, 'அழியக்கூடிய போகப் பொருட்களுக்காக ஏங்கி இறைவனை ஒரு விநாடியேனும் நினையாமல் இருத்தல் எத்துனை வருந்தத்தக்கது'. எனவே மக்கள னைவரும் தமது மூதாதையர்களான முனிவர்களை நினைத்து இறை தொடர்பு என்னும் பேருக்கத்தைப் பெறுவார்களாக. அந்தணர்கள் சந்தியாவந்தனம் செய்யும்போது தனது கோத்திரத்திற்குரிய மூல புருஷர்களை நினைப்பது இன்றியமையாதது. இதன் உட்பொருள் தனது வம்சத்தினராகிய செல்வத்தைப் பெற்றுக் கடைத்தேற வேண்டுமென்பதேயாகும். அவர்களது வம்சத்தில் பேராற்றல் பெற் றவர் பல நிலைகளில் அதிகாரிகள், பலமுடையோர், தனவந்தர்கள், கலை வல்லுநர்கள் பலர் இருப்பினும், முனிவர்களையே நினைத் துப் பார்த்தல் என்ற பண்பாடு ஞானச் செல்வமே ஜீவர்களைக் கடைத்தேற்ற வல்லது ஏனையவையல்ல என அறிவுறுத்துதற்கேயா கும்.

3) இனி மூன்றாவது இம் மக்களனைவரும் மேற்கூறப்பட்ட மகரிஷிகளிடமிருந்தே தோன்றியவர்கள் என்பதால் இனிதம்மையா ரும் அற்பர்கள், கீழ் சாதியில் தோன்றியவர்கள் என்றும் நினைத்து வருந்த வேண்டியதில்லை. எந்த இனத்தை, மதத்தை, வர்ணத்தைச் சேர்ந்தவராயினும் அனைவரும் மகரிஷிகளின் வம்சாவளியினரே என்று நினைத்து ஆன்மீக நிலையில் முன்னேறுவதற்கான உற்சாகத் தைப் பெற வேண்டும். அந்த மகரிஷிகளுடைய தூய இரத்தம் நம் மக்கள் அனைவரிலும் ஓடிக் கொண்டிருக்கிறது. இவ்வுண்மையை யுணர்ந்து மக்கள் துணிச்சலும் தமது மூதாதையரின் ஞானச் செல்வத் தையும் தெய்வீக வாரிசையும் அனுபவிக்க வேண்டும். அது எவரின் தனிப்பட்ட சொத்தல்ல. அனைவருக்கும் அதில் உரிமையுண்டு. சண்டாளர்களும் உரிய முயற்சி செய்தால் அந்தச் சொத்தை அனுப விக்கலாம். இவ்வுண்மையை உணர்த்துவதற்கெனவே பகவான் வம்ச பாரம்பரியத்தைப் பற்றி இங்கு வர்ணித்திருக்கக்கூடும். உயிர்க ளனைத்தும் மகரிஷிகளின் தெய்வீக செல்வத்தின் வாரிசுகள் என்று

பறைசாற்றியுள்ளார். எனவே இனி யாராவது உங்கள் மூதாதையர் யாரென்று கேட்டால் என்னுடைய மூதாதையர் சப்த ரிஷிகள், சனகாதியர், மனுக்கள் என்று உரக்கச் சொல்ல வேண்டும். தான் அற்பன் என்று கருதுபவன் அற்பனேயாவான். தன்னைத் தூயவனென்றும் மகரிஷிகளின் வாரிசு என்றும் கருதிக் கொள்பவன் தூயவனேயாவான். எனவே மக்களனைவரும் தத்தம் மூதாதையர்களாகிய அம்மகான்களை நாள்தோறும் நினைத்த வண்ணம், இறையுணர்வுடன் பிறவித்தளைகளை அறுத்தெறிந்து பேரமைதியடைவார்களாக.

மேற்கூறப்பட்ட சனகாதியர் துறவறத்தையும் மனுக்கள் இல்லறத்தையும் உலகிற்கு உணர்த்தினர். இவர்களின் முன்னவர்கள் குருபரம்பரையினர். பின்னவர் வம்ச பரம்பரைக்கு மூலபுருஷர்கள் ஆவர். அவர்களும் இறைவனின் மானசீக புதல்வர்களே. எனவே மக்கள் அனைவரும் இறைவனுடைய குழந்தைகளே என நிரூபிக்கப்பட்டது போலாகிறது. இங்கு சனகாதியர் நாவல்வர் நிஷ்டையுடன் கூடிய பிரம்மசாரிகள் ஆதலால் அவர்களுக்குப் பிறந்தவர் என்பது அவர்களின் சீடர்கள் என்று பொருள் கொள்ள வேண்டும்.

**வினா :** இவ்வுலக மக்கள் யாவரும் யாரிடமிருந்து தோன்றினர்?

**விடை :** (1) சப்த மகரிஷிகள் (2) சனகாதியர் (3) மனுக்கள்

**வினா :** அந்த மகான்கள் எப்படிப்பட்டவர்?

**விடை :** மாறாத கடவுள் பக்தியுடன் இருப்பவர்கள்.

**வினா :** அந்த மூலபுருஷர்கள் எப்படிப் பிறந்தனர்?

**விடை :** இறைவனுடைய ஸங்கற்பத்தினால்

**முன்னுரை**

இறைவனது விபூதியை இங்ஙனம் உணர்பவனுக்கு ஏற்படும் பலனைக் குறித்து அடுத்துக் கூறப்படுகிறது.

*ஏதாம் விபூதிம் யோகம் சமயோ வேத்தி தத்வதஹ!*
*ஸோ அவிகம்பேன யோகேன யுஜ்யதே நாத்ர ஸம்சயஹ!! - (7)*

### சொற்பொருள்

மம-என்னுடைய, ஏதாம்-இந்த, விபூதிம்-வல்லமையை (அவனது இயல்பான மகிமையையும்), யோகம் ச-யோகத்தினையும் (உலகிற்கு அப்பாற்பட்ட ஆற்றலையும்), தத்வஹ-உள்ளபடி, யஹ-எவனொருவன், வேத்தி-அறிகிறானோ, ஸஹ-அவன், அவிகல் பேன-சலனமற்ற, யோகேன-யோகத்தால், யுஜ்யதே-ஈடுபடுகின்றான், யத்ர-இவ்விஷயத்தில், ஸ்டசய ஹ ந-ஐயமேதுமில்லை.

### கருத்துரை

எனது விபூதிகளையும், யோகத்தையும் உள்ளபடி அறிபவன். சலனமற்ற யோகத்தைச் சார்ந்திடுவான். அதில் ஐயமேதுமில்லை.

### விளக்கம்

இவ்வாறாக இறை வைபத்தை (இயற்கை மகிமையை) உள்ள படி எவன் அறிகிறானோ அவன் இவ்வுலகனைத்தும் அவனிடமிருந்தே பிறந்ததென்பதை நன்குணர்வான். அவன் சலன மற்ற யோகத் தைச் (பக்தியுடனும், தியானத்துடனும்) சேர்ந்திருப்பானென்று இங்கே கூறப்பட்டிருக்கிறது. 'தத்வதஹ்'-'உள்ளபடி' என்று கூறப் பட்டிருப்பதால் பகவானுடைய வல்லமையையும் யோகத்தையும் உள்ளபடி உணரவேண்டுமேயொழிய வேறு மாதிரியாக அல்ல. இறைவன் ஒருவனே சத்தியம். அவனிடமிருந்தே உலகம் முதல் யாவையும் தோன்றின என்று அறிவதே மெய்யுணர்வாகும். அங்ங னம் உணர்ந்தவர்கள் அழிவேயில்லாத அப்பரம்பொருளை அறிவ தற்கு உறுதி பூண்டவராய்ச் சலனமற்ற தியான யோகங்களுடனும், திடமான முயற்சியுடன் கூடியிருப்பர். 'அவிகல்பேன்'-'சலனமற்ற' என்று கூறுவதால் அவன் பின்பற்றக்கூடிய தியான நிட்டை, யோகம், இறை நம்பிக்கை ஆகியனை எம்மாத்திரமும் நின்றுவிடுவ தில்லையென்பதும், ஒரு பக்கம் காட்சிப் பொருள்களின் மீதும், மறுபக்கம் இறைவனின் மீதும் என அவனது கவனம் அங்குமிங்கு மாக ஊசலாடுவதில்லை என்பதும் தெளிவாகிறது. 'நஸம்சயஹ' (ஐயமேயில்லை) என்பதால் மேற்சொன்ன வாக்கியத்தின் உண்மை நிரூபிக்கப்பட்டதாகிறது. எனவே வீடுபேற்றினை அடைய விரும்பு

வோன் இறைவனுடைய விபூதியை நன்குணர்ந்து அதன் விளைவாக விரிவான தியான நிட்டைகள் இவற்றைக் கடைபிடித்து இறைவனைச் சேர்வதற்கு முயற்சித்தல் வேண்டும். இங்கே யஹ்-எவனொருவன் என்று சொல்லப்பட்டிருப்பதால் ஜாதி மத பேதங்களின்றி எவராயினும் இறைவனுடைய விபூதியை உணர்ந்தால் சலனமற்ற யோகத்தை அடைகிறான் என்பது புலனாகின்றது.

**வினா :** இறை சம்பந்தமான சலனமற்ற யோகம் எவருக்குச் சித்திக்கும்?

**விடை :** இறைவனின் வைபவத்தை உள்ளபடி உணர்பவனுக்குக் கிடைக்கும்.

### முன்னுரை

இங்ஙனம் இறை தத்துவத்தையுணர்ந்த பக்தர்கள் தூய்மையான பக்தியுடன் அவனைத் தொழுவார்கள் என்பது அடுத்துவரும் இரண்டு சுலோகங்களில் கூறப்படுகின்றது.

*அஹம் ஸர்வஸ்ய பிரபவோ மத்தஹ ஸர்வம் ப்ரவர்ததே!*
*இதி மத்வா பஜந்தே மாம் புதா பாவ ஸமன்விதாஹ்!! - (8)*

### சொற்பொருள்

அஹம்-நான், ஸர்வஸ்ய-எல்லாவறறின், ப்ரபவஹ-உற்பத்திக்கும் காரணமானவன், மத்தஹ்-என்னால், ஸர்வம்-அனைத்தும், ப்ரவர்ததே-நடக்கின்றது, இதி-இங்ஙனம், மத்வா-அறிந்து, புதாஹ்-அறிஞர்கள், பாவஸமன் விதாஹ்-அன்பு உணர்வுடனும், மாம்-என்னை, பஜந்தே-பூசிக்கிறார்கள்.

### கருத்துரை

நான் அனைத்திற்கும் பிறப்பிடம்; யாவும் என்னிடத்திருந்தே தோன்றுகின்றன. இதை அறியும் ஞானியர் என்னை அன்புடன் வாழ்த்தி வணங்குகின்றனர்.

**விளக்கம்**

இறைவனை தியானிப்பவர், தொழுபவர், அவன் நாமத்தை ஜபிப்பவர்பலர்இருக்கின்றனர். ஆயினும் ஒன்றிய உள்ளத்துடனும், தூய பக்தியுடனும், ஆர்வத்துடனும் அக்காரியத்தில் ஈடுபடுவோர் மிக அரிது. அப்படியாயின் இறைவன் பக்தியும் ஆர்வமும் எப் போது ஏற்படும். அவனது படைப்பின் இரகசியத்தையும், விபூதி மகிமையையும் உணர்ந்தால் மட்டுமே ஏற்படும். ஒரு பொருளின் தரத்தை நன்கு அறிந்தால் மட்டுமே மனிதனுக்கு அதன்மீது பற்று ஏற்படும். அங்ஙனமே, இறைவன் உலகனைத்திற்கும் மூலமும் ஆதாரமும் ஆவான். அவனால் மட்டுமே இவ்வகிலம் இயங்குகிறது (மத்தஹ ஸர்வம் ப்ரவர்த்ததே) என்று அசைவற்ற நம்பிக்கை யேற்ப டும். அப்போது அவன் பக்தி மிகுந்து இறைவனைத் தொழுவான். 'பாவஸமன் விதாஹ்' என்பதன் பொருள் இதுவே. இறைவனின் வைபவத்தையும், தத்துவத்தையும் நன்குணர்ந்தவர்க்கே பக்தியும் ஈடுபாடும் உண்டாகும். எனவே அவர்கள் கருத்தொருமித்துக் கட வுளை தியானித்து அதிவிரைவில் இறைவனைச் சேர்வர்.

இச்சுலோகத்தில் தெரிவிக்கப்பட்ட 'பாவாஹ்' என்பது இலக் கினை அடைவதற்கு மிகவும் அவசியமாகும். அது துப்பாக்கியில் உள்ள குண்டு போன்றது. குண்டு இல்லாத துப்பாக்கியால் சுட்டால் ஓசையெழுமே தவிர இலக்கைத் தாக்க முடியாது. அவ்வாறே ஜபம் செய்யும் போதும், தியானிக்கும் போதும் மந்திரத்தினையும், மந்தி ரப் பொருளையும் சிந்திப்பது மிக அவசியம். எனவே இங்குத் தெரி விக்கப்பட்ட 'பாவசமன் விதாஹ்' என்ற சொல்லை வீடுபேற்றை அடைய விரும்புவோர் ஒவ்வொருவரும் நன்கு கவனிக்க வேண் டும். ஈடுபாடு இல்லாத காரணத்தால் பலருக்கும் தியானங்கள் நல்ல பலனைக் கொடுக்காமல் வீணாகிவிடுகின்றன. தியானம் தடைபடா மல் இருக்க வேண்டுமாயின் கருத்துடன் கூடியிருத்தல் வேண்டும். பாவம் ஏற்பட வேண்டுமாயின் பக்தி வேண்டும். பக்தி ஏற்பட வேண்டுமாயின், கடவுள் தத்துவத்தை மகிமையை நன்கு அறிந்தி ருத்தல் வேண்டும். இந்த இரகசியங்களனைத்தும் இச்சுலோகத்தில் நன்கு விளக்கப்பட்டிருக்கின்றன.

**வினா : இவ்வுலகின் படைப்பிற்குக் காரணம் யார்? எவரால் இவ்வு லகம் இயங்குகிறது?**

**விடை :** பரம்பொருளால் படைக்கப்பட்டு அவனால் தான் இயங்கு கிறது.

**வினா :** இறைவனை எவ்வாறு தியானித்தல் வேண்டும்? சேவித்தல் வேண்டும்?

**விடை :** பக்தியுடனும், சிரத்தையுடனும் செய்தல் வேண்டும்.

**வினா :** அத்தகைய பக்தி எண்ணம் உயிர்களுக்கு எங்ஙனம் தோன் றும்?

**விடை :** தத்துவத்தையும், மகிமைகளையும் நன்கு அறிந்தால்தான் பக்தி தோன்றும்.

**முன்னுரை**

அத்தகைய பக்தர்கள் எங்ஙனம் இறை நினைவிலேயே காலம் கழிக்கின்றனர் என்பதை அடுத்துக் கூறுகிறார்.

*மச்சித்தா மத்கதப்ராணா போதயந்தஹ பரஸ்பரம்!*
*கதயந்தஸ்ச மாம் நித்யம் துஷ்யந்தி சரமந்தி ச!! - (9)*

**சொற்பொருள்**

தே-அவர்கள், மச்சித்தா-என் மேல் சித்தம் வைத்தவர்கள், மத் கத ப்ராணாஹ-உயிரை என்பால் செலுத்தியவர்கள், (என் சேவை யிலே வாழ்க்கையை அர்பித்தவர்கள்), மாம்-என்னை, பரஸ்பரம்-ஒருவருக்கொருவர், போதயந்த-விளக்கிக் கொள்பவர்கள், கத யந்த ஹ ச-பேசிக் கொள்பவர்களாகவும், துஷ்யந்தி-திருப்தியடைபவர்களாயும், நித்யம் ரமந்தி ச-எப்போதும் ஆனந் தத்தை அனுபவிக்கின்றனர்.

**கருத்துரை**

அவர்கள் சித்தத்தை என்பால் வைத்து, உயிரை எனக்குரிய தாக்கி (அர்ப்பித்து) ஒருவருக்கொருவர் என்னை விளக்கிக் கொண் டும், எப்போதும் என்னைப் புகழ்ந்து பேசியும் மனநிறைவடைந் தும் மகிழ்வடைந்து மிருக்கின்றனர்.

விளக்கம்

கடவுள் பக்தியுடையோர் எங்ஙனம் நடந்து கொள்கின்றனர் என்பதை இந்தச் சுலோகம் நன்றாக விளக்குகிறது. சாமான்ய ஜனங்க ளுடைய மனதும், உயிர்ப்புலன்களனைத்தும் உலகியல் பொருள்க ளில் தான் ஈடுபட்டிருக்கும். இதற்கு மாறாக கடவுளின் மகிமையை யுணர்ந்த, மகான்களின் மனம், உயிர்ப் புலன்கள் யாவும் பரம்பொரு ளிடத்தே லயித்து நிற்கும். எந்த இலக்கினை அடைய வேண்டுமா யின் மனம் ஒருமித்து இருந்தால் மாத்திரமே, (அது உலகியல் விஷய மாயினும் ஆன்மீக விஷயமாயினும்) அது சாத்தியமாகும். அஞ்ஞா னிகள் அழியக்கூடிய பௌதீகப் பொருட்களிலும், ஞானியர் நிலை யான தெய்வீகப் பொருட்களிலும் தம் கவனத்தைச் செலுத்துபவர். பக்தர்கள், ஞானியர், மேலான பாகவத உத்தமர்கள், இறைவனின் இணையற்ற தன்மையையும், மகிமையையும் அறிந்தவராதலால் எப்போதும் அவனைக் குறித்தே ஒருவருக்கொருவர் போதித்துக் கொண்டும், விளக்கிக் கொண்டுமிருப்பர். இதுவே பிரம்ம பயிற்சி எனப்படும். அவர்கள் எதனைப் பேசினாலும் அதில் தெய்வத்தின் தொடர்பு இருக்கும். மற்ற எதைப் பற்றியும் அவர்கள் பேசார். மக்கள் தாம் விரும்பியவரைப் பற்றி நாள் முழுவதும் பேசுவது கண்கூடு. சாதாரண மக்களுக்கு அற்பமான உலகியல் பொருட்களின் மீது மட் டுமே விருப்பமிருப்பதால் எப்போது பேசத் தொடங்கினால் உலகி யல் பொருட்களைப் பற்றியே பேசுவர். பக்தர்கள் அவ்வாறு இருப்ப தில்லை. அவர்களது மனம், மொழி, மெய் ஆகிய மூன்றும் இறைவ னிடத்து மட்டுமே ஈடுபட்டிருக்கும். எனவே அவர்கள் எதனை நினைத்தாலும், பேசினாலும், செய்தாலும் அது தெய்வம் சம்பந்தப் பட்டதாகவே இருக்கும். பழுத்த பழத்தினை எங்குச் சுவைத்தாலும் இனிப்பதைப் போல், மலர் தன்னைக் காற்றிலும் எங்கும் மணம் பரப்புவதைப் போல் அவர்கள் உடலினின்றும் இறைமை வெளிப் பட்டு எங்கும் வியாபித்திருக்கும்.

போதயந்தஹ- ஒருவருக்கொருவர் போதிப்பதால் இறை தத்து வம் உறுதிப்படும். உரையாடல்களின் போது பல வினாக்கள் எழும். அப்போது பல கோணங்களிலும் சிந்திக்க நேரிடும். எனவே முமுட் சுக்களுக்கு நல்லோர் இணக்கம் மிகமிக அவசியம். நாத்திகர்களு டன் அவர்கள் எப்போதும் சேரலாகாது.



'நித்யம் துஷ்யந்தி ரமந்தி' - என்று சொல்லப்பட்டதால் அத்த கைய பாகவதர்களிடத்து எப்போதும் திருப்தி, மிக்க மகிழ்ச்சி, ஏதோ வொரு சமயத்தில் மட்டுமின்றி எப்போதும் தாண்டவமாடிக் கொண்டிருக்கும் என்பது புலனாகின்றது. இறைவனின் பாற்பட்ட மனம் உடையவர்களுக்கு அதிருப்தியோ, துக்கமோ ஏற்பட வாய்ப் பேது!

சாஸ்வத பார்த்தாம் - நிலையான பரம்பொருளை அண்டிய வீர்க்கு திருப்தியின்மையோ துக்கமோ ஏற்படாது.

'மத்கத ப்ராணாஹ்'-இறைவனது விபூதி மகிமையை உணர்ந்த மகான்கள் தமது வாழ்க்கையை பரம் பொருளிடமே அர்ப்பித்து விடுவார்கள். இறைவனை அடைவதற்குத் தம் உயிரையும் அர்ப்ப ணிக்கச் சித்தமாகவே யிருப்பார்கள். அத்தகைய தீவிர எண்ணமும், தியாகமும் சேர்ந்தால்தான் இலக்கை எளிதில் அடைய முடியும். திடமற்ற தீர்மானங்களினால், சிறிதளவே தியாகம் செய்வதால், நிலையற்ற எண்ணங்களால் ஆன்மா கிட்டுதல் அரிது. (த்யாகே நைமே அம்ருதத்வ மானஸ) இலக்கை அடைவதற்கு உயிர் துறக்க வும் திண்ணமாயிருந்தால் மட்டுமே தெய்வம் புலப்படும் என்று இங்குக் கூறப்படுகின்றது. சிலர் நாட்டிற்காகச் சிலர் செல்வங்களுக் காக உயிரையும் துறக்கத் தயாராயிருக்கின்றனர். எல்லையற்ற சுகத் தையளிக்கவல்ல ஆன்ம நிலை அதனைவிட மிக மிக உயர்ந்தது. எனவேதான் மகான்கள் தத்தம் மனம், உயிர், புலன்கள் ஆகிய அனைத்தையும் இறைநிலை யடையவே பயன்படுத்துகின்றனர்.

இச்சுலோகத்தில் இறைவனை அடைய முயற்சிக்கும் பலர் எங் ஙனம் நடந்து கொள்ள வேண்டும், அவர்களது தினசரி வாழ்க்கை முறை எங்ஙனம் இருத்தல் வேண்டும், எதனைப் பேச வேண்டும், எதனைச் செய்ய வேண்டும் என்பது யாவும் நன்கு தெரிவிக்கப்பட் டுள்ளது. எனவே முமுட்சுக்கள் அவ்வாறு பின்பற்றி பிரம்மானுப வத்தைப் பெற வேண்டும்.

**வினா :** கடவுளின் வைபவத்தை உணர்ந்த மகான்கள் எப்படி நடந்து கொள்வார்கள்?

**விடை :** (1) இறைவனிடத்தே ஈடுபட்டு ஒன்றிய மனம், உயிர், புலன்கள் உடையவராய் இருப்பர்.

(2) ஒருவருக்கொருவர் போதித்தவண்ணம் எப்போதும் இறைவனைப் பற்றியே உரையாடுவர்.

(3)கடவுள் எண்ணத்தில் எப்போதும் திருப்தியுடனும், பெருமகிழ்ச்சியுடனும் இருப்பர்.

வினா : எனவே முமுட்சுக்கள் மோட்சத்தையடைய என்ன செய்ய வேண்டும்?

விடை : எப்போதும் பரம்பொருள் சிந்தனையிலேயே மூழ்கியிருத்தல் வேண்டும்.

வினா : முழு மகிழ்ச்சி, முழுமையான திருப்தி எதிலிருக்கிறது?

விடை : கடவுளைச் சேர்வதில்.

வினா : முமுட்சுவானவன் எந்த போதனையைப் பெற வேண்டும்? எதனை உரையாட வேண்டும்?

விடை : இறை தத்துவம் பற்றியே உரையாட வேண்டும்.

முன்னுரை

எப்போதும் பக்தியுடன் தன்னைத் தொழுவோர்க்கு ஞான யோக மெனும் வெகுமதியைத் தருவேனென்று பகவான் இரண்டு சுலோகங்களால் அருளிச் செய்கிறார்.

*தேஷாம் ஸதத யுக்தானாம் பஜதாம் ப்ரீதிபூர்வகம்!*
*ததாமி புத்தியோகம் தம்யேன மாமுயாந்திதே!! - (10)*

சொற்பொருள்

ஸதத யுக்தானாம்-எப்போதும் என்னிடத்தே மனத்தை யுடையவராய், ப்ரீதி பூர்வகம்- அன்புடன், பஜதாம்-தொழும், தேஷாம்-அவர்களுக்கு, யேன-எதனால், தே-அவர்கள், மாம்-என்னை, உபாயந்தி-அடைகிறார்களோ, தம்-அத்தகைய, புத்தியோகம்-ஞான யோகத்தை (ஆத்மா அநாத்மாவைப்பற்றிய ஞானம்) ததாமி-அளிக்கிறேன்.

### கருத்துரை

எப்போதும் என்பால் மனத்தைச் செலுத்தி அன்புடன் என்னைத் தொழுவோர்க்கு எதனால் என்னை அடையக்கூடுமோ அத்தகைய ஞான யோகத்தை (ஆத்மா அநாத்மாவைப் பற்றிய அறிவினை) நான் அளிக்கிறேன்.

### விளக்கம்

இறைவனை இடைவிடாது அன்புடன் தொழுவோர்க்கு ஏற்படும் மகத்தான பலன் இங்குக் கூறப்படுகிறது. அத்தகைய பக்தர்களுக்கு யோகத்தைத் தானே அளிப்பதாக பகவான் கூறுகிறார். அந்த யோகமானது ஜீவனை பரம்பொருளைச் சேர்க்கும் ஆற்றலுடையது. அந்த உயர்ந்த பலனைப் பெறவேண்டுமானால் அதற்குத் தகுந்த அருகதை வேண்டும். அந்த அருகதை யாது என்பதாக இரண்டு செயல்கள் இங்கு எடுத்துக்காட்டப்பட்டுள்ளன.

(1) எப்போதும் இறைவனை உள்ளத்தில் இருத்தல்
(2) அன்புடன் கடவுளைத் தொழுதல்.

இவ்விரண்டில் முன்னதில் எப்போதும் (ஸததயுக்தானாம்) என்று சொல்வதால் எப்போதேனும் இறை நினைப்பு இருந்தால் மட்டும் போதாது என்பதும் இடைவிடாது சிந்தித்திருத்தல் வேண்டுமென்பதும் பெறப்படுகிறது. அந்நிலையையடைவதற்கு முறைப்படி பயிற்சி செய்தல் வேண்டும். பலரும் தம் மனத்தை உலகியல் பொருள்களின் மீதே செலுத்துகிறார்கள். இறைவன் மீது செலுத்தும் சிலரும் இடைவிடாது சிந்திப்பதில்லை. அன்புடன் இறை நினைவு கொண்டோர், சிரத்தை பக்தியுடன் பூசனை செய்வோர், மிக மிக அரிதானவரே. அன்பு அதனுடன் இணையாவிட்டால் பலன் இல்லை. பள்ளியில் முதன்மையாகத் தேறிய மாணவனுக்குச் சிறப்புப் பரிசைத் தருவதைப் போல அன்புடன் எப்போதும் தன்னைத் தொழுவோர்க்கு, தியானிப்பவருக்கு பகவான் தன் கரங்களினாலேயே புத்தியோகம் என்ற பரிசினை அளிக்கிறார். ஆஹா! எத்தகைய பெருமை! என்னே அந்த பக்தனின் பாக்கியம். முற்பிறவிகளின் புண்ணியத்தின் விளைவேயன்றோ அது!

பகவான் பக்தனுக்கு அளிக்கும் அந்த புத்தியோகமானது ஜீவனை சிவனாக்கவல்லது. நரனை நாராயணனிடம் சேர்க்கவல் லது. எனவேதான் 'மாம் உபாயந்தி' அதன் வாயிலாக அவர்கள் என்னை அடைகிறார்கள்' - என்று சொல்லப்பட்டது. புத்தியோகம் என்றால் என்ன? புத்தியைச் சார்ந்த யோகம். (The Yoga of discriminia-tion) என்ற பொருள். இதனையே ஞானயோகமென்பர். 'ஆன்மா இது, அநாத்மா இது, இது நிலையானது - நிலையற்றது பார்வை-காட்சி, என்று பகுத்தறிந்து காட்டுவதே இந்த யோகம். உடலையும் கருவியையும் ஆன்மாவினின்றும் வேறுபடுத்திக் காட்டுவது. இந்த யோகத்தினைப் பெற்றவன் உலகிலுள்ள ஒவ்வொரு பொருளையும் (அஸ்தி, பாதி, ப்ரியா - சத்சித் ஆனந்தம் இவற்றைக் கிரகித்துக் கொண்டு, உருவத்தையும், பேர்களையும் விட்டுவிடுவான்.

இத்தகைய புத்தியோகம் எவருக்குக் கிட்டும்? கோடானு கோடி மக்கள் உலகில் இருப்பினும் பக்தியுடனும், ஆர்வத்துடனும் எப்போதும் கடவுளை ஆராதிப்பவனுக்கு மட்டுமே இந்த மாபெ ரும் பேறு கிட்டுகிறது. பக்தியானது ஞானமாக மலர்கிறது. பக்திபெ றும் மலர் ஞானமெனும் பழத்தினை அளிக்கிறது. சிலருக்கு இத்த கைய ஐயப்பாடு எழுகின்றது. அவர்கள் - பலரும் புறம்பேயுள்ள ஒரு விக்ரகத்தினை உருவ வழிபாடு செய்கின்றோம். எமக்கு உட்புற மான ஆன்மநோக்கு எப்போது ஏற்படும். உருவ வழிபாடு செய்யும் எமக்கு அருவத்தின் மீது ஈடுபாடு எப்போது ஏற்படும்? கண்ணால் உருவத்தினைக் கண்டு புறத்தே பூசை செய்யும் எமக்கு மனத்தளவில் உருவமில்லாத பூசையாக எப்போது மாறுபடும்? வெளியில் விக்ர ஹகத்தைப் பூசை செய்யும் நாம் உள்ளிருக்கும் பரமனை எப்படிச் சேரமுடியும்! இதுபோன்ற வினாக்களுக்கு இச்சுலோகத்தில் நன்கு விடையளிக்கப்படுள்ளது. 'ஜீவர்களே! அங்ஙனமே சிறிதுகாலம் ஏதோ ஒரு வடிவில் (உருவ வழிபாடு) என்னை பூசிக்கவும், சேவிப்ப வர்களாக! ஆயின் அன்புடன் வழிபடவும், சிரத்தையுடன், பக்தியு டன் வழிபடவும், இடைவிடாது சேவிக்கவும். அதனால் நான் திருப் தியடைந்து, அத்தகைய கருணை உபாசனையால் நான் மகிழ்ந்து, நிர்க்குண உபாசனைக்குத் தேவையான புத்திபலம், ஞானயோகத் திற்குத் தேவையான மனவலிமை, ஆத்ம ஞான விசாரணைக்குத் தேவையான தெளிவான ஞானத்தை அளிப்பேன். அதன் மூலம் நீர் என்னைத் தவறாது அடைய முடியும் - என்று பகவான் கருணையு

டன் கூறுகிறார். ஐயப்பாடுகளை நீக்கி பக்தர்களுக்கு இங்கு பகவான் ஆறுதலளித்துள்ளார்.

ஜீவர்களுக்கு எந்தக் கணத்தில் இறைவனின் கருணையால் புத்தியோகம் கிடைக்குமோ அக்கணத்தினின்றே அவன் அருவ வழிபாட்டில் ஈடுபட்டு ஆன்மாவைத் தேடுவதில், விசாரணையில் ஈடுபடுவான். இதுவே பக்தியானது ஞானமாக உருவெடுக்கும் நல்ல சமயம். எமது பக்தியோகமே சிறந்ததென்றும், எமது ஞானயோகமே சிறந்ததென்றும், பக்தியோகத்தை விட ஞானயோகமே சிறந்ததென்றும் பலவிதமாக வாதாடுவோர்க்கு இச்சுலோகத்தில் பகவான் இரண்டும் வீடு பேற்றையடைய இன்றியமையாதாவையே என விளக்கிக்கூறி நல்ல பாடம் புகட்டியுள்ளார். பக்தி, ஞானம் இரண்டும் இணைந்தவையே, பக்தி காலப்போக்கில் ஞானமாக மாறிவிடும். பக்தி பக்குவமடைந்தால் ஞானம், 'தாஸோ அஹம்' என்பதே காலப்போக்கில் (ஸோஹம் ஆக மாறிவிடும் 'ததாமி புத்தியோகம்' என ஐயத்திற் இடமின்றி பகவான் தெரிவித்திருப்பதால் இந்த மாற்றத்திற்குக் கடவுள்தான் காரணகர்த்தா என்பது தெளிவாகிறது. எல்லா உயிர்களின் நினைவும் நுண்ணிய எண்ணத்தையும் கூட வெகு எச்சரிக்கையாகப் பரிசீலித்துக் கொண்டு பரமாத்மா, பக்தனின் இதயமானது தூய்மையான பக்தியினால் நிறைந்திருப்பின், உடனே 'புத்தியோகம்' என்ற விதையினை விதைப்பான். அதுவே மோட்ச மரமாகப் பெருகி வளரும். அதாவது, ஞானயோகமே மோட்சத்தின் வாயிலுக்கு இட்டுச் செல்லும் 'ததாமி' (தவறாது அளிக்கிறேன்) என்று வலியுறுத்திக் கூறுவதில் பகவானுக்கு பக்தர்களின் மீதுள்ள எல்லையற்ற கருணை புலப்படுகிறது. தூய்மையான பக்தி விலையை நாம் செலுத்தினால் போதும், புத்தி யோகத்திற்கு அப்பாற்பட்ட மோட்சத்தை நான் உங்களுக்கு அளிக்கிறேன் என்று பகவான் உறுதியளிக்கிறார். தான் எண்ணிய பொருளை அடைய விரும்புவோன் அடையும் வழி நன்கு உணர்ந்து அதனைக் கடைப்பிடிக்க வேண்டும். இறைவனைச் சேர்வதைக் குறிக்கோளாகக் கொண்டவன் அதற்கு வேண்டிய புத்தியோகத்தையும், பக்தியையும் பெற்றிருத்தல் வேண்டும். பக்தி செலுத்துதல் எளிதாதலால் அதனை முடிவில் கடைபிடித்து, இறைவனருளால் ஞானத்தை அடைந்து, வீடு பேற்றின் பங்குதாரர்கள் ஆக வேண்டும்.

**வினா :** மோட்சம் எங்ஙனம் கிட்டும்?

**விடை :** புத்தியோகத்தில் கிட்டும்.

**வினா :** புத்தியோகம் எங்ஙனம் கிடைக்கும்?

**விடை :** எப்போதும் அன்புடனும் பக்தியுடனும் இறைவனைத் தொழுவோர்க்கு இறைவனே அதனை உவந்தளிப்பார்.

**வினா :** புத்தியோகத்தினை அடையும் தகுதிகள் யாவை?

**விடை :** (1) இடைவிடாத இறைத் தொண்டு. (2) ஈடுபாட்டுடன் கூடிய இறைவழிபாடு.

*தேஷாமேவானு கம்பார்த்த மஹமக்ஞானஜம் தமஹ!*
*நாசயாம் யாத்ம பாவஸ்தோ ஞான தீபேனே பாஸ்வதா!! - (11)*

**சொற்பொருள்**

தேஷாம்-அவர்களுக்கு, அனுகம்பார்த்தம்-கருணைகாட்டுவதற்கு, அஹம் ஏவ-நானே, ஆத்ம பாவஸ்தம்-அவரவர் அந்தக்கரணத்தில் நிலைத்தவனாய், பாஸ்வதே-ஒளிவிட்டுப் பிரகாசிக்கும் ஞான தீபனே-அறிவாகிய விளக்கால், அஞ்ஞானஜம்-அஞ்ஞானத்தினால் ஏற்பட்ட, தமவி-இருளை (மோகமெனும் இருளை), நாஸயாமி-அழித்து விடுகிறேன்.

**கருத்துரை**

நான் அவர்களுக்கு அருளால் இரங்கி, அந்தக்கரணத்தில் வீற்றிருந்து, மெய்ஞானச் சுடர் விளக்கால் அஞ்ஞானத்தைத் துதித்த ஆரிருளை அகற்றி விடுகிறேன்.

**விளக்கம்**

இடைவிடாது பக்தியுடன் என்னைச் சேவிப்போர்க்கு புத்தி யோகத்தை அருளுகிறேன் என்று முன் காலத்தில் கூறினார். எதற்காக அதனை அருளுகிறான் என்பதற்கான காரணம் இங்குச் சொல்லப்படுகிறது. இறைவனைச் சிந்தனை செய்யும் பக்தர்கள்பால் இறைவனுக்குக் கருணை பிறக்கும். அதன் விளைவாக அவர்களுக்கு உதவ வேண்டும் என்ற அருள் மிகுந்து உலகியல் பொருள்களைக் காட்டி

லும் மிகச் சிறந்தவொன்றை, இறைவனது காட்சியென்னும் ஆனந்தத்தினை, வீடுபேற்றினை அளிக்கவல்ல தத்துவ ஞானத்தினை (புத்தியோகத்தினை) அளிக்கிறான். அந்த ஞானமானது ஒரு விளக்கைப் போன்றது. அஞ்ஞான ஆரிருளை அகற்ற வல்லது. பல பிறவிகளாகத் தொடர்ந்து சேர்ந்திருக்கும் மோகமென்னும், அறியாமையென்னும் பேரிருளை ஜீவனின் இதயத்திலிருந்து அகற்றிவிடுகிறது. சாதாரண விளக்கிற்கும், ஞான விளக்கிற்கும் பெருத்த வேறுபாடு உண்டு. சாதாரண விளக்கு சிறிதளவே ஒளிதரக்கூடியது, சிறிது நேரத்தில் அணைந்து விடக்கூடியது. ஆனால் ஞான விளக்கோ மிகவும் ஒளி பொருந்தியது. எனவேதான் 'பாஸ்வதா - பிரகாசிப்பது' எனச்சொல்லப்பட்டது. சாதாரண விளக்கு புற இருளைத்தான் போக்கும். ஆனால் ஞான விளக்கோ மோகவடிவான அக இருளை, அகற்றவல்லது. அக்ஞானஜம்-அஞ்ஞானத்திலிருந்து பிறந்தது என்று சொல்லப்படுவதால் இந்த இருள் அஞ்ஞானத்திலிருந்தே தோன்றுகிறது என்பது தெளிவாகிறது. அஞ்ஞானமென்பதும், 'நான் எனது' என்ற வடிவில் உலவுகிறது. உயிர்களின் சம்சார துக்கத்திற்கு ஏதுவாகி, உண்மையல்லாதவற்றை உண்மைபோலவும், உண்மையை உண்மையல்லாததைப் போன்றும், தோன்றச் செய்து மயக்குகின்றது. அவ்வறியாமையெனும் இருளை ஞான விளக்கு அகற்றி விடுகிறது.

ஞான விளக்கை இறைவன் அனைவருக்கும் வழங்குவானா? இல்லை. எவனொருவன் மிக்க அன்புடன் இறைவனைத் துதிப்பவர்க்கே கருணை மிகுந்து இறைவன் ஞான விளக்கு என்னும் பிரசாதத்தை அளிப்பான். இச் செய்திகள் அனைத்தும் இச்சுலோகத்தால் தெளிவாக்கப்பட்டுள்ளன.

*இறைவனை வணங்காவிடில் அவனருள் கிட்டாது.*
*அவனது அருள் இல்லாவிடில் ஞானதீபம் கிட்டாது.*
*ஞானதீபம் இல்லாவிடில் அஞ்ஞான இருள் அகலாது.*
*அஞ்ஞான இருள் அகலாவிடில் துக்கம் நீங்காது.*

எனவே துக்க நிவாரணத்திற்காக ஒவ்வொரு ஜீவியும் தூய்மையான இதயத்துடனும், மாறாத பக்தியுடனும் முதலில் இறைவழிபாடு செய்தல் வேண்டும். மோட்சத்தின் அடிப்படை இரகசியம் அனைத்தும் இவ்விறை பக்தியிலேயே அடங்கி இருக்கிறது என்பது இச்சுலோகத்தினால் தெளிவாகிறது.

*பக்தர்களின் இதயத்தை பகவான் எங்ஙனம் அறிவான்? அவன் வெகுதொலைவில் இல்லை. ஒவ்வொருவர் இதயத்திலும் காட்சியாய் நின்று அவர்களது செயல்களனைத்தையும் கவனித்துக் கொண்டிருப்பான். அவர்கள் எண்ணம் ஒவ்வொன்றையும் அவன் கண்காணிக்கையில் எவரும் அவனது பார்வையிலிருந்து தப்பிக்க முடியாது. எனவே எவரும் பாவ காரியங்களைச் செய்யலாகாது. தீய எண்ணங்களுக்கு இடம் கொடுத்தல் தகாது. தெய்வீக காரியங்களிலும், நற்காரியங்களிலும் ஈடுபடுதல் வேண்டும் ஏனெனில் ஒவ்வோர் உயிரின் இதயத்திலும் இறைவன் குடியிருக்கிறார் என்று இங்குக் கூறப்பட்டது.*

*'நாஸஸாமி' - தன்னைச் சேவிப்பவர்களின் இதயத்தில் உள்ள மோகமென்னும் இருளை நான் அழிக்கிறேன் என பகவான் ஐயத்திற்கிடமின்றி கூறுவதால் ஜீவனானவன் இறை ஆராதனையைச் சரிவர நிறைவேற்றினால் பரமன் மோக நாசத்தைக் கட்டாயம் செய்வாரென்பது விளக்கப்படுகிறது. பக்தர்கள் பந்தங்களிலிருந்து விடுபடும் விஷயத்தைப்பற்றி இனிச் சிறிதும் கவலை கொள்ளாமல் அவர்களது வேலையை அதாவது இடைவிடாத பக்தியும் தியானமும் செய்தால் போதும். செடிக்குத் தேவையான நீரைப் பாய்ச்சிக் கொண்டிருந்தால் மட்டும் போதாது. அதன் பலனைப் பற்றிய ஐயம் தேவையில்லை. செடி நன்கு வளர்ந்து பழுத்தே தீரும். அவ்வாறே பக்தியெனும் நீரை ஆன்மீக மரத்திற்குப் பாய்ச்சிக் கொண்டிருந்தால், 'வீடுபேறு' என்னும் பழம் தானாகவே கிடைக்கும். நான் ஞான விளக்கை அளித்து இதய இருளை அகற்றிவிடுவேன் என பகவான் தெரிவித்துள்ளார். இருளை அகற்ற அவன் உதவி தேவை. அவனது அருளைப் பெற பஜனை, தொண்டு, பூசை, தொழுகை, தியானம் முதலியவற்றால் மிகப்பெரும் முயற்சி செய்ய வேண்டியிருக்கிறது.*

**வினா :** *ஜீவனுக்கு வீடுபேறு எப்போது கிடைக்கும்?*

**விடை :** *அஞ்ஞானமெனும் இருள் அகன்றபோது.*

**வினா :** *அவ்விருள் எப்போது விலகும்?*

**விடை :** *ஞானமெனும் ஒளி பொருந்திய விளக்கால் விலகும்.*

**வினா :** *ஞான விளக்கு எங்குக் கிடைக்கும்?*

**விடை :** இறைவனால் வழங்கப்படும்.

**வினா :** யாருக்கு?

**விடை :** அவனுக்கு எவர் மீது கருணைபிறக்குமோ அவருக்கு.

**வினா :** இறைவனுக்கு எவர்மேல் கருணைபிறக்கும்.

**விடை :** மாறாத அன்புடனும் தொழுவோர் மேல் கருணை பிறக்கும்.

**வினா :** உயிர்களின் புண்ணியத்தைக் கடவுள் எப்படி அறிவார்?

**விடை :** எல்லா உயிர்களின் இதயங்களிலும் அவன் குடி கொண்டிருக்கிறான். எனவே அவர்களுடைய எண்ணங்களையும் நடத்தைகளையும் நன்கு அறிவான்.

**வினா :** மோக வடிவான இருள் எதிலிருந்து தோன்றும்?

**விடை :** அறியாமையிலிருந்து தோன்றும்.

**வினா :** ஞான விளக்கு எத்தகையது?

**விடை :** மிகவும் ஒளிபொருந்தியது; ஜீவன் மோட்சத்திற்கு வழி காட்டி இட்டுச் செல்வது.

முன்னுரை

பக்தி வித்து நன்கு வளர்வதற்கு இறைவனின் விபூதியை அறிவது நல்லதென்று கருதி அர்ஜுனன் அவர் மூலமாக அவரை அறியக் கருதி ஏழு சுலோகங்களின் மூலம் அவரைப் போற்றி, இறுதியில் 'உன் விபூதி மகிமையை அறிவிப்பாயாக! தேவா!' என்று வேண்டுகிறான். இறைவனின் போதனையைக் கேட்டு கட்டுக்கடங்காத மகிழ்ச்சியுடன் இவ்வாறாகத் துதிக்கிறான்.

**அர்ஜுன உவாச :**

*பரம் ப்ரஹ்ம பரம் தாம பவித்ரம் பரமம் பவான்!*
*புருஷம் சாச்வதம் திவ்யமாத்தி தேவமஜம்விபும்!! -(12)*

*அஹுஸ்த்வாம்ருஷயஹ ஸர்வே தேவர்ஷிர் நாரதஸ்ததா!*
*அஸிதோ தேவலோ வ்யாஸஹ ஸ்வயம் சைவ ப்ரவீஷிமே!! - (13)*

**அர்ஜுனன் சொன்னது:-**

**சொற்பொருள்**

*பகவான்-நீர், பரம்ப்ரஹ்ம-மேலாம் பிரம்மம், தாம-இருப்பிடம், பரமம் பவித்தரம்-மேலான தூய்மையானவன், த்வாம்-உம்மை, சாஸ்வதம்-நித்யமானவர் என்றும், திவ்யம்-ஒளியுடையவரையும், பரம-பரம புருஷனாகவும், ஆதிதேவம்-தேவர்கள் அனைவர்க்கும் தேவனானவன் என்றும், அஜம்-பிறவியற்றவனாகவும், ஸர்வே ரிஷயஹ-முனிவர்களனைவரும், தேவரிஷி ஆன நாரதரும், அஸிதஹ-அஸிதர், தேவலஹ-தேவரும், வ்யாஸ்ஹ-வியாஸரும், ஆஹிஹ்-சொல்கிறார்கள், ஸ்வயம்ச-நீரும், ததா-அவ்வாறே, மே-எனக்கு, ப்ரவீஷி-சொல்கிறீர்.*

**கருத்துரை**

*மேலாம் பிரம்மம், உயர்ந்த இருப்பிடம், ஒப்பற்ற புனிதம் தாம் ஆவீர். உம்மை நித்யமானவன், திவ்ய புருஷன், ஆதி தேவன், பிற வாதவன், எங்கும் நிறை பொருள் என்று எல்லா ரிஷிகளும், தேவ ரிஷி நாரதர், அப்படியே அஸிதர், தேவர், வியாசர் ஆகியோரும் இயம்புகின்றனர். தாமும் அவ்வாறே சொல்கின்றீர்.*

**விளக்கம்**

*பகவானின் ஈடுஇணையற்ற போதனை மொழியைக் கேட்டு அர்ஜுனன் மலர்ந்த மனத்தினனாய் மகிழ்ச்சிப் பெருக்கை அடக்க இயலாமல் பகவானை இவ்வாறு போற்றத் தொடங்கினான். ஆசான் பால் இங்ஙனம் அளவற்ற பக்தி ஏற்படும் போதே ஆசான் சொல்வது சீடர்களின் இதயத்தில் நன்கு பதிகிறது.*

**வினா :** *இறைவன் எத்தகையவன்?*

**விடை :** *(1) பரம்பொருள், (2) மேலான இருப்பிடம், (3) மிகத் தூய்மையானவன், (4) நிலையானவன், (5) முழு முதற்கடவுள், (6) பிறப்பிறப்பில்லாதவன், (7) எங்கும் வியாபித்திருப்பவன்.*

**வினா :** *இறைவன் இத்தகையோன் எனக் கூறிய மகான்கள் யார் யார்?*

**விடை :** *(1) எல்லா முனிவர்களும், (2) நாரதர், (3) அஸிதன், (4) தேவர்கள், (5) வேத வியாசர், (6) கண்ணபிரான்.*

*ஸர்வமேதத்ருதம் மன்யே யன்மாம் வதஸி கேசவ!*
*நஹிதே பகவன் வ்யக்திம் விதுர்தேவா ந தானவாஹ்!! - (14)*

### சொற்பொருள்

கேசவா-கேசவா! யத்-எதனை, மாம்-எனக்கு, வதஸி-சொல்கிறீரோ, ஏதத்-அது, ஸர்வரம்-யாவும், ருதம்-உண்மை, என்று, மான்யே-கருதுகிறேன், பகவன்-பகவானே! தே-உம்முடைய, வ்யக்திம்-இயல்பினை, தேவாஹ்-தேவர்கள், நவிதுர்-உணரமாட்டார்கள், நதானவாஹ்ச-அரக்கர்களும் நச விதுஹ்-உணரமாட்டார்களல்லவா?

### கருத்துரை

கேசவா! நீர் எனக்கு, ஓதுவது யாவும் உண்மையென்றே கருதுகிறேன். பகவானே! உமது தோற்றத்தை உனது இயல்பான வடிவத்தை தேவர்களும் அறியார், தானவர்களும் அறியார்.

### விளக்கவுரை

'நீ சொல்வதனைத்தையும் உண்மையெனக் கருதுகிறேன்' என்று ஆசானின் சொற்களில் சீடன் முழு நம்பிக்கையை வெளிப்படுத்துகிறான். இங்ஙனம் வெளிப்படுத்துவதால் ஆசானுக்கும் சீடனின் மேல் அன்பு, பாசம் பெருகும்.

*ஸ்வயமே வாத்மனாத்மானம் வேத்த த்வம் புருஷோத்தம!*
*பூதபாவன பூதேச தேவதேவ ஜகத்பதே!! - (15)*

### சொற்பொருள்

புருஷோத்தம-புருஷோத்தமா! பூத பாவனா-எல்லா உயிர்களையும் படைத்தவனே! பூதேச-உயிர்களைக் காப்பாற்றுபவனே. இறைவ; தேவ தேவ-தேவர்களுக்குத் தேவனே! ஜகத்பதே-உலகையாள்பவரே!, த்வம்-நீர் ஆத்மானம்-உமது இயல்பான உருவத்தை, ஆத்மனா-உன்னால், ஸ்வய மேவ-தாமே, வேத்தி-அறியவல்லீர்!

### கருத்துரை

புருஷோத்தமா! எல்லா உயிர்களையும் படைத்துக் காப்பவனே! தேவ தேவா இவ்வண்டத்தின் நாயகனே! உம்மை உம்மால் நீரே உள்ளபடி அறிவீர்! (ஏனையோர்க்கு எளிதில் அறிதல் இயலாது என்பது பொருள்)

*வக்து மர்ஹஸ்ய சேஷேண திவ்யா ஹ்யாத்மவிபூதயஹ!*
*யாபிர் விபூதி பிர்லோ கானி மாம் ஸ்த்வம் வ்யாப்ய திஷ்டஸி!! - (16)*

## சொற்பொருள்

யாபின் விபூதியிஹி-எந்த விபூதிகளால் (மகிமைகளால்), த்வம்-நீர், இமாம் லோகான், இந்த உலகங்களை, வ்யாப்ய-வியாபித்து, திஷ்டஸி-இருக்கிறீரோ, (அப்படிப்பட்ட) திவ்யா-தெய்வ பெற்றியுடைய, ஆத்மவிபூதயஹ-ஆத்ம விபூதிகளை, அசேஷேண-முழுமையாக, வக்தும்-சொல்ல, அர்ஹஸீ-ஏற்றவன்.

## கருத்துரை

எனவே, எந்த விபூதிகளால் இந்த உலகங்கள் அனைத்திலும் வியாபித்துள்ளீரோ அத்தகைய தெய்வப் பெற்றியுடன் கூடிய உன் ஆன்ம விபூதிகளை, முழுமையாகச் சொல்வதற்கு நீயே ஏற்றவன்.

*கதம் வித்யாமஹம் யோகிம்ஸ்த்வாம் ஸதா பரிசிந்தயன்!*
*கேஷு கேஷு ச பாவேஷு சிந்த்யோ அஸி பகவன் மயா!! - (17)*

## சொற்பொருள்

யோகின்-யோகீஸ்வரனே! அஹம்-நான், சதா-எப்பொழுதும், கதம்-எவ்வாறு, பரிசிந்தயன்-சிந்தித்துக் கொண்டு, த்வாம்-உன்னை, வித்யாம்-அறிவேன், பகவன்-பகவானே! மயா-என்னால், கேஷு கேஷிச-என்னென்ன பாவேஷு-விதங்களில், சிந்த்யஹ-சிந்திக்கத் தகுந்தவராக, அஸி-இருக்கின்றீர்?

## கருத்துரை

யோகீஸ்வரனே! யாண்டும் உம்மையே சிந்தித்து உம்மை அறிவது எப்படி? பகவானே! என்னென்ன விதங்களில் நீர் என்னால் சிந்திக்கத் தக்கவர்? எவ்வப் பொருள்களில் நான் உம்மை தியானிக்க வேண்டும்?

## விளக்கம்

மிகவும் நுணுக்கமான தெய்வதத்துவம் சாதாரண மக்களின் அனுபவத்திற்கு உடனடியாக வராது. எனவே பயிற்சியாளன் தொடக்க நிலையில் மனத்தை இறை சம்பந்தப்பட்ட பொருளில் அல்லது வடிவத்தில் நிலைக்கச் செய்து சிறிது காலம் தியானத்தைப் பயிற்சி செய்தல் வேண்டும். படிப்படியாக மனத்தை ஒருமுனைப்படுத்திய பிறகு குணங்களற்ற அருவத்தைப் பற்றிச் சிந்திக்கலாம்.

அர்ஜுனன் தியானிப்பதற்கு ஏற்ற சில உருவ அமைப்புகளை, தெய்வீகப் பொருட்களைத் தெரிவிக்கும்படி பகவானைக் கேட்டுக் கொள்கிறான். உலகமனைத்துமே இறைவடிவமேயாயினும் எளிதாக தியானிக்கும் பொருட்டு எவ்வெவ்வுருவங்கள் ஏற்றன எனத் தெரிவிக்கும்படி அர்ஜுனன் வேண்டுகிறான்.

*விஸ்தரேணாத்மனோ யோகம் விபூதிம் ச ஜனார்தன!*
*பூயஹ கதய த்ருப்திர்ஹி ச்ருண்வதோ நாஸ்தி மே அம்ருதம்!! - (18)*

## சொற்பொருள்

ஜனார்த்தன-ஜனார்த்தனா, ஆத்மனஹ-உம்முடைய, யோகம்-யோகத்தையும் (மகிமையை), விபூதிம் ச-விபூதி அதாவது லீலாவைபங்களை, விஸ்தரேண-விரிவாக, பூயஹ-மறுபடியும், கதய-உரைப்பாயாக, ஹி-ஏனெனில், அம்ருதம்-அமுதமொழியினை, ச்ருண்வதஹ-கேட்கின்ற, மே-எனக்கு, த்ருப்தி-திருப்தி, ந அஸ்தி-ஏற்படவில்லை.

## கருத்துரை

கிருஷ்ணா! உன்னுடைய யோக மகிமைகளையும், லீலா வைபங்களையம் விரிவாக மீண்டும் தெரிவிப்பாயாக. ஏனெனில் உனது அமுத மொழிகள் எனக்குத் தெவிட்டவில்லை. (மேலும் கேட்க வேண்டுமென்ற ஆர்வம் உண்டாயிருக்கின்றது).

## விளக்கம்

சீடனுக்கு குருநாதரது மொழிகளைக் கேட்டதால் இத்தகைய ஆர்வம் உண்டாக வேண்டும்.

## முன்னுரை

அர்ஜுனனின் இம்மொழியைக் கேட்டு பகவான் தனது வைபங்களில் முக்கியமானவற்றை மட்டும் கூறுகிறேன் கேள் என்று கூறத் தொடங்குகிறார்.

## ஸ்ரீ பகவானுவாச

*ஹந்த தே கதயிஷ்யாமி திவ்யா ஹ்யாத்ம விபூதயஹ!*
*ப்ராதான்யத ஹ குருச்ரேஷ்ட நாஸ்த்யந்தோ விஸ்தரஸ்யமே!! - (19)*

## சொற்பொருள்

*குருச்ரேஷ்ட-கௌரவ வம்சத்தில் சிறந்தவனான அர்ஜுனா! ஹந்த-இப்போது த்வயாம்-தெய்வீகமான, ஆத்ம விபூதயஹ-என்னுடைய விபூதிகளை, ப்ராதான்யதஹ-முக்கியத்துவத்தின் அடிப்படையில், தே-உனக்கு, கதயிஷ்யாமி-சொல்கிறேன், ஹி-ஏனெனில், மே-என்னுடைய, விஸ்தரஸ்ய-விபூதியின் விரிவிற்கு, அந்தஹ-முடிவே, ந அஸ்தி-இல்லை.*

## ஸ்ரீ பகவான் சொன்னது

## கருத்துரை

*குருகுல வம்சத்திற் சிறந்தோனே! தெய்வீகமான எனது மகிமைகளில் முக்கியமானவற்றை உனக்கு மொழிகிறேன். ஏனெனில் என் பரந்த வைபவத்திற்கு முடிவே கிடையாது.*

## விளக்கம்

*பகவான் இறுதியற்றவன். எனவே அவனது மகிமைகளும் முடிவற்றவை. ஆதலால் வைபங்களில் முக்கியமானவற்றைப் பற்றி மட்டுமே பகவான் வர்ணிக்கத் தொடங்குகிறார்.*

*அஹமாத்மா குடாகேச ஸர்வபூதாசயஸ்திதஹ!*
*அஹமாதிஸ்ச மத்யம் ச பூதானாமந்த ஏவச!! - (20)*

## சொற்பொருள்

*குடாகேச-அர்ஜுனா! ஸர்வபூத ஆசயஸ்திதஹ-எல்லா உயிர்களின் இதயத்தில் இருக்கிற, ஆத்மா-பரமாத்மா, அஹமேவ (அஸ்மி) நானாகவே இருக்கின்றேன், பூதானாம்-உயிர்களுடைய, ஆதிஹச-முதலும் (படைப்பும்) மத்யம்ச-இடையும் (இருத்தலும்) அந்தஹ்ச-முடிவும் (இறுதியும்), அஹம் ஏவ (அஸ்மி) நானாக இருக்கின்றேன்.*

## கருத்துரை

*அர்ஜுனா! எல்லா உயிர்களுடைய இதயத்திலிருக்கும் ஆத்மாவாக நானேயிருக்கிறேன். மேலும் உயிர்களுடைய முதல், இடை,*

முடிவு (தோற்றம், நிலைத்தல், அழிவு) ஆகியவையாவும் இருக்கி றேன்.

**விளக்கம்**

சொல்ல வேண்டியனைத்தையும் பகவான் சுருக்கமாக ஒரே வாக்கியத்தில் சொல்லி முடித்துள்ளார். (அஹமாத்மா ஸ்திதஹ) கோடிக்கணக்கான உயிர்களிலும் விளங்கும் ஆத்மா நான்தான் என்று பகவான் இங்குக் கூறுகிறார். ஒவ்வொரு உயிரிலும் உடல், புலன், மனம், புத்தி ஆகியவற்றிற்குச் சாட்சியாக ஆன்மா இருக்கின்றது. அதவாது ஜீவாத்மா அது பரமாத்மா வினின்று வேறுபட்டதல்ல என்பது இங்குக் குறிப்பிடப்பட்டது. அதாவது ஜீவாத்மாவே பர மாத்மா என்னும் மஹா வாக்கியத்தில் தத்துவபோதனை இங்குச் செய்யப்பட்டது. அதுவே அத்வைத தத்துவம். எனவே ஜீவன் பர மாத்ம நிலையை அடைய வேண்டுமெனில் பஞ்ச கோசங்களினின் றும் தன்னை வேறுபடுத்திக் கொண்டு உடல், புலன், மனம், புத்தி ஆகியவற்றிற்கு சாட்சியாக விளங்கும் ஆத்மாவை நேரில் காண வேண்டும். அதுவே பரமாத்மா. உபநிஷத்துக்களனைத்தும் இவ் வுண்மையையே புகட்டுகின்றன.

மேலும் ஒவ்வோர் உயிரிலும் இறைவன் குடியிருப்பது தெளி வாக்கப்பட்டதால் எந்த உயிரையும் அற்பமாகக் கருதவதற்கில்லை. ஒவ்வொரு மனிதனும் தான் அற்பமான அழியக்கூடிய உடலல்ல வென்றும், நிலையானதும் மகத்தானதுமான பரபிரம்ம வடிவின னேயென்றும் உறுதிபடுத்திக் கொள்ள வேண்டும். எந்த உயிர்களை யும் அற்பமாக எண்ணாமல் தீங்கிழைக்காமல் பிறருக்கு உபகாரம் செய்பவனாக வாழ்தல் வேண்டும். மானவ சேவையை மாதவன் சேவையென்றே கருத வேண்டும். இறைவனது இருப்பினை எங்கும் உணர்ந்து பாவச் செயல்கள் எதிலும் ஈடுபடாமல் இருத்தல் வேண் டும். ஏனெனில் பரமாத்மா அவரவர் இதயத்தில் இருந்தபடி அவர வர் பாவ புண்ணியங்களை மிக நுணுக்கமாகக் கவனிக்கின்றார்.

உலகனைத்தும் இருப்பிடமாகக் கொண்டுள்ள பரமாத்மாவினி டத்தில் அனைத்தும் ஒடுங்கியிருப்பதால் உண்மையில் அது இருப்பி டத்தை விட வேறில்லையாதலால் எல்லா உயிர்களுக்கும் முதல், இடை, முடிவு எல்லாம் தானே என்று பகவான் சொல்கிறார்.

மேலும் 'ஸர்வ பூதாய ஸ்தித ஹ' என்ற சொல்லைப் பயன்படுத்தி யுள்ளார். எல்லா உயிர்களிடத்தில் இறைவன் குடி கொண்டிருக்கி றான் என்பது புலனாகிறது. எனவே எவரும் இனி வருந்தாமல், ஊக்கத்தினை இழந்து விடாமல், தான் அற்பமென்று கருதாமல், தன்னுள் மறைந்திருக்கும் அழிவற்ற பரமாத்மாவைக்காண முயற் சித்தல் வேண்டும். துயரம் என்பது நமது உண்மைச் சொரூபமான ஆன்மாவை மறப்பதானாலேயே ஏற்படுகின்றது என்பதை உணர்ந்து, ஆன்மாவை எப்போதும் எண்ணிப் பார்த்து துணிவும் மகிழ்ச்சியும் கொண்டு துயரமில்லாப் பெருவாழ்வை, பந்தங்களி னின்றும் விடுதலையை, நிலையான வீடுபேற்றையடைதல் வேண் டும்.

'குடாகேச'-குடா+ஈசா-துக்கத்தை வென்றவனே. உணவு, தூக் கம் என்ற இரு திருடர்கள் மனிதனது வாழ்க்கையைக் கொள்ளையிடு கின்றார்கள். எனவே மோட்சத்தை விரும்புபவன் அவ்விரண்டு திரு டர்களையும் விரட்டவேண்டும். மிதமான ஆகாரம், மிதாமன தூக் கம் ஆகியவற்றை மேற்கொள்ளுதல் நலம்.

**வினா :** கோடிக்கணக்கான உயிர்கள் உள் உறையும் ஆன்மா யார்?

**விடை :** சாட்சாத் பரமாத்மாவே.

**வினா :** உயிர்களுடைய முதல், இருப்பு, முடிவுகளாக அவன் இருக் கின்றான்.

*ஆதித்யானாமஹம் விஷ்ணுர் ஜ்யோதிஷாம் ரவிரம்சுமான்!*
*மரீசிர் ம்ருதாமஸ்மி நக்ஷத்ராணாமஹம் சசீ!! (21)*

**சொற்பொருள்**

அஹம்-நான், ஆதித்யானாம்-ஆதித்யர்களில், விஷ்ணு-விஷ்ணு, ஜ்யோதிஷாம்-ஒளி வழங்குவனற்றுள், அம்சமான்-கதிர்களையுடைய, ரவி-சூரியன், மருதாம்-மருத்துக்களில், மரீசி-மரீசி என்றவன், அஹம்-நான், நக்ஷத்ரானாம்-நட்சத்திரங்களிலே, சசீ-சந்திரன், அஸ்மி-ஆக இருக்கிறேன்.

கருத்துரை

*நான் ஆதித்யர்களில் விஷ்ணு. ஒளிர்பவைகளுள் கதிர் நிறைந்த ஞாயிறு நான். மருத்துக்களுள் மரீசி, நட்சத்திரங்களுள் சந்திரன்.*

விளக்கம்

*ஆதித்தியர்கள் அதிதீயின் பிள்ளைகள் 12 பேர். இவர்களை துவாதச ஆதித்தியர் என்பர். அவர்கள் (1) ஆமா தாதா இந்த்ரன். அரியமா, விசுவான், பூஜன், பிர்ஜந்நியன், துவஷ்டா, மித்திரன், விஷ்ணு, வருணன், பூஷா என்போர்.*

*மருத்துக்கள் எழுவர். அவர்கள் (1) ஆவஹ, ப்ரவஹ, பிநிவ, பராவஹ, உத்வஹ, சம்வஹ, பர்வஹ முதலானோர்.*

ஆதித்தியர்களில் நான் விஷ்ணு என்பதற்கு ஏனையோரைக் காட்டிலும் சற்று கூடுதலான ஒளியுடையவன் என்று பொருள் கொள்ள வேண்டும்.

*வேதானாம் ஸாமவேதோ அஸ்மி தேவனா மஸ்மி வாஸவஹ!*
*இந்திரியாணாம் மனஸ்சாஸ்மி பூதாணாமஸ்மி சேதனா!! -(22)*

சொற்பொருள்

வேதானாம்-வேதங்களில்,சாமவேதம்-சாமவேதமாக,அஸ்மி-இருக்கிறேன், தேவானாம்-தேவர்களில். வாஸவஹ-இந்திரனாக, அஸ்மி-இருக்கிறேன், இந்தீரியானாம்-புலன்களில், மனஹ-மனமும், அஸ்மி-ஆக இருக்கிறேன். பூதானாம்-உயிர்களின், சேதனா-உணர்ச்சி அல்லது அறிவு, அஸ்மி-ஆக இருக்கிறேன்.

கருத்துரை

வேதங்களுள் நான் சாமவேதம், தேவர்களுள் இந்திரன். இந்திரியங்களில் மனம், உயிர்களில் உணர்வுமாக இருக்கிறேன்.

*ருத்ராணாம் சங்கரஸ்சாஸ்மி வித்தே சோ யக்ஷ ரக்ஷஸாம்!*
*வஸுனாம் பாவகஸ்சாமி மேருஹு சிகரிண மஹம்!! - (23)*

## சொற்பொருள்

ருத்ரானாம்-ருத்திரர்களில் சங்கரஹ-சங்கரனாகவும், அஸ்மி-ஆக இருக்கிறேன். யக்ஷரக்ஷஸாம்-யக்ஷர்களில் அரக்கர்களிலும், வித்தஈசஹ-குபேரனாகவும், வஸூனாம்-வஸூக்களில், பாவகஹ்ச-அக்னியாகவும், சிகரினாம்-சிகரமுள்ள மலைகளுள், மேருஹு-மேருமலையாகவும், அஹம்-நான், அஸ்மி-ஆக இருக்கிறேன்.

## கருத்துரை

ருத்திரர்களுள் சங்கரனாகவும், யக்ஷ ராக்ஷசர்களுள் குபேரனாக வும், வஸூக்களில் அக்னியாகவும், மலைகளுள் மேருமலையாக வும் நான் இருக்கிறேன்.

## விளக்கம்

ருத்திரர்கள் பதினொரு பேர். இவர்களை ஏகாதச ருத்திரர்கள் என்பர். அவர்களின் பெயர்கள் வருமாறு:- (1) ஹர, (2) பஹூரூப த்ரியம்பக, (3) , (4) அபராஜித, (5) வ்ருஷாகபி, (6) ஸம்பூ, (7) கபர்தி, (8) ரைதவ (9) ம்ருச வ்யாத (10) ஷர்வ (11) கபாலி.

வஸூக்கள் எண்மர். அவர்கள் (1) தரா (2) த்ருவ (3) சோம (4) அபூ (5) அனில (6) அணல (7) ப்ரத் யுஷ (8) ப்ரபாச.

*புரோதஸாம் சமுக்யம்மாம் வித்தி பார்த்த ப்ருஹஸ்பதிம்!*
*ஸேனானீனாமஹம் ஸ்கந்தஹ ஸரஸாமஸ்மி ஸாகரஹ!! - (24)*

## சொற்பொருள்

பார்த்த-அர்ஜுனா! புரோதஸாம்-புரோகிதர்களில், முக்யம்-மிகவும் முக்கியமான, ப்ருஹஸ்பதிம்-ப்ருஹஸ்பதியாக, மாம்-என்னை, வித்தி-அறிவாயாக, அஹம்-நான், சேனா ரீனாம்-படைத் தலைவர்களில், ஸ்கந்தஹ-ஸ்கந்தனாகவும், ஸரஸாம்-நீர் நிலைக ளுள், ஸாகரம்-சமுத்திரமாகவும், அஸ்மி-ஆக இருக்கிறேன்.

விளக்கம்

முக்யம் என்று சொல்வதால் மேன்மை, தூய்மை, தெய்வீகத் தன்மை ஆகியவற்றிற்கு அடையாளமாகும் என்று பொருள்.

*மஹர்ஷிணாம் ப்ருகுரஹ° கிராமஸஸ்ம்யேக மக்ஷரம்!*
*யக்ஞானாம் ஜபயக்ஞோ அஸ்மி ஸ்தாவராணாம் ஹிமாலையஹ!! - (25)*

சொற்பொருள்

மகரிஷிகளுள் நான்பிருகு; வாக்குகளுள் ஓரெழுத்தாகிய பிரணவ மந்திரம்; யக்ஞங்களுள் நான் ஜப யக்ஞம். அசையாப் பொருட்களில் இமாலய மலையாக இருக்கிறேன்.

விளக்கம்

'இராம் அஸ்மி ஏகம் அக்ஷரம்'-பதங்கள் பலவிருப்பினும் அவற்றுள் ஓங்கரமாக நான் இருக்கிறேன் என்று பகவான் சொல்வதால் அதன் முக்கியத்துவம் நன்கு புலப்படுகிறது. நூறு வாக்கியங்கள் சொல்வதை விட சாரமான ஒரு வாக்கியம் சொல்வது புண்ணியத்தை அளிகக்கூடியது. அந்த சாரமே ஓங்காரம். எல்லா மந்திரங்களுக்கும் உயிர்நாடி அது. எல்லா முறைகளின் சாரமும் அதுவே. அது பரபிம்ம வாசகம். எனவே அது ஜபிப்போருடைய பாவங்களைப் போக்கும். அதன் பொருளை எண்ணிப் பார்ப்போரை வீடுபேற்றிற்கு இட்டுச் செல்லும். எனவே எல்லா வேதங்களும், சாஸ்திரங்களும் இந்த பிரணவத்தைக் குறித்து விவரிக்கவும், சிறப்பாகவும் எடுத்துரைக்கின்றன. இவ்வாறு சொற்களனைத்தின் சாரமாக அது விளங்குவதால், வீணாக உலக விஷயங்களில் காலத்தைக் கழிக்காமல் தெய்வ வடிவாய் விளங்கும் ஓரக்ஷரமான ஓம்காரத்தை உச்சரித்தல், எண்ணுதல் மிக்க நலம் பயப்பதாகும்.

'யக்ஞானாம் ஜப யக்ஞோ அஸ்மி' - வேள்விகளில் நான் ஜப வேள்வியென்று கூறுகிறார். இதனால் ஜபத்திற்கு எத்துணை மகிமை என்பது புலனாகிறது. ஜபத்தினை ஒரு வேள்வியாகச் செய்து வந்தால் அது மனத் தூய்மைக்கு வழிவகுக்கக்கூடிய மாபெரும் வேள்வி

என்பது தெளிவாகிறது. சாஸ்திரங்களில் பலவிதமான யக்ஞங்களைக் குறித்துச் சொல்லப்பட்டிருப்பினும் அவை மிக்க கடினமானவை. எனவே, மிகவும் எளிமையோடு அனைவரும் செய்யக்கூடிய வகையில் பின்பற்றுதற்கு ஏற்றதாய், இருப்பது இந்த ஜப வேள்வி. வேள்விகளனைத்திலும் சிறந்ததாக அதனை பகவான் தன் வடிவமாகவே வர்ணித்திருக்கிறார். இது செலவு இல்லாத வேள்வியாயினும் அளவற்ற பலனையளிக்கவல்லது. இது மனதை தூய்மைப்படுத்திப், பல பிறவிகளைத் தொடர்ந்து வரும் பாவங்களைக் கழுவி பிரம்மஞானத்தைப் பெறுவதற்கான அனுகூல நிலையை ஏற்படுத்தித்தரும். இது சாட்சாத் இறைவனின் வடிவாகவே குறிப்பிடப்படுவதால் மக்களனைவரும் இதனைக் கடைப்பிடிக்கத்தக்கது.

*அஸ்வத்தஹ ஸர்வவ்ருக்ஷாணாம் தேவர்ஷீணாம் ச நாரத!*
*கர்ந்தர்வாணாம் சித்ரதஹ ஸித்தானாம் கபிலோ முனிஹி!! - (26)*

### சொற்பொருள்

ஸர்வ வ்ருக்ஷானாம்-எல்லா மதங்களிலும், அஸ்வத்தஹ-அரசமரம், தேவரீனாம்-தேவரிஷிகளிலே, நாரதஷ-நாரதர், கந்தர்வானாம்-கந்தர்வர்களில், சித்ர ரதஹ-சித்ர ரதன், ஸித்தானாம்-சித்தர்களில் கபில முனி அஸ்மி-கபில முனியாக இருக்கின்றேன்.

### கருத்துரை

நான் மரங்களுள் ஆலமரமாகவும், தேவ ரிஷிகளில் நாரதராகவும், கந்தவர்களில் சித்ர ரதனாகவும், சித்தர்களில் கபில முனிவராகவும் இருக்கிறேன்.

### விளக்கவுரை

'அஸ்வத்தம் ஸர்வ வ்ருக்ஷானாம்'-எல்லா மரங்களைக் காட்டிலும் அரசமரம் சிறந்தது, புனிதமானது. புராணங்களில் இதன் மகிமை மிகச் சிறப்பாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அரச மரத்தின் அடிபாகத்தில் விஷ்ணுவும், இடைப்பகுதியில் கேசவனும், கிளைகளில் நாராயணனும், இலைகளில் ஸ்ரீஹரியும், மரங்களில் அச்சுத

னும் எல்லா தேவகணங்களும் கூடி விளங்குகின்றன. இதில் ஐய மில்லை. இது சாட்சாத் இறை வடிவமாக இருப்பதால்தான் மகான் கள் இதனை சேவிக்கின்றனர். இதனை அண்டி வேண்டுவோரின் பாவங்களனைத்தையும் இது அறுத்துவிடும், கோரிக்கைகளை நிறை வேற்றும். நற்குணங்களையும் புண்ணியத்தையும் அள்ளித்தரும். மரங்களில் அரசமரம் என்று கண்ணன் கூறியதால் அம்மரம் இறைவ னின் குடியிப்பே என்பது தெளிவாகிறது. எனவே மக்கள் அதனை வலம் வருதல், பூசைகள் செய்தல் முதலியவற்றில் ஈடுபடுகின்றனர். மருந்து ரீதியில் அரசமரம் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது.

*உச்சை ஹ ச்ரவஸமச்வானாம் வித்தி மாமம்ருதோத்பவம்!*
*ஐராவதம் கஜேந்த்ராணாம் நராணாம் ச நராதிபம்!! - (27)*

சொற்பொருள்

அஸ்வானாம்-குதிரைகளில், அம்ருதோத்பவம்-பாற்கடலைக் கடையும் போது, அமிர்தத்துடன் பிறந்த; உச்சைச்ரவஸம்-'உச்சைச்ரவஸ்' என்ற குதிரையாகவும், கஜேந்திரானாம்-யானைகளுள், ஐராவதம்-ஐராவதம் எனும் யானையாகவும், நரா னாம்-மனிதர்களில், நராதிபம்-அரசனாகவும், மாம்-என்னை, வித்தி-அறிவாயாக.

கருத்துரை

குதிரைகளில் அமிர்தத்துடன் பிறந்த 'உச்சை ஸ்வரஸ்' என்னும் குதிரையாகவும் யானைகளில் ஐராவதமாகவும், மனிதருள் அரசனா கவும் என்னை அறிவாயாக.

**விளக்கம்**

'உச்சைச்வரஸ்' என்ற குதிரையும் 'ஐராவதம்' என்ற யானையும் பாற்கடல் கடையும் போது பிறந்தவை..

*ஆயுதானாமஹம் வஜ்ரம் தேனூனா மஸ்மி காமதுக்!*
*ப்ரஜனஸ்சாஸ்மி கந்தர்பஹ ஸர்ப்பாணா மஸ்மி வாஸுகி!! - (28)*

### சொற்பொருள்

*ஆயுதானாம்-ஆயுதங்களுள், அஹம்-நான், வஜ்ரம்-வஜ்ராயுதம், தேனூனாம்-பசுக்களுள், காமதுக்-காமதேனுவாக, அஸ்மி-இருக்கிறேன், பிரஜனஹ்-பிரஜைகளை, பிறப்பிக்கின்ற, கந்தர்பஹ்ச-மன்மதனாகவும், ஸர்பானாம்-பாம்புகளில், வாஸுகிர்-வாஸுகி என்ற பாம்பாக, அஸ்மி-இருக்கின்றேன்.*

### கருத்துரை

*ஆயுதங்களில் வஜ்ராயுதமாகவும், பசுக்களில் காமதேனுவாக வும், பிரஜைகளைப் பிறப்பிக்கிற மன்மதனாகவும், வாசுகி என்ற பாம்பாகவும் நான் இருக்கிறேன்.*

### விளக்கம்

*'ப்ரஜனஸ்சாஸ்மி கந்தர்பஹ'-'ப்ரவனஹ' என்கிற சிறப்புச் சொல்லை மன்மதனுக்குச் சேர்ப்பதால் தர்மத்திற்குட்பட்ட மக்கள் பெருக்கத்திற்குக் காரணமான காமமே இங்குக் கூறப்பட்டதென்று அறிதல் வேண்டும். 'தர்மாவ்ருத்தோ பூதேஜு காமே ஸ்மி பரதர்ஷ பர்' - என்ற வாக்கியத்தினால் பகவான் இச்செய்தியை முன்பே கூறியுள்ளார்.*

*அனந்தஸ்சாஸ்மி நாகானாம் வருணோ யாதஸாமஹம்!*
*பித்ருணமர்யமா சாஸ்மி யமஹ ஸம்யமதா மஹம்!! - (29)*

### சொற்பொருள்

*அஹம்-நான், நாகானாம்-நாகங்களில், அனந்தஹ்ச-அனந்தனும், அஸ்மி-ஆக இருக்கிறேன், யாதஸாம்-நீர் தேவதைக ளில், வருணம்-வருணன், பித்ருனாம்-பித்ருக்களில் அர்யமாக-அரியமா என்ற பித்ருக்களின் அரசனாக, அஸ்மி-ஆக இருக்கிறேன், அஹம்-நான், ஸம்ய மதாம்-தண்டனை கொடுப்பவர்களில், யமஹ-எமனாக, அஸ்மி-இருக்கிறேன்.*

கருத்துரை

*நான் நாகங்களில் அனந்தன்; நீர் தேவதைகளில் வருணன், பித்ருக்களில் அரியமா, தண்டனை அளிப்பவர்களில் யமனாகவும் இருக்கிறேன்.*

விளக்கம்

*''நாகானம்'-நாகங்களுக்குத் தலைகள் அதிகமிருக்கும். ஆனால் விஷமிருக்காது. ஏனைய பாம்புகளுக்கு ஒரே தலையிருக்கும் ஆனால் விஷமிருக்கும். நாகத்திற்கும் சர்பத்திற்குமுள்ள வேறுபாடு இதுவே.*

*ப்ரஹ்லாத ஸ்சாஸ்மி தைத்யானாம் காலஹ கலயதாமஹம்!*
*ம்ருகாணாம் சம்ருகேஞ்ரோ அஹம் வைநதேயஸ்ச பக்ஷினாம்! - (30)*

சொற்பொருள்

*அஹம்-நான், தைத்யானாம்-அரக்கர்களுள், பிரஹ்லாத-பிரஹ்லாதனாகவும், கலயதாம்-கணக்கிடுபவர்களுள், அஹம்-நான், காலஹ-காலமாக, ம்ருகானாம்-மிருகங்களுள், ம்ருகேந்த்ர ஹச-மிருகேந்திரனாகவும், பஹினாம்-பறவைகளுள், வைநதேயஹ்ச-கருடனாகவும், அஸ்மி-இருக்கின்றேன்.*

கருத்துரை

*அரசர்க்களுள் பிரஹ்லாதன்; கணிப்பவர்களுள் காலன், விலங்குகளுள் சிம்மம், பறவைகளுள் கருடன் ஆகவும் நான் இருக்கிறேன்.*

விளக்கவுரை

*பிரஹ்லாதன் அசுரன்,அசுர குலத்தில் பிறந்தவனாயினும் பக்தர்களில் சிறந்தோன். ஆதலால் பரபிரம்மத்தினை அடைந்தான், இங்கு நானே பிரஹ்லாதன் என பகவான் கூறுவதால் மேன்நிலையில் பக்தனும் இறைவனும் ஒன்றே ஆகிவிடுகின்றனர் என்பது புலப்படுகிறது. அவரவர் முயற்சி செய்யின் ஜீவன் சிவனாதல் கூடும் என்பது*

தெளிவாகிறது. கொடூரமான அசுர குலத்தில் பிறந்தும் முயற்சியினால் தெய்வத் தன்மை பெற்று பக்தர்களுள் முதன்மையானவன் ஆனான் பிரஹ்லாதன். எனவே குலத்தைக் காட்டிலும் குணமே சிறந்தது என்பது தெரிகிறது. இழிகுலத்துப் பிறந்தோரும் மேன்மையடைய முடியும் என்பது இதானல் நிரூபனமாயிற்று. எனவே வேற்றுமையின்றி அனைவரும் மேன்மை நிலையடைய முயல்வோமாக.

காலம்தான் நான் என்று பகவான் குறிப்பிடுகிறார். எனவே தூய்மையான காலத்தை வீணாக்காமல், அழியக்கூடிய உலகப் பொருட்களிலிலான சிந்தனைகளில் செலவிடாமல் நிலையான தெய்வப் பொருளைத் தேடுவதிலே முனைதல் வேண்டும்.

'வைதேய்ஸ்க பக்ஷிணி'-கருடன் ஒரு பறவை. அனுமன் ஒரு குரங்கு, கஜேந்திரன் ஒரு விலங்கு ஆயின் இவையனைத்தும் தமது சிறந்த பக்தியினால், மாறாத பக்தியினால் தெய்வீக வடிவங்களைப் பெற்றனர். பறவைகளும் விலங்குகளும் முக்தியடைதல் கூடுமாயின் மனிதன் ஏன் அதில் ஈடுபடலாகாது?

*பவனஹ பவதாஸ்மி ராமஹ சஸ்த்ர ப்ருதாமஹம்*
*ஜஷாணாம் மகரஸ்சாஸ்மி ஸ்ரோத ஸாமஸ்மி ஜாஹ்னவீ! - (31)*

சொற்பொருள்

அஹம்-நான், பவதாம்-தூய்மைப்படுத்துவனவைகளுள், பவனஹ-காற்றாக, அஸ்மி-இருக்கிறேன், அஸ்த்ர ப்ருதாம்-ஆயுதம் தரித்தவர்களுள், ராமஹ-இராமனாக, மகரஹச-மகரமீனாகவும், அஸ்மி-இருக்கிறேன், ஜலரோ தஸாம்-நதிகளில், ஜாஹ்னவீ-கங்கா நதியாக அஸ்மி-இருக்கிறேன்.

விளக்கம்

இச்சுலோகத்தில் தெரிவித்தபடி கங்கை தெய்வ வடிவினதே. எனவே அது மிகவும் பவித்ரமாகவும், பாவங்களைப் போக்குவதாகவும் கருதப்படுகிறது. தான் இராமனே என்று கண்ணன் உரைத்ததால் இரு அவதாரங்களும் ஒருவரே என்பது தெளிவாகிறது.

*ஸர்காணா மாதிரந்தஸ்ச மத்யம் சைவாஹ மர்ஜுனா!*
*அத்யாத்ம வித்யா வித்யானாம் வாதஹ ப்ரவத தாமஹம்!! - (32)*

## சொற்பொருள்

அர்ஜுன-அர்ஜுனா! ஸர்கானாம்-சிருஷ்டிப் பொருள்களுக்கு ஆதிஹி-துவக்கமும், அந்தஹச-முடிவும், மத்யம்ச-இடையும், அஹம் ஏவ-நானே, வித்யானாம்-வித்தைகளுக்குள், அத்யாத்ம வித்யா-ஆத்ம வித்தை, ப்ரவததாம்-தர்க்கம் செய்பவர்களுடைய, வதாஹ-வாதமாக, அஹம்-நான் (இருக்கிறேன்).

## கருத்துரை

அர்ஜுனனே! படைப்புகளுக்கு நான் ஆதி, நடு, அந்தமாகி றேன். வித்தைகளுள் நான் ஆத்மவித்தை. தர்க்கிப்பவர்கள் பால் (விருப்பு வெறுப்பின்றி தத்துவத்தை நிர்ணயிப்பதற்காகச் செய்யும் வாதத்தில்) நான் வாதமாகிறேன்.

## விளக்கம்

'அத்யாத்ம வித்யா வித்யானாம்'-உலகில் பல கல்வி முறைகள் இருப்பினும் ஆன்மீகக் கல்வியே தான் என்று சொல்வதால் அதன் சிறப்பு புலப்படுகின்றது. எதனைக் கற்பதால் மனிதனின் துயரம் தொலைந்து, ஆனந்தம் அதிகரித்துப் பேரமைதி கிட்டுமோ அதுவே மற்றல்லாவற்றையும் விட மேலானதாகும். அத்தகைய ஆற்றல் ஆன் மீகக் கல்விக்கேயுண்டு. எனவே அத்தகைய உலகியலுக்கு அப்பாற் பட்ட கல்விதானேயென்று பகவான் கூறுகிறார். ஆன்மீகக் கல்வி யைக் கற்று சம்சாரத்தளையினின்றும் விடுதலை பெறுமாறு பரம் பொருள் கருணையுடன் அறிவுறுத்துகிறார். வேறெக் கல்வி கற்காவி டினும் ஆன்மீகக் கல்வியைக் கற்றிருந்தால் அவன் உண்மையையே கற்றவன் ஆகிறான்.

ஆன்மீகக் கல்வியறியாதவன் மகா பண்டிதன் ஆயினும் எழுத்த றிவற்றவனேயாவான்.

'வாதஹ-ப்ரவததாம்'-வாதஹஹ-வாதமாவது வாதம், ஜல் பம், விதண்டாவாதம் என மூவகைப்படும்.

(1) விருப்பு வெறுப்பற்று தத்துவத்தையுணரும் பொருட்டுக் கேட்கப்படும் வினாவிடைகள் வாதம் எனப்படும்.

(2) பிற சமயங்களைக் கண்டித்துத் தனது சமயத்தை நிறுவி, பிறரை வெல்லும் பொருட்டு ஆற்றப்படும் சொற்பொழிவு ஜல்பம் எனப்படும்.

(3) பிற சமயத்தைத் தூற்றும் எண்ணத்துடன் செயல்படுவது விதண்டாவாதம்.

இவற்றுள் வாதமாகத் தான் உள்ளதாக பகவானே தெரிவிப்ப தால் தத்துவத்தை நிச்சயம் செய்யப்படும் விருப்பு வெறுப்பற்ற அறிவே மிகச் சிறந்தது என்பது தெளிவாகிறது. எனவே அறிஞர்கள் அதனையே பின்பற்ற வேண்டும்.

*அக்ஷ ராணா மகாரோ அஸ்மி த்வந்த்வஹ ஸாமஸி கஸ்யச!*
*அஹமேவாக்ஷயஹ காலஹ தாதாஹம் விச்வதோ முகஹ!! - (33)*

### சொற்பொருள்

அக்ஷரானாம்-எழுத்துக்களுள், அகாரானாம்-அகரமாக, அஸ்மி-இருக்கிறேன், ஸாமாஸி இஸ்ய-ஸமாஸங்கள் அதாவது கூட்டுச் சொற்கள், த்வந்த்வ ஹ-த்வந்த ஸமாஸமாகவும், அஹம் ஏவ-நானே, அஸ்மி-இருக்கிறேன், அக்ஷயஹ-அழிவற்ற, காலஹ-காலமாக, அஹமேவ-நானே, அஸ்மி-இருக்கிறேன், விஸ்வதோமு கம்-எங்கும் முகமுள்ளவனாகி, தாதா-தர்ம பலனை வகுத்தளிப்பவ னாக, அஸ்மி-இருக்கிறேன்.

### கருத்துரை

எழுத்துக்களில், அகரமாகவும், கூட்டுச் சொற்களுள் இருசொல் கூட்டாகவும், ஓயாத காலமாகவும், எங்கும் பரந்திருந்து வினைப் பயனை வழங்குவதும் நானேயாக இருக்கின்றேன்.

### விளக்கவுரை

'விஸ்வதோமுகஹ்'-எங்கும் பரந்து உலகளாவிய முகம் என்று

வர்ணிப்பதால் இறைவனின் வடிவமும், பார்வையும் எங்கும் பரந் திருக்கிறது என்பது பொருள். இந்த இரகசியத்தை உணர்ந்தவர் எவரும் எத்தகைய பாவத்தையும் செய்யார்.

*ம்ருத்யுஹ³ ஸர்வஹறஸ்சாஹம் உத்பவஸ்ச பவிஷ்யதாம்!*
*கீர்த்திஹி ஸ்ரீர்வாக்ச நாரீணம் ஸ்ம்ருதிர்மேதா த்ருதிஹிக்ஷமா!! - (34)*

## சொற்பொருள்

ஸர்வஹரஹ-அனைத்தையும் அழிக்கின்ற, ம்ருத்யும்ச-மரணமும், பவினுயதாம்-செல்வர்களுடைய, உத்பவஹச-வளர்செல்வமாகவும், நாரீணம்-பெண்களில், கீர்த்தின்-புகழாகவும், ஸ்ரீர்-செல்வமாகவும், வாக்ச-கல்வியாகவும், ஸ்ம்ருதிஹி-ஞாபக சக்தியாகவும் (ஞானம்), மேதா-அறிவாகவும் (நினைவாற்றல்), த்ருமதிம்ஹி-தைரியமாகவும், க்ஷமாச-பொறுமையாகவும், அஹம்-நானே, அஸ்மி-ஆக இருக்கிறேன்.

## கருத்துரை

எல்லாவற்றையும் அழிக்கும் மரணமும் நான், இனிப் பிறக்கப் போகும் தோற்றமும் நானே, பெண்மக்களுள் நான் புகழ், திரு, சொல், நினைவு, அறிவு, திண்மை, பொறை ஆகியவையாக இருக்கிறேன்.

## விளக்கவுரை

பெண்களுள் மேற் சொல்லப்பட்ட ஏழு நற்குணங்களும் தானே என்று பகவான் சொல்கிறார். இவ்வேழு குணங்களும் ஆண்களிடம் காணப்பட்டாலும், பெண்களையும் கடைத்தேற்ற எண்ணி பகவான் அங்ஙனம் கூறினார் எனலாம். இந்த பாக்கியத்தால் பெண் மக்கள் வலிமையற்றவர்கள், ஆற்றலில்லாதவர்கள் அல்லர் என்பதும், அவர்களும் ஆண்களைப் போல் மேதையாகவும், தைரியமாகவும் விளங்கலாம் என்பதும் தெளிவாகின்றது. முயற்சி, பயிற்சி, சிரத்தை இவற்றால் எவராயினும் நற்குணங்களைப் பெறலாம். தைரியம், அறிவு, பொறுமை ஆகிய நற்குணங்கள் இறைவனேயாதலால் அனைவரும் அவற்றைப் பயிற்சியினால் பெற்றுத் தமது இதயங்களை இறைவனின் இருப்பிடமாக மாற்றிக் கொள்ள வேண்டும்.

இச்சுலோகத்தின் இரண்டாமடிக்கு மற்றோர் பொருளையும் கூறலாம். 'ஸ்வாயம்பூ', மனுவின் மகளாகிய 'ப்ரசூதி' தட்சன் திருமணம் செய்து கொள்ள அவ்விருவருக்கும் இருபத்தி நான்கு பெண் குழந்தைகள் பிறந்தனர். அவர்களில் கீர்த்திதேவி, மேதா தேவி, த்ருதி தேவி, ஹம்ருதி தேவி, க்ஷமா தேவி ஆகியோர் சிலர். ஸ்ரீதேவி ப்ருகுவின் மகள், வாக்தேவி-நாமகள் பிரம்மாவினால் உண்டாக்கப் பட்டாள். இவ்வெழுவரும் நற்குணங்களுக்கு அதிஷ்டான தேவதைகள். எனவே பெண்களில் முக்கியமானவர்களான கீர்த்தி தேவி, ஐஸ்வர்யதேவி, வாக்தேவி, ஸ்ம்ருத் தேவி, மேதா தேவி, தைர்ய தேவி, க்ஷமா தேவியாக நானேயிருக்கிறேன்'-இவ்வாறு கூறினார் நற்குணங்கள் இறைவடிவமே என்பதும், அவற்றை ஜீவர்கள் தப்பாது கடைபிடித்தல் வேண்டும் என்பதும் இங்குத் தெள்ளத்தெளிவாக அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இச்சுலோகம் பெண்கள் தர்ம மார்க்கத்தைக் கடைபிடிப்பதற்கு ஆன்மீக வழியில் முன்னேறுவதற்கு மிகுந்த ஊக்கத்தை அளிக்கின்றது. கல்வி ஆற்றல் ஆகியவற்றில் சோர்வடையாது, பின்னடையாது பெண்கள் ஆண்களுக்குச் சமமாக நற்குணங்கள் அடையப் பெற்று இறைவனைத் தன்னுள் குடியிருக்குச் செய்தல் வேண்டும்.

*ப்ருஹத் ஸாம ததாஸாம்னாம் காயத்ரீ சந்த ஸாமஹம்!*
*மாஸானாம் மார்கசீர்ஷோ அஹம் ருதூனாம் குஸுமாகரஹ!! - (35)*

சொற்பொருள்

ததா-அவ்வாறே, அஹம்-நான், ஸாம்னாம்-சாமவேத கானத்தில், ப்ருஹத் சாம-ப்ருஹத் சாமம், சந்தஸாம்-யாப்புகளில், காயத்ரீ-காயத்ரீ என் சந்தம், மாஸானாம்-மாதங்களில், மார்கசீர்ஹஹ-மார்கழி மாதமும், ருதூனாம்-ருதுக்களில், குஸும ஆகரஹ-பூக்களை யுண்டு பண்ணும் வசந்த காலமுமாக, அஸ்மி-இருக்கிறேன்.

கருத்துரை

அவ்வாறே நான் சாம வேத காலங்களில் ப்ருஹத் சாமம், யாப்பு

களில் காயத்ரீ, மாதங்களில் மார்கழி, பருவங்களில் வசந்த காலமாக வும் இருக்கிறேன்.

விளக்கவுரை

*மாஸானாம் மார்கசர்ஷோ அஸ்மி-மார்கழியின் மகிமைக்கான காரணம் கீழே தரப்படுகின்றது.*

*(1) மகாபாரத காலத்தில் ஒவ்வொரு வருடமும் மார்கழி மாதத் துடன் ஆரம்பமாயிற்று (மகா பாரதம் -அனுசஸாசனிக பர்வம்-106 அத்யாயம்). ஆதலில் மாதங்களின் முதலானது மார்கழி.*

*(2) தனுர் மாத காலமென்று கூறப்படும் அது மிகத் தூய்மையா னது. சாத்திரங்களில் அம்மாதத்தில் செய்யப்படும் விரதங்கள் உப வாசம் முதலியவற்றிற்குச் சிறந்த பலன்கள் கிடைக்குமென்று கூறப் பட்டுள்ளது.*

*(3) மக்களிடம் அறுவடை முடிந்து எல்லோரிடமும் வேண்டிய அளவு தானியங்கள் இருக்கும்*

*(4) வால்மீகி இராமாயணத்தில் மார்கழி மாதம் வருடத்திற்கே ஒரு அணியாகக் கூறப்பட்டுள்ளது.*

*(5) பகவத் கீதை இந்த மார்கழி மாதத்தில் தான் தோன்றியது. (மார்கழி மாதம்-சுத்த ஏகாதசி)*

*(6) அவதாரமென்று கருதப்படும் தத்தாத்ரேயர் இம்மாதத்தில் தான் பிறந்தார் (சுத்த பௌர்ணமி)*

*(7) தட்பவெப்ப நிலை நன்றாக இருப்பதால் இம்மாதத்தில் மனம் உல்லாசமாக இருக்கும். தியானம் செய்வதற்கு உகந்த காலம்.*

*'ருதூனாம் குஸுமாகர'-வசந்த காலத்தில் மரங்கள் துளிர்த்து எழில் மிகுந்திருக்கும். தட்ப வெட்பம் சமமாக இருப்பதால் இம்மா தம் ருதுக்களில் சிறந்ததாக வருணிக்கப்பட்டது. இராம பிரானும் இம்மாதத்தில்தான் பிறந்தார்.*

*த்யூதம் சலயதாமஸ்மி தேஜஸ் தேஜஸ்விநாமஹம்!*
*ஜயோ அஸ்மி வ்யவஸாயோ அஸ்மி ஸத்வம் ஸத்வமதாமஹம்!! - (36)*

**சொற்பொருள்**

அஹம்-நான், சலயதாம்-வஞ்சகர்களுடைய, த்யூதம்-சூதாட்டமாகவும், அஸ்மி-இருக்கிறேன், தேஜஸ்விநாம்-ஒளியுடையவர்களுடைய, தேஜஹ-தேஜஸாகவும், அஸ்மி-இருக்கிறேன், அஹம்-நான், ஜயஹ-வெற்றியுமாக, அஸ்மி-இருக்கிறேன், வ்யவஸாயஹ-முயற்சியாகவும், சாத்துவிகர்களுடைய சத்துவ குணமாகவும் நான் இருக்கிறேன்.

**விளக்கம்**

உலகிலுள்ள எல்லாவற்றிலும் நன்மையாயினும், தீமையாயினும் இறைவனுடைய தன்மை இருக்கிறது. இறைவனின் இருப்பே ஒவ்வொன்றிற்கும் செயலையும், ஆற்றலையும் அளிக்கிறது. இந்த உண்மையை நிரூபிப்பதற்காகவே பகவான் இந்த விபூதியோகத்தில், தேவர்களை, அர்ச்சகர்களை, விலங்ககுளை, ஜடப்பொருள்களை, சில செயல்களைக் குறிப்பிடுகிறார். சுருக்கமாகச் சொல்லப்போனால் ஒவ்வொரு வர்க்கத்திற்கும் ஒவ்வொரு உதாரணம் கூறுகிறார். பார்க்கும் ஒவ்வொன்றிலும், செயலிலும் இறைவன் இருப்பதாக எண்ணுதல் வேண்டும். அதனைக் கருத்தில் கொண்டே இங்கு 'சூது' பற்றிக் கூறப்பட்டது. ஆயினும் அதனைப் பின்பற்ற வேண்டுமென்றோ, ஊக்குவிப்பதாகவோ கொள்ளலாகாது. நான் மிருகங்களில் சிம்மமென்று பகவான் சொன்னதால் சிங்கத்துடன் விளையாட வேண்டுமென்று பொருள் கொள்ளலாகதல்லவா? அவ்வாறே இச் சூது விஷயத்திலும் கொள்ள வேண்டுமென அறியலாம்.

'வ்யவசாயம்' - என்றால் முயற்சி. முயற்சியாய்த்தான் இருப்பதாக பகவான் சொல்வதால் மோட்ச விஷயத்தல் சோம்பேறிகளாக இல்லாமல் நன்முயற்சியில் ஈடுபட்டிருத்தல் நலம் என்பது தெளிவு. எங்கு தேஜஸ் (உற்சாகம், தைரியம்) இருக்குமோ அங்கும், எங்கு வெற்றி இருக்குமோ அங்கும், எங்கு சத்வ குணமிருக்குமோ அங்கு

சத்வமாகவும் தான் அங்கு இருப்பதாக பகவான் கூறியுள்ளதால் அந்நற்குணங்களைப் பழகுதல் வேண்டும்.

*வ்ருஷ்ணீனாம் வாஸுதேவோ (அ)ஸ்மி பாண்டவானாம் தனஞ்ஜயஹ!*
*முனீனாமப் யஹம் வ்யாஸஹ கவீனா முசனா கவிஹி!! - (37)*

சொற்பொருள்

அஹம்-நான், விருஷ்ணினாம்-வ்ருஷ்ணி வம்சத்துள், வாஸுதேவம்-வாசுதேவன் மகனாகிய கண்ணன், அஸ்மி-ஆக இருக்கிறேன். பாண்டவானாம்-பஞ்சபாண்டவர்களில், தனஞ்ஜயஹ-அர்ஜுனன், முனீனாமபி-முனிவர்களில், வ்யாஸ-வேதவியாசன், கவீனாம்-கவிஞர்களில், உச்னா கவி-சுக்கிராச்சாரியாராகவும், அஸ்மி-இருக்கிறேன்.

கருத்துரை

நான் வ்ருஷ்ணி வம்சத்தில் வாசுதேவனாகவும், பாண்டவர்களுள் அர்ஜுனனாகவும், முனிவர்களில் வேத வியாசராகவும், கவிகளில் சுக்கிராச்சாரியராகவும் இருக்கிறேன்.

விளக்கம்

பாண்டவர்களில் அர்ஜுனனும், முனிவர்களில் வியாசரும், தானேயென்று பகவான் கூறுவதால் கீதையினைக் கேட்ட அர்ஜுனனும், எழுதிய வியாசரும் இவ்விருவரும் சாட்சாத் இறைவனின் வடிவங்களே என்பது தெளிவாகிறது. எனவேதான் கீதைக்கு இத்தகைய மகத்தான பெருமை கிடைத்துள்ளது.

கவீனா முசனாகவிஹி-'கவிஞன்' என்றால் சிறந்த அறிவையுடையவன் என்பது பொருள் 'உஷநா கவி' என்றால் பிருகு மகாமுனிவரின் புதல்வனாகிய சுக்கிராச்சாரியார்.

*தண்டோ தமயதாமஸ்மி நீதிரஸ்மி ஜிகீஷதாம்!*
*மௌனம் சைவாஸ்மி குஹ்யாணாம் ஞானம் ஞானவதாமஹம்!! - (38)*

**சொற்பொருள்**

அஹம்-நான், தமயதாம்-தண்டிப்பவர்களுள், தண்டஹ-செங்கோலாக, அஸ்மி-இருக்கிறேன், ஜிகீஷதாம்-வெற்றியை நாடுபவர்களுள், நீதிஹ-நீதியாக, அஸ்மி-இருக்கிறேன், குஹ்யானாம்-இரகசியங்களுள், மௌனம் ச-மௌனமாகவும், அஸ்மி-இருக்கிறேன், ஞானவதாம்-ஞானிகளுடைய, ஞானம்ப்ரவ-ஞானமாகவும் இருக்கிறேன்.

**கருத்துரை**

தண்டிப்பவர்பால் செங்கோலகாவும், வெற்றியை நாட்டுபவரிடத்து நீதியாகவும், இரகசியங்களுள் மௌனமாகவும், ஞானிகளுடைய ஞானமாகவும் நான் இருக்கிறேன்.

**விளக்கம்**

'நீதிரஸ்மி ஜீகீஷதாம்-நீதியுடன் கூடிய வெற்றியே வெற்றி. அதுவேயன்றி அநீதியுடன் கூடியது வெற்றியாகாது தோல்வியேயாகும். எனவே நீதியுடன் கூடிய வெற்றியே சிறந்ததென்பதை பகவானின் இவ்வாக்கியம் விளக்குகிறது.

'மௌனம சைவாஸ்மி குஹ்யானாம்'-மௌனம் இறைவடிவாதலால். வாய்பேசாத மௌனத்தையும், மானசீகமான மௌனத்தையும் சாதனையாளர்கள் பழக்கப்படுத்திக் கொள்ள வேண்டும்.

'ஞானம் ஞானவதாமஹம்'-ஞானமும் இறைவடிவானதால் ஞானம் பெற முயற்சித்தல் வேண்டும்.

*யச்சாபி ஸர்வபூதானாம் பீஜம் ததஹமர்ஜுனா!*
*ந ததஸ்தி வினா யத்ஸ்யான் மயா பூதம் சராசரம்!! - (39)*

**சொற்பொருள்**

அர்ஜுன-அர்ஜுனா! ஸர்வபூதானம்-எல்லா உயிர்களுக்கும், யத்-எது, பீஜம்-மூலகாரணமான வித்தாக இருக்கிறதோ, தத் அபிச-

அதுவும், அஹம் அஸ்மி-நானாகவே இருக்கின்றேன், இம் பஹுனா-இன்னுமெதற்கு? சராசரம்-அசைவன, அசையாதன, பூதம்-பொருள், யத் ஸ்யாதி-எதுவோ, தத்-அது, மயா வினா-என்னையன்றி (வேறு) நாஸ்தி-இல்லை.

**கருத்துரை**

அர்ஜுனனே! எல்லா உயிர்களுக்கும் வித்தாக எது இருக்கிறதோ அது நானாகவே இருக்கிறேன். அசைவன அசையாத பொருட்களும் நான் இன்றி வேறில்லை.

**விளக்கவுரை**

இதுவரை தனது மகிமைகள் சிலவற்றைக் குறிப்பிட்டு இறுதியில் அனைத்தும் ஆண்டவன் வடிவமே என்கிறார். அசைவனவும், அசையாதனவுமாகிய கோடிக்கணக்கானவற்றின் உயிர் விதையும் தான் என்று உறுதியாகக் கூறுகின்றார் பகவான். விதை பரம்பொருளாக இருக்க முளை வேறாக இருக்க முடியுமா? இல்லை. அதுவும் பரம்பொருளாகத்தான் இருக்க முடியும். இதனைக் கொண்டு பார்த்தால் எல்லா உயிர்களும் கடவுளின் வடிவமேயன்றி வேறில்லை என்பது தெளிவு. எவரும் அற்பர்களும் அல்லர். பாவிகளும் அல்லர்.

ஒவ்வொரு உயிரும் ஆமை வடிவமேயாகும். அற்பத்தன்மை, கீழ்த் தன்மை ஆகியவற்றைத் தாமாகவே உண்டாக்கிக் கொண்டவையேயன்றி உண்மைகள் அல்ல. ஜீவனது உண்மை வடிவம் பரபிரம்மமே என நிரூபிப்பதற்காகவே அசையும், அசையாப் பொருட்களனைத்தின் வித்துமே தானேதான் என்று பகவான் இங்குக் குறிப்பிட்டுள்ளார். எனவே உயிர்கள் தம்மை அற்பர்களென்றும், தாழ்ந்த ஜாதியினர் என்றும் தொடுக்கப்படும் வாதங்களனைத்தும் ஆதாரமற்றவையே. எனவே ஒவ்வொருவரும் தமது உண்மை வடிவத்தை நினைவில் கொண்டு தைரியத்துடன் முன்னேறுதல் வேண்டும்.

*நாந்தோ அஸ்தி மம திவ்யானாம் விபூதீனாம் பரந்தப!*
*ஏஷ தூத்தேசதஹ ப்ரோக்தோவிபூதேர் விஸ்தரோ மயா!! - (40)*

**சொற்பொருள்**

*பரந்தப-எதிரிகளை வாட்டுபவனே! மம-என்னுடைய, திவ்யா னாம்-தெய்விகமான, விபூதினாம்-மகிமைகளுக்கு, அந்தஹ- இறுதி, நா அஸ்தி-இல்லை, து-ஆயினும், ஏஷஹ-இந்த, விபூதேஹ- மகிமையினுடைய, விஸ்தரஹ-விரிவாக, உத்தேசதகஹ-ஒரு சிறிது, மயா-என்னால், ப்ரோக்தஹ-சொல்லப்பட்டது.*

**கருத்துரை**

*எதிரியை வாட்டுபவனே அர்ஜுனா! எனது தெய்வீக விபூதிக ளுக்கு எல்லையில்லை. என் விபூதியின் விரிவுகளில் ஒரு சிறிதே என்னால் இயம்பப்பட்டது.*

**விளக்கம்**

*ஆண்டவன் எல்லையற்றவன். எனவே அவனது மகிமைகளுக் கும் முடிவில்லை. ஆகவே சுருக்கமாக ஒரு சிறிது மட்டும் இங்குக் கூறப்பட்டது.*

*யத் யத் விபூதி மத்ஸத்வம் ஸ்ரீ மதுரார்ஜிதமேவவா!*
*தத்ததேவாவகச்ச த்வம் மம தேஜோம் சஸம்பவம்!! - (41)*

**சொற்பொருள்**

*விபூதிமத்-விபூதியோடு கூடிய, ஸ்ரீமத்-திருநிறைந்தது (ஒளிமய மானது) ஊர்ஜிதம் ஏவ வா-ஆற்றல் வாய்ந்தது, சத்வம்-பொருள் அல்லது உயிர், தத் தத் ஏவ-அவையெல்லாம், மம-என்னுடைய, தேஜோம்ச சம்பவ மேவ-தேஜஸின் ஒரு பகுதியில் உண்டானதாக, த்வம்-நீ, அவகச்ச-அறிவாயாக.*

**கருத்துரை**

*ஞான ஐசுவரியம், மனத்தூய்மை (அகப், புறத் தூய்மை) தர்மத் தின் மீதும், மோட்சத்தின் மீதும் உற்சாகம் எங்கு இருக்குமோ அங்கு சாட்சாத் இறைவனே ஒளிர்கிறார் என்பதாக உணர்தல் வேண்டும்.*

இறைவனின் தேஜஸின் அம்சத்தினால் அத்தகைய தூயகுணம் ஏற்ப டுமென்று சொல்வதால் அவரது ஒளி, ஆற்றல் எல்லையில்லாதது என்பதும், அதில் ஏதேனும் ஒரு சிறிது இருந்தாலும் இத்தகைய சிறப்பு. ஊக்கம், முதலியவை ஏற்படுமென்பதும் தெரிகிறது. எனவே மக்கள் அத்தகைய நற்குணங்களுக்குத் தமது இதயத்தில் இடம் கொடுத்து அதன் மூலம் இறைவனது சாந்நித்யத்தை அனுப வித்தல் வேண்டும். அதுவுமின்றி இத்தகைய நற்குணங்கள் எவரி டத்து இருப்பினும் அவன் இறைவனைப் போல் வணங்கத் தக்கவ னாவான்.

*அதவா பஹுனை தேன கிம் ஞாதேன தவார்ஜுன!*
*விஷ்டப் யாஹமிதம் க்ருத்ஸ்னம் ஏகாம் சேன ஸ்திதோ ஜகத்!! - (42)*

சொற்பொருள்

*அர்ஜுன-அர்ஜுனா! அதவா-அல்லது, பஹுனாம்-விரிவான, (பலவிதமான), ஏகதனே-இந்த, க்ஞாதேன-அறியப்பட்ட, ஞானத் தினால், தவ-உனக்கு, திம்-என்ன பயன்? அஹம்-நான், இதம்-இந்த, க்ருத்ஸ்னம்-முழுமையான, ஜகத்-இவ்வுலகை, ஏகஅம்சனே-ஒரு அம்சத்தால், விஷ்டப்ய-தாங்கி, ஸ்திக-உள்ளேன்.*

கருத்துரை

*அர்ஜுனா! விரிவான பலவிதமாக இந்த வைபவ ஞானத்தால் உனக்கு என்ன பயன்? நான் இந்த உலகனைத்தையும் எனது ஓர் அம்சத்தால் தாங்கியுள்ளேன் என்பதை அறிவாயாக.*

விளக்கம்

*இறைவனது விபூதியை எத்துணை அறிந்தாலும் இன்னும் அறிய வேண்டியது பலவாகவே இருக்கும். ஆதலால் முடிவற்ற வர்ணனைகளால் உனக்கு என்ன பயன் என்கிறார் பகவான். இவ்வுல கனைத்தும் எந்தப் பரம்பொருளின் இயக்கத்தால் (சைதன்யத்தால்) நிறைந்திருக்கிறதோ, தாங்கப்பட்டிருக்கிறதோ அந்தப் பரம்பொ ருளை அறிந்தால் மட்டும் போதுமென்பதை இங்கு உணர்த்துகிறார். இவ்வுலகனைத்தும் பரம்பொருளின் ஒரு அம்சத்தினாலேயே தாங்*

*கப்படுகிறது எனக் கூறப்பட்டிருப்பதால் அவனது அளப்பரிய சக்தி உலகனைத்தும் பரவி நிற்கும் தன்மை வெளிப்படுகிறது. முடிவில்லாத எண்ணிக்கையற்ற பிரம்மாண்டங்களனைத்தும் அவனது ஒரு பகுதியே. அவனது ஏனைய அம்சங்கள் இன்னும் எஞ்சியே நிற்கின்றன. 'பாதோஸ்ய விஸ்வாபூதாநி த்ரிபாதஸ்யாமிருதம் திவி' எனும் புருஷ சூக்தத்தின் கோட்பாடு இதனையே தெளிவாக்குகின்றது. இதனினின்றும் இறைவனின் சக்திக்கு முன்னால் இவ்வுலகம் எத்தனை அற்பமானதென்பது தெளிவாகிறது. மேலும் எந்த மகானின் ஓர் பகுதியினால் மட்டுமே இவ்வுலகம் வியாபிக்கப்பட்டுள்ளதோ, அப்பரம் பொருளின் அகண்ட சக்திக்கு மனிதர்கள் தலைவணங்கியே தீர வேண்டும். அத்தகைய சர்வேசுவரனை, மனிதன் அடக்கத்துடன், பணிவுடனும் இடைவிடாத மாறாத பக்தியுடனும் சேவிக்க வேண்டியவனாகிறான். அவனது எல்லையற்ற சக்தியை, உலகனைத்தும் பரவியுள்ள தன்மையை 'விராட்' ரூபத்தை எண்ணி அற்பனாகிய ஜீவன் அறிந்து கொண்டு தன் அகம்பாவத்தையும் செருக்கையும் களைந்து இறைவனையே சரணடைந்து பயன்பெறுதல் வேண்டும். விபூதியோகத்தால் நாம் கற்க வேண்டிய பாடம் இதுவே.*

**வினா :** *இவ்வுலகனைத்தும் எதனால் வியாபிக்கப்பட்டிருக்கிறது?*

**விடை :** *பரமாத்மாவின் ஒரே ஒரு அம்சத்தால் மட்டுமே வியாபித்திருக்கிறது (இறைவனது வடிவத்தின் முன் இவ்வுலகனைத்தும் மிகவும் அற்பமானது என்பது பொருள்)*

ஓம்

**இது உபநிடதங்கள் மொழிந்ததும், பிரம்ம வித்தை, யோக சாஸ்திரமும் அடங்கியதும், ஸ்ரீ கிருஷ்ணார்ஜுனனின் உரையாடலாக வந்துள்ளதுமாகிய ஸ்ரீபகவத் கீதையின் விபூதி யோகமெனும் பத்தாம் அத்தியாயம்.**

**ஓம் தத்ஸத்**

ஓம்

# ஸ்ரீ பகவத் கீதை

## பதினோறாம் அத்தியாயம்

## விஸ்வரூப சந்தர்சன யோகம்

### இந்த அத்தியாயத்தின் பெயர் விளக்கம்

*'விஸ்வரூப சந்தர்சன யோகம்' - அர்ஜுனனின் வேண்டுகோளுக்கிணங்கி பகவான் தன் விஸ்வரூபத்தினை அவனுக்குக் காட்டினார். இவ்வத்தியாயத்தின் ஓர் பகுதி அவ் விஸ்வரூபத்தின் வர்ணனையுடனும், அவ்விஸ்வ ரூபியான பகவானுக்கு அர்ஜுனன் அர்ப்பித்த ஸ்தோத்திரங்களுடன் கூடியதாகையாலும், சாட்சாத் இறைவனின் விஸ்வரூப தரிசனம் அர்ஜுனனுக்குக் கிடைத்த அத்தியாயமாதலாலும் இதற்கு 'விஸ்வரூப சந்தர்சனயோகம்' என்ற பெயர் ஏற்பட்டது.*

### இவ்வத்தியாயத்தில் கூறப்பட்டுள்ள விஷயங்கள்:-

1. *விஸ்வரூபத்தைக் காட்டியருளுமாறு அர்ஜுனன் பகவானை வேண்டுதல் - (1 முதல் 4 சுலோகம் வரை)*

2. *பகவான் தன் விஸ்வரூபத்தினை வர்ணித்தல் (5 முதல் 8 சுலோகம் வரை)*

3. சஞ்சயன், திரிதராஷ்டிரனுக்கு விஸ்வரூபத்தினை வர்ணித்துக் கூறுதல் (9 முதல் 14 வரை)

4. அர்ஜுனன் பகவானின் விஸ்வரூபத்தினை தரிசித்தல், போற்றுதல் (15 முதல் 31 வரை)

5. பகவான் தன் சக்தியை வெளிப்படுத்தி யுத்தத்தினை நடத்துவதற்கு அர்ஜுனனை உற்சாகப்படுத்துதல் (32 முதல் 34 வரை)

6. விஸ்வரூபத்தினைக் கண்டு பயமடைந்து அர்ஜுனன் பகவானைத் துதித்தல், சதுர்புஜ உருவத்தினை மறுபடியும் கொள்ளுமாறு வேண்டுதல் - (35 முதல் 46 வரை)

7. பகவான் விஸ்வரூப சந்தர்சன மகிமையைச் சொல்லுதல், மறுபடியும் தன் அழகிய உருவினைக் கொள்ளுதல் - (47 முதல் 50 வரை)

8. மாறாத பக்தியினால்தான் விஸ்வரூப சந்தர்சனம் கிட்டும் என்று கூறுதல், அதனைத் தொடர்ந்து இடைவிடாத மாறாத பக்தியினைக் குறித்து விவரித்தல் - (51 முதல் 55 வரை)

## இவ்வத்தியாயத்திற்கும் முன் அத்தியாயத்திற்குமுள்ள தொடர்பு

முன் அத்தியாயமான விபூதியோகத்தின் இறுதியில் தான் இவ்வுலகமெங்கும் ஒரு சிறு பங்கே, பின்னமாகவே (Fraction) வியாபித்திருப்பதாக பகவான் கூறவும், உடனேயே அர்ஜுனனுக்கு பகவானின் அனந்த விஸ்வரூபத்தினைக் காண வேண்டுமென்ற தீவிரமான தாபம் எழவும், அர்ஜுனனின் வேண்டுகோளுடன் இப்பதினோராம் அத்தியாயம் தொடங்குகிறது. மேலும் முன் அத்தியாயத்தில் தன் விபூதிகளைக் குறித்து ஒருவாறு தெரிவிக்கவும், அவையனைத்தையும் நேரில் காணக்கருதி, சர்வேசுவரனின் அனந்த மகாவிபூதியினை ஒரு முறை கண்ணாரக் காணல் வேண்டி, அத்தகைய விஸ்வரூப சந்தசர்சனத்திற்காக பகவானை (நான்கு சுலோகங்களில்) இவ்வாறாக வேண்டுகிறார்.

### அர்ஜுனோவாச

*மதனுக்ரஹாய பரமம் குஹ்யமத்யாத்மஸம்ஞிதம்!*
*யத்வயோக்தம் வசஸ்தேன மோஹோஅயம்விகதோ மம!! - (1)*

### சொற்பொருள்

**அர்ஜுனன் சொன்னது:**

மதனுக்ரஹாய-என்னை அனுக்ரஹித்தல் பொருட்டு, பரமம்-மிகவும் மேலானதும் குஹ்யம்-ரஹஸ்யமானதும், அத்யாத்ம ஸம் ஞிதம்-ஆத்மா அனாத்மா விவேகத்தை உண்டுபண்ணுவதும் ஆன, யத்வசஹ-எந்த வாக்யம், த்வயா-உம்மால், உக்தம்-சொல்லப்பட்டதோ, தேன-அதனால், மமஹ-என்னுடைய, அயம் மோஹஹ்-இந்த அக்ஞானமானது, விகதஹ-முழுமையாகப் போய் விட்டது.

### கருத்துரை

கிருஷ்ணா! என்னைக் காத்தருளுதற்கு உம்மால் உரைக்கப் பட்ட மேலானதும் ரஹஸ்யமானதும் ஆன ஆத்மதத்துவத்தைப் பற் றிய மொழிகளால் என் அக்ஞானம் ஒழிந்தது.

### விளக்கம்

ஸ்ரீ கிருஷ்ணா இதுவரை அர்ஜுனனுக்குச் செய்த ஆன்மீக போதனை யினால் அர்ஜுனனின் மோஹம் தொலைந்தது. எந்த விவேகமின் மையால் முதன் முதலில் இவ்வுலகை நித்யம் என்றும், இப்பந்துக் கள் என்னுடையவர், இந்ததேஹமே நான் என்றும் அர்ஜுனன் எண் ணியதால் துக்கத்தினை அடைந்தான். அந்த விவேகமற்ற தன்மை இறைவனின் ஆத்மபோதனையால் ஒழிந்தது. கீதையில் 10 அத்யா யங்களுக்குள்ளாகவே அர்ஜுனனுக்கு சித்த சுத்தி ஞானம் இவை ஏற்பட்டு அதன் பலனால் மோகம் தொலைந்தது. இதனை அர்ஜு னன் ''மோஹா அயம் விகதோமம'' - என் அக்ஞானம் தொலைந்தது என்ற வாக்யத்தின் மூலம் ஒப்புக்கொள்கிறான்.

அர்ஜுனன் வரோகத்தினால் பீடிக்கப்பட்டிருந்தான். ஸ்ரீ கிருஷ் ணர் என்னும் வைத்தியர் கீதா அம்ருதம் என்னும் மருந்தினை அளித் தார். அதனை முழுவதும் உட்கொள்வதற்கு முன்பே அர்ஜுனனின் வியாதி (மோகம்) தீர்ந்தது. இதனால் அந்த வைத்தியன் எத்தனை சிறந்தவன். அவன் அளித்த மருந்து எத்துனை சக்தி வாய்ந்தது என் பது தெளிவாகிறது. அர்ஜுனனின் அக்ஞான ரோகம், பவரோகம் இரண்டும் கீத அம்ருத ஔஷதத்தினால் தொலைந்தது. ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மா யோகேஸ்வரன் அவன் போதித்த ஆன்மீக போதனை 1. மிகச்சிறந்தது (பரமம்) 2. மிகவும் ரகசியமானது (குஹ்யம்) என்று

அர்ஜுனன் கூறுகிறான். ஏனெனில் அவன் மகிமையால் இதய இருள் விலகியது. ஒளி தோன்றியது.

உலகில் எத்துணையோ வித்தைகள், போதனைகள் உண்டு. ஆனால் அவை அக்ஞான இருளை அகற்ற இயலாதவை. பவரோகத்தினைத் தீர்க்கும் சக்தி அற்றவை. ஆயின் ஆன்மீக போதனை அத்தகையது அல்ல. பிறப்பிறப்பு எனும் துக்கப் பிரவாகத்தினின்று ஜீவனை மீட்கவல்லது இவ்வான்மீக போதனை. எனவேதான் அர்ஜுனன் இதை மிகச்சிறந்தது, மிகவும் ரகசியமானது என்று கூறுகிறான். ஆயின் இத்தகைய உத்தமமான வித்தையை, குருமார் அனைவருக்கும் அளிப்பதில்லை. எவர் அதற்குத் தகுதி உடையவரோ, எவர் தூய்மையான பக்தியுடன் இருக்கின்றாரோ அவர்களுக்கு மாத்திரமே போதிப்பார். அத்தகைய தகுதியை அர்ஜுனன் பெற்றிருந்தான். எனவேதான் அவன் மீது பகவானுக்கு அருள் பெருகி இவ்வான்மீக வித்தையை உபதேசித்தார். ''மதனுக்ரஹாய'' என்ற சொல்லினால் குருவின் அருள் சிஷ்யனுக்கு எத்துணை அவசியம் என்று தெரிகிறது.

புசித்துக் கொண்டிருப்பவனுக்கு வயிறு நிறைந்தவுடன் ஏப்பம் வருவதைப் போல அர்ஜுனனுக்கு கீதாம்ருதத்தினைப் பருகியவுடன் தாகம் தீர்ந்தது. 10 அத்தியாயங்களைக் கேட்டவுடனேயே அவனுக்கு என் அக்ஞானம் தொலைந்தது என்று கூறுகிறார். மறுபடியும் 18 வது அத்தியாயத்தில் ''நஷ்டோ மோஹஹ் ஸ்ம்ருதி என்ற வாக்கியத்தின் மூலம் தன் முழுமையான திருப்தியை இவ்வாறே இன்னும் ஒருமுறை வெளிப்படுத்துகிறான்.

**வினா :** ஆன்மீக வித்தை எத்தகையது?

**விடை :** 1. மிகச்சிறந்தது 2. மிகவும் ரகசியமானது

**வினா :** அதன் இயல்பு எத்தகையது?

**விடை :** அது ஜீவர்களின் அக்ஞானத்தினை, சம்சார மோகத்தினை அழிக்கவல்லது.

**வினா :** ஸ்ரீ கிருஷ்ணன் அர்ஜுனனுக்கு ஏன் போதித்தார்?

**விடை :** அவன் எல்லா விதங்களிலும் அதனைக் கேட்பதற்கு பக்தி முதலான தகுதிகளைப் பெற்றிருந்தான். எனவே அவன் மீது அருள் சுரந்து பகவான் அதனைப் பேதித்தார்.

**வினா : அப்போதனை அர்ஜுனனுக்குப் பலன் அளித்ததற்கான அடையாளம் என்ன?**

**விடை : அதனைக் கேட்ட உடனேயே ''என் அக்ஞானம் தொலைந்தது'' என்று அவன் கூறினான்.**

*பவாப்யயௌ ஹி பூதானாம் ச்ருதௌ விஸ்தரசோ மயா!*
*த்வத்த: கமல பத்ராக்ஷ மாஹாத்ம்யமபி சாவ்யயம்!! - (2)*

## சொற்பொருள்

*ஹி-ஏனெனில், கமலபத்ராக்ஷ-தாமரை இதழ்க்கண்ணா; த்வத்தஹ-உம்மால், பூதானாம்-உயிர்களுடைய, பவ அய்யயௌ-உற்பத்தி அழிவு முதலானவை, விஸ்தரசஹ-விரிவாகவே, மயா-என்னால், ச்ருதௌ-கேட்கப்பட்டன, அவ்யயம்-முடிவற்ற (தே-உன்னுடைய), மஹாத்ம்யம் அபிச-மஹிமையும் கூட, ச்ருதம்-கேட்கப்பட்டன.*

## கருத்துரை

*கமலக்கண்ணா! உன்னுடைய உயிர்களின் உற்பத்தி அழிவு இவற்றைக் குறித்தும், உமது முடிவற்ற மகிமையைக் குறித்தும், விரிவாக என்னால் கேட்கப்பட்டது.*

*ஏவமே தத்யதாத்த த்வமாத்மானம் பரமேச்வர!*
*த்ரஷ்டுமிச்சாமி தே ரூபமைச்வரம் புருஷோத்தம!! - (3)*

## சொற்பொருள்

*பரமேஸ்வரா! த்வம்-நீர், ஆத்மானம்-உம்மைக் குறித்து, எதா-எவ்விதம், ஆத்த-இயம்பினீரோ, ஏவம் ஏதத்-அது அவ்வாறே உள்ளது. புருஷோத்தம!-கிருஷ்ணா!, தே-உம்முடைய, ஐஸ்வரம்-ஈஸ்வர (ஞான, ஐஸ்வர்ய, சக்தி, பலம், வீர்யம் முதலானவற்றோடு கூடிய), ரூபம்-விஸ்வரூபத்தை, த்ரஷ்டும்-பார்க்க, இச்சாமி-விரும்புகிறேன்.*

## கருத்துரை

*பரமேஸ்வரா! உம்மைப்பற்றி நீர் பகர்ந்தது முற்றிலும் சரியே என்று நான் நம்புகிறேன். ஏ! புருஷோத்தமா உன்னுடைய ஈஸ்வர வடிவத்தினைக் காண விரும்புகிறேன்.*

*மன்யஸேயதி தச்சக்யம் மயாத்ரஷ்டுமிதி ப்ரபோ !*
*யோகேச்வரததோ மேத்வம் தர்சயாத் மானமவ்யயம்!! - (4)*

**சொற்பொருள்**

ப்ரபோ! தத்-அவ்வடிவினை, மயா-என்னால், த்ருஷ்டும்-பார்ப்பதற்கு, ஸக்யம் இதி-சாத்யம் என்று, மன்யசே யதி-எண்ணுவீரானால், ததஹ-அப்போது, யோகேஸ்வரா! த்வம்-நீர், அவ்யயம்-அழிவில்லாத, ஆத்மானம்-உமது உருவினை மே-எனக்கு, தர்ஸய-காண்பிப்பாயாக,

**கருத்துரை**

ப்ரபோ! உன் வடிவினைக் காண்பதற்கு எனக்கு இயலும் என்று எண்ணுவீராயின் யோகேஸ்வரா! உனது அழிவற்ற உருவத்தினைக் காட்டி அருள்க.

**விளக்கம்**

பணிவு, அடக்கம், பக்தி இவற்றோடு கூடிய மாணாக்கனின் இலட்சணம் இச்சுலோகத்தில் வெளியாகின்றன. அர்ஜுனனுக்கு இறைவனின் விச்வரூபத்தினைப் பார்க்க விருப்பம் ஏற்பட்டது. அதனை எனக்குக் காண்பிப்பீராக என்று கேட்காமல் அவ்வடிவினைக் காண்பதற்கு நான் தகுதி உடையவனாக நீர் கருதினால் எனக்குக் காண்பிப்பீராக என்று மிகவும் வினயத்துடன் கேட்கிறான். மாணாக்கர்கள் இப்பணிவினைக் கற்றுக் கொள்ள வேண்டும்.

**முன்னுரை**

தன் அன்பிற்குரிய பக்தனான அர்ஜுனனின் இவ்வேண்டுகோளைக் கேட்டு ஸ்ரீ கிருஷ்ணர் 3 சுலோகங்களின் மூலம் விஸ்வரூபத்தினைப் பற்றி வர்ணித்துக் கூறி அதனைக் காண்பாயாக என்று அர்ஜுனனிடம் கூறுகிறார்.

**ஸ்ரீ பகவானுவாச**

*பச்யமே பார்த்த ரூபாணிசத சோஅத ஸஹஸ்ரசஹ!*
*நானாவிதானி திவ்யாணி நானாவர்ணாக்ருதீனி ச!! - (5)*

சொற்பொருள்

**ஸ்ரீ பகவான் சொன்னது:**

பார்த்த-அர்ஜுனா, நாநாவிதானி-பலவிதமான, திவ்யானி-தெய்வத்தன்மை வாய்ந்தவைகளும், நாநாவர்ண ஆக்ருதீனிச-அநேக நிறங்களும் வடிவங்களும் உடையனவும், சதஸஹ அதஸஹஸ்ரசஹ-நூற்றுக்கணக்கிலும் ஆயிரக்கணக்கிலும் இருப்பவையான (எண்ணிக்கையற்றவை) மே-என்னுடைய, ரூபாணி-உருவங்களை, பஸ்ய-பார்,

கருத்துரை

அர்ஜுனா! அநேகவிதமான தெய்வீகத்தன்மை வாய்ந்த பலவித நிறங்களும் வடிவங்களும் உடைய, எண்ணிக்கையற்ற என் உருவங்களைப் பார்.

*பச்யாதித்யான் வஸூன் ருத்ரானச்விநௌ மருதஸ்ததா!*
*பஹூன்யத்ருஷ்ட பூர்வாணி பச்யாஸ்சர்யாணி பாரத!! - (6)*

சொற்பொருள்

பாரத-அர்ஜுனா, ஆதித்யான்-சூர்யர்களையும், வஸூன்-வசுக்களையும், ருத்ரான்-ருத்திரர்களையும், அச்சவிநௌ-அச்வினிகளையும், மருதஹ-மருத்துக்களையும், பஸ்ய-பார், ததா-அவ்வாறே, அத்ருஷ்ட பூர்வாணி-முன்பு கண்டிராத, பஹூதா-அனேகவிதமான, ஆஸ்சர்யாணி-ஆச்சரியங்களைப் பார்.

கருத்துரை

அர்ஜுனா! சூரியர்களையும், வசுக்களையும், ருத்திரர்களையும் அச்வினி தேவதைகளையும் மருத்துக்களையும் பார். அவ்வாறே இதுவரை நீ கண்டிராத பல அதிசயங்களைப் பார்.

விளக்கம்

1. ஆதித்யர்கள் பன்னிருவர் 2. வசுக்கள் எண்மர் 3. ருத்திரர்கள் பதினோரு பேர் 4. அச்வினி தேவர்கள் இருவர் 5. மருத்துக்கள் நாற்பத்து ஒன்பது பேர்.

***இஹைகஸ்தம் ஜகத்க்ருத்ஸ்னம் பச்யாத்யஸ சராசரம்!***
***மமதேஹே குடாகேசயச்சான்யத் த்ரஷ்டு மிச்சஸி!! - (7)***

### சொற்பொருள்

குடா கேச-தூக்கத்தை வென்ற அர்ஜுனா! சசர அசரம்-ஜங்கம ஸ்தாவரங்களாகிய, க்ருதஸ்னம்-முழுவதையும், ஜகத்-இவ்வுலகினையும், அன்யத் யத்-இன்னும் க்ருயோ, (தத்) ச-அதனைக் கூட, மம-என்னுடைய, இஹ-(இனி உனக்கு காண்பிக்கப் போகும்) இந்த, தேஹே-சரீரத்தில், ஏகதஸம்-(அவயவங்களாய்) ஒரே இடத்தில் இருப்பதாக, அத்ய-இப்போது, பஸ்ய-பார்,

### கருத்துரை

அர்ஜுனா, இவ்வண்டசராசரங்களனைத்தும் இன்னும் நீ எவ்வ வற்றைக் காண விரும்புகிறாயோ அவை அனைத்தையும் என் சரீரத் திலேயே (அவயவயங்களாக) ஒன்று சேர்ந்திருப்பதாக இப்போது காண்பாய்.

### விளக்கம்

'விஷ்டப்யாஹமிதம் கருத்ஸ்ன மேகாம் சேன ஸ்திதே ஜகத்' என்று பகவான் இதற்கு முன் (விபூதியோகத்தின் இறுதியில்) சொல் லியது போல் இப்பிரம்மாண்டங்களனைத்தும் சேர்ந்த அசையக்கூ டிய, அசைவற்ற பொருள்களனைத்தும் பரமாத்மாவின் ஓர் சிறிய அம்சத்திலேயே அடங்கியுள்ளது. எனவே தான் தனது அனந்த தேகத் தினை (வடிவினை) இவ்வுலகமனைத்தையும் ஒரு சேர ஓரிடத்தில் (அவயவங்களைப் போல) இருப்பவையாகக் காண்பாயாக என்று கிருஷ்ண பரமாத்மா அர்ஜுனனக்கு இங்குத் தெரிவிக்கிறார். இத னால் பரமாத்மாவின் சொரூபம் எத்துணை விலாசமானது, எண்ணி லடங்காதது என ஆலோசித்துக் கொள்ளக்கூடும். ஐம்பூதங்களுடன் கூடிய ஆகாசமே மிகவும் விரிந்தது. சூட்சுமமானது. அதனைவிட சித்த ஆகாசம் இன்னும் விரிந்து சூட்சுமமாய் உள்ளது. அதனையும் விட சிதாகாசம் (ஆத்மா) விரிந்தும், அதிசூட்சுமமாகவும் இருப்பது. எனவே சிதாகாசத்தில் இப்பூத ஆகாசமோ அதில் ஏதோவெரு மூலை யில் அடங்கியுள்ள சராசரம் அனைத்தும் எத்துனை சிறியது? எனவே தான் அந்த சிதாகாசத்தில் (ஆத்மாவில்) இவ்வுலகமனைத்தும் ஏதோ வொரு மூலையில் (கற்பிதமாக) அடங்கியுள்ளதென்று பகவான் சொல்கிறார்.

இத்தகைய பலகோடி வடிவுடைய சர்வ வல்லமை படைத்த பரமாத்மாவை அற்பமானவனாயும், தேச காலங்களுக்குட்பட்டவ னுமான, இந்த ஜீவன் பக்தியுடன் பணிவு அடக்கம் இவற்றுடன்

சேவித்தல் தர்மம். பலவிதமான வடிவுடைய பரமாத்மாவைச் சேவிப்பதால் அவனது அருளினால் ஞானத்தினையடைந்து அவனு டன் ஐக்கியமடைந்து முக்தியடைவற்கு அவகாசம் இருக்கும். இல் லையெனில் பிறப்பு இறப்புடன் கூடிய பிரவாகத்தில் மூழ்கி ஜீவன் இன்னும் பலகாலம் துக்கப்பட வேண்டியிருக்கும்.

மனிதனுக்கு எப்போதாவது தன் செல்வம், ஆள்பலம், சரீரப லம், அதிகார பலம் இவற்றைக் குறித்த அகங்காரம், கர்வம் ஏற்பட் டால் அவன் இச்சுலோகத்தினை நன்கு மனனம் செய்தால் கர்வம் முதலானவை ஒடுங்கிப் போகும். ஏனெனில், 'இந்த பரந்தவுலம னைத்தும் எதனில் ஒரு மூலையில் கற்பிதமாக ஒடுங்கி அணுயளவே இருக்கின்றதோ அத்தகைய பரமாத்மாவின் பல வடிவங்களின் முன் பணபலம், ஆள்பலம், அதிகார பலம், சரீர பலம் இவை எங்கே? எனவே அவற்றினால் கர்வப்படுவதெதற்கு? என்ற எண்ணம் அவ னுக்கு ஏற்பட்டு இறைவனிடத்து பக்தி எண்ணம் ஏற்படும். மேலும் அற்பமான காட்சிப் பொருள்களின் மீது அருவறுப்பு தோன்றும்.

## முன்னுரை

ஊனக் கண்களால் விஸ்வரூபத்தினை எவரும் காண இயலாது. எனவே அர்ஜுனனுக்கு பகவான் ஞானக் கண்ணையளிக்கிறார்.

*நது மாம் சக்யஸே த்ரஷ்டு மனேனைவ ஸ்வச க்ஷுஷா!*
*திவ்யம் ததாமி தே சக்ஷுஹ் பச்ய மே யோகமைச்வரம்!! - (8)*

## சொற்பொருள்

அனேன-இந்த, ஸ்வச்சக்ஷுஷா ஏவது-உன் ஊனக் கண்ணால், மாம்-என்னை, த்ரஷ்டும்-பார்க்க, ந சக்யஸே-உனக்கு இயலாது, திவ்யம் சக்ஷுஹ்-தெய்வீகமான கண்ணை, தே-உனக்கு, ததாமி-அளிக்கிறேன், ஐசுவரம்-ஈசுவர, யோக-யோகத்தினை (யோக மகி மையை, தெய்வீகத் தன்மையை), பச்ய-பார்ப்பாயாக.

## கருத்துரை

ஆனால் உனது இந்த ஊனக் கண்ணால் என்னை நீ காணவிய லாது. உனக்கு ஞானக் கண்ணை வழங்குகின்றேன். அதனால் எனது ஈசுவர யோகத்தினைப் பார்.

**விளக்கம்**

இறைவன் ஏன் புலப்படுவதில்லை என்ற வினாவிற்கு விடை இங்குச் சொல்லப்பட்டுள்ளது. இந்த ஊனக் கண்களால் மனிதன் மிகவும் சூட்சுமமான பரமாத்மாவைக் காணவியலாது. சாதாரண ஆகாசத்தையே இவ்வூனக் கண்களால் காணவியலாத போது மிக மிக சூட்சுமமான சிதாகச்த்தினை (பரமாத்மாவை) எவ்வாறு பார்க்க வியலும்? பஞ்ச பூதங்களின் சேர்க்கையான கண்களால் ஐம்பூதங்களால் ஆன பொருட்களையே பார்க்க முடியுமேயன்றி, சின்மயமான ஆத்ம வஸ்துவையல்ல. எனவே பரமாத்மாவை தரிசிக்க வேண்டுமானால் ஞானக் கண்கள், தெய்விகப் பார்வை தேவை.

'த்ர்ஸ்யதே த்வக்ரய்யா புத்யா சூட்சுமயா சூட்சதர்சிபிஹ' 'சூட்சுமமான ஒருமுனைப்பட்ட புத்தியுடன் தத்துவ அறிஞர்களால் பரமாத்மா காணப்படுகின்றான் (அனுபவத்தில் அறிகிறார்கள்)' என்ற சுருதி வாக்கியம் இந்த அண்மையையே தெரிவிக்கிறது. பகவான் எங்கும் வியாபித்திருந்து வெளிப்படையாகவே இருக்கிறான். ஆனால் மக்களின் கண்களை அஞ்ஞானமெனும் திரை மறைப்பதால் அவர்கள் அவனைக் காணவியலாது இருக்கின்றனர். அதுவே மாயையின் ஜாலம். அதுவே அஞ்ஞானத்திரை. அதனை ஞானமெனும் அஞ்சனத்தினால் துடைத்துவிட்டால் பரமாத்மாவை நேரில் தரிசிக்க வியலும்.

*ஸர்வகம் ஸச்சிதாத் மானம் ஞானசக்ஷுர்நிரிக்ஷதே*
*அஞ்ஞானசக்ஷுர்நேக்ஷேத பாஸ்வந்தம் பானு மந்தவத்'*

(ஸ்ரீ சங்கராச்சாரியர்-ஆத்மபோதனை)

எங்கும் வியாபித்துள்ள சச்சிதானந்த பரபிரம்மத்தினை ஞானக் கண்களால் மாத்திரமே மனிதன் காண முடியும். ஒளிவிடுகின்ற சூரியனைக் குருடன் எவ்வாறு காணவியலாதோ அவ்வாறே அஞ்ஞானக் கண்களால் அவனைக் காணமுடியாது.

இறைவன் எம் கண்களுக்குப் புலப்படவில்லை. எனவே அவனில்லை என்று வாதிப்பது - குருடன் சூரியன் இல்லையென்று வாதிப்பதைப் போன்றதேயாகும். எனவே இறைவனைத் தரிசிப்பதற்கு, தெய்வானுபூதிக்கு ஞானக்கண்கள், தெய்வீகப் பார்வை இவற்றைப் பெறுதல் வேண்டும். ஆயின் அதனைப் பெறுவது எங்ஙனம்? இறைவனது கருணையால்தான் 'ததாமிதே சக்ஷுர்ஹ' என்று பகவான் சொல்வதால் அதனை அவனே அளிக்க வேண்டியதே.

ஆயின் அனைவருக்கும் அவன் அளிப்பானா? எவர் மாறாத பக்தி பூண்டு அவனை ஆராதிக்கின்றனரோ, பூசிக்கின்றனரோ அவர்களுக்கு மாத்திரமேயளிப்பான். அர்ஜுனன் அத்தகைய தகுதியை பெற்றவனாகையால் அவனுக்கு அது கிடைத்தது. அவ்வாறே எவராயினும் சரி அத்தகைய பக்தியுடன் ஒழுகினால் இறைவனை அன்புடன் சேவித்தால், தியானித்தால், அவர்களுக்கும் ஞானக் கண்கள் கிடைக்கும். 'தேஷாம் ஸததயுக்தானாம். ததாமிபுத்தியோகம்...'' (10-10) என்ற விபூதியோகத்தில் உள்ள சுலோகம் இந்தத் தத்துவத்தை வெளியிடுகிறது. பூதக் கண்ணாடிப் பொருத்தப்பட்ட கண்ணாடியை அணிந்தால் நீரில், இருக்குமிடத்தில், ஆகாசத்திலுள்ள மிகவும் சூட்சுமான பொருள்கள் புலப்படும். சாதாரணக் கண்களால் அதனைக் காண முடியாது. அக் கண்ணாடியை, ஏழை, சண்டாளன், பெண், படிக்காதோர் எவர் அணிந்தாலும் சூட்சும வஸ்துக்கள் புலப்படும். அதனை அணியாவிட்டால் செல்வந்தனாயினும், மேற்குலத்தோனாயினும், ஆண்டானாயினும், கல்விமானாயினும், அப்பொருள்கள் புலப்படாது. அவ்வாறே ஞானக்கண்கள் (தெய்வீக பார்வை) என்ற கண்ணாடி அணிந்தவர்க்கு பரமாத்மா நேரில் காணக்கூடும். இறைவனது தரிசனத்தை அளிக்கக்கூடிய அக்கண்ணாடியை சர்வேசுவரனே அளிக்கவல்லவன் (பக்தி முதலானவையிருப்பின்), எனவே அதனைப் பெறாவிடில் அது எவர் குற்றம்? அவரவர் குற்றமேயாகும். இறைவனைக் காண முடியாது போவதற்கு முயற்சியின்மையே காரணம். எனவே அனைவரும் கீதையில் சொல்லப்பட்ட பக்தி முதலான, அமானித்வம் முதலான, அத்வேஷ்டா முதலான அபயம் முதலான நற்குணங்களை முயற்சியினால் சம்பாதித்து இறைவனின் அருளை, அதன் மூலம் ஞானக் கண்களை அதன் மூலம் பிரம்ம சாயுஜ்யத்தை அடைய வேண்டும்.

'திவ்யம்' - தெய்வீகமானது - தெய்வீகத்தினால் கிடைப்பது.

**வினா :** இறைவனை இவ்வூனக் கண்களால் காணக் கூடுமா?

**விடை :** இயலாது.

**வினா :** அப்படியானால் எதனால் காண முடியும்?

**விடை :** தெய்வீகப் பார்வையினால் ஞானக் கண்களால்.

**வினா :** அந்த ஞானக் கண்கள் எவரால் கிடைக்கும்?

**விடை :** பகவானின் அருளால்.

**வினா :** *அதனை அவன் எவருக்கு அளிப்பான்?*

**விடை :** *அனன்ய பக்தியுடன் தன்னை சேவிப்பவர்க்கு, தியானிப்பவர்க்கு, தெய்வ குணமுடையார்க்கு அளிப்பான்.*

**முன்னுரை**

*(அர்ஜுனனுக்கு ஞானக் கண்களை வழங்கிய பின்), சஞ்சயன் பகவானின் விஸ்வரூபத்தின் சிறப்பினை 5 சுலோகங்களின் மூலம் திரிதராட்டிரனுக்கு வர்ணித்துக் கூறுகிறார்.*

**சஞ்சய உவாச**

*ஏவ முக்த்வா ததோ ராஜன் மஹாயோகேஸ்வரோ ஹரிஹ!*
*தர்சயா மாஸ பார்த்தாய பரமம் ரூபமைச்வரம்!! - (9)*

**ஸஞ்சயன் சொன்னது**

**சொற்பொருள்**

*ராஜன்-திரிதராஷ்டிர மஹாராஜா! மஹாயோகஸேவரன்-மஹாயோசுவரானாகிய, ஹரிஹ்-ஸ்ரீகிருஷ்ணர், ஏவம்-இங்ஙனம், உக்தா-உரைத்து, பார்த்தாய-அர்ஜுனனுக்கு, பரமம்-மிகவும் உத்தமமான, ஐச்வரம்-ஈசுவர, ரூபம்-(விஸ்வ) ரூபத்தினை, தர்சயமாஸ-காண்பித்தார்.*

**கருத்துரை**

*ஸஞ்சயன் சொன்னார்-திரிதராட்டிர மஹாராஜா! மஹா யோகே சுவரானகிய ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மா இங்ஙனம் உரைத்த பின்பு பார்த்தனுக்குத் தம்மேலான ஈசுவர வடிவத்தினைக் காட்டியருளினார்.*

**விளக்கம்**

*ஸ்ரீவேத வியாசரின் அனுகிரஹத்தினால் ஸஞ்சயன் யுத்த களத்தில் நடக்குமனைத்தையும் அறியக் கூடிய சக்தி பெற்றிருந்தமையால் பகவானின் விசுவரூபத்தினைக்கூட தரிசிக்கும் பாக்கியத்தினைப் பெற்று*
*அறிவிக்கிறான்.*

*அநேக வக்த்ர நயன மநேகாத்புத தர்சனம்!*
*அநேக திவ்யாபரணம் திவ்யாநே கோத் யதாயுதம்!! - (10)*

*திவ்ய மால்யாம்வரதரம் திவ்யகந்தாநுலேபனம்'*
*ஸர்வாஸ்சர்யமயம் தேவம் அனந்தம் விச்துதோ முகம்!! - (11)*

### சொற்பொருள்

*அநேக வக்த்ர நயனம்-அநேக முகங்கள், கண்கள் உடையது, அநேகாத்புத தர்சனம்-பலவிதமான அதிசயக் காட்சிகளையுடையது, அநேக திவ்யாபரணம்-பலவித திவ்யமான ஆபரணங்களையுடையது, திவ்யாநேகோத்யதாயுதம்-திவ்வியமான ஆயுதங்கள் பலவற்றை ஏந்தியது, திவ்யமால் ய அம்பரதரம்-திவ்யமான மாலைகளும் ஆடைகளும் அணிந்தது, திவ்ய கந்த அனுலேபனம்-திவ்யமான வாசனை திரவியங்கள் பூசப்பெற்று ஸர்வ ஆஸ்சர்ய மயம்-பலவித ஆச்சரியங்கள் நிறைந்தது, தேவம்-பிரகாசிப்பது, அனந்தம்-நிறைந்தது, விஸ்வதோமுகம்-எங்கும் முகமுடையது. (ஆன விசுவரூபத்தினை, தர்சயாமாஸ-காட்டினார்)*

### கருத்துரை

*(அகன்பின்) அநேக முகங்கள் கண்கள் உடையது அவ்வடிவம். பலவிதமான அதிசயக் காட்சிகள் கொண்டது. தெய்வீக ஆபரணங்கள் பல அணிந்தது. தெய்வீக ஆயுதங்கள் பல ஏந்தியது. திவ்விய மான மாலைகளும் ஆடைகளும் அணிந்தது, திவ்விய கந்தம் பூசியது; பெரும் வியப்பூட்டுவது, பிரகாசிப்பது, முடிவுற்றது, எங்கும் முகமுடையதும் ஆனதன் விசுவரூபத்தினை பகவான் அர்ஜுனனுக்குக் காட்டினார்.*

*திவி ஸூர்ய ஸஹஸ்ரஸ்ய பவேத்யுக பதுத்திதஜா!*
*யதி பாஹ் ஸத்ருசீஸா ஸ்யாத் பாஸஸ்தஸ்ய மஹாத் மனஹ!! - (12)*

### சொற்பொருள்

*திவி-ஆகாசத்தில், சூர்ய ஸஹஸ்ரஸ்ய-ஆயிரம் சூரியர்களுடைய, பாஹ்-ஒளியானது, யுகபத்-ஒரேகாலத்தில், உத்திதாபவேத் யதி-உதித்திருக்குமானால், ஸா-அது, தஸ்யமஹாத்மனஹ-அந்த மகாத்மாவினுடைய, பாலஹ-ஒளிக்கு, ஸத்ருசீ ஸ்யாத்-சமானமாக இருக்கும்.*

**கருத்துரை**

*வானத்தில் ஆயிரம் சூரியர்களுடைய ஒளிமயமானது ஒருமித்து உதித்திருக்குமானால் அது அம்மகாத்மாவின் ஒளிக்கு ஒப்பாகும்.*

*தத்ரைகஸ்தம் ஜகத் க்ருத்ஸனம் ப்ரவிபக்தம்னே கதா!*
*அபச்யத் தேவதேவஸ்ய சரீரே பாண்டவஸ்ததா!! - (13)*

**சொற்பொருள்**

*ததா-அப்போது, பாண்டவ-அர்ஜுனன், அநேகதா-பலவிதமாகப், ப்ரவிபக்தம்-பிரிந்துள்ள, க்ருதஸனம் ஜகதி-ஜகத் முழுவதையும், தேவ தேவஸ்ய-தேவர்களுக்கெல்லாம் தேவனான ஸ்ரீ கிருஷ்ண பகவானின், சரீரே-சரீரத்தில், ஏகாந்தம்-(அவயவங்களைப் போல) ஓரிடத்தில் சேர்ந்திருப்பதாகக் கண்டான்.*

**விளக்கம்**

*இவ்வுலக முழுவதும் பரமாத்மாவிடத்து ஏதோ ஒரு மூலையில் ஓரிடத்தில் அடங்கியிருக்கின்றது. 'இஹைஹ கஸ்ரம் ஜகத்க்ருத்ஸனம்' - என்று இதற்கு முன் 7 ஆவது சுலோகத்தில் பகவான் இவ்விஷயத்தினையே தெளிவுபடுத்தியுள்ளார். அதனையே இப்போது மறுபடியும் சஞ்சயன் வலியுறுத்துகிறான். பகவானின் அனந்த சின்மய வடிவில் இவ்வுலகமனைத்தும் (அவ்வயவயங்களாக) ஏதோவொரு மூலையில் (கற்பிதமாக) நிலைத்துள்ளது.*

*'ப்ரவிபந்தம்' - பரமாத்மா பிரிக்க இயலாதவன், ஜகத் பிரிக்கக் கூடியது. (பலவிதமான வடிவங்களையுடையதாக அநேக நாமரூபங்களா[illegible]ளது).*

**முன்னுரை**

*அவ்வத்புத ரூபத்தினை தரிசித்து அர்ஜுனன் ஆச்சரியத்தில் ஆழ்ந்து பகவானைப் பலவிதமாகப் போற்றத் தொடங்கினான் என்று சஞ்சயன் கூறுகிறான்.*

*ததஹ ஸ விஸ்மயாவிஷ்டோ ஹ்ருஷ்டரோமா தனஞ்ஜயஹ!*
*ப்ரணம்ய சிரஸா தேவம் க்ருதாஞ்ஜலிரபாஷத!! - (14)*

### சொற்பொருள்

*ததஹ-பிறகு, ஸங்தனஞ்ஜயஹ-அந்த அர்ஜுனன், விஸ்மயா விஷ்டஹ-வியப்படைந்தவனாய், ஹ்ருஷ்ட ரோமா-மயிர்க்கூச்சலுடையவனாய் ஆதி, தேவம்-விசுவரூபத்தினை ஏற்ற அப்பகவானை, சிரஸா-தலையினால், ப்ரணம்ய-வணங்கி, க்ரு தாஞ்சலி-கூப்பிய கைகளுடன், அபாஷத-(இவ்வாறாக) பேசத் தொடங்கினான்.*

### கருத்துரை

*அதன்பின் அர்ஜுனன் வியப்படைந்து, உரோமம் சிலிர்த்து, விசுவரூபத்தினைத் தரித்த பகவானைத் தலையால் வணங்கிக் கைக் கூப்பிக் கூறுவானாயினான்.*

### விளக்கம்

*தலை வணங்குதல், கை கூப்புதல் ஆகிய கிரியைகள் பணிவு, பக்தி, அதிசயம் இவற்றைக் காட்டுகிறது.*

## அர்ஜுன் உவாச

*பச்யாமி தேவாஸ்ஸ்தவ தேவ தேஹே ஸர்வான் ஸ்ததா பூத விசேஷஸங்கான்!*
*ப்ரஹ்மாண மீசம் கமலாஸனஸ்தம் ருஷீன்ஸ்ச ஸர்வானுர காஸ்ஸ்ச திவ்யான்!! - (15)*

## அர்ஜுனன் சொன்னது

### சொற்பொருள்

*தேவ-தேவனே! தவதேஹி-உன் சரீரத்தில், ஸர்வான் தேவான்-எல்லா தேவர்களையும், ததா-அவ்வாறே, பூத விசேஷஸங்கான்-பலப்பல ஸ்தாவர ஜங்கம பிராணி கோடிகளின் சமூகங்களை, கம லாஸனஸ்தம்-(உன்னுடைய) நாபிக் கமலத்தில் இருக்கின்றன, ஈசம் பிராஷ்மாணம்-சிருஷ்டி கர்த்தாவான பிரம்மதேவனை, ஸர்வான் ருஷீன்ச-சகலரிஷிகளையும் திவ்ய ஸர்ப்பங்களையும், பச்யாமி-பார்க்கிறேன் (கமலாஸனஸ்தம் ப்ரஹ்மணம்-கமலாசனத்தில் வீற்றி ருக்கின்ற பிரம்மதேவனை, (மேலும், ஈசன் - இவனையும் - என்றும் பொருள், சொல்லலாம்).*

### கருத்துரை

*தேவா! உன் சரீரத்தில் எல்லா தேவர்களையும், அவ்வாறே சராச*

ரமனைத்தும் உள்ள பிராணி கோடிகளின் சமூகங்களையும், கமலாச னத்தில் அமர்ந்திருக்கின்ற சிருஷ்டி கர்த்தாவான பிரம்மதேவனை யும், எல்லா ரிஷிகளையும், திவ்வியமான சர்ப்பங்களையும் நான் பார்க்கிறேன்.

*அநேக பாஹூ ்தரவக்த்ர நேத்ரம் பச்யாமி த்வாம் ஸர்வதோ அனந்த ரூபம்!*
*நாந்தம் ந மத்யம் ந புனஸ்தவாதிம் பச்யாமி விச்வேச்வர விச்வரூப!! - (16)*

### சொற்பொருள்

விஸ்வேஸ்வர-உலகிற்கு அதிபதியானவனே! விஸ்வரூப-அகிலாண்ட வடிவினனே! அநேக பாஹூ உதர வக்த்ர நேத்ரம்-அநேக கைகள், வயிறுகள், முகங்கள், கண்கள் உடைய, அனந்த ரூபம்-அநேக ரூபங்களையுடைவனும் (அல்லது முடிவற்ற ரூபமு டையதும்), த்வாம்-(ஆன) உன்னை, ஸர்வதஹ-எங்கும், பச்யாமி-பார்க்கிறேன், புனஹ-மேலும், தவ-உம்முடைய, ஆதிம்-முதலும், ந பச்யாமி-காண்கின்றேனில்லை, மத்யம்-மத்தியையாவது, ந பச் யாமி-காண்கின்றேனில்லை, அந்தம்-முடிவையும், ந பச்யாமி-காணவியலவில்லை.

### கருத்துரை

உலகவடிவுடைய உலக நாயகா! எண்ணிறந்த கைகள், வயிறு கள், முகங்கள், கண்கள் உடைய உமது அலகிலா வடிவங்களையும் நான் காண்கிறேன். உனது துவக்கத்தையோ, மத்தியையோ, முடி வையோ காண்கின்றேனில்லை.

*கிரீடினம் கதினம் சக்ரிணம் ச தேஜோ ராசிம் ஸர்வதோ தீப்தி மந்தம்*
*பச்யாமி த்வாம் துர்நிரீக்ஷ்யம் ஸமந்தாத்- தீப்தானலார்க த்யுதி மப்ரமேயம்!! - (17)*

### சொற்பொருள்

த்வாம்-உன்னை, ஸமந்தாத்-எங்கும், கிரீடினம்-கிரீட முடைய வராகவும், கதினம்-கதையையுடையவராகவும், சக்ரிணம்-சக்கரத்தையுடையவராகவும், தேஜோ ராஸிம்-ஒளிப்பிழம்பை, ஸர் வத்ர-எங்கும், தீப்திமந்தம்-பிரகாசிப்பவராகவும், துர்நிரீக்ஷ்யம்-கண்கொண்டு பார்க்க முடியாத, தீப்த அலை அர்க்கத்யுதிம்-கொளுத்துகின்றன தீயும் சூரியனும் போன்றவரை, அப்ரமேயம்-அளவிடமுடியாதவரை, பச்யாமி-பார்க்கிறேன்.

### கருத்துரை

உன்னை எங்கும் கிரீடம் தரித்து, கதை தாங்கி, சக்கரம் ஏந்தியவ ராய், எங்கும் வீசும் ஒளிப்பிழம்பாய், காண்பதற்கரியவராய், சுடும் சூர்யாக்னியைப் போன்ற ஒளியுடையவராய், அளவிடற்கரியவ ராய்ப் பார்க்கிறேன்.

*த்வமக்ஷரம் பரமம் வேதிதவ்யம் த்வமஸ்ய விச்வஸ்ய பரம் நிதானம்!*
*த்வமவ்யயஹ சாச்வத தர்ம கோப்தா ஸநாதனஸ்த்வம் புருஷோ மதோமே!! - (18)*

### சொற்பொருள்

த்வம்-நீர், வேதி தவ்யம்-அறிய வேண்டிய பொருள், பரமம் அக்ஷரம்-மேன்மை பொருந்திய அழியாப்பொருளான பரபிரம்மா. த்வம்-நீர், அஸ்யவிஸ்ய-இந்த பிரபஞ்சத்திற்கு, பரம்நிதானம்-சிறந்த ஆதாரம் (இருப்பிடம்), த்வம்-நீர், அவ்வயயஹ-மறவாதவர், சாச்வத தர்மகேஸ்தா-நிலையான தர்மங்களைக் காப்பவர், தவம்-நீர், ஸநாதன வி புருஷஹ-புராண புருஷன், (இதி-என்பது) மே மதஹ-எனது கருத்து.

### கருத்துரை

நீ அறியத்தக்க மிகவும் மேன்மை பொருந்திய அழிவற்ற பரபி ரம்மா. நீ இவ்வுலகமனைத்திற்கும் சிறந்த ஆதாரமானவன். நீ அழி வற்றவன். நிலையான தர்மங்களைக் காப்பவன், நீ புராண புருஷன்-என்பது என் கருத்து.

### விளக்கம்

'சாச்வத தர்ம கோப்தா'-என்ற சொல் கவனிக்கத்தக்கது. தர்மம் நிலையானது. அது எக்காலத்தும் அழிவதில்லை. தேச, காலம் இவற் றின் மாறுபாட்டினால் அதன் பிரச்சாரம் எப்போதாவது சிறிது குறை வுபடலாமே தவிர தர்மம் எந்நாளும் அழிவதில்லை. அது குறைவு பட்டபோது சாட்சாத் இறைவனோ அல்லது மகான்களோ அவத ரித்து அதனை மீட்பர். 'தர்ம கோப்தா' என்பதால் பகவான் தர்மத் தினை நன்கு காப்பாற்றுபவன் என்பது தெளிவாகிறது. எனவே இறைவனுக்கு மிகவும் பிரியமான பொருளை அதாவது தர்மத்தி னைக் கடைபிடித்தால் அவனது அருளிற்குத் தவறாது பாத்திரர்கள் ஆவார்கள் என்பது திண்ணம்.

*அநாதி மத்யாந்த மனந்த வீர்ய மனந்த பாஹூம் சசிஸூர்ய நேத்ரம்!*
*பச்யாமி த்வாம் தீப்தஹூதாச வக்த்ரம் ஸ்வதேஜஸா விச்வமிதம் தபந்தம்!! - (19)*

### சொற்பொருள்

*அனாதி மத்யாந்தம்-ஆதி, நடு, முடிவு இல்லாதவராகவும், அனந்த வீர்யம்-எல்லையற்ற சக்தி படைத்தவராகவும், அனந்த பாஹூம்-எண்ணிறந்த கைகளையுடையவராகவும், சசிஸூர்ய நேத்ரம்-சந்திர சூரியனைக் கண்களாக உடையவராகவும், தீப்த க்ஷூதா வக்த்ரம்-ஜொலிக்கின்ற அக்னியை முகமாகவுடையவராகவும், ஸ்வதேஜஸா-தமது தேஜஸினால், இதம் விஸ்வம்-இப்பிரபஞ்சமனைத்தையும், த்பந்தம்-எரிக்கின்றவராகவம், த்வாம்-உம்மை, பச்யாமி-பார்க்கின்றேன்.*

### கருத்துரை

ஆதி, நடு, முடிவு இல்லாதவராயும், எல்லையற்ற சக்தி படைத்தவராகவும், எண்ணிறந்த கைகளையுடையவராகவும், சந்திர சூரியர்களைக் கண்களாகவுடையவரும், வெந்தழல் வாய் படைத்தவரும், தமது தேஜஸினால் இவ்வுலகமனைத்தையும் எரிக்கின்றவராகவும் உம்மை நான் காண்கின்றேன்.

*த்யாவா ப்ருதிவ்யோரி தமந்தரம் ஹி வ்யாப்தம் த்வைய கேன திசஸ்சஸர்வாஹ!*
*த்ருஷ்ட்வாத்புதம் ரூபமுக்ரம் தவேதம் லோகத்ரயம் ப்ரவ்யதிதம் மஹாத்மன்!! - (20)*

### சொற்பொருள்

*மஹாத்மன்-மஹாத்மாவே! த்யாவா ப்ருதிவ்யோஹ்-மண்ணுலகு விண்ணுலகினுடைய, இதம் அந்தரம்-இந்த இடைவெளி அனைத்தும், ஸர்வாஹ்திசஹ்ச-எல்லா திசைகளும், த்வயா ஏகேன - உம் ஒருவராலேயே, வ்யாப்தம்ஹி-நிறையப் பெற்றிருக்கிறதல்லவா!, உக்ரம்-உம்முடைய இந்த பயங்கரமான, அத்புதம்-ஆச்சரியகரமானதும் (ஆன) தவ-உன்னுடைய, இதம் ரூபம்-இந்த விஸ்வ ரூபத்தினை, த்ருஷ்ட்வா-பார்த்து, லோகத்ரயம்-மூவுலகும், ப்ரவ்ய திதம்-நடுங்குகிறது.*

கருத்துரை

மஹாத்மாவே! விண்ணுலகும், மண்ணுலகும் இடைவெளியும் எல்லா திக்குகளும் உன் ஒருவராலேயே வியாபிக்கப் பெற்றிருக்கின் றது அல்லவா! மேலும் பயங்கரமானதும், ஆச்சரியப்படத்தக்கது மான உம் விசுவரூபத்தைக் கண்டு மூவுலகும் மிகுந்து பீதியடைந் துள்ளது.

*அமீ ஹித்வாம் ஸுரஸங்கா விசந்தி கேசித் பீதாஹ் ப்ராஞ்ஜல யோ க்ருணந்தி*
*ஸ்வஸ்தீத்யுக்த்வா மஹர்ஷிஸித்தஸங்காஹ் ஸ்துவந்தி த்வாம் ஸ்துதிபி ஹ புஷ்கலாபிஹி!!*
*(21)*

சொற்பொருள்

அமீ-இந்த, ஸுரஸங்கா-தேவர் கூட்டங்கள், த்வாம்-உம்மை, (உம் விசுவரூபத்தினை) விசந்தி ஹி-பிரவேசிக்கிறார்கள், கேசித்-சிலர், பீதாஷ்-பயந்தவர்களாய், ப்ராஞ்ஜலயஹ-கை கூப்பியவர்க ளாய், க்ருணந்தி-போற்றிப் புகழ்கிறார்கள், மஹர்ஷி சித்த ஸங்கா-மஹரிஷிகள், சித்தர்கள் இவர்களுடைய குழுவினர், ஸ்வஸ்தி இதி உக்த்வா-(உலகினை) வாழ்க என்று வாழ்த்தி, புஷ்கலாபி ஸ்துதி பிஹி-பூரணமான ஸ்தோத்திரங்களால், த்வாம்-உம்மை, ஸ்துவந்தி-போற்றுகிறார்கள்.

கருத்துரை

இத் தேவர் கூட்டங்கள் உன்னிடத்தே புகுகின்றனர். சிலர் அஞ்சி கைகூப்பிய வண்ணம் (உம்மை) துதிக்கின்றனர். மகரிஷிகள், சித்தர் கூட்டத்தார் (உலகம்) வாழ்க என வாழ்த்தி நிறைபுகழ் தோத்தி ரங்களால் நின்னைப் போற்றிப் புகழ்கின்றனர்.

விளக்கம்

'ஸ்வஸ்தீத்யுக்தா மஹர்ஷி ஸத்தஸங்கா'-மகான்கள் எப்போ தும் உலக க்ஷேமத்தையே நாடுவார். 'ஸவஸ்தீப்ரஜாப்ய' என்பதே அவர்களது வாக்கு.

'ஸ்துவந்தி' - மஹரிஷிகளே பகவானைத் துதிக்கையில் இனி சாதாரண மனிதர்களும் இறைவனிடம் பக்தி பூண்டு ஸர்வேசுவர னைத் துதித்தல் தர்மம்.

*ருத்ராதித்யா வஸவோ யேச ஸாத்யா விச்வே அச்விநௌ மருதஸ்சோஷ்மபாஸ்ச!*
*கந்தர்வ யக்ஷாஸுரஸித்த ஸங்கா வீக்ஷந்தே த்வாம் விஸ்மி தாஸ்சை வஸர்வே!! - (22)*

### சொற்பொருள்

ருத்ர ஆதித்யாஹ்-ருத்திரர்கள், ஆதித்யர்கள், வஸவஹ்வசுக் கள், யேச ஸாத்யாஹ்-சாத்தியர்கள் எவரோ அவர்களும், விச்வே-விஸ்வேதேவர்களும், அச்விநௌ-அசுவினிகள் இருவரும், மருத ஹச-மருத்துக்களும், ஊஷ்மபாஷ்-ஊஷ்மபர் என்கிற பித்ருதேவதை களும், கந்தர்வ யக்ஷ அஸுர ஸித்த ஸங்காஹி-கந்தவர்கள், யக்ஷர் கள், அசுரர்கள், சித்தர்கள் கூட்டம், ஸர்வே-ஏவ-இவர்கள் அனைவ ரும், விஸ்மிதா-வியப்படைந்து த்வாசம்ச-உம்மையே, வீக்ஷந்தே-பார்க்கிறார்கள்.

### கருத்துரை

ருத்திரர்கள், ஆதித்தியர், வசுக்கள், சாத்தியர்கள், விசுவேதேவர் கள், அசுவினி தேவர், மருத்துக்கள், ஊஷ்மபர், கந்தர்வர், யக்ஷர், அசுரர், சித்தர் இவர்கள் கூடி வியப்படைந்து உம்மையே பார்க்கின்ற னர்.

*ரூபம் மஹத்தே பஹுவக்த்ர நேத்ரம் மஹாபாஹோ பஹுபாஹுருபாதம்!*
*பஹுதரம் பஹுதன் ஷ்ட்ராக ராலம் த்ருஷ்ட்வா லோகாஹ் ப்ரவ்யதிதாஸ்ததாஹம்!! - (23)*

### சொற்பொருள்

மஹாபாஹோ! பெரிய தோள்களையுடையவனே, பஹு வக்த்ர நேத்ரம்-பல முகங்களையும் கண்களையும் உடைய, பஹு பாஹு ஊருபாதம்-பல கைகள், தொடைகள், பாதங்கள் உடைய, பஹு உதரம்-பல வயிறுகளடைய, பஹு தன்ஷ்ட்ராகராலம்-பல வளைந்த பற்களால் பயமுறுத்துகிற, தே-உம்முடைய, மஹத்-ரூபம் பெரிய வடிவினை, த்ருஷ்ட்வா-பார்த்து, லோகாஹ்-உலகங்கள், ப்ரவ்யதிதாஹ்-நடுங்குகின்றன, அஹம்ச-நானும் ததா-அவ்வாறே (ப்ரவ்யதிதாஹ்-நடுங்குகின்றேன்).

### கருத்துரை

நெடுந்தோளுடைய ஸ்ரீ கிருஷ்ணா! அநேகமுகங்கள், கண்கள், பல கைகள், துடைகள், பாதங்கள், பல வயிறுகள், பயமுறுத்தும் பல வளைந்த பற்கள் உடைய உமது பேருருவைக் கண்டு உலகங்கள் நடுங்குகின்றன. நானும் அவ்வாறே நடுங்குகின்றேன்.

*நபஹ ஸ்ப்ருசம் தீப்தமனேக வர்ணம் வ்யாத்தானனம் தீப்தவிசால நேத்ரம்!*
*த்ருஷ்ட்வா ஹித்வாம் ப்ரவ்யதிதாந்தராத்மா த்ருதிம் ந விந்தாமி சமம் ச விஷ்ணோ!! - (24)*

## சொற்பொருள்

விஷ்ணோ-விஷ்ணுமூர்த்தியே! நபஹஸ்ப்ருசம்-வானளாவுகின்ற, தீப்தம்-ஜொலிக்கின்ற, அநேக வர்ணம்-பல நிறங்களையுடைய, வ்யாத்த ஆனனம்-திறந்த வாய்களையுடைய, தீப்த விசால நேத்ரம்-ஜொலிக்கின்ற விசாலமான கண்களையுடைய, த்வாம்-உம்மை, திருஷ்டவாஹி-பார்த்ததும், ப்ரவ்யதித் அந்தராத்மா-மனம் நடுங்கியவனாய், அஹம்-நான், த்ருதிம்-தைரியத்தையும், சமம்ச-மனவமைதியையும், ந விந்தாமி-காண்கின்றேனில்லை.

## கருத்துரை

விஷ்ணுவே! வானளாவி பல நிறங்களுடன் பிரகாசிக்கின்ற, திறந்திருக்கும் வாய்களையுடைய, ஜொலிக்கின்ற கனல் வீசும் விசாலமான கண்களையுடைய உம்மைக் கண்டு மிக்க பீதியடைந்து தைரியத்தையும், மனவமைதியையும் காண்கிறேனில்லை.

*தன்ஷ்ட்ரா கராலானி ச தே முகானி த்ருஷ்ட்வைவ காலானல ஸன்னிபானி!*
*திசோ ந ஜானே நலபேச சர்ம ப்ரஸீத தேவேச ஜகந்நிவாஸ!! - (25)*

## சொற்பொருள்

தன்ஷ்ட்ரா' கராலானி-பயங்கர மூட்டும் கோரப் பற்களுடன், காலனல ஸன்னிபானிச-பிரளய கால அக்னிக்கு ஒப்பான, தே-உம்முடைய, முகானி-முகங்களை, த்ருஷ்ட்வா-பார்த்து, திசஹ்-தீமைகள், நஜானே-தெரியவில்லை (திக்பிரமையடைந்துள்ளேன்) சர்மச-சுகத்தினைக்கூட, ந ஏவ லபே-அடைந்திலேன், தேவதேவா!, ஜகந்நிவாச-வையகத்தின் இருப்பிடமே! ப்ரஸீத-அருள்புரிக.

## கருத்துரை

அச்சமூட்டும் கோரப் பற்களுடன் கூடிய, பிரளய கால அக்னிக்கு ஒப்பான உம்முடைய முகங்களைப் பார்த்து திசைகள் தெரியவில்லை, அமைதியும் அடைந்திலேன் தேவதேவா! வையகத்திற்கு இருப்பிடமானவனே! அருள் புரிக!

*அமீச த்வாம் த்ருதராஷ்ட்ரஸ்ய புத்ராஹ் ஸர்வே ஸஹைவாவனிபால ஸங்கைஹ!*
*பீஷ்மோ த்ரோணஹ ஸூதபுத்ரஸ்ததாஸௌ ஸஹாஸ்மதீயைரபி யோத முக்யைஹ!! (26)*

*வக்த்ராணி தே த்வரமாணா விசந்தி தன்ஷ்ட்ராகராலானி பயானகானி!*
*கேசித்விலக்னா தசனாந்தரேஷு ஸந்த்ருச் யந்தே சூர்ணி தைருத்த மாங்கைஹ!! (27)*

## சொற்பொருள்

*அயி-இந்த, த்ருதராஷ்ட்ரஸ்ய புத்ராஹ்-திரிதராஷ்டிரனுடைய புத்திரர்கள், ஸர்வே-அனைவரும், பீஷ்மஹ்-பீஷ்மரும், துரோணஹ்-துரோணரும், அஸெஸூத புத்ரஹ-இந்த சூத புத்திரன் (கர்ணனும்), அவனிபால ஸங்கைஹஸஹ ஏவ-(ஏனைய) அசுரர்களின் சமூகத்தினரும் கூட, ததா-அவ்வாறே, அஸ்மதீயைஹ்-எம்மவரான யோதமுக்யைஹ-அபிஸஹ-முக்கியமான யுத்த வீரர்களுடன், த்தாம்-உம்மிடத்து, த்வரமாணாஷ்-கோரப் பற்களையுடைய, யயான கானி-பயங்கரமான, தே-உம்முடைய, வக்த்ராணி-வாய்களுள், விசந்தி-பிரவேசகிக்கிறார்கள், கேசித்-(அவர்களுள்) சிலர், தனாந்தரீரஹு-பற்களின் இடுக்குகளில், வில்கனாஹ்-அகப்பட்டு, சூர்ணிதைஹ-பொடி செய்யப்பட்ட, உத்தமாங்கை-தலைகளுடன், சந்த்ருஸ்யந்தே-காணப்படுகிறார்கள்.*

## கருத்துரை

*திரிதராஷ்டிரனின் குமாரர்களனைவரும், பீஷ்மர், துரோணர், கர்ணன், இவர்களும், அரசர்கள் குழாம் அனைத்தும், அவ்வாறே நம் சேனையில் உள்ள சேனைத் தலைவர்களும், உன்னைப் பரபரப்புடன் சேர்கின்றவர்களாய், கோரப் பற்களுடன் பயங்கரமாக உள்ள உன் வாயில் பிரவேசிக்கின்றனர். அவர்களில் சிலர் உன் பல்லிடுக்குகளில் சிக்கிக் கொண்டவராய்ப் பொடிபட்ட தலைகளுடன் காணப்படுகிறார்கள்.*

## விளக்கம்

*இறைவனிடத்தில் நிகழ்காலம், எதிர்காலம் ஆகிய கால பேதங்கள் இல்லை. காலாதீதன் ஆன பகவானிடத்துக் காலத்திற்குத் தொடர்புடைய பேதங்களோ, பிரிவுகளோ இருப்பதில்லை. எனவேதான் இனி நேரக் கூடியவையனைத்தும் நிகழ்காலத்திலேயே விஸ்வரூபத்தில் அர்ஜுனனுக்குத் தெரிவதற்கு சாத்தியமாயிற்று. பீஷ்ம துரோணர் முதலான கௌரவ பக்க வீரர்கள், பாண்டவ சைனியத்தின் வீரத்தலைவர்கள் மடிந்து கால கர்ப்பத்தில் நுழைவதே அர்*

ஜுனனுக்குத் தெளிவாகத் தெரிந்தது. இதன் உட்பொருள் யாது? பரமாத்மாவிற்குச் சென்ற காலம் எதிர்காலம், நிகழ் காலம் அனைத்தும் ஒன்றே. இதுவரை சென்ற யுகங்கள் இனி வரப்போகும் யுகங்கள் ஆகிய யாவும் பரமாத்மாவிற்கு நிகழ்காலமே. அவன் காலத்திற்கு அப்பாற்பட்டவன். காலம் அவனிடத்தில் கற்பிக்கப்படுகின்றன.

இச்சுலோகத்தில் வெளியிடப்பட்ட பொருளை, நன்கு விசாரித்தறிந்தால் ஜீவனிடத்து வைராக்கியம் தோன்றும். ஏனெனில் நேரிடையாகக் காணக்கூடிய பீஷ்ம துரோணர்கள், ஏனைய வீரர்கள் அக்காலத்திலேயே பயங்கரமான காலத்தின் பிடியல் விரைவில் பிரவேசிப்பதை அர்ஜுனன் எவ்வாறு பார்க்க முடிந்ததோ அவ்வாறே, இப்போது நேரில் தோன்றும் சொந்த பந்தங்கள், மித்திரர்கள், தன தான்யங்கள், சரீரங்கள், சொத்துக்கள், ஐசுவரியங்களனைத்தும் கால கர்ப்பத்தில் அழியக்கூடியனவே என்று ஜீவன் எண்ணிக் கொள்ள வேண்டும். இவ்வுண்மையை நன்கு எண்ணிப் பார்த்தால் காட்சிப் பொருள்களின் மீது வைராக்கியம் தோன்றும்.

இனி எதிர்காலத்தில் நிகழப் போவதை முன் கூட்டியே நிகழ் காலத்தில் அறிவதே ஞான திருஷ்டி. வரப்போகும் மரணத்தை இப்போது எண்ணிப் பார்ப்பதே ஜீவனின் அறிவுணர்ச்சியாகும். அத்தகைய எதிர்காலத்தை எண்ணி மரணமடைந்தால் ஜீவன் வைராக்கியம் பூண்டு வாழ்க்கையை எச்சரிக்கையுடன் நடத்துவான். போகங்களின் மீது விரக்தி, இறைவனிடத்து பக்தி இவை தோன்றும். மரணம் நேரிடும் முன்பே இலக்கினையடைய வேண்டும் என்ற திடமான நிச்சயம் ஏற்பட்டு அதற்கான தீவிர முயற்சியில் இறங்குவான்.

எனவே விஸ்வரூபத்தில் அர்ஜுனன் பார்க்க முடிந்த எதிர்காலச் சித்திரத்தை ஒவ்வொரு முமுட்சுவும்தன் இதய வீதியில் சித்திரித்துக் கொண்டு வைராக்கியம் உடையவனாய் இலட்சியமான பரமாத்மாவினை அடைவதற்கு எப்போதும் இடைவிடாது முயற்சி செய்தல் வேண்டும்.

*யதா நதீனாம் பஹவோ அம்புவேகாஹ் ஸமுத்ரமே வாபிமுகாத்ர வந்தி!*
*ததா தவாமீ நரலோக வீரா விசந்தி வக்த்ராண்ய பிவிஜ்வலந்தி!! - (28)*

## சொற்பொருள்

**யதா-எவ்வாறு, நதீனாம்-நதிகளின், பஹவஹ்-பலவிதமான அம்புவோகாஹ்-நீர்ப்பெருக்கு, சமுத்ரம் ஏவ-கடலை நோக்கியே, அபிமுகாஹ்-சென்று, த்வந்தி-பாய்கின்றனவோ, ததா-அவ்வாறே,**

அமீ-இந்த, நரலோக வீராஹ்-நரலோக வீரர்கள் (அசுரர்கள்), அபி விஜ்வலந்தி-நன்கு ஒளிவிடுகின்ற, தவ-உன்தவக்த்ராணி-வாய்களுக்குள், விசந்தி-பிரவேசிக்கிறார்கள்.

**கருத்துரை**

எவ்வாறு பலவிதமான நதிகளும் பெருக்கெடுத்து கடலை நோக்கிப் பாய்கின்றனவோ, அவ்வாறே இந்நரகலோக வீரர்களனை வரும், ஒளிவிடுகின்ற உன் வாய்க்குள் புகுகின்றனர்.

*யதா ப்ரதீப்தம் ஜ்வலனம் பதங்கா விசந்தி நாசாய ஸம்ருத்த வேகாஹ்!*
*ததைவ நாசாய விசந்தி லோகாஸ் தவாபி வக்த்ராணி ஸம்ருத்த வேகாஹ்!! - (29)*

**சொற்பொருள்**

யதா-எவ்வாறு, பதங்கா-விட்டிற் பூச்சிகள், நாசாய-அழிவதற்காக, ஸம்ருத்த வேகாஹ்-மிகுந்த வேகத்துடன், ப்ரதீப்தம்-நன்கு எரிந்து கொண்டிருக்கும், ஜ்வலனம்-தீயில், விசுந்தி-பாய்கின்றனவோ, ததா ஏவ-அவ்வாறே, லோகாஹ் அம-மக்களும், ஸம்ருத்தவேகாஹ்-மிகுந்த வேகத்துடன், நாசாய-அழிவிற்காக, தவ-உனது வக்த்ராணி-வாய்களில், விசந்தி-பாய்கின்றார்கள்.

**கருத்துரை**

எவ்வாறு விட்டிற் பூச்சிகள் நாசமடைவதற்கு வெந்தழலில் விரைந்து வீழ்கின்றனவோ, அவ்வாறே இவ்வுலக மக்களும் நாசமடைவதற்கே உமது வாய்களுள் விரைவாக பிரவேசிக்கின்றனர்.

*லேலிஹ்யஸே க்ரஸமான ஹ ஸமந்தால் லோகான் ஸமக்ரான் வதனைர் ஜ்வலத்பிஹி!*
*தேஜோ பிராபூர்ய ஜகத்ஸமக்ரம் பாஸஸ்த வோக்ராஹ ப்ரதபந்தி விஷ்ணோ!! - (30)*

**சொற்பொருள்**

விஷ்ணோ-விஷ்ணுவே! ஜ்வலம்திஹி-எரிகின்ற, வதனைஹ்-முகங்களுடன் (வாய்களுடன்) ஸமக்ரான் லோகான்-எல்லாமக்களையும், ஸமந்தாத்-நான்கு பக்கங்களிலும், க்ரஸமானஹ-விழுங்குபவனாய், லேஸிஹ்யஸே-நக்கி ருசி பார்க்கிறாய், தவ-உம்முடைய, உக்ராஹ்-பயங்கரமான, பாஸஹ்-ஒளியானது, தேஜோபிஹி-உமது தேஜஸ்களினால், ஸமக்ரம்-எல்லாவிதமான, ஜகத்-உலகையும், அபூர்ய-வியாபித்து, ப்ரதபந்தி-எரிகின்றன.

கருத்துரை

விஷ்ணுவே! எரிகின்ற உம்முடைய வாய்கள் மக்கள் அனைவரையும் உலகனைத்தையும் விழுங்கி ருசிபார்க்கின்றது. உமது பயங்கரமான சுடர்கள் ஜகம் முழுவதையும் வெம்மையான கதிர்களால் எங்கும் வியாபித்துச் சுடுகின்றன.

*ஆக்யாஹி மே கோ பவாநுக்ரரூபோ நமோ஽ஸ்துதே தே தேவவர ப்ரஸீத!*
*விக்ஞாது மிச்சாமி பவந்த மாத்யம் நஹி ப்ரஜானாமி தவ ப்ரவ்ருத்திம்!! - (31)*

சொற்பொருள்

தேவவர-தேவர்களுள் சிறந்தவனே! உக்ரரூபஹ-பயங்கர மூர்த்தியாகிய, பவான்-தாங்கள், கஹ-யார் என்று, மே-எனக்கு, ஆக்யாஹி-சொல்லுங்கள், ஹி-ஏனெனில், தவப்ரவ்ருத்திம்-உம்முடைய செயலை, ந ப்ரஜானாமி-அறிகிறேனில்லை. ஆத்யம்-ஆதி புருஷானான, பவந்தம்-உன்னை, விக்ஞாதும்-அறிந்து கொள்வதற்கு, இச்சாமி-விரும்புகிறேன், தே-உனக்கு, நமஷ-வணக்கம், அஸ்து-இருப்பதாக! ப்ரஸீத-அருள்புரிவாய்.

சொற்பொருள்

தேவோத்தமா! பயங்கரமூர்த்தி யாகிய நீ யாரென்று எனக்குக் கூறுவாயாக! ஏனெனில் உன் செயல் எனக்கு விளங்கவில்லை. எனவே ஆதிபுருஷனான உன்னைக் குறித்து அறிந்து கொள்ள விரும்புகிறேன். உன்னை வணங்குகிறேன். எனக்கு அருள் புரிவாயாக!

விளக்கம்

இறைவனைப் பற்றி அறிந்து கொள்ள விரும்புவோர் அர்ஜுனனைப் போன்று பணிவுடன், பக்தியுடனும் இருத்தல் வேண்டும்.

முன்னுரை

அர்ஜுனனின் வினாக்களுக்கு பகவான் இனி விடையளிக்கிறார்.

**ஸ்ரீ பகவானுவாச**

*காலோ அஸ்மி லோகக்ஷயக்ருத் ப்ரவ்ருத்தோ லோகான் ஸமாஹர்த்து மிஹ ப்ரவ்ருத்தஹ*
*ருதே அபி த்வாம் ந பவிஷ்யந்தி ஸர்வே யே அவஸ்திதாஹ் ப்ரத்யனீகேஷு யோதாஹ;-(32)*

**ஸ்ரீ பகவான் சொன்னது**

**சொற்பொருள்**

*(அஹம்-நான்) லோகக்ஷய க்ருத்-உலகங்களை அழிக்கின்ற, ப்ரவ்ருத்தஹ-பெரு வ்ல்லமையுடைய, காலஹ-காலமாக, அஸ்மி-இருக்கின்றேன், லோகான்-உயிர்களை, ஸமாஹர்தும்-சம்ஹாரம் செய்வதற்கு, இஹ-இவ்வுலகில் ப்ரவ்ருத்தஹ-மிகவும் விருத்தியடைந்துள்ளேன். ப்ரத்யனிகேஷு-எதிர்த்துள்ள சேனைகளில் (எதிரியின் சேனையில்), யே யோதாஹ்-எந்த வீரர்கள், அவஸ்திதாஹ்-இருக்கின்றார்களோ, (தே) ஸர்வே-அவர்கள் அனைவரும், த்வா ருதே அபி-நீ இல்லாமல் கூட, (நீ யுத்தம் செய்யாவிட்டாலும்), ந பவிஷ்யந்தி-வாழ மாட்டார்கள் (மரணம் அடைதல் தப்பாது).*

**கருத்துரை**

*நான் உலகங்களை அழிக்கவல்ல காலம். நான் உயிர்களை அழிப்பதற்காக உலகில் தோன்றியுள்ளேன். நீ போரினின்று பின் வாங்கினாலும் எதிரிகள் பக்கலிலுள்ள சேனை வீரர்கள் வாழமாட்டார்கள் (மரணமடைதல் திண்ணம்).*

*தஸ்மாத் த்வமுத்திஷ்ட யசோ லபஸ்வ ஜித்வா சத்ருன் புங்க்ஷ்வ ராஜ்யம் ஸம்ருத்தம்!*
*மயைவைதே நிஹதாஹ் பூர்வமேவ நிமித்தமாத்ரம் பவ ஸ்வ்ய ஸாசின்!! - (33)*

**சொற்பொருள்**

*தஸ்மாத்-ஆகையினால், த்வாம்-நீ, உத்திஷ்ட-எழுந்திரு, சத்ருன்-எதிரிகளை, ஜித்வா-வென்று, யசஹ-கீர்த்தியினை, லப்ஸ்வ-அடைவாயாக! ஸம்ருத்தம்-முழுமையான (செல்வம் மிகுந்த), ராஜ்யம்-ராஜ்யத்தினை, புங்க்ஷ்வ-அனுபவிப்பாயாக!, மயா ஏவ-என்னாலேயே, பூர்வம் ஏவ-இதற்கு முன்பே, நிஹதாஹ்-கொல்லப்படிருக்கிறார்கள், ஸ்வயாஸாசின்-இடது கையால் அம்பு எய்யும் அர்ஜுனா!, நிமித்தமாத்ரம் பவ-நீ நிமித்த காரணமாக மட்டும் இருப்பாயாக!*

**கருத்துரை**

***ஆகையால் நீ எழுந்திரு. எதிரிகளை வென்று புகழைப் பெறுவாயாக! முழுமையான (எதிரிகளற்ற) இராஜ்யத்தினை அனுபவிப்பாயாக! இவர்களனைவரும் இதற்கு முன்பே என்னால் கொல்லப்பட்டிருக்கிறார்கள். எனவே அர்ஜுனா! நீ நிமித்த காரணமாக மட்டும் இருப்பாயாக!***

### விளக்கம்

'நிமித்த மாத்ரம் பவ' - உலகில் காரியங்களனைத்தும் இறைவனாலே செய்யப்படுகின்றன. ஜீவர்கள் வெறும் நிமித்த மாத்திரர்களேயாவார். ஆயின் அஞ்ஞானத்தினால் மக்கள் 'நான் செய்தேன்' - என்று கர்த்ருத்வம் கொண்டு அதன் பலனாய்த் துக்கத்தினை அனுபவிக்கின்றனர். அர்ஜுனா! உன் எதிரிகள் இதற்கு முன்பே என்னால் கொல்லப்பட்டிருக்கிறார்கள். நீ இப்போது நிமித்த காரணமாக மட்டும் யுத்தம் புரிந்து வெற்றியடைவாயாக' என்று பகவான் அர்ஜுனனுக்குப் போதிக்கிறார். இதனால் இறைவனே எல்லாச் செயல்களுக்கும் காரணமென்பதும், மக்கள் வீணே தாமே செய்வதாகக் கருதி மயக்கம் கொண்டு, துன்பமடைகின்றனர் என்பதும் தெளிவாகிறது. எனவே அறிவுடையோர் தாமே கர்த்தா என்ற எண்ணத்தை விட்டு, எல்லாம் இறைவனின் செயல் என்று எண்ணி, உலக விவகாரங்களில் நிமித்த மாத்திரனாக மட்டுமே இருத்தல் வேண்டும். அதனால் அஹங்காரம் ஒழிந்து அதன் பலனாய்த் தூய்மையான எண்ணம் தோன்றி, இறைவனது அருள் கிட்டும்.

'ஸ்வயசாசின்' - அர்ஜுனன் இடது கையால் கூட அம்பு எய்யக் கூடிய திறமையுடவன் என்பது பொருள்.

*த்ரோணம் சபீஷ்மம் சஜயத்ரதம் ச கர்ணம் ததான்யானபி யோத வீரான்!*
*மயா ஹதான் ஸ்த்வம் ஜஹிமா வ்யதிஷ்டா யுத்யஸ்வ ஜேதாஸி ரணே ஸபத்னான்!! - (34)*

### சொற்பொருள்

மயா-என்னால், ஹதான்-(இதற்கு முன்பே) கொல்லப்பட்ட, த்ரோணம் ச-துரோணாச்சாரியாரை, பீஷ்மம் ச-பீஷ்மா சாரியாரை, ஜயத்ரதம் ச-ஜயத்ரதனை, கர்ணம்-கர்ணனை, ததா-அவ்வாறே, அன்யான் யோதவீரான் அபி-ஏனைய வீரர்களையும், த்வாம்-நீ, ஜஹி-கொல்வாயாக!, மாவ்யதிஷ்டாஹ்-பயப்படாதே! யுத்யஸ்வ-யுத்தம் செய்வாயாக! ரணே-யுத்தத்தில், ஸபத்னான்-எதிரிகளை, ஜேதாஸி-வெல்வாயாக!

### கருத்துரை

என்னால் (இதற்கு முன்பே) கொல்லப்பட்ட துரோணரை, பீஷ்மரை, கர்ணனை, ஜயத்ரதனை, அவ்வாறே இதர யுத்த வீரர்களையும் நீ கொல்வாயாக! பயப்படாதே! யுத்தம் செய்க! எதிரிகளை வெல்வாயாக!

**விளக்கம்**

'மாவ்யதிஷ்டாஹ்' - பயப்படாதே இது அனைவருக்கும் சொல்லப்பட்ட உபதேசம். ஸர்வேசுவரனை சரணடைந்து தன் செயலை, தர்மத்தையொட்டி செய்து வருபவனுக்கு பயம் எதற்கு? எனவே தான் பகவான் அர்ஜுனனுக்கு அவனது செயல்களை, அவனது யுத்த தர்மத்தை, தைரியத்துடனும், பயமின்றியும், செய்யுமாறு போதிக்கிறார். 'மாவ்யதிஷ்டாஹ்' என்ற இந்த பகவத் வாக்கியத்தினை அனைவரும் தம் தினசரி செயல்களில் நினைவிற் கொண்டு செய்துவரல் வேண்டும். வாழ்க்கையில் பலவிதமான மனச்சிக்கல்களை இடைஞ்சல்களை மக்கள் எதிர்கொள்ள வேண்டியிருக்கும். அப்போது இவ்வாக்கியத்தினை மனதில் எண்ணிப் பார்த்து தைரியத்தினைப் பெற வேண்டும். அர்ஜுனனைப் போன்று அனைத்தையும் இறை அர்ப்பணம் செய்து, அவனைத் தூய்மையான இதயத்துடன் பூசித்து காரியங்களைச் செய்து வந்தால் பயப்பட வேண்டிய அவசியமேயில்லை. இங்கு 'யுத்யஸ்வ' (யுத்தத்தினைச் செய்வாயாக) என்ற பதம் அவரவர் கடமையைக் குறிக்கின்றது. 'ஜேதாஸி'- (வெல்லக்கடவாய்) என்ற சொல் அதன் பலனை நிரூபிக்கிறது. அதாவது இவ்வாறு இறைவனைச் சரணடைந்து தம் செயல்களை நிறைவேற்றுபவன் உத்தம பலனைத் தவறாது அடைவான். வெற்றியடைவது திண்ணம் என்பது பொருள். காரிய சித்திக்கு இதுவே வழி. எங்கு ஸ்ரீ கிருஷ்ணர் இருக்கிறாரோ (இறைவனின் அருள்) அங்கு வெற்றி நிச்சயம்.

ஸ்ரீ கிருஷ்ணர் கீதையை போதிக்கும் சமயத்தில் பீஷ்மர், துரோணர், கர்ணன் முதலானவர் உயிருடன் வாழ்ந்து கொண்டிருந்தனர். ஆயின் அவர்கள் மரணம் அடைந்ததாக இங்கு கிருஷ்ணர் சொல்கிறார். இதற்கான காரணம் உண்டு. இது இதற்கு முன்பே 27 ஆவது சுலோக வாக்கியத்தில் சொல்லப்பட்டுள்ளது. பகவான் காலாதீதின். அவன் முன்பு இறந்தகாலம், எதிர்காலம், நிகழ்காலம் ஆகிய பேதங்கள் இல்லை. எனவேதான் எதிர்காலத்தில் நிகழக்கூடியவற்றை (பீஷ்மர் முதலானோரின் மரணத்தினை) நிகழ்காலத்திலேயே கூறுகிறார். இதனால் மனிதனக்கு ஒரு முக்கிய போதனை கிடைக்கிறது. அது எதுவெனின், 'இங்கு நாம் காணும் பந்துமித்திரர்கள், செல்வம் முதலானவை எதிர்காலத்தில் அழிக்கூடியவையே' என்று தெளிவாகத் தெரிகின்றது. வரப்போவதை முன்கூட்டியே இதயத்தில் சித்திரித்துக் கொண்டு, வைராக்கியம் முதலானவற்றை இப்போதிருந்தே பயிற்சி செய்து வருதல் வேண்டும். புத்தர் அவ்வாறே மரணத்தைக்

குறித்தும், தேகத்தின் நிலைமையைக் குறித்தும் முன்பாகவே நன்கு சிந்தித்து அவ்வெண்ணத்தால் முக்தியடைந்தார்.

## முன்னுரை

*பகவானின் இவ்வாக்கியத்தைக் கேட்டு அர்ஜுனன் என்ன செய்தான் என்பதை இனி சஞ்சயன் கூறுகிறான்.*

## ஸஞ்ஜய உவாச

*ஏதச் ச்ருத்வா வசனம் கேசவஸ்ய க்ருதாஞ்ஜலிர் வேபமானஹ கீரீடி!*
*நமஸ்க்ருத்வா பூய ஏவாஹ க்ருஷ்ணம் ஸகத்கதம் பீதபீதஹ ப்ரணம்ய!! - (35)*

## ஸஞ்சயன் சொன்னது

### சொற்பொருள்

*கிரீடி-அர்ஜுனன், கேசவஸ்ய-ஸ்ரீ கிருஷ்ணனின், ஏதத்-இந்த, வசனம்-வாக்கியத்தினை, ச்ருத்வா-கேட்டு, வேபமானஹ-நடுநடுங்கியவனாய், க்ருதாஞ்சலிஹ-கை கூப்பியவனாய், க்ருஷ்ணம்-கிருஷ்ணரை, நமஸ்க்ருத்தவா-வணங்கி, பீத பீதஹ-அஞ்சியவனாய், ப்ரணம்ய-நன்கு வணங்கி, ஸகத் கதம்-வாய் குளறி, பூயஹ்ஏவ-திரும்பவும், அஹ-(இவ்வாறு) கூறினான்.*

### கருத்துரை

*ஸஞ்சயன் சொன்னான் - அர்ஜுனன் ஸ்ரீ கிருஷ்ண மூர்த்தியின் இவ்வாக்கியங்களைக் கேட்டு நடுநடுங்கியவனாய் கரம் கூப்பி கிருஷ்ணரை வணங்கி மிகவும் அஞ்சியவனாய் வாய்குளறி திரும்பவும் இவ்வாறு கூறினான்.*

### விளக்கம்

*(1) கை கூப்புதல் (2) வணங்குதல் (3) நன்கு வணங்கி உரையாடுதல் முதலான கிரியைகள் அர்ஜுனனின் பரிபூர்ண பக்தியினை, பணிவினைக் காட்டுகிறது.*

## முன்னுரை

*அதன்பின் அர்ஜுனன் பகவானை எவ்வாறு போற்றிப் புகழ்ந்தான் என்பதை வரும் சுலோகத்தில் கூறுகிறார்.*

### அர்ஜுனோ உவாச

*ஸ்தானே ஹ்ருஷிகேச தவ ப்ரகீர்த்யா ஜகத் ப்ரஹ்ருஷ்யத் யனுரஜ்யதேச!*
*ரக்ஷாம்ஸி பீதானி திசோத்ரவந்தி ஸர்வே நமஸ்யந்தி ச ஸித்த ஸங்காஹ்!! - (36)*

### சொற்பொருள்

*ஹ்ருஷிகேச-கிருஷ்ணா! தேவ-உம்முடைய, ப்ரகீர்த்யா-நாமத்தினைச் சொல்வதால், மகிமையை நன்கு புகழ்வதால், ஜகத்-உலகம், ப்ரஹ்ருஷ்யதி-மிகுந்தமகிழ்ச்சியடைகிறது, அனுரஜ்யதோ-மிகுந்த அன்பினை அடைகிறது. ரக்ஷாம்ஸி-ராட்சசர்கள், பீதானி-பயமடைந்தவர்களாய், திசஹ-திசைகளில், த்ரவந்தி-ஓடுகிறார்கள், ஸர்வே சித்தஸங்கஹ்-சித்தர்கள் குழாமெல்லாம், நமஸ் யந்திச-நமஸ்கரிக்கின்றனர், (ஏதானி-இவையனைத்தையும்) ஸ்தானே-(உன் மகிமைக்கு) ஏற்றதேயாகும்.*

### கருத்துரை

*அர்ஜுனன் சொன்னான் - ஸ்ரீ கிருஷ்ணா! உமது நாமத்தை உச்சரிப்பதாலும், உன் மகிமையை நன்கு புகழ்வதாலும் உலகம் மிகுந்த மகிழ்ச்சியடைகிறது. மிக்க ஆனந்தத்தையடைகிறது. உன்னைக் கண்டு அரக்கர்கள் பயமடைந்து ஓடுகின்றனர். சித்தர்கள் குழாமெல்லாம் உம்மைத் தொழுகின்றன. இவையனைத்தும் நினது மகிமைக்கு ஏற்றதேயாகும்.*

### விளக்கம்

*'தவ ப்ரகீர்த்யா ஜகத்ப்ரஹ்ருஷ்யதீ' - பகவன் நாம சங்கீர்த்தினத்தினாலும், அவனது மகிமையைக் கதைகளாகக் கேட்டும் மக்கள் மிக்க மகிழ்ச்சியடைகிறார்கள். என அர்ஜுனன் கூறுகிறான். 'ஹ்ருஷ்யதி' எனாது 'ப்ரஹ்ருஷ்யதி' என்பதால் அத்தகையோர் மிக்க ஆனந்தத்தையடைகின்றனர் என்பதும் பொருள். இதனால் மிக்க ஆனந்தத்திற்கு, துக்கமின்மைக்கு பகவன் நாமத்தை உச்சரித்தல், அவனைப் பற்றிய விசாரணை இவையே மார்க்கமென்பது வெளியாகின்றது.*

*'ரக்ஷாம்ஸி பீதானி திசோத்ரவந்தி' - இறைவனது தரிசனத்தால் அரக்கர்கள் பயமடைகின்றனர் எனப்பட்டது. அதாவது எங்கு இறைவனிருக்கிறானோ, எங்கு தூய்மை காணப்படுகிறதோ, எங்கு நற்குணங்கள் நிறைந்திருக்குமோ அங்கெல்லாம் பூத, பிரேத, பைசாசம், அரக்கர்கள் அல்லாது காமம் முதலான கெட்ட நடவடிக்கைகள் இருக்கவியலாது என்பது பொருள். எனவே ஜீவர்கள் தம் இதயத்தில்*

தேவதேவனான பரமாத்மாவை பக்தி முதலியவற்றால் பிரதிட்டை செய்துவிட்டால், அஞ்ஞானம், செருக்கு, விருப்பு வெறுப்பு, காமக் குரோதங்கள் ஆகிய இவை அங்கு இருப்பிடம் இன்றி வெளியே ஓடிவிடும். அரக்கர்கள் வெளியில் மட்டுமின்றி நம் மனத்துள்ளும் இருப்பர். அவையே அவ்வசுர குணங்கள். இறைதியானத்தினாலும் இறை சங்கீர்த்தனத்தினாலும் பரமாத்மா எப்போது நம்மிடத்தில் குடியிருக்கச் செய்கிறோமோ, அப்போது அசுர குணங்கள் உடனேயே ஓடிவிடும். இவ்வுண்மையைத் தெரிவிப்பதற்காகவே அர்ஜுனன் மேற்சொன்ன வகையில் இறைவனைத் துதிக்கின்றான்.

இச்சுலோகத்தில் பீஜாக்ஷரங்கள் அதிகமாக இருக்கின்றனயென்றும், இதனை ஜபிப்பவர்க்கு பூத, பிரேத, பிசாசுகளின் துன்பம் இராது என்றும், பெரியோர்கள் கூறுவர்.

*கஸ்மாச்ச தே ந நமேரன் மஹாத்மன் கரீயஸே ப்ரஹ்மணோ அப்யாதி கர்த்ரே!*
*அனந்த தேவேச ஜகந்நிவாஸ த்வ மக்ஷரம் ஸத ஸத்தத்பரம் யத்!! - (37)*

சொற்பொருள்

மஹாத்மன்-மஹாத்மாவே! அனந்தஹ்-அனந்த ரூபா! (அல்லது அந்தமில்லாதவர்) தேவேச-தேவதேவா! ஜகந்நிவாஸ-ஜகத்துக்கு இருப்பிடமானவரே! ஸத்-சத் பொருளிலும் (ஸ்தூல ஜகத்திலும்), அஸத்ச-அஸத் பொருளிலும் (சூட்சும ஜகத்திலும்), யத்-எது இருக்கின்றதோ, தத்பம்-அவ்விரண்டிற்கும் அப்பாற்பட்ட, அக்ஷரம்-அழிவற்ற பரபிரம்மம், த்வம் (அஸி)-நீயாகவே இருக்கிறாய், பிரஹ்மணஹ் அபி-பிரம்மத்திற்கும், ஆதிகர்த்ரே-ஆதிகாரணன் (எனவே!), கரீயஸே-மிகவும் மேலானவர் (ஆன) தே-உன்னை, கஸ்மாத்-ஏன், ந நமேரன்-வணங்கமாட்டார்கள்.

கருத்துரை

மஹாத்மாவே! அந்தமில்லாதவரே! தேவ தேவா! ஜகந்நிவாஸ! ஸத், அஸத் இரண்டிற்கும் அப்பாற்பட்ட அழிவற்ற பரபிரம்மாக நீயேயுள்ளாய். பிரம்மதேவனுக்கும் ஆதிகாரணன் நீயே யாதலால் உன்னை மேலோர் ஏன் வணங்க மாட்டார்கள்? (அவர்களின் வணக்கத்திற்கு நீ ஏற்றவனே என்பது பொருள்).

**விளக்கம்**

'ஸதஸத்தத்பரம்'-பரமாத்மா ஸத், அஸத்திற்கு அப்பாற்றபட்டவன். ஸத் என்றால்-தூலப் பொருள் (அல்லது தூல உலகம்) அசத் என்றால் சூட்சுமப் பொருள். அவ்விரண்டிற்கும் வேறாக பரமாத்மாவை வர்ணிக்கிறான்: 'ஸத்' என்றால் மனமென்றும் 'அஸத்' என்றால் தேகமென்றும் சொல்லலாம். ஸ்தூலமான பௌதிக சரீரம், சூட்சுமமான மனவுலகம் இரண்டும் ஆன்மீகப் பார்வையில் மாயையேயாகும். பரமாத்மா ஒருவனே உண்மைப் பொருள், எனவேதான் மறையக்கூடிய காட்சிப் பொருள்களாலான உலகைவிட பரமாத்மா வேறானவன் என்று இங்குச் சொல்லப்பட்டது.

**வினா :** பரமாத்மா எத்தகையவன்?

**விடை :** (1) மிகச் சிறந்தவன் (2) பிரம்மதேவனுக்கும் ஆதிகாரணமானவன் (3) அனந்தன் (4) தேவதேவன் (5) உலகின் இருப்பிடமானவன் (6) அழிவற்றவன் (7) சத் சுகத்திற்கு அப்பாற்பட்டவன்.

*த்வமாதி தேவஹ புருஷஹ புராண ஸ்த்வமஸ்ய விச்வஸ்ய பரம் நிதானம்!*
*வேத்தாஸி வேத்யம் ச பரம் சதாம த்வயா ததம் விச்வ மனந்த ரூப!! - (38)*

**சொற்பொருள்**

அனந்த ரூப-எண்ணிறந்த வடிவுடையோனே! கிருஷ்ணா! த்வம்-நீ, ஆதிதேவ-முதல் தெய்வம், புராண புருஷஹ-பழமைக்கும் பழமையானவன் (சநாதனன்)., அஸஅய விஸ்வஸ்ய-இவ்வுலகிற்கு, பரம்-மேலான, நிதானம்-ஆதாரம் (இருப்பிடம்), வேத்தா அனைத்தும் அறிபவனும், வேத்யம்ச-அறியப்படு பொருளுமானவன், பரம்தாமச-மிகச் சிறந்த, நிலையமுமாவீர், த்வம்-நீர், அஸி-இருக்கின்றீர். த்வயா-உம்மால், விஸ்வம்-இவ்வுலகமனைத்தும், ததம்-வியாபிக்கப்பட்டுள்ளது.

**கருத்துரை**

எண்ணிறந்த வடிவுடைய ஸ்ரீ கிருஷ்ணா! நீ ஆதிதேவன், பழமைக்கும் பழமையான புருஷன், இவ்வுலகிற்கு மிகச் சிறந்த ஆதாரமுமாகவும், எல்லாம் அறிந்தவனாகவும், அறியப்படும் பொருளாகவும், மிகவும் மேன்மையான நிலையாகவும் நீ இருக்கிறாய். உன்னால்தான் இவ்வுலகமனைத்தும் வியாபிக்கப்பட்டுள்ளது.

**வினா :** பரமாத்மா இன்னும் எவ்வெவ் இலட்சணங்கள் பொருந்தியவன்?

**விடை : (1) ஆதிதேவன் (2) பழமையான புருஷன் (3) உலகிற்கு இருப்பிடமாயுள்ளவன் (4) எல்லாம் அறிந்தவன் (5) அறியப்படும் பொருள் (6) மிக மேன்மையானவன் (7) உலகமனைத்தும் வியாபித் துள்ளான் (8) பல வடிவங்களையுடையவன்.**

*வாயுர்யமோ அக்னிர் வருணஹ சசாங்கஹ ப்ரஜாபதிஸ்த்வம் ப்ரபிதா மஹஸ்ச!*
*நமோ நமஸ்தே அஸ்து ஸஹஸ்ரக்ருத்வஹ புனஸ்ச பூயோஅபி நமோ நமஸ்தே!! - (39)*

## சொற்பொருள்

வாயுஹு-வாயுவும், யமஷ்-யமன், அக்னிஹி-அக்கினி, வருணஹ-வருணன், சசாங்கஹ-சந்திரன், ப்ரஜாபதிஹி-பிரஜாபதி, (பிரம்ம தேவன்), ப்ரபிதாமஹஹ்ச-பிரம்மதேவனுக்குத் தந்தையாகவும், த்வம் (அஸி)-நீயாகவே இருக்கிறன்றாய், தே-உனக்கு ஸஹஸ்ர க்ருத்வா-ஆயிரம் முறை, நமஷ நமஹ-திரும்பத் திரும்ப நமஸ்காரம், அஸ்து-இருக்கட்டும், தே-உனக்கு, நமஹ-நமஸ்காரம், பூயஹ அபி-திரும்பவும், நமவி-நமஸ்காரம்.

## கருத்துரை

வாயு, யமன், அக்னி, வருணன், சந்திரன், பிரஜாபதி, பிராஜபதியின் தந்தை ஆகிய எல்லாம் ஆனவராக நீர் இருக்கிறீர். உமக்குப் பன்முறை நமஸ்காரம். ஆயிரம் முறையும் அதற்கு மேலும் நமஸ்காரம்.

## விளக்கம்

அர்ஜுனனுக்கு பகவானின் மீது உள்ள மிகையான பக்தி ஒவ்வொரு சாதகனுக்கும் இருத்தல் வேண்டும்.

*நமஹ புரஸ்தாதத ப்ருஷ்ட தஸ்தே நமோஅஸ்து தே ஸர்வத வெ ஸர்வ*
*அனந்த வீர்யாமித விக்ரமஸ்த்வம் ஸர்வம் ஸமாப்னோஷி ததோ அஸி ஸர்வஹ!! - (40)*

## சொற்பொருள்

ஸர்வ-ஸர்வ சொரூபமான ஓ கிருஷ்ணா! புரஸ்தாத்-முன்னும், ப்ருஷ்டதஹ-பின்னும், தே-உமக்கு, நமஹ-நமஸ்காரம், அத-இன்றும், ஸர்வத ஏவ-எல்லாப் பக்கங்களிலும் நமஹ-நமஸ்காரம், அஸ்து-இருப்பதாக! அனந்தவீர்ய அமதி விக்ரமஹ-அளவில்லாத வீரியத்தையும் பரந்த பராக்கிரமத்தையும் உடையவனான, த்வம்-நீ, ஸர்வம்-எங்கு அனைத்திலும், ஸமாப்னோஷி-நன்கு வியாபித்

இருக்கிறீர், ததஹ-அதனால், ஸர்வஹ-ஸர்வ சொரூபமாகவும், அஸி-இருக்கிறீர்.

**கருத்துரை**

*எல்லாமானவரே! கிருஷ்ணா! உமக்கு முன்னும், பின்னும், எல்லாப் பக்கங்களிலும் நமஸ்காரம், அளவற்ற வீரியத்தையும் எண்ணிறந்த பராக்கிரமத்தையும் உடைய நீர் அனைத்திலும் எங்கும் நன்கு வியாபித்திருக்கிறீர். ஆதலால் நீரே யாவுமாய் இருக்கிறீர்.*

**விளக்கம்**

அர்ஜுனன் தன் இதயத்தில் பொங்கிப் பெருகும் பக்தி பாவத்தினை இங்ஙனம் வெளிப்படுத்துகிறான்.

'அனந்த வீர்யாமிதவிக்ரமஹ'-பகவான் அளவற்ற சக்தி, திறமையுடையவன். ஒரு சின்ன விசிறியால் வீசினால் சிறிதளவே காற்றுவரும். ஒரு முறை பெரிய சூறாவளி வீசினால் பெரிய அளவில் காற்று உண்டாகும். முதலது மனித சக்தி, இரண்டாவது தெய்வ சக்தி. ஒரு விளக்கை ஏற்றினால் சிறதளவு வெளிச்சம் கிடைக்கும். சூரியன் உதித்தால் உலகமனைத்தும் ஒளி மிகுந்ததாக ஆகிவிடும். முதலது மனித சக்தி, இரண்டாவது தெய்வ சக்தி ஒரு சிறிய குடத்திலோ, ஏற்றத்திலோ, இயந்திரத்திலோ நீர் இறைத்தால் சிறிதளவு நீரே கிடைக்கும். ஒரு பெரிய மழை பெய்தால் வெள்ளம் பெருக்கெடுத்துப் பலவாயிரம் ஏக்கர் நிலங்கள் நீர் பெறும். முதலாவது மனித சக்தி. இரண்டாவது தெய்வசக்தி. எனவே தான் அர்ஜுனன் பகவானை மிகுந்த வீரியத்தையும், எண்ணிறந்த பராக்கிரமத்தையும் போற்றி 'அனந்த வீர்யன் அபரிமித விக்ரமன்' எனவழைக்கிறான். எனவே மனிதன் தன் அற்பசக்தியைக் கண்டு பெருமை கொள்ளாமல், சர்வசக்தி வாய்ந்த பரமாத்மாவினிடத்தில் மாறாத பக்தி கொள்ளுதல் வேண்டும்.

**வினா :** பரமாத்மா இன்னும் எத்தகையோன்?

**விடை :** *(1) எண்ணிறந்த சக்தி படைத்தவன் (2) மிக்க பராக்ரமம் உடையவன் (3) எங்கும் வியாபித்துள்ளான் (4) ஸர்வ சொரூபன்.*

*ஸகேதி மத்வா ப்ரஸபம் யதுக்தம் ஹே க்ருஷ்ண ஹே யாதவ ஹே ஸகேதி!*
*அஜானதா மஹிமானம் தவேதம் மயா ப்ரமாதாத் ப்ரணயேன வாபி!! - (41)*

*யச்சாவ ஹாஸார்த்த மஸத் க்ருதோ அஸி விஹாரசய்யாஸன போஜனேஷு¬ஹ¬!*
*ஏகோ அதவாப்யச்யுத தத்! ஸமக்ஷம் தத்க்ஷாமயே த்வாமஹப்ரமேயம்!! - (42)*

## சொற்பொருள்

*அச்யுத-அழிவற்ற ஸ்ரீ கிருஷ்ணா! தவ-உம்முடைய, இதம்-இந்த, மஹிமானம்-மகிமையை, அஜானதா-அறியாத, மயா-என்னால், ப்ரமாதாத்-அஞ்ஞானத்தில் (கவனமின்மையாலும்), ப்ர ணயேனவா அபி-நெருக்கத்தினாலும், ஸகா இதி-தோழன் என்று, மத்வா-எண்ணி, ஹே கிருஷ்ணா-கிருஷ்ணா! ஹேயாதவ-யாதவா! ஹேஸகே-ஏ தோழா, இதி-என்று ப்ரஸபம்-அலட்சியமான (பணி வின்றி), யத்-எது, உக்தம்-சொல்லப்பட்டதோ, விஹாரசஸ்யாஸி நபோஜனேஷு¬-விளையாட்டு, படுக்கை, அமர்ந்திருத்தல், உணவ ருந்துதல் இவற்றுக்கிடையில், ஏகஹ்-தனியாக இருக்கும்போது, அதவா-அல்லது, தத் ஸமக்ஷம் அபி-ஏனையோரின் முன்பும், அவ ஹாஸார்த்தாம்-பரிகாசத்திற்காக, அஸத் கருதஹ அஸி-அவமதிக்கப்பட்டிருப்பவை, எவையோ, தத்-அவற்றை (அத்த கைய தவறுகளை), அப்ரமேயம்-அளப்பதற்கரியவனான, த்வாம்-உம்மை, க்ஷாமயே-மன்னிக்க வேண்டுகிறேன்.*

## கருத்துரை

*அழிவற்ற கிருஷ்ணா! உனது இம்மகிமையை உணராத நான் தறவாக, நெருக்கத்தினால், தோழனாகக் கருதி 'ஓ கிருஷ்ணா' ஏ யாதவா, ஏ தோழா! என்று அலட்சியமாகப் பணிவின்றி எது பகரப் பட்டதோ, மேலும், விளையாடிய போதும், படுத்திருந்தபோதும், அமர்ந்திருந்தபோதும், உணவருந்துகையிலும், தனித்தோ பிறர் எதி ரிலோ இருந்த போதும், ஏளனமாக எங்ஙனம் பரிகசிக்கப்பட்டீரோ, அதையெல்லாம் அளப்பிலோய் மன்னிக்க வேண்டுகிறேன்.*

## விளக்கம்

*தான் செய்த தவற்றிற்கு வருந்த மறுபடியும் அதனைச் செய்யாது இருப்பது அறிஞர்கள் இலட்சணம்.*

*பிதாஸி லோகஸ்ய சாசரஸ்ய த்வமஸ்ய பூஜ்யஸ்ச குருர்கரீயான்!*
*நத்வத் ஸமோ அஸ்த்யப் யதிகஹ குதோ அன்யோ லோகத்ரயே அப்யப்ரதி மப்ரபாவ!! - (43)*

**சொற்பொருள்**

*அப்ரதிம பிரபாவ-ஒப்பற்ற பெருமையுடையவரே! த்வம்-நீர், சராசஸ்ய-அசையும் அசைவற்ற, அஸ்ய லோகஸ்ய-இவ்வுலகத்தின், பிதா-தந்தை, அஸி-ஆகியுள்ளாய், ச-மேலும், பூஜ்ய-பூசிக்கத்தகுந்த, கரீயானகுருஹு-மிக்க மேன்மைபொருந்திய குருவாகவும், (அஸி-உள்ளாய்) லோகத்ரயே அபி-மூவ்வுலகிலும், தவத்ஸமஹ-உமக்குச் சமமானவர், ந அஸ்தி-இல்லை. அப்யதிக-உம்மிலும் மேலானவர், அன்யஹ-வேறொருவர், குதஹ-ஏது (எவ்வாறிருப்பர்)?*

**விளக்கம்**

*சராசரமனைத்திற்கும், எல்லா உயிர்களுக்கும், இறைவனே தந்தை, தாய், குரு, குருமார்கள் அனைவரிலும் மிக்க மேன்மையான குரு அவனே. எனவேதான் 'குருர்கரீமான்' எனப்பட்டது. அவன் ஒருவனே சத்வஸ்துவானதாய், ஏனையவையனைத்தும் அசத் வஸ்துவானதால் அவனுக்குச் சமமானவனே, அவனைவிட மிஞ்சியவனோ வேறொருவரும் இல்லையென்பதும் தெளிவாகிறது. எனவே அனைவரும் அவனையே சரணடைதல் வேண்டும்.*

*'கரீமான்' என்பதற்கு குருவிற்குச் சிறப்புச் சொல்லாகவன்றித் தனியாகக் கூட பொருள் சொல்ல இயலும் (கரீமான்-சிறந்தவன்).*

**வினா :** *பரமாத்மா எத்தகையோன்?*

**விடை :** *(1)சராசரவுலகமனைத்துக்கும் தந்தை (2) பூசிக்கத்தக்கவன் (3) உத்தம புருஷன் (4) மூவுலகிலும் ஒப்பற்ற பெருமையுடையவன் (5) அவனிற்கு ஒப்பானவனோ, அவனைவிட மேலானவனோ எவரும் இல்லை.*

**முன்னுரை**

இவ்வாறே பகவானை வேண்டி அதன்பின் அர்ஜுனன் சாஷ்டாங்கமாக வந்தனம் செய்து தன் குற்றங்களை மன்னித்தருளுமாறு வேண்டுகிறான்.

*44.தஸ்மாத் ப்ரணம்ய ப்ரணிதாய காயம் ப்ரஸாதயே த்வாமஹமீச மீட்யம்!*
*பிதேவ புத்ரஸ்ய ஸகேவஸக்யுஹு ப்ரியஹ ப்ரியா யார் ஹஸி தேவஸோடும் !! - (44)*

### சொற்பொருள்

தஸ்மாத்-ஆகையினால், காயம்-சரீரத்தை, ப்ரணிதாய-(பூமியின்) சாஷ்டாங்கமாக விழுந்து, ப்ரணம்ய-வணங்கி, ஈசம்-ஈசனை, ஈட்யம்-போற்றத்தக்கவனை, த்வாம்-உம்மை, ப்ரஸாதயே-அருள் புரிய வேண்டுகிறேன், புத்ரஸ்ய-புத்திரனுக்கு, பிதா இவா-தந்தையைப் போன்றும், ஸக்யுஹ்-தோழனுக்கு, ஸகா இவா-தோழனைப் போன்றும், ப்ரியஹ-காதலன் போன்றும், ஸோடும் -பொறுத்துக்கொள்ள, அவிஹஸி-தகுதியுடையவராகிறீர்.

### கருத்துரை

ஆதலால், தேவதேவா! சரீரத்தினை பூமியின் மீது சாஷ்டாங்க மாக வைத்து வணங்கி, போற்றத்தக்க ஈசனான உம்மை அருள்புரிய வேண்டுகின்றேன் தேவா! தனயனிடத்துத் தந்தை போன்றும், தோழனிடத்துத் தோழனைப் போன்றும், காதலியிடத்துக் காதலனைப் போன்றும் எனது பிழைகளை மன்னித்து அருள்வாயாக!

### விளக்கம்

'ப்ரணிதாய காயம்'-பெரியோர்களை எவ்வாறு வணங்க வேண்டுமென்பது சொல்லப்படுகின்றது. சரீரத்ினை பூமியில் நன்கு பதியுமாறு பக்தியுடன், பெரியோர்களை சாஷ்டாங்க வந்தனம் செய்தல் வேண்டுமென்பது அர்ஜுனனின் மூலம் உலகிற்குத் தெரிவிக்கப்படுகிறது. அத்தகைய செயல்களால் அகங்காரம், கர்வம் அடங்கும், செருக்கு அடங்கும். எனவேதான் இந்துமத சம்பிரதாயத்தின் படி சாஷ்டாங்க வந்தன முறை வைக்கப்பட்டுள்ளது. அதனால் பெரியோர்களின் அருளுக்கு அவர்கள் பாத்திரர்கள் ஆகின்றனர். அர்ஜுனன் அவ்வாறே வணங்கி இறைவனது அருளைப் பெற்றனன். விசுவாமித்திரரும் அவ்வாறே வணங்கி வசிஷ்டரால், 'பிரம்மரிஷி' என்ற பட்டத்தைப் பெற்றார். ஆயின் சரீரத்துடன் மனதிலும், வாக்கினாலும் பணிவு வெளிப்பட வேண்டும். அப்போதே திரிகரணத்தோடு பெரியோர்களையும், தெய்வத்தினையும் வணங்கியதாகும்.

தன் தவற்றிற்கு மன்னிப்புக் கோரி அர்ஜுனன் பணிவுடன் வேண்டுகிறான். தூய்மையான பக்தியுடன் செய்யப்படும் பிரார்த்தனைக்கு பகவான் தவறாது அருள் பாலிப்பார்.

வினா : பரமாத்மா எத்தகையோன்?

**விடை :** *(1) எல்லா உலகிற்கும் ஈசன் (2) அனைவராலும் போற்றத் தகுந்தவன்.*

**வினா :** இறைவனுக்கோ, பெரியோர்களுக்கோ எவ்வாறு வணங்க வேண்டும்?

**விடை :** *தூய்மையான பக்தியுடன் அவர்களது பாதங்களில் சாஷ்டாங்கமாக விழுந்து வணங்க வேண்டும்.*

**முன்னுரை**

விசுவரூபத்தைக் கண்டு பயந்து அர்ஜுனன் திரும்பவும் பழைய உருவினைக் காட்டுமாறு பகவானை வேண்டுகிறான்.

*அத்ருஷ்டபூர்வம் ஹ்ருஷிதோ அஸ்மி த்ருஷ்ட்வா பயேன சப்ரவ்யதிதம் மனோமே!*
*ததேவ மே தர்சய தேவரூபம் ப்ரஸீத தேவேச ஜகந்நிவாஸ!! - (45)*

**சொற்பொருள்**

அத்ருஷ்ட பூர்வம்-முன்பு பார்க்காத, இந்த விஸ்வரூபத்தினை, த்ருஷ்ட்வா-பார்த்து, ஹருஹித-மகிழ்ந்தவனாய், அஸ்மி-இருக்கிறேன், மனஹ்-மனமானது, பயனே-பயத்தினால், ப்ரவ்யதித தம்ச-நடுங்கிக் கொண்டிருக்கிறது, தேவ-தேவா! தத்ரூபம் ஏவ-முன்பு இருந்த அந்த உருவத்தினையே, மே-எனக்கு, தர்சய-காட்டுக! தேவேச-தேவதேவா! ஜகந்நிவாஸ-ஜகத்துக்கெல்லாம் இருப்பிட மானவரே! ப்ரஸீத-அருள் புரிவீராக!

**கருத்துரை**

இதுவரை எப்போதும் காணாத விசுவரூபத்தினைக் கண்டு ஆனந்தமடைந்தேன். ஆயின் பயத்தினால் என் மனம் நடுங்குகிறது. எனவே தேவா! முன்பிருந்த (அழகிய) உருவினைக் காட்டுக! தேவ தேவா ஜகத்துக்கெல்லாம் இருப்பிடமானவனே அருள்புரிவிராக!

**விளக்கம்**

அர்ஜுனனுக்கு அபூர்வமான விசுவரூபத்தினைக் காட்டியதால் மகிழ்ச்சியும், அதில் பயங்கரக் காட்சிகளைக் கண்டு பயமும், பீதியும் ஏற்பட்டன. அப்பயம் விலக அழகிய பழைய உருவினைக் காட்டுமாறு பகவானை வேண்டுகிறான்.

'ப்ரஸ்த தேவசஜகந்நிலை'-இவ்வாக்கியத்தினையே இவ்வத்தியாயத்தின் 25 ஆவது சுலோகத்திலும் அர்ஜுனன் கூறுகிறான். 'தேவ தேவா' ஜகத்துக்கெல்லாம் இருப்பிடமானவனே! கருணை செய்வாய்! அருள் புரிவாய்! என்பது அதன் பொருள்.

'தேவ! ரூபம்' என்ற இரண்டு சொற்களையும் சேர்த்து 'தேவரூபம்-நான்கு புஜங்களுடன்கூடிய விஷ்ணுரூபத்தினைக்காட்டுவாய்!- என்று சிலர் பொருள் கூறுகின்றனர்.

## முன்னுரை

தான் காணக்கருதிய அழகிய உருவினை அர்ஜுனன் வர்ணிக்கிறான்.

*கிரீடினம் கதினம் சக்ரஹஸ்த மிச்சாமி த்வாம் த்ரஷ்டு மஹம் ததைவ!*
*தேனைவ ரூபேண சதுர்புஜேன ஸஹஸ்ர பாஹோ பவ விச்வமூர்த்தே!! - (46)*

## சொற்பொருள்

அஹம்-நான், த்வம்-உம்மை, ததா ஏவ-முன்பு போலவே, கிரீடினம்-கிரீடம் தரித்தவனாய், கதினம்-கதையை ஏந்தியவனாய், சக்ர ஹஸ்தம்-சக்கரங்ளையுடைய கைகளையுடையவனாகவும், த்ரஷ்டும்-பார்ப்பதற்கு, இச்சாமி-விரும்புகிறேன், ஸஹஸ்ர பாஹோ-பல உருவங்களை உடையவனே! விஸ்வ மூர்த்தே-எல்லா உலகினையும் உருவமாக உடையவரே! தேன-அந்த, சதுர்புஜனே-நான்கு கைகளையுடையவனே! விசுவமூர்த்தியே! நான்கு கைகளையுடை அந்த வடிவினையே ஏற்பீராக!

## விளக்கம்

இச்சுலோகத்தில் ஒரு கேள்வி எழுகிறது. (தேனைவ- அந்நான்கு கைகளுடனேயே!-தோன்றுவாயாக - என்று அர்ஜுனன் கேட்பதால் இதற்கு முன்பே அர்ஜுனன் அவ்வுருவைக் கண்டதாக ஆகியது. ஆயின் அவன் எப்போது பார்த்தான்? இவ்வத்தியாயத்தின் 41, 42 ஆவது சுலோகங்களில் அர்ஜுனன் பகவானிடம், 'உன்னைச் சாதாரண தோழனாகக் கருதி, பரிகாசம் செய்து சொல்லிய வாக்கியங்களை மன்னிப்பாயாக! என்று வேண்டிக் கொள்வதாலும், பகவான் நான்கு கைகளுடன் எப்போதாவது தோன்றியிருந்தால் அவரைப் பரிகசித்து சாதாரண மனிதனைப் போல எண்ணியிருந்திருக்க மாட்டான் அர்ஜுனன் என்பதாலும், நான்கு கைகளுடன் கூடிய உருவம்

அவனறியாததேயாகும் என்பது தெளிவாகிறது. இவ்வாறு ஒன்றுக் கொன்று மாறாகவுள்ள இவ்வாக்கியங்களை ஒருசேரப் பொருள் காண்பது எங்ஙனம்? கீழ்க்கண்டவாறு அதற்கு விடைகாணவியலும்.

*(1) விஸ்வரூபத்தினைக் காண்பிப்பதற்கு முன் ஆரம்பத்தில் பகவான் மகிழ்ச்சியுடன்தான் நான்கு கைகளுடன் கூடிய உருவினைக் காட்டியிருக்கக்கூடும்.*

*(2) தேவகி தேவியின் கர்ப்பத்தில் பகவான் அவதரித்தபோது சங்க சக்கர சின்னங்கள் இருந்தன, அவைமிக்க ஒளியுடன் கூடியவை என அர்ஜுனன் கேட்டிருக்கக்கூடும்.*

*(3) விஸ்வரூப தரிசனத்தால் ஸ்ரீ கிருஷ்ணர் சாதாரணமானவரல்லர், சாட்சாத் விஷ்ணுவே என்றும் அறிந்திருந்ததால் வைகுண்டத்தில் உள்ள சின்னங்களுடனேயே அவன் எப்போதும் ஒளியுடன் விளங்குவான் என்றறிந்து அர்ஜுனன் இங்ஙனம் கேட்டிருத்தல் கூடும்.*

### முன்னுரை

*அர்ஜுனனின் இந்த வேண்டுகோளைக் கேட்டு பகவான்தான் சாதாரண உருவத்துடன் மறுபடியும் தோன்றி, விஸ்வரூபத்தின் மகிமையை முதலில் கூறுகிறார்.*

### ஸ்ரீபகவானுவாச

*மயா ப்ரஸன்னேன தவார்ஜுனேதம் ரூபம் பரம் தர்சித்மாத்ம யோகாத்!*
*தேஜோமயம் விச்வ மனந்த மாத்யம் யன்மே த்வதன்யேன நத்ருஷ்ட பூர்வம் !! - (47)*

### சொற்பொருள்

*பகவான் சொன்னது - அர்ஜுனா! - தேஜோமயம்-ஒளி நிறைந்ததும், விஸ்வம்-இவ்வுலக வடிவுடையதும், அனந்தம்-முடிவற்றதும், ஆத்யம்-முழுமையானதும், த்வத் அன்யேன-உன்னைத் தவிர வேறொருவரால், ந த்ருஷ்ட பூர்வம்-இதுவரை எப்போதும் காண்பிக்கப்படாததும், ஆன, மே-என்னுடைய, யத் இதம் பரம் ரூபம்-இந்த மேலான விஸ்வரூபம், (அத்ரக்ஷிஹ்-கண்டாயோ), தத்-அந்த உருவம், ப்ரஸன்னேன மயா-அருள்கனிந்த என்னால், தவ-உனக்கு, ஆத்ம யோகாத்-என்று யோக சக்தியினால், தர்ஸிதம்-காண்பிக்கப்பட்டது.*

கருத்துரை

அர்ஜுனா! ஒளிபொருந்தியதும், இவ்வுலக வடிவானதும், முடிவற்றதும், முழுமுதலானதும், உன்னைத் தவிர வேறொருவரால் இதுவரை எவரும் பார்க்காததும், ஆன இந்த மேலான விஸ்வரூபமானது, அருள் மிகுந்த என்னுடைய யோக சக்தியினால் உனக்குக் காண்பிக்கப்பட்டது.

விளக்கம்

'மயா ப்ரஸன்னேன' - என்பதால் மாறாத பக்தியுடையவரிடத்து இறைவன் அருள் காட்டுவான் என்பது தெளிவாகிறது.

வினா : பகவான் எப்படிப்பட்டவர்?

விடை : (1) ஒளிமயமானவன் (2) உலகமனைத்தும் வியாபித்திருப்பவன் (3) எண்ணிறந்த வடிவுடையோன் (4) முழு முதலானவன்.

*ந வேத யக்ஞாத்ய யனைர் நதானைர் நசக்ரியாபிர் ந தபோ பிருக்ரைஹ!*
*ஏவம் ரூபஹ சக்ய அஹம் ந்ருலோகே த்ரஷ்டும் த்வதன்யேன குருப்ரவீர!! - (48)*

சொற்பொருள்

குருப்ரவீர-குரு குலத்துச் சிறந்தவனான ஏ அர்ஜுனா! ஏவம் ரூபஹ-இத்தகைய உருவத்தினை உடைய, அஹம்-நான், ந்ருலோக-மனிதர்கள் உலகத்தில், த்வதேன்யேன-உன்னைத் தவிர வேறெவராலும், த்ருஷ்டும்-பார்ப்பதற்கு, நசக்யஹ-சாத்தியமில்லை, தானை-தானங்களாலும், ந-பார்ப்பதற்கு சாத்தியப்படுபவனல்லன், கிரியா பிஹி-(அக்னிஹோத்ரம் முதலான வேதத் கிரியைகளினாலும், ந-பார்ப்பதற்கு இயலாதவன், உக்ரோஹதபோபி-குரூரத் தபத்தினாலும், ந-பார்ப்தற்கு இயலாதவன்.

கருத்துரை

குருகுலத்துப் பெருவீரா! மனிதவுலகில் உன்னைத் தவிர வேறு யாராலும், வேதம் ஓதி அறிவதாலும், யக்ஞத்தாலும் தானங்களாலும், கிரியைகளாலும், உக்கிரத் தவங்களாலும் நான் இவ்வடிவத்துடன் காணக்கூடியவன் அல்லன்.

**விளக்கம்**

இங்குத் தெரிவிக்கப்பட்ட வேத அத்யயனம், யக்ஞங்கள் முதலியவற்றால் பகவானை விஸ்வரூபத்தினைக் காணவியலாது என்று கூறியதால் அவையனைத்தும் செய்யத் தகுந்தவையல்ல என்பது பொருளல்ல. அக்கிரிய்யகளனைத்தோடும் பக்தியுடன் செய்தால் அதிகமான பலன் கிட்டும் என்று தெரிவிப்பதற்கேயாகும். வயலை உழுது விதைத்தாலும் நீரில்லாவிடில் பலன் கிட்டாது போகுமல்லவா? அவ்வாறே இக்கிரியைகளும்.

*மாதே வ்யதா மா ச விமூட பாவோ த்ருஷ்ட்வா ரூபம் கோர மீத்ருங்மமேதம்!*
*வ்யபேத பீஹ் ப்ரீதமனாஹ் புனஸ்த்வம் ததவே மேரூபமிதம் ப்ரபச்ய!! - (49)*

**சொற்பொருள்**

ஈத்ருக்-இப்படிப்பட்ட, கோரம்-பயங்கரமான, மம-என்னுடைய, இதம் ரூபம்-இந்த விஸ்வரூபமானது, த்ருஷ்ட்வா-பார்த்து, தே-உனக்கு, வ்யதா-பயம் (கலக்கம்), மா-வேண்டாம், விமூடயாவஹச-மயங்கிய மனநிலையும், மா-வேண்டாம், த்வம்-நீ, வ்யரூபதபீ-பயம் நீங்கியவனாய், ப்ரீதமனாஹ்-மனமகிழ்ச்சியுடையவனாய் ஆகி, மே-என்னுடைய, தத் இதம் ரூபம் ஏவ-(நீ வேண்டிய) எனது இந்தப் பழைய வடிவத்தையே, புனஹ-மறுபடியும், பரபக்ய-நன்கு பார்ப்பாயாக!

**கருத்துரை**

இத்தகைய பயங்கரமான என் விசுவரூபத்தினைக் கண்டு நீ பயமோ, மனக்கலக்கமோ அடைய வேண்டாம். நீ பயம் நீங்கியவனா, மன மகிழ்ச்சியுடன் எனது பழைய வடிவத்தினை மறுபடியும் நன்கு காண்பாயாக!

**முன்னுரை**

இவ்வாறு ஸ்ரீ கிருஷ்ணனர் என்ன செய்தார் என்பதை சஞ்சயன் கூறுகிறார்

**சஞ்சய உவாச-**

***இத்யர்ஜுனம் வாஸுதேவ ஸ்த தோக்த்வா ஸ்வகம்ரூபம் தர்சயாமாஸ பூயஹ!***
***ஆச்வாஸயாமாஸ ச பீத மேனம் பூத்வா புனஹ ஸௌம்ய வபுர் மஹாத்மா!! - (50)***

## ஸஞ்சயன் சொன்னது

### சொற்பொருள்

*இதி-இவ்வாறாக, வாசுதேவஷ-ஸ்ரீகிருஷ்ணர், அர்ஜுனம்-அர்ஜுனனுக்கு, உக்த்வா-சொல்லி, ததா-அவ்வாறே, சத்யரூபம்-தன் வடிவத்தினை, பூயஷ-மறுபடியும், தர்சயமாஸ-காட்டினார், மஹாத்மா-மஹாத்மாவான ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தி, பனஹ்ச-மறுபடியும், சௌம்ய வபுர்-சாந்த வடிவு கொண்டவனாய், பூத்வா-ஆசி, பீதம்-பயந்தவனை அர்ஜுனனைத், ஆச்வாஸயாமாஸச-தேற்றினார்.*

### கருத்துரை

*ஸஞ்சயன் சொன்னார்-(ஏ திரிதராஷ்ட்டிர மஹாராஜா!) இவ்வாறாக ஸ்ரீ கிருஷ்ணர் அர்ஜுனனுக்குச் சொல்லி, அவ்வாறே தன் பழைய வடிவத்தை மறுபடியும் காட்டினார். மஹாத்மாவான அந்த ஸ்ரீ கிருஷ்ணர் மறுபடியும் தன் அழகிய வடிவினைத் தரித்துப் பயந்தவனான அர்ஜுனனைத் தேற்றினார்.*

### விளக்கம்

*இங்கு இரண்டு முறை 'மறுபடியும் தன் வடிவைக் காட்டினார்' என்று சொல்வதால் முதலில் அர்ஜுனன் வேண்டுகோளுக்கிணங்க நான்கு கரங்களோடு கூடிய விஷ்ணு ரூபத்துடன் தோன்றி அதன் பின் மறுபடியும் பழைய அழகிய வடிவினைக் காண்பித்தார் என்று கொள்ளலாம்.*

### முன்னுரை

*பகவானை அவ்விதமான சாந்த வடிவத்தினைக் கண்டு அர்ஜுனன் சொல்லியவை*

## அர்ஜுன உவாச

*த்ருஷ்ட்வேதம் மானுஷம் ரூபம் தவ ஸௌம்யம் ஜநார்தன!*
*இதானீ மஸ்மி ஸம்வ்ருத்தஹ ஸசேதாஹ ப்ரக்ருதிம் கதஹ!! - (51)*

**அர்ஜுனன் சொன்னது**

**சொற்பொருள்**

*ஜநார்த்தநா-ஏ கிருஷ்ணா! தவ-உன்னுடைய, ஸௌம்யம்-ஒளிபொருந்திய அழகிய காந்தமான, இதம் மானுஷம் ரூபம்-இதமான மானுட வடிவத்தை, த்ருஷ்டவா-பார்த்து, தெளிவைப் பெற்றவனாய், ஸம்வ்ருத்தஷ-ஆனேன், (மேலும்) ப்ரக்ருதிம்-என் இயல்பை, கதஹ் அஸ்மி-அடைந்தவனானேன்.*

**கருத்துரை**

*கிருஷ்ணா! உன்னுடைய அமைதியான இந்த மானுட வடிவத்தைக் கண்டு இப்போது மனத் தெளிவடைந்தேன். மேலும் என் இயல்பைப் பெற்றேன்.*

**முன்னுரை**

*அர்ஜுனனின் இவ்வாக்கியத்தினைக் கேட்டு பகவான் தான் காட்டிய வடிவத்தின் மகிமையை இரண்டு சுலோகங்களில் கூறுகிறார்.*

**ஸ்ரீ பகவானுவாச**

*ஸுதுர்தர்சமிதம் ரூபம் த்ருஷ்டவானஸி யன்மம!*
*தேவா அப்யஸ்ய ரூபஸ்ய நித்யம் தர்சன காங்க்ஷிணஹ!! - (52)*

**ஸ்ரீ பகவான் சொன்னது**

**சொற்பொருள்**

*மம-என்னுடைய, யத்-எந்த உருவத்தினை, த்ருஷ்டவான் அஸி-பார்த்திருக்கிறாயோ, (தத்) இதம் ரூபம்-அந்த விஸ்வரூபத்தினை, ஸதுர்தர்சமீ-பார்ப்பதற்கு மிகவும் அரியது, தேவாஹ் அபி-தேவர்களும் விஸ்வரூபத்தினை, தர்சன காங்க்ஷிணஹ (பவந்தி)-தரிசனத்தினை இச்சிக்கிறார்கள்.*

**கருத்துரை**

*எனது எந்த ரூபத்தினை நீ இப்போது பார்த்தாயோ அது மிகவும் அரியது. காணக் கிடைக்காதது. தேவர்கள் கூட அவ்வுருவத்தினை எப்போதும் தரிசிப்பதற்கு விரும்புகிறார்கள்.*

விளக்கம்

இறைவனின் உருவத்தினை சாதாரணமானவர்கள் எவரும் பார்த்தல் இயலாது. இதயத்தூய்மை, இடைவிடாத மாறாத பக்தியு டையவர் மாத்திரமே அதனை தரிசித்தல் இயலும். எனவேதான் 'துர்தர்சம்' எனாது ஸுதுர்தர்சம்' என்று சொல்லப்பட்டது. இறை தரிசனம் மிகவும் துர்லபம் என்பது பொருள்.

*நாஹம் வேதைர்ந தபஸா ந தானேன ந சேஜ்யயா!*
*சக்ய ஏவம் விதோ த்ரஷ்டும் த்ருஷ்டவானஸி மாம்யதா!! - (53)*

சொற்பொருள்

மாம்-என்னை, யதா-எவ்வாறு, த்ருஷ்ட்வான் அஸி-பார்த்திருக்கிறாயோ, ஏவம் விதஷ-இத்தகைய உருவமுடையவ னாக, அஹம்-நான், வேதைஹ்-வேதங்களாலும், (வேதங்களை அத் யயனம் செய்பவராலும்) த்ருனுடம்-பார்ப்பதற்கு, ந சக்யஹ-இயலாதவன், தபஸா-தவத்தினாலும், ன-பார்ப்பதற்கு இயலாத வன், தானேன-தானத்தினாலும், ந-இயலாது, இஜ்யயா-யக்ஞங்களினாலும், நச-பார்த்தற்கு இயலாது.

கருத்துரை

நீ என்னை எந்த உருவில் பார்த்தாயோ, அவ்வுருவத்தினை, வேத அத்யயனம் செய்வதாலோ, தவத்தினாலோ, தானங்களி னாலோ, யக்ஞங்கள்களினாலோ பார்ப்பதற்கு இயலாது.

விளக்கம்

48 ஆவது சுலோகத்தில் சொல்லப்பட்ட பொருளையே மறுபடி யும் சொல்கிறார். வேத அத்யயனம், தவம், தானம், யக்ஞம் முத லான கிரியைகள், புனிதமானவையென்றாலும், நிர்மலமான பக்தி, சலனமற்ற தெய்வ நம்பிக்கை இவற்றுடன் கூடியிருந்தால் மாத்தி ரமே அவை நற்பலனை அளிக்கும். (இதனை அடுத்த வரும் சுலோ கத்திலும் சொல்கிறார்).

முன்னுரை

இத்தகைய இறைவடிவம் எதன் மூலம் கிடைக்கவல்லது என்ப தைத் தெரிவிக்கிறார்.

*பக்த்யா த்வனன்யயா சக்யஹ அஹமேவம் விதோ அர்ஜுன!*
*ஞாதும் த்ரஷ்டும் சதத்வேன ப்ரவேஷ்டும் ச பரந்தப!! - (54)*

**சொற்பொருள்**

பரந்தப-எதிரிகளை வாட்டுபவனே? அர்ஜுன-அர்ஜுனா! ஏவம் விதஹ் அஹம்-இவ்விதமான (உருவமுடைய) நான்-அகன்யா, பகத்யாது-மாறாத பக்தியினால் மட்டுமே, தத்ருவேன-உள்ளபடி, ஞாதும்-அறிவதற்கு, த்ருஷ்டும்ச-அடைவதற்கும் சக்ய ஹ (அஸ்மி) - கூடியவனாக (இருக்கிறேன்).

**கருத்துரை**

எதிரிகளை வாட்டுபவனே! அர்ஜுனா! இவ்விதமான உருவத்தினையுடைய என்னை இடைவிடாத மாறாத பக்தியினால் மாத்திரமே உள்ளபடி அறிவதற்கும், காண்பதற்கும், அடைவதற்கும் கூடியவனாக இருக்கின்றேன்.

**விளக்கம்**

இதற்கு முன் சுலோகத்தில் வேத அத்யயனத்தினால் இறை தரிசனத்தைக் காண முடியாது எனச் சொல்லப்பட்டது. பின் எதனால் காண முடியும் என்பதை இச்சுலோகம் விவரிக்கிறது. இறை தரிசனத்திற்கான வழியைச் சொல்வதால் இச்சுலோகத்தினை முமுட்சுக்கள் நன்கு மனனம் செய்து அதன் பொருளையுணர்ந்து செயலாற்றுதல் வேண்டும்.

அனன்ய பக்தியினால் மனிதன் இறைவனைக் காண்டல் இயலும் என இங்குச் சொல்லப்பட்டது. ஏனைய உலக விஷயங்களிலும் மனத்தைச் செலுத்தாது. இறைவனிடத்து மாத்திரமே மாறாத அன்பு, ஆசை கொள்ளுதல் வேண்டும். இடையில் மாறாத பக்தி, வேறொன்றின் மீதும் ஆசைவைக்காத பக்தி அனன்ய பக்தி எனப்படும் சாதாரணமாக மக்கள் இல்லம், மனைவி, மக்கள், சொத்து, சுகம், புகழ் இவற்றின் மீது ஆசையும் ஏதோ சில சமயங்களில் இறைவனின் மீது பக்தியும் செலுத்துகின்றனர். இது அனன்ய பக்தியல்ல. காட்சிப் பொருள்களின் மீது செல்லாத பக்தியே அனன்ய பக்தி. அதுவே இறைதரிசனாத்திற்கான ஒரே வழி என்று இங்குச் சொல்லப்பட்டது.

**அத்தகைய அனன்ய பக்தியினால் (1) அவனை அறிவதற்கு (2) காண்பதற்கு (3) அடைவதற்கு இயலும் எனப்படும். மூன்று கிரியை**

கள் இங்குச் சொல்லப்பட்டன. ஆரம்ப நிலையில் மனிதன் இறை வன் 'எத்தகையோன்' என்ற எண்ணம் எழும் 'அறிதல்' (ஞாதும்) இது முதல் நிலை. இந்நிலையில் பக்தனுக்கு இறைவனுக்கும் இடையில் இடைவெளி அதிகமாகவேயிருக்கும். இது துவைத நிலை. அதன் பின் பயிற்சியினால் இறைவனுக்கு இன்னும் அருகில் நெருங்கி நேருக்கு நேர் (face to face) அவனை தரிசிக்க முடியும் (த்ரஷ்டும்). இதன் பின் அவனுக்கு இறைவனின் மீது எவ்விதத்தி லும் ஐயம் எழுவதில்லை. இது இரண்டாவது மேல் நிலை. இந்நி லையில் பக்தன் இறைவனுக்கு மிக அருகில் வந்து சேர்கிறான். அதன்பின் உள்ளங்கை நெல்லிக்கனியைப் போல, வில்வ பழத் தைப் போல மனிதன் நேருக்கு நேர் இறைவனைப் பார்க்கிறான். இது விசிஷ்டாத்வைத நிலைக்குச் சமானமெனலாம்.

அதன் பின் மேலும் பயிற்சி முதிர்வதால் அப்பக்தன் இன்னும் அருகில் நெருங்கி முறையாக அவனுள்ளேயே நுழைந்து இறைவ னோடு ஐக்கியமாகி விடுகிறான் (ப்ரவேஷ்டும்). உப்புக்கல் சமுத்தி ரத்தில் கரைவதைப் போல, மழைநீர் நதி நீரில் கலந்து விடுவதைப் போல, நீர் பாலில் கலப்பதைப் போல, பக்தன் இறைவன் என்ற இரண்டு இராது. இறைவன் மட்டுமே எஞ்சி நிற்பான். இது பூர்ண அத்வைத நிலை. ஒவ்வொருவரும் முதல் இரண்டு அனுபவத்தி னைப் பெற்றவுடனேயே திருப்தியடைந்துவிடாமல் சாதனைகளின் மூலம் மூன்றாம் நிலையான பகவத் சாயுஜ்ய பதவியைப் பெற முயலுதல் வேண்டும். இம்மூன்று நிலைகளில் முதலாவது ஸாமீப் யம், இரண்டாவது சாரூப்யம், மூன்றாவது சாயுஜ்யம். சிலர் சாஸ்தி ரங்களைக் கற்று அதன் மூலம் சிறிது இறைவனை அறிந்து திருப்திய டைந்து விடுகின்றனர். அது தவறு, இறைவனை நேரில் கண்டு, அதன் பின் அவனோடு ஐக்கியமடைவதற்கு முயலுதல் வேண்டும். எனவேதான் ஸ்ரீ கிருஷ்ணர் 'ஞாதும்' என்று மட்டும் சொல்லாது, 'த்ருஷ்டும்', 'ப்ரவேஷ்டும்' என்றும் சொன்னார்.

ஒரு நல்ல பழம் கடையில் இருக்கின்றதென்று அதன் நிறம், சுவை, விலை இத்தகையது என்று இன்னொருவர் சொல்லக் கேட் டால் மாத்திரம் போதாது. உடனே அதனை உண்ணவேண்டும் என்ற ஆசையேற்பட்டு கடைக்குச் சென்று அதனை விலைக்கு வாங்கி உண்போம். இதில் முதல் நிலை 'ஞாதும்' அறிதல் என்பதோடு ஒக்கும் (இறைவனைப் பற்றி சத்குருமார்களிடமிருந்தும் சாஸ்திரங்க ளின் மூலமும் அறிதல்), அவ்வாறே இரண்டாம் நிலையான த்ருஷ் டும் பார்த்தல் என்பது கடைக்குச் சென்று அதனை நேரில் பார்த்தல்.

(இறைவனை நேரில் காண்டல், மூன்றாம் நிலை (ஐக்கிய நிலை) அப்பழத்தை வாங்கி உண்பதற்கு ஒப்பாகும். அதுவே ஜீவன் முக்தி நிலை, மோட்ச நிலை, ஒவ்வொருவரும் அனன்ய பக்தியினால் இறைவனோடு ஐக்கியமடைந்து மோட்ச நிலை தவறாது அடைந்தே தீரவேண்டும்.

'யதா ஹ்யேவைஷ ஏதஸ் மினுதரமன்தரம் குருதே அத தஸ்ய பயம் பவதி' என்ற உபநிஷத் வாக்கியத்தின் சாரம் இறைவனுக்கும் தனக்கும் சிறிதளவு இடைவெளியிடும்போது பயம் தோன்றும். பயமுள்ள நிலை பூரணநிலைய எந்நாளும் ஆகாது. எனவே 'ப்ரவேஷ்டும்' என்ற மூன்றாம் நிலையாய் ஒவ்வொரு ஜீவியும் அனன்ய பக்தியின் உதவியால் அடைந்து தன்யர்களாதல் வேண்டும்.

வேத புராணங்களால் முக்தியடைந்துவிட முடியும் என்றால் படிப்பறிவு இல்லாதவர் பெற முடியாது. எனவே அவர்களுக்கு முக்தியில்லை என்றாகிவிடும். தவத்தினாலும், யக்ஞங்களினால் முக்தியடைய முடியும் என்றால் அவற்றை அனைவரால் செய்ய இயலாது. தானத்தினால் மோட்சம் அடைய முடியுமென்றால் ஏழைகள் முக்தியடைய முடியாது. பக்தி ஒன்றினால்தான் இறைவனை அடைய முடியும் என்று இங்குச் சொல்வதால், அது எளிதானது அனைவரும் பின்பற்றக்கூடியது என்பது தெளிவு. எனவே அனைத்து ஜீவராசிகளிடத்தும் கருணையுடன் எல்லா மக்களுக்கும் எளிதான மோட்சத்தினை பகவான் இங்குத் தெளிவுபடுத்தியுள்ளார்.

**வினா :** இறைவன் தரிசனத்திற்கான வழியென்ன?

**விடை :** அனன்ய பக்தி

**வினா :** அதனால் ஜீவனுக்கு என்ன பலன் கிட்டும்?

**விடை :** இறைவனைப் பற்றி அறிதல், நேரில் காண்டல், அவனுடன் சேர்தல் என்ற பலன்கள் கிட்டும்.

*மத்கர்மக்ருன் மத்பரமோ மத்பக்தஹ ஸங்க வர்ஜிதஹ!*
*நிர்வைரஹ ஸர்வபூதேஷு யஹஸமாமேதி பாண்டவ!! - (55)*

**சொற்பொருள்**

பாண்டவ-பாண்டவா! மத்கர்ம க்ருத்-எனக்காகக் கர்மம் செய்கின்றவன், மத்பரமஹ-என்னையே குறியாகக் கொள்கிறவன், மத்யக்தஹ-என்னிடத்தேயே பக்தி பண்ணுபவன், ஸங்கவர்ஜிதஹ-பற்றில்லாதவன், ஸர்வபூதேசஷு-எல்லா உயிர்களிடத்தும் நிர்வைர

ஹச-வெறுப்பற்றவனும், யஹ்-எவனோ, ஸஹ்-அவன், மாம்-என்னை, ஏதி-அடைகிறான்.

**கருத்துரை**

*அர்ஜுனா! எவன் எனக்காகவே கர்மம் செய்வனும், என்னையே குறியாகக் கொண்டு நம்பியிருப்பவனும், என்னிடத்தையே பக்தி பண்ணுபவனும், பற்றற்றவனும், எல்லா உயிர்களிடத்து வெறுப்பற்றவனும் ஆக இருக்கின்றானோ அவன் என்னை அடைகிறான்.*

**விளக்கம்**

*இறைவனை எவர் அடையக் கூடும் என்பது இங்கு நன்கு விவரிக்கப்பட்டுள்ளது. ஐந்து நற்குணங்களைக் கூறி, அவற்றை எவர் பெற்றுள்ளனரோ அவர் தவறாது இறை பதவியை அடைவர் என ஸ்ரீ கிருஷ்ணர் கூறுகிறார். 'யஹ்' என்று (எவர்) என்று சொல்வதால் எவராயினும் இத்தகைய நற்குணங்களைப் பெற்றிருந்தால் போதும், மோட்சம் அடைவர் என்பது தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.*

*இங்கு ஜாதிமத பேதங்கள் ஏதுமில்லை. தகுதி ஒன்றே போதும். மருந்தினை நோயாளி எவர் உட்கொண்டாலும் நோய் தீருமல்லவா! விளக்கு, திரி, எண்ணை, நெருப்புப் பெட்டி இவையிருந்தால் எவர் ஏற்றினாலும் விளக்கு எரியுமல்லவா! கீதையின் பரந்த மனப்பான்மையைப் பலவிடங்களிலும் காணலாம். கீதையின் மேன்மைக்கு இத்தகைய பரந்த மனப்பான்மையே காரணம்.*

*'மத்கர்மக்குத்' - தெய்வத் தொடர்பான பூசை, தியானம், ஜபம் முதலியவற்றைச் செய்பவன் அல்லது எக்காரியத்தைச் செய்தாலும் அதனை இறை அர்ப்பணமாகச் செய்பவன் (பாவகாரியமின்றி நடக்கிற காரியங்களையே ஈசுவரார்ப்பண புத்தியுடன் செய்பவன் என்று பொருள்) சித்த சுத்தி அடைந்து இறைவனின் அருளுக்குப் பாத்திரமாக, ஆன்ம அறிவு பெற்று மோட்சத்தினையடைவான். வாழ்நாளில் மனிதன் தன் தினசரி காரியங்கள் பலவும் செய்கின்றான். ஆயின் அவற்றை தெய்வார்ப்பணமாகச் செய்தால் அதுவே பூசையாக பரிணமிக்கும்* (Work Changes into Worship) *அதன் பின் அவை சாதாரண காரியங்களாக இராது. மோட்சத்திற்கும் காரணமாக ஆகிவிடும். எனவேதான் இறைவனை அடைபவரின் 'மத்கர்மக்ருத்' (எனக்காகவே கர்மங்களைச் செய்பவன், அல்லது என் தொடர்பான கர்மங்களைச் செய்பவன்) என்பது சேர்க்கப்பட்டது.*

'மத்பரமஹ்' - இறைவனையே குறியாக, இலக்காக எண்ணியிருப்பவன், சாதாரணமாக மக்களில் பலரும் உலக விஷயங்களையே அடையக் கூடிய இலட்சியமாகக் கருதி அவற்றிற்காக இரவும் பகலும் கடினமாக உழைக்கின்றனர். ஆயின் அக்காட்சிப் பொருள்களனைத்தும், அசத் வஸ்துக்கள், அழியக்கூடியவை. எனவே அவை பந்தத்தினின்றும் விலக்கா. பரமாத்மா ஒருவனே இவ்வுலகில் உண்மைப் பொருள். ஆகையால் அவனையே இலட்சியமாக, இலக்காக ஜீவன் எண்ணி அதற்காக முயற்சித்தல் வேண்டும்.

'மத்பக்தஹ்' - பேரின்பத்தின் இருப்பிடமான இறைவனிடத்தையே அதிசய பக்தி கொள்ளுதல் வேண்டுமேயன்றி ஏனையவற்றில் அல்ல. பிறப்பு இறப்பினின்றும் தப்பிக்க இயலாத பொருள்களின் மீது பக்தி ஆசை இருப்பின் என்ன பலன்? இறை பக்தியினால் இறுதியில் ஜீவன் பரமாத்மா பதத்தியினை அடைய முடியும் என்ற உண்மை இங்குக் கூறப்பட்டது.

'ஸங்க வர்ஜிதஹ' - ஸங்கம் என்றால் பற்று, தேகம் முதலான காட்சிப் பொருள்களின் மீது என்னுடையது என்ற பற்றினை விடுதல் வேண்டும். பற்றற்ற தன்மை என்ற கூர்மையான கத்தியினால் சம்சார (துக்க) மெனும் மரத்தினை வேரோடு அறுக்க வேண்டும் என்று பகவான் (கீதை 15 ஆவது அத்தியாயத்தில்) ஆணையிடுகிறார். (அஸங்க சஸ்தேரண த்ருடேன சித்வா).

தாமரை இலைத் தண்ணீரைப் போல ஒட்டாது, காட்சிப் பொருள்கள் கண்ணுக்குப் பகட்டாகத் தோன்றினாலும், விசாரணையின் பலத்தினால் அவற்றோடு ஒட்டாது பற்றற்று இருப்பவன் முக்தியடைவான் எனப்பட்டது.

'நிர்வைரஹ ஸர்வபூதேஷு'-இனி ஐந்தாவது எல்லாவுயிர்களிடத்தும், அன்பு, தயை கொண்டு வெறுப்பற்றிருத்தல். 'ஸர்வபூதேஷு' என்றதால் ஏதோ ஒன்றிரண்டு உயிர்களிடத்து தயை இருந்தால் மட்டும் போதாது. எல்லாவுயிர்களிடத்தும் கருணை காட்டுதல் வேண்டுமென்பதும் பெறப்படுகிறது. எல்லா உயிர்களும் இறை சொரூபமே, எனவே எவ்வுயிர்க்குத் தீங்கு நேரிடினும் இறைவனுக்குத் தீங்கு செய்வதாகவே ஆகும். எனவே வெறுப்பற்ற தன்மையை நன்கு பயிலுதல் வேண்டும். இவ்வுண்மையையே 'அத்வேஷ்டா ஸர்வ பூதானாம்' முதலான வாக்கியங்களால் கீதையில் பலவிடங்களில் கூறியிருக்கிறார். ஒருபக்கம் உபநிஷத் வாக்கியங்களைக் கூறிக் கொண்டு, தெய்வ பூசைகளைச் செய்து கொண்டு, வேறொரு பக்கம்

ஊயிர்களை தூஷித்தல், வெறுத்தல், இம்சித்தல் ஆகியவற்றைச் செய்து வந்தால் பூசைகளினால் ஒரு பலனும் இல்லை. அது நடைமுறை வேதாந்தமல்ல. மருந்து தின்பவன் பத்தியம் கூட இருந்தாக வேண்டும். மேற்சொன்ன நான்கு நற்குணங்கள் மருந்து போன்றவை. இவ்வந்தாவது நற்குணம் அதாவது, எல்லா உயிர்களிடத்தும் அன்பு, தயை ஆகியவை பத்தியம் போன்றது. எனவே அவற்றுடன் கூட தவறாது இதனையும் பின்பற்றுதல் வேண்டும். இவ்வாறாக இவ்வைந்து குணங்களையுடையோர் தவறாது இறைவனைச் சேர்வர் (மாமேதி) என்று இச்சுலோகத்தில் ஐயமின்றி அறையப்பட்டுள்ளது.

கீதையின் இச்சுலோகம் மிகவும் முக்கியமானது. ஸ்ரீ சங்கராச்சாரியாரும் கீதையின் அனைத்துச் சுலோகங்களை விட இது மிகவும் சிறந்தது என்று கீதையின் சாரமென்றும் தெரிவித்துள்ளார். ஏனெனில் அனைத்து யோகங்களும் குறிப்பாகவும் சுருக்கமாகவும் போதிக்கப்பட்டுள்ளது. மேலும் எல்லா உயிர்களிடத்தும் கருணை என்பது சொல்லப்பட்டது. எவ்வாறெனின்-

(1) என் கர்மங்களைச் செய் (மத்கர்மக்ருத்)-கர்மயோகம்
(2) என்னிடத்தே குறியாக நிற்பாயாக (பரமாத்மா) தியான யோகம்
(3) என்னிடத்துப் பக்தி செய்வாயாக (மத்பக்தஹ) பக்தியோகம்
(4) காட்சிப் பொருள்களின் மீது பற்றின்றி (ஸங்கவர்ஜிதஹ)- இருப்பாயாக. ஞானயோகம்
5. எல்லா உயிர்களிடத்தும் கருணை காட்டுவாயாக (நிர்வைரஹ ஸர்வபூதேஹி) - பத்தியம்

எனவே சாதகன் இச்சுலோகத்தில் உடல் பொருளை பலமுறை சிந்தித்து பக்தி முதலான நற்குணங்களோடு இருந்து பரமாத்மா சாயுஜ்யத்தினை இப்பிறவிலேயே அடையும்படி முயற்சித்தல் வேண்டும்.

**வினா :** இறைவனை எவர் அடையக் கூடும்?

**விடை :** (1) தெய்வ காரியங்களைச் செய்பவர் (2) இறைவனையே குறியாகக் கருதுபவன் (3) தெய்வ பக்தியுடையவன் (4) பற்றற்றவன் (5) எல்லாவுயிர்களிடத்தும் கருணை என்ற இவ்வைந்து குணங்களும் உடையவன்.

**வினா :** இதனின்றும் இறைவனை அடைவதற்கான உபாயம் எதுவெனத் தெரிகின்றது?

**விடை :** மேற்சொன்ன ஐந்து குணங்கள் பெற்றிருத்தலே.

ஓம்

இது உபநிஷத்தின்கண், பிரம்மவித்தையைப் புகட்டுவதும், யோக சாஸ்திரமானதும், ஸ்ரீ கிருஷ்ணார்ஜுன சம்வாதமாக வந்துள்ளதுமாகிய விசுவரூப சந்தர்சன யோகம் என்னும் பதினோராவது அத்தியாயம்

ஓம் தத்ஸத்

ஓம்

# ஸ்ரீ பகவத் கீதை

## பன்னிரண்டாம் அத்தியாயம்

## பக்தியோகம்

### அத்தியாயப் பெயர் விளக்கம்

*'பக்தியோகம்' - பக்தியைத் தோற்றுவித்து, வளரச் செய்யும் அத்தியாயமானதால் பக்தி யோகம் என்ற பெயர் சூட்டப்பட்டது. பக்தியென்றால் என்னவென்பதும், பக்தனின் இலக்கணமும், பல விதமான ஆத்ம சாதனைமுறைகளும் இவ்வத்தியாத்தில் பெறப்பட்டுள்ளன. இவ்வத்தியாயம் பக்தியுடனே தொடங்கப்பட்டு பக்தியுடன் முடிகிறது. இவ்வாறாகப் பக்தியைப் பற்றியும் பக்தனின் இலக்கணத்தையும் கூறுவதால் இது 'பக்தி யோகம்' எனப்பட்டது.*

### இவ்வத்தியாயத்தில் கூறப்பட்டுள்ள முக்கிய கருத்துக்கள்

1. *உருவ, அருவ வழிபாட்டு முறைகள் (1 முதல் 5 வரை)*

2. *பக்தியின் மகத்தான பலன் (6-8)*

3. *பலவித ஆன்மீக சாதனை முறைகள் (9-12)*

4. *பக்தனின் இலக்கணம் (13-30)*

## முதல் அத்தியாத்திற்கும் இந்த அத்தியாயத்திற்கும் உள்ள தொடர்பு

*இரண்டாம் அத்தியாயம் முதல் பதினொன்றாம் அத்தியாம் வரை ஸ்ரீ கிருஷ்ணர் சிலவிடங்களில் நிர்க்குண உபாசனை, பிரம்ம தத்துவம், ஞான நிட்டைகள், இவற்றைப் போதித்து, இன்னும் சில விடங்களில் (விபூதி யோகம், விஸ்வரூப சந்தர்சன யோகம்) அருவ, உருவ வழிபாட்டு முறைகளைத் தெளிவுபடுத்தியுள்ளார். முதலில் விஸ்வரூப தரிசனத்தைக் காட்டியவுடன், அதன்பின்னர் பழைய உருவை அடைந்தவுடன் தொடரும், 'மத்கர்மக் ருத்', 'மத் பரம்', 'பத் பக்தஹ்' முதலான வசனங்களில் சகுண உபாசனை மிகுந்த பலனளிக் கவல்லது என்கிறார். இதற்கு முன்பாக பகவான் தெரிவித்த அருவ, நிராகார, ஆத்ம உபாசனைக்குரிய விஷயங்களை அர்ச்சுனன் நன்கு மனதில் பதிய வைத்துக் கொண்டபின், இப்போது மறுபடியும், உருவ, வழிபாட்டிற்குரிய வாக்கியங்களைக் கூறவும் அர்சுனனுக்கு மீண்டும் ஐயம் எழுகின்றது. முன்னே சொல்லியபடி அருவ வழி பாடு செய்வதா அல்லது தற்போது சொல்லிய வண்ணம் உருவ வழிபாடு செய்வதா? இவர்களில் எவர் சிறந்தவர் என்ற அர்ச்சுன னின் கேள்வியுடன் இவ்வத்தியாயம் தொடங்குகிறது.*

### அர்ஜுன உவாச - அர்ஜுனன் சொன்னது

*ஏவம் ஸதத யுக்தா யே பக்தாஸ்த்வாம் பர்யுபாஸதே!*
*யே சாப்யக்ஷர மவ்யக்தம் தேஷாம் கே யோக வித்தமாஹ!! (1)*

### சொற்பொருள்

*ஏவம் - இங்ஙனம் - (11 ஆம் அத்தியாய முடிவில் சொல்லப்பட் டவாறு ஸததயுக்தாஹ் - எப்போதும் உன்னிடத்தே மனதைச் செலுத் தியவராய், யே பக்தாஹ் - எந்த பக்தர்கள் (சகுண - உபாசகர்கள்), த்வாம் - உன்னை, பர்யுபாஸதே - உபாசிக் கிறார்களோ - யேச அபி - இன்னும் யார், அவ்யத்தம் - இந்திரியங்களுக்குப் புலப்படாத, அகாரம் - அழிவற்ற பரபிரம்மத்தை பாயுபாஸதே - தியானிக்கிறார் களோ, தேஷாம் - அவர்களுள், கே - எவர், யோக வித்மா யோக வித்னாதயை நன்கு அறிந்தவர்கள்?*

### கருத்துரை

*இவ்வாறு எப்போதும் உன்னிடத்தே மனதை இருத்தி எந்த பக்தர்கள் உன்னை உபாசிக்கிறார்களோ, மற்றும் எவர் இந்திரியங்க ளுக்கு எட்டாத அழிவற்ற பரபிம்மத்தை தியானிக்கிறார்களோ,*

ஆகிய இவர்களுள் யோகத்தை நன்கு அறிந்தவர்கள் யார்?

**விளக்கம்**

'ஏவம்' என்ற சொல், முன் அத்தியாயத்தில் 55ஆவது சுலோக மான 'மத்கர்மக்ருத்' என்ற சுலோகத்தின் கருத்தைக் குறிப்பிடுகின் றது.

பகவானின் விஸ்வரூபத்தையாவது, அல்லது தெய்வத்தின் வேறு உருவத்தையாவது எப்போதும் பக்தியுடன் உபாசிக்கிறவர் கள் (சகுன உபாசகர்கள்) உயர்ந்தவர்களா? அல்லது இந்திரியங்க ளுக்கு எட்டாத எங்கும் நிறைந்துள்ள பிரம்மத்தை தியானிப்பவர்கள (நிர்குண உபாசகர்கள்) உயர்ந்தவர்களாக? என்பது அர்ச்சுனனின் கேள்வி. இதற்கு முன் பலமுறை பகவான் (2 ஆம் அத்தியாயம், 8 ஆம் அத்தியாயம் இவற்றில்) நிர்க்குண பிரம்மத்தை தியானிக்கும் முறையைத் தெரிவித்துள்ளார். இப்போது விஸ்வரூப தரிசனத்தை அருளியபின் அர்ச்சுனனுக்கு சகுண உபாசனை முறையை வலியுறுத் துகிறார். அதனால் அவற்றில் எது சிறந்தது என்ற கேள்வி அர்ச்சுன னுக்கு எழுவது இயல்பே.

**முன்னுரை**

அர்ச்சுனின் ஐயத்தைப் பகவான் அடுத்துப் போக்குகிறார்.

ஸ்ரீ பகவானுவாச

*"மய்யாவேச்ய மனோ யேமாம்நித்ய யுக்தா உபாஸதே!*
*ச்ரத்தயா பரயோபேதாஸ்தே மே யுக்ததமா மதாஹ!!* (2)

**சொற்பொருள்**

ஸ்ரீ பகவான் சொன்னது; மயி - என்னிடத்து, மனஹ் - மனத்தை, ஆவேச்ய - நிலை நிறுத்தி, நித்யயுக்தா - எக்காலத்தும் தெய்வ சிந்தனை யுடையவராய், பரயோ - மேலான, ச்ரத்தயா - சிரத்தையு டன், உபேதா - கூடியவராய், யே - யார், மாம் - என்னை, உபாஸதே - உபாசிக்கிறார்களோ அவர்கள், யுக்தநாமா - சிறந்த யோகிகள் என்று, மே மதாஹ் - என்னால் கருதப்படுகிறார்கள்.

**கருத்துரை**

என்னிடத்தே மனதை நிலைநிறுத்தி யோகத்தில் நிலைத்தவ

ராய் மிகுந்த அக்கறையுடன் யார் என்னை உபாசிக்கிறார்களோ அவர்கள் யோகத்தில் மேம்பட்டவர்கள் என்பது என் கருத்து.

**விளக்கம்**

அர்ச்சுனனின் கேள்விக்குச் சரியான விடையை பகவான் அளித்துள்ளார். சகுண உபாசக்ர்கள் சிறந்தவர்களா, நிர்க்குண உபாசகர்கள் சிறந்தவர்களா என்ற கேள்விக்கு, எவராயினும் மிக்க ஈடுபாட்டுடனும், எல்லாம் இறைவனின் செயல் என்ற சிந்தையுடன் வாழ்பவர்களே உயர்ந்தவர்கள் என்று பகவான் பதிலுரைக்கின்றார். இங்கு மூன்று சாதனை முறைகள் கூறப்பட்டுள்ளன.

1. மனத்தை இறைவனிடம் செலுத்துதல்
2. எப்போதும் இறை சிந்தனையுடன் இருத்தல்
3. மிகுந்த ஈடுபாடு கொண்டிருத்தல்

இம்மூன்றையும் பின்பற்றுபவர் எவரோ, அவர் யோகியாயினும், சகுண அல்லது நிர்க்குண உபாசகர்களாயினும், சந்நியாசியாயினும், கிருகஹஸ்தன் ஆயினும், அந்தணனாயினும், கீழ்ச்சாதியினர் ஆயினும் எவர் என்ற கேள்விக்கேயிடமில்லை. ஆஹா! பகவான் எத்தகைய பரந்த நோக்குடன் இவ்வாறு கூறியுள்ளார். பக்தி, ஈடுபாடு, நிலைபெற்ற மனம் இவற்றுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளதேயன்றி, ஒரு குறிப்பிட்ட வழிமுறைக்கோ, கோட்பாட்டிற்கோ முக்கியத்துவம் அளிக்கப்படவில்லை.

**முன்னுரை**

நிர்க்குண உபாசகர்களைப் பற்றி ஓரளவு கூறுகின்றார்.

*யே த்'வக்ஷர ம நிர்தேசிய மவ்யக்தம் பர் யுபாஸதே!*
*ஸர்வத்ரகம சிந்த்யம் ச கூட ஸ்தமசலம் த்ருவம்!!* (3)

*ஸன்னியம் யேந்திரிய க்ராமம் ஸர்வத்ர ஸமபுத்தயஹ!*
*தேப் ராப்னுவந்தி மாமேவ ஸர்வபூத ஹிதே ரதாஹ!!* (4)

**சொற்பொருள்**

யேது-எவர், இந்திரியக்ராமம்-இந்திரியங்களின் கூட்டத்தை, ஸன்னியம்ய-நன்கு அடக்கி, ஸர்வத்ர-எங்கு, எப்போதும்; ஸமபுத்தயஹ-சமபுத்தியுடையவர்களாய், ஸர்வபூதஹிதே ரதாஹ-எல்லா உயிர்களின் நன்மையிலும் ஆர்வமுடையவர்களாய், விளக்க முடியா

ததும், அவ்யந்தம்-இந்திரியங்களுக்குப் புலப்படாததும், அல்லது (எந்தவொரு பிரமாணங்களாலும் விளக்கிக் கூற முடியாததும்), அசிந்தியம்-சிந்தைக் கெட்டாததும் (ஊக்கத்திற்கடங்காதது), கூடஸ்தம்-என்றும் விகாரமில்லாததும், (உலகத்திற்கு முதலானதும்). அசலம்-சலனமில்லாதது, த்ருவம்-நிலைத்தும், சர்வத்ர கம்ச-எங்கும் பரந்து நிறைந்ததும், அக்ஷரம்-அழியாததுமான நிர்க்குண பரபிரம்மத்தை, பர்யுபாஸதே-நன்று தியானிக்கிறார்களோ, தே-அவர்கள், மாம்-என்னையே, ப்ராப்னுவந்தி-வந்தடைகிறார்கள்.

கருத்துரை

எவரொருவர் இந்திரரியங்களை அடக்கித் தன் கட்டுக்குள் வைத்து, எப்போதும் சமபுத்தியுடையவர்களாய், அனைத்து உயிர்களின் நன்மையில் நாட்டமுடையவர்களாய், சொல்லுக் கடங்காததும், இந்திரியங்களுக்குப் புலனாகாததும், மனதிற்கு எட்டாததும், எங்கும் நிறைந்ததும், மாறாததும், சலனமற்றதும், நிலைத்ததும், அழியாததும் ஆகிய பிரம்மத்தை நன்கு உபாசிக்கிறார்களோ அவர்கள் என்னையே வந்தடைகிறார்கள்.

விளக்கம்

இறைவன் அருஉருவன் ஆகையால், சகுணமாயினும், நிர்க்குணமாயினும் தியானத்தில் இறைவனையே காண்கிறோம். ஈடுபாட்டுடனும், நிர்மலமான பக்தியுடனும் எந்தவிதமாக தியானித்தாலும் மக்கள் பரமாத்மாவையே அடைகிறார்கள். இவ்விரண்டு சுலோகங்களில் முதல் சுலோகத்தில் பிரம்மத்தை உபாசிக்கும் முறை பற்றியும், இரண்டாம் சுலோகத்தில் பிரம்மத்தைப் பற்றியும் சொல்லப்பட்டுள்ளது. சாதகன் பரமாத்மாவை எவ்வகையில் தியானித்துக் கொண்டிருப்பினும், மனத் தூய்மையின்றி, இந்திரியங்களின் வழிப்பட்டு, உயிர்களிடத்துக் கருணையின்றி தியானம் செய்யின் அதற்கான பலன் கிடைக்காது. அத்தகையோர் பிரம்மானுபவம் அடைதல் துர்பலம். அவன் செய்யும் உபாசனை கலாய் பூசப்படாத பாத்திரத்தில் வைத்த பருப்பு போலாகும். பொருள்கள் நன்றாக இருப்பினும் வைக்கப்படும் பாத்திரம் தூய்மையாக இல்லாவிட்டால் பொருள்கள் கெட்டுப் போவது போல், மனத்தூய்மை, இந்திரியக் கட்டுப்பாடு, தயை முதலான நற்குணங்கள் இவை இன்றி இறைவனை அருவமாகவோ, உருவமாகவோ எப்படி உபாசித்தாலும் பலன் இன்றிப் போகும். அதனால் தான் கீதாச்சார்யன் தியானிப்பவர்களை எச்சரிக்கை செய்யும் வகையாக, அவர்கள் பின்பற்ற வேண்டிய

மூன்று முக்கியமான நற்குணங்களைக் குறிப்பிட்டு வலியுறுத்துகிறார். அவையாவையெனின்:-

1) இந்திரியங்களைக் கட்டுப்படுத்துதல் - (சன்னியேந்திரிய கிராமம்)

2) எப்போதும் சமபுத்தியுடையவர்களாய் இருத்தல் (சத்வத்ர சமபுத்தயஹ)

3) அனைத்துயிர்களிடத்தும் அன்புகாட்டி அவற்றின் நன்மையில் நாட்டம் கொள்ளுதல் (சர்வபூ, ஹிதே ரதாஹ்)

எனவே முமுக்ஷுக்கள், தியானிப்பவர்கள் இருவரும் இம் மூன்று நற்குணங்களை நன்றாகப் பழகிக் கொள்ளுதல் வேண்டும். இங்கு 'நியம்ய' எனாது 'சன்னியம்ய' என்றதால், இந்திரியங்களை அடக்கி எனாது 'நன்கு அடக்கி' என வலியுறுத்திக் கூறுவதற்கு, 'சர்வத்ர' என்றது அனைத்துயிர்களிடத்தும், எக்காலத்தும் சமபுத்தியுடையவர்களாய் இருத்தல் வேண்டுமென்பதும், 'ஸர்வபூத ஹிதே ரதாஹ்' என்றது ஏதேனும் ஓர் உயிரிடத்தில் மட்டும் கருணையோடிருத்தல் போதாது என்பதும் எல்லா உயிர்களிடத்தும் அன்பு, தயை, உதவும் மனப்பான்மை இவற்றுடன் இருத்தல் வேண்டுமென்பதும் தெளிவாகிறது. இத்தகைய நற்குணங்களுடன் இறைவனை தியானித்தால் இறைவனை அடைதல் திண்ணம் என்பதை 'தே ப்ராப்னுவந்தி' என்ற சொல்லால் அறுதியிட்டுக் கூறுகிறார். எனவே பகவத் தியானத்தில் ஈடுபட விரும்புவோர் தன்னிடத்தே இம்மூன்று குணங்களும் நிறைந்துள்ளனவா என்பதைத் தாமாகவே பரிசீலித்துக் கொள்ள வேண்டும்.

**முன்னுரை**

சகுண, நிர்க்குண உபாசனை இரண்டிலும் நிர்க்குண உபாசனை சாதாரண மனிதர்களுக்கு உடல் உணர்ச்சியுடையவர்களுக்கு மிகவும் கடினமானது, மிகுந்த பிரயாசையினால்தான் அடையக் கூடியது என்கிறார்.

*க்லேசோ அதி கதரஸ் தேஷாமவ்யக் தாஸக்த சேதஸாம்!*
*அவ்யக்தா ஹி கதிர்துக்கம் தேஹ வத்பிர வாப்யதே!! - (5)*

**சொற்பொருள்.**

அவ்யக்தா ஸக்த சேதஸாம் தேஷாம்-இந்திரியங்களுக்குப் புல

னாகாத நிர்க்குண பிரம்மத்தில் சித்தத்தை வைத்தவர்க்கு, க்லேச- கடினமானது, அதிகதரஹ்-மிகவும், ஹி-ஏனெனில், அவ்யக்தா- நிர்க்குண பிரம்மமான, கதிஹி-மார்க்கம், (நிஷ்டை) தேஹா வத் பிஹ்-தேகாபிமானமுடையவர்களால் துக்கம்-மிகவும் கடினமாக, அவாப்யதே-அடையப்படுகிறது.

**கருத்துரை**

நிர்க்குண பிரம்மத்தை அடைய வேண்டுமென்ற சித்தமுடைய வர்களுக்கு சகுணோபசர்களை விட முயற்சி அதிகம் தேவைப்படுகிறது. ஏனெனில், நிர்க்குண உபாசனை வழியில் உடலுணர்ச்சி உடையவர்க்கு பிரம்ம நிஷ்டை மிகவும் அரிதாகவே வெளிப்படுகிறது.

**விளக்கம்**

நிர்க்குண உபாசனையில் உடல் உணர்ச்சியுடையவர்க்கு அதிக முயற்சி தேவைப்படுகிறது என்பது இங்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதாவது, உடல் பற்றை விட்டு, இந்திரியங்களை அடக்கி, நிஷ்காமகர்மத்தில் நிலைத்திருப்பவனுக்கு, இறையுணர்வால் சித்த சுத்தியடைந்தவர்க்கே நிர்க்குண உபாசனை முறையில் துன்பம் ஏற்படுவதில்லை. இச்சுலோகத்தின் முதல் பாதத்தால் நிர்க்குண உபாசனை கடினமானதாக இருப்பது, உடல்பற்று நீங்காதவன், இந்திரியங்களை அடக்காதவன், சகுண உபாசனையால் சித்த சுத்தியடையாதவன் ஆகிய இவர்களுக்கே என்பது பெறப்படுகிறது. உடல் பற்றை நீக்கி ஞான முதிர்ச்சி அடைந்தவனுக்கு மிகவும் எளிதான வழி நிர்க்குண உபாசனை, அது அவனை பரமனுடன் இணைக்க வல்லது என்பது முன் சுலோகத்தில் கூறப்பட்டது என்பதை இங்கு நினைவிற்குக் கொணர்தல் வேண்டும்.

அதனால் சாதகன் முதலிலேயே நிர்குண உபாசனைக்குத் தாவி விடாமல், தேகப்பற்றை ஒழிப்பதற்கு முதலில் சகுண உபாசனையில் துவக்க வேண்டும். பின்னர் தன் கர்மாக்களை பற்றின்றிச் செய்து வந்து, இந்திரியங்களை முறையாக அடக்கி, பயிற்சி செய்து, பின்னர் நிர்க்குண பிரம்மத்தில் மனத்தைச் செலுத்துதல் வேண்டும். அவ்வாறு படிப்படியாக முன்னேறிச் செல்பவனுக்கு எளிதில் பரமாத்மாவின் சொரூபம் புலப்படும். பிரம்ம உபாசனையில் ஈடுபட்டிருப்பினும், அதன் பலன் சரிவர கிட்டாமல் போவதற்குரிய காரணம் இங்கே கூறப்பட்டிருக்கின்றது. நிலத்தை முறையாகப் பயன்படுத்தாமல் இடப்படும் விதையால் என்ன பலன் கிடைக்கும்? அஸ்திவா

ரம் பலமாக இல்லாதபோது மேலும் மேலும் அடுக்கு மாடிகள் கட்டிக் கொண்டு போனால் என்னவாகும்? அதைப் போன்றே மனதில் தேகப்பற்றை அறவே விட்டால் ஒழிய பிரம்மத்தில் மனத்தை நிறுத்துதல் இயலாது. சாதகர்கள் இதனை முதலில் மனதில் கொள்ள வேண்டும்.

உண்மையில் தியானம், உபாசனை இவைகள் மிக உயர்ந்தவை. அவை சச்சிதானந்த சாகரத்திற்குரிய விஷயமல்லவா? அதில் துன்பத்திற்கு இடமேது? சொல்லப்போனால் அது நம் துன்பத்தைத் தீர்க்க வல்லதேயன்றித் துன்பத்தில் ஆழ்த்துவதல்ல, மக்கள் அதனைப் பின்பற்றும் வழிமுறைகளைச் சரியாகத் தெரிந்து கொள்ளாமல் அவதியுறுகிறார்கள். எனவே முதலில் சகுண உபாசனையில் ஈடுபட்டு, உடல் பற்றை விட்டு, நிர்க்குண உபாசனை முறைக்குச் செல்வது மிகவும் உயர்ந்தது.

### முன்னுரை

வேறு பற்றின்றி எவனொருவன் என்னைத் தியானிக்கிறானோ அவனை நான் சம்சாரக் கடலினின்றும் கரையேற்றுவேன் என்று பின்வரும் இரண்டு சுலோகங்களில் பகவான் கூறுகிறார்.

*யேது ஸர்வாணி கர்மாணி மயி ஸம்ந்யஸ்ய மத்பராஹ்!.*
*அனன்யேனைவ யோகேன மாம் த்யாயந்த உபாஸதே! - (6)*

*தேஷாமஹம் ஸமுத்தர்தா ம்ருத்யுஸம்சார ஸாகராத்!*
*பவாமி நசிராத் பார்த்த மய்யா வேசித சேதஸாம்!! - (7)*

### சொற்பொருள்

பார்த்த-அர்ஜுனா, யேது-எவர், ஸர்வாணி-அனைத்து, கர்மாணி-கர்மங்களையும், மத்பராஹ்-என்னையே மேலான கதியாகக் கொண்டு, (என்னிடத்திலேயே சித்தத்தை உடையவராய்), அனன்யேன யோகேன-வேறெதன் மீதும் நாட்டமின்றி (வேறு சிந்தனையின்றி), மாம் ஏவ-என்னையே, த்யாயந்த-தியானிப்பவராய், உபாசதே-உபாசிப்பவர்களாய் உள்ள அவர்களை, மயி-என்னிடத்தில், ஆவேசித சேதஸாம்-செலுத்திய மனத்தையுடையவராய், தேஷாம்-உள்ள அவர்களை, அஹம்-நான், ம்ருத்யுஸம்சார சாகராத்-மரணத்தோடு கூடிய சம்சார சாகரத்தினின்றும், நசிராத்-விரைவில், ஸமுத்தர்தா-கரையேற்றுபவனாக, பவாமி-ஆகிறேன்.

### கருத்துரை

*அர்ஜுனா! எவர் அனைத்து கர்மங்களையும் என்னிடத்தில் அர்ப்பணித்து, என்னையே மேலான கதியாக எண்ணி, வேறெதனிலும் நாட்டம் இல்லாதவனாய் என்னையே தியானித்து உபாசிக்கிறார்களோ, அவர்களை மரணம் எனும் சம்சார சாகரத்தினின்றும் விரைவில் கரையேற்றுகிறேன்.*

### விளக்கம்

இதில் முதலாம் சுலோகத்தில் சாதகன் பின்பற்ற வேண்டிய வழிமுறைகளையும், இரண்டாம் சுலோகத்தில் அதன் நிறைந்த பலன்களையும், பகவான் தெரிவிக்கின்றார். வழிமுறைகளாவன:- 1. எல்லா கர்மங்களையும் இறைவனுக்கு அர்ப்பித்தல், 2. அவனையே மேலான கதியாக எண்ணிச் சரணடைதல், 3. ஈடுபாட்டுடன் (தனிப்பட்ட பக்தியுடன்) பரமனை தியானித்தல் - இவ்வாறாக உபாசிப்பவர்களை சர்வேசுவரன், பிறப்பு இறப்பெனும் சம்சாரக் கடலினின்றும் கரையேற்றுவேன் எனக் கூறுகிறார். ஆஹா! எத்தகைய மேன்மையான பலனை பக்தன் அடைய இயலும்! பயங்கரமான, மரணத்தோடு கூடிய சம்சாரக் கடலில் மூழ்கித் தத்தளித்து, பலவிதமான துன்பங்களையும் அனுபவித்துக் கொண்டிருக்கும் மக்களுக்கு பகவானின் இந்த ஒரு வாக்கே எத்தகைய ஆறுதல் அளிக்கவல்லது! அநாதி காலத்திலிருந்தே சம்சாரமெனும் கோரமான விபத்தில் சிக்கித் தவித்து, 'புனரபி ஜனனம், புனரபி மரணம்' என்றவாறு இந்தக் காலச்சக்கரத்தில் உழலும் ஜீவனுக்கு, பகவானின் வாக்கு சஞ்சீவி போன்றதாகும். நீரில் மூழ்கிக் கொண்டிருப்பவனுக்கு நாவாய் எங்ஙனம் உதவுகின்றதோ அதுபோல சம்சாரமெனும் கடலில் மூழ்கிக் கொண்டிருப்பவனுக்கு இறைவன் நாவாயாக ஆகின்றான். எத்துணை பரந்த கடலாயினும் ஒரு சிறிய நாவாயினால் எங்ஙனம் தாண்டிவிட இயலுமோ, அவ்வாறே பக்தியெனும் சிறிய தெப்பத்தினால் சம்சாரக் கடலைத் தாண்ட இயலும். உங்களைத் தப்பாது கடைத் தேற்றுவேன் என்று பகவான் கூறுவதால், உங்களில் எவர் உண்மையில் கையமர்த்தி உதவி கோருகிறீர்களோ அவர்களுக்கு இவ்வுதவி கிடைக்கும் ஏனையவர்க்கில்லை என்பது கருத்து. எவர் கடவுளை தியானிப்பதில்லை, சிந்திப்பதில்லையோ அவர்களைக் கடவுளும் நினையார். துக்கமாகிய கடலில் அவர்கள் எத்துணையோ காலம் அமிழ்ந்திருக்க நேரிடும். ஜீவன் தான் செய்ய வேண்டியதைச் செய்தால் பகவான் அவர் செய்ய வேண்டியதைச் செய்வார். எனவே

சம்சார சாகரத்தினின்றும் விடுதலை வேண்டுபவன் பகவானை பக்தியுடன் தியானித்தல் வேண்டும்.

'யேது' என்றதால் எவராயினும் (சாதி மத இன வேறுபாடின்றி) இறைவனைச் சார்ந்து நின்றால் கடைத்தேற இயலும் என்பது கருத்து. 'ஸர்வாணி கர்மாணி' என்பதால் தான் செய்யும் ஏதேனும் ஒரு நற்செய்கையை மட்டுமன்றிச் செய்யும் ஒவ்வொரு செயலையும் அவனுக்கு அர்ப்பணம் செய்தல் வேண்டுமென்பது கருத்து.

'அனன்யேனயோகேன்' - இதுவரை கர்மயோகம் , ஞானயோகம், பக்தியோகம் முதலான பலவிதமான யோகங்களைப் பற்றிக் கூறி மேலும் ஒரு புதிய யோகத்தைப் பற்றிக் கூறுகிறார். ஆகவே 'அனன்ய யோகம்', இது தனியாக ஒரு யோகமில்லையெனினும் எல்லா யோகத்துடன் இதுவும் சேர்ந்தால் தான் அவை பரிமளிக்கும். எந்த யோகமாயினும் மாறுபடாத உள்ளத்துடன் பின்பற்றினால் மட்டுமே பலன் கிடைக்கக்கூடும். ஏனைய சிந்தனைகளால் அலைப்புறாது இறைவன் ஒருவனையே சிந்தித்திருத்தல் வேண்டுமென்பது கருத்து. 'மாம் த்யாயந்த உபாஸதே' - 'மாம் உபாஸதே' என்னாது 'த்யாயந்தஹ்' என்று சேர்த்துக் கூறியதால், சாதாரண உபாசனை முறைகளைவிட மிக உயர்ந்தது என உயர்த்திக் கூறியதாகிறது. மந்திரஜபம் செய்யும் போது மந்திர உச்சாடனத்துடன் கூட, மந்திரப் பொருளையும் எவ்வாறு சேர்த்து நினைத்தல் வேண்டுமோ, அவ்வாறே இறைவனை உபாசிக்கும் போது அவனது சொரூபம், இலட்சணம், இயல்பு இவற்றை நினைத்துப் பார்த்தல் வேண்டும்.

'தத்ர ப்ரத்யைக தானதாத்யானம்' என்ற பதஞ்சலியோக சூத்ரம் இக்கருத்தையே தெரிவிக்கிறது.

'சமுத்ரதா', 'உத்தரதா' என்னாமல் 'சமுத்ரதா' என்றது பகவத் உபாசகர்களை நானே எளிதாக கரையேற்றுவேன் என அவர்களுக்கு உறுதியளிப்பதாக உள்ளது.

'ம்ருத்யு சம்சார சாகராத்' - சம்சாரத்தைக் கடலுக்கு உவமையாகக் கூறுகிறார். சம்சாரமெனும் கடலும் காமமெனும் முதலையெனும் பயங்கரமான நீர்வாழ் பிராணிகளைத் தன்னிடத்தே உடையது. ஆனால் பலர் சம்சார சுகத்தினை ஆனந்தம் அளிக்க வல்லதாகக் கருதி அதனை ஒதுக்க வேண்டியதில்லை என்கின்றனர். அஞ்ஞானம் காரணமாகவே அவர்கள் அங்ஙனம் கூறுகின்றனர். அதனது உண்மை சொரூபத்தை பகவான் இங்கு வெளிப்படுத்துகிறார். அதனை 'ம்

ருத்யு சம்சாரம்' என்கிறார். அதாவது மரணத்தோடு கூடியது. பிறப்பு இறப்பு எனும் இவ்விரண்டிற்குமிடையில் அகப்பட்ட ஜீவன் அமரத்வத்தை அடைவதற்கு, அமிர்த ஸ்வரூபனான பகவானை, சச்சிதானந்த மூர்த்தியைச் சரணடைதல் வேண்டும்.

'ன சிராத்' - என்றதால் பகவானை அடைந்த ஜீவன் தப்பாது விமுக்தியடைவான் என்பது தெளிவாக்கப்படுகிறது. இவ்வாறு பகவானைச் சரணடைந்து முக்தியடைந்தோர் - கஜேந்திரன், பிரஹ்லாதன், அம்பரீஷன், திரௌபதி முதலானோர்.

**வினா :** சம்சாரமென்பது எத்தகையது?

**விடை :** 1. கடலைப் போன்று பயங்கரமானது, ஆழமானது, 2. பிறப்பு இறப்புடன் கூடியது.

**வினா :** அதனின்று விடுபடுதல் எங்ஙன்ம்?

**விடை :** இறைவனைச் சரணடைந்து பக்தி செய்தால், அவரே அதனின்றும் விடுவிப்பார்.

**வினா :** இறைவனை எவ்வாறு தியானிக்க வேண்டும்?

**விடை :** 1. செயல்களனைத்தையும் அவனுக்கு அர்ப்பித்தல் வேண்டும், 2. அவனையே மேலான கதியாகக் கருதியிருத்தல் வேண்டும், 3. சித்தத்தை அவனிடத்திலேயே இருத்துதல் வேண்டும், 4. அவனையே தியானித்து பக்தி செய்தல் வேண்டும்.

**வினா :** அங்ஙனம் உபாசிப்பவர்களை எப்போதும் இறைவன் கரையேற்றுவார்?

**விடை :** உடனேயே ('நசிராத்')

**முன்னுரை**

பகவானுடைய சில வழிகளை நான்கு சுலோகங்களில் தொடர்ந்து கூறுகிறார். அம்முறையில் முதன் முதலில் மனதைத் தன்மீது நிறுத்துமாறு கிருஷ்ணர் கூறுகின்றார்.

*மய்யேவ மன ஆதத்ஸ்வ மயிபுத்திம் நிவேசய!*
*நிவஸிஷ்யஸி மய்யேவ அத ஊர்த்வம் நஸம் சய!! - (8)*

**சொற்பொருள்**

*மய்யேவ-என்னிடத்தே, மனஹ்-மனத்தை, அத்தஸ்வ-நிலையாக நிறுத்திவை, மய-என்னிடத்தே, புத்திம்-புத்தியை, நிவேசய-செலுத்து, அதஹ் ஊர்த்வம்-அதன்பின், மயி ஏவ-என்னிடத்தே, நிவஸிஷ்யஸி-வசிப்பாய், நஸம் சய-அதில் எவ்வித ஐயமுமில்லை.*

**கருத்துரை**

*என்னிடத்தேயே மனதை வைத்து, என்னிடத்தேயே புத்தியைச் செலுத்துக. பின்பு என்னிடத்தேயே வசிப்பாய் என்பதில் ஐய மில்லை.*

**விளக்கம்**

*ஒரு ஆசிரியர் எங்ஙனம் மாணவன் ஒருவனுக்குப் பாடங்களை விரிவாக விளக்குவாரோ, அவ்வாறே பகவான் ஒன்றன்பின் ஒன்றாக சாதனை வழிமுறைகளை அர்ஜுனனுக்கு விளக்கிக் கொண்டே போகிறார். மனத்தையும் பக்தியையும் பரமாத்மாவிடத்தே நிறுத்து தல் முதல் பாடம். மனதை மட்டும் நிலை நிறுத்தினால் போதாதா ஏன் புத்தியையும் செலுத்துதல் வேண்டும் என்று கேட்டபின் புத் தியே எதனையும் நிச்சயித்து நிர்ணயித்துக் கொள்ளும் திறம் வாய்ந் தது. எனவேதான் புத்தியின் ஆதிக்கம் இல்லாவிடில் மனதானது பலவாறாக அலைப்புற்றுக் கிடக்கும், மனம் நினைப்பதை நிச்ச யித்து நிர்ணயித்துக் கொள்வது புத்தியே. எனவே இறைவனை பற்றி உறுதியான பற்று ஏற்பட புத்தி அவசியம். மனம், புத்தி மற்றும் இதர இந்திரியங்கள் இவற்றை வேறெதன் மீதும் செல்லவிடாது இறை தியானத்திலேயே வைத்திருக்க முயற்சி செய்தல் வேண்டும். அவ் வாறாக மனத்தை இறைவனிடத்து வைத்தது முதலே அவன் இறை வனிடத்திலே வசிக்கிறான் என்பதில் ஐயமில்லை. உப்புக்கல் கட லில் கரைந்து நிற்பதுபோல மனம் எப்போதும் எதை நினைக்கி றதோ அதுவாக மாறும் இயல்புடையது. மனம் எங்கிருக்கிறதோ மனிதன் அக்கணமே அங்கிருக்கிறான். ஆகவே மனம் எப்போதும் இறைவனிடத்திலேயே நிலைக்கும்போது, படிப்படியே தெய்வச் செயலிலேயே நாட்டம் கொள்ளும். அதுவே மோட்சம். இறைவனி டம் வசித்தல் என்பது இதுவே. இதில் எவ்விதமான ஐயத்திற்கும் இடமில்லை. இதுவே உண்மை என்கிறார் பகவான். எனவே சாத கன் தன் மனத்தை தியானத்தின் வழியே முயன்று இறைவனிடத்து*

நிலை நிறுத்தினால் மோட்சம் அடைவதைப் பற்றிய கவலையே தேவையில்லை என்கிறார்.

'ந சம்சயஹ்'-இதில் ஐயமேதுமில்லை என்று சாட்சாத் இறைவனே சொல்வதால் இவ்வாக்கியம் எத்தகைய நம்பிக்கை அளிக்கக் கூடியது என்பதை ஊகித்தறிதல் கூடும்.

'மயிஏவ'-என்னிடத்தே என்று சொல்வதால் தெய்வத்தைத் தவிர வேறொன்றின் மீதும் கருத்து செலுத்துதல் தகாது என்பது தெரிகிறது.

**வினா :** அவ்வாறு மனம், புத்தி இரண்டையும் நிலை நிறுத்துவதால் பலன் என்ன?

**விடை :** அவ்வாறு நிறுத்தினால் இறைவனிடத்திலேயே வசித்தல் இயலும். இதில் ஐயமேதுமில்லை.

முன்னுரை

அவ்வாறு தெய்வத்தின்பால் உறுதியாக மனதை வைக்க இயலாதவன் என்ன செய்வது என்பதற்கான விடை அடுத்து வருகிறது.

*அத சித்தம் ஸமாதாதும் நசக்னோஷி மயி ஸ்திரம்!*
*அப்யாஸ யோகேன ததோ மாமிச்சாப்தும் தனஞ்ஜய!! - (9)*

சொற்பொருள்

தனஞ்ஜய-பார்த்தா! அதஹ்-இனி, சித்தம்-மனத்தை, மயி-என்னிடத்தே, ஸ்திரம்-உறுதியாக, ஸமாதாதும்-நிறுத்துதற்கு, ன சக்னோஷி-இயலாவிடின், ததஹ்-அதன் பின், அப்யாஸ யோகேன-பயிற்சியினால், (அப்யாச யோகத்தால்), மாம்-என்னை, ஆப்தும்-அடைய, இச்சஹ்-இச்சை கொள் (விரும்பு).

**கருத்துரை**

அர்ஜுனா! சித்தத்தை என்பால் உறுதியாக வைத்தல் இயலாவிடின், அப்யாச யோகத்தால் என்னை அடைய முயற்சி செய். (பயிற்சியால் அந்நிலையையடைய எவ்வாறேனும் முயற்சி செய்தல் வேண்டும் என்பது கருத்து).

**விளக்கம்**

*இதற்கு முன் தெரிவிக்கப்பட்ட சாதனைகளைச் செய்ய இயலாதவனுக்கு, பகவான் வேறு சில மாற்று முறைகளைக் கூறுகின்றார். அப்பக்தர்களின்பால், சாதகர்களின்பால் சர்வேசுவரனுக்குத்தான் எத்தகைய கருணையுள்ளம் மனத்தால்தான் இவ்வுலக பந்தம் ஏற்படுகிறது. மனதால்தான் மோட்சமும் கைகூடுகிறது.*

*'மனஏவ மனுஷ்யானாம் காரணம் பக்த மோக்ஷயோஹ்' (அமிருத பிந்தோ பஷித்-10) எனவே எவ்விதத்திலாவது முயன்று இறைவனிடத்தே சித்தத்தை வைத்தல் முக்கியம் என்பதும் மோட்சத்தை அடைய அதைத் தவிர வேறு வழியில்லை என்றும் கூறுகிறார். ஒவ்வொருவரும் ஏதோ ஒரு வகையில் முயன்று, மனதை வெளிப்புற விஷயங்களில் ஈடுபடுத்தாது, காட்சிப் பொருள்களின் மேல் கருத்து சென்றுவிடாது தடுத்து நிறுத்தி, அதனை இறைவன் மீது ஆன்மாவில் நிறுத்துதல் வேண்டும். மனம் ஆன்மாவில் நிலைத்து, ஆன்மாவில் இறைவனைக் காண்பதே மோட்சம். ஆகையால் அந்நிலை பயிற்சியின் வழி முயற்சித்து, சாதித்தல் வேண்டும். 'யதோ யதோ நிச்சந்தி' (6-26) என்று பகவான் தெரிவிப்பது போல் சபல மனத்தை ஒரு நிலைப்படுத்தி தன் வசத்தில் நிறுத்தி ஆன்மாவில் செலுத்துதல் வேண்டும்.*

*'அப்யாச யோகேன' - அப்பியாச யோகமென்பது கர்மயோகம், ஞானயோகம், பக்தி, தியான யோகம் இவையனைத்தையும் தன்னிடத்தே கொண்டிருத்தல் வேண்டும். எல்லா யோகங்களுக்குள் 6-ஆவது சுலோகத்தில் சொல்லப்பட்ட அனன்ய யோகம், இதில் சொல்லப்பட்ட அப்யாச யோகம் மிகவும் அவசியமானது. இதனையும் அவற்றுடன் செய்தால்தான் மற்றை யோகங்களனைத்தும் நன்கு வளர்ச்சி பெற்று ஒளிர முடியும்.*

*சில சாதகர்கள் குருவிடம், 'அய்யா என் மனம் தியானத்தில் இறைவனிடத்து நிலைப்பதில்லையே! என்ன செய்ய வேண்டும்' என்று கேட்கக்கூடும், அதற்கு விடையாக இங்கு, 'மனம் நிலைப்பதற்குப் பயிற்சியைத் தவிர வேறு வழியில்லை!' என பகவான் குருவாக நின்று போதிக்கின்றார்.*

*'அப்யாசேனது கௌந்தேய', 'வைராக்யேணசக்ருஹ்யதே' என்ற வாக்கியத்தில் கூட பயிற்சி அவசியம் என வலியுறுத்துகிறார்.*

எனவே ஒவ்வொருவரும் தம் மனத்தை தியானத்தில் நிறுத்துவது இயலாது என உற்சாகம் இழந்து விடாதிருக்க பகவான் இங்குப்பயிற்சியின் மூலம் அது இயலும். அது ஒன்றே மோட்சத்திற்கு வழி என்கிறார்.

**வினா :** மனத்தை இறைவனிடத்தே நிறுத்த வேண்டும் என்றீரே! அவ்வாறு நிறுத்த இயலாதெனின் என்ன செய்தல் வேண்டும்?

**விடை :** பயிற்சியின் மூலமாக அந்நிலையை எவ்வாறேனும் எட்டுதல் வேண்டும்.

முன்னுரை

ஒருவேளை அவ்வாறு பயிற்சி செய்தல் இயலாதெனின் என்ன செய்ய வேண்டும் என்பதற்கான விடை அடுத்து வருகிறது.

*அப்யாஸே அப்ய ஸமர்த்தே அஸிமத்கர்ம பரமோ பவ!*
*மதர்த்தமபி கர்மாணி குர்வன் ஸித்தி மவாப்ஸ்யஸி!!* (10)

சொற்பொருள்

அப்யாஸே அபி-அப்யாசத்திலும், அஸமார்த்தஹ்அஸி-செய்ய இயலாதவனாய் இருக்கின்ற மத்கர்மபரம-என்பொருட்டுக் கர்மம் செய்பவனாய், பவ-இருப்பாய், மதர்த்தம்-என்பொருட்டு, கர்மாணி-கர்மங்களை, குர்வன் அபி-செய்வதாலும், சித்தம்-சித்தியை, அவாப்யஸி-அடைவாய்.

கருத்துரை

அப்பியாசத்தில் உனக்கு வல்லமையில்லையாயின், என் பொருட்டுக் கர்மம் செய்வதைக் குறிக்கோளாகக் கொள். எனக்காக கர்மம் செய்வதாலும் நீ சித்தியடைவாய்.

விளக்கம்

மேற்சொன்ன மன ஒருமைப்பாடு கைகூடாதவிடத்து சாதகன் முன்னேற மற்றுமொரு மாற்றுவழியைக் கருணையுடன் பகவான் நமக்கு அருளியுள்ளார். மனதை நிலைநிறுத்த இயலாதவன் தெய்வ காரியங்களில், தர்ம காரியங்களில் பிறருக்கு உபகாரம் செய்வதில், பிற உயிர்களுக்கு நன்மை விளைவிக்கும் செயல்களில் ஆர்வம்

கொண்டு, பலன் கருதாமல் ஆற்றுதல் வேண்டும். தன்னை இறைவன் ஒரே கருவியாகக் கொண்டுள்ளான் என்பதையுணர்ந்து செயல்பட வேண்டும். ஜபம், பிரார்த்தனை, கீர்த்தனம், பஜனை, பூசை, விரதம் ஆகிய யாவற்றையும் இறைவனுக்கு திருப்தியளிக்கும் வகையில் செய்ய வேண்டும். 'மத்கர்ம பரமோபவ' என்பதன் பொருள் இதுவே. இதனால் மனம் ஒரு நிலைப்பட்டு சித்த சுத்தியடைந்து, முறையாக ஞானம் பெற்று அதனால் மோட்சம் அடையும் மற்றுமொரு மாற்றுவழியைக் கருணையுடன் பகவான் நமக்கு அருளியுள்ளார். மிகவும் சூட்சுமமான நுண்ணிய மனத்தை, கட்டுப்படுத்த இயலாதவர்க்கு கர்ம மார்க்கம் மிகவும் எளிதானது. 'மதர்த்தம்' என்று பகவான் சொல்கிறாரேயன்றி, 'த்வதர்த்தம்' என வரவில்லை. அதனால் எந்தவொரு செயலையும் இறைவனது கைங்கரியமாக எண்ணிச் செயல்பட வேண்டுமே தவிர, சொந்த நன்மையைக் கருதிச் செய்தல் கூடாது.

'குர்வன் சித்தி மவாப்ஸ்யஸி' என்ற வாக்கியத்தால் கர்மயோகம் முதலானவை மோட்ச சித்திக்கும் காரணமாகிறது என்பது தெரிகின்றது. எவ்வாறெனில், செயல்களை நிஷ்காமமாகச் செய்யும் போது சித்த சுத்தி; அதனால் ஞானம்; அதனால் முக்தி எனப் படிப்படியாக முன்னேற்றம் ஏற்படும். அதாவது நிஷ்காஹ கர்ம மார்க்கத்திற்கு மட்டுமே அத்தகைய சக்தியுள்ளது என்றும், சுயநலனுக்காகச் செய்யப்படுவதற்கன்று என்பதும் தெளிவாகிறது.

**வினா :** மனதை இறைவனிடம் நிலைநிறுத்துவதற்கு எந்தவிதமான பயிற்சியையும் மேற்கொள்ள இயலாதவர்கள் எங்ஙனம் முக்தியடைதல் கூடும்?

**விடை :** அத்தகையோர் தெய்வ காரியங்களை, தர்ம காரியங்களை, பிறர் நன்மைக்காகச் செய்யும் காரியங்கள் பலவற்றையும், ஈசுவரனுக்கு அர்ப்பணித்து விட்டால் முறையாக மோட்சம் பெறுவான்.

**முன்னுரை**

அவ்வாறு இறை தொடர்பான காரியங்களையும் செய்ய இயலாதவனுக்கு ஏற்பட்ட வழிமுறை யாது என்பதனை அடுத்துக் கூறுகிறார்.

*அதை த தப்ய சக்தோ அஸி கர்தும் மத்யோக மாச்ரிதஹ!*
*ஸர்வகர்ம பலத் த்யாகம் ததஹ்குரு யதாத்மவான்!!- (11)*

### சொற்பொருள்

அத-பின்பு, மத்யோகம்-என்னைப் பற்றிய யோகத்தில், ஆஸ்ரிதஹ் - பொருந்தியவனாய், ஏதத் அபி-இதைக்கூட கர்தும்-செய்வதற்கு, அசக்தி அஸி-இயலாதிருப்பாயானால், ததஹ் - அதன் பிறகு, யதாத்மவான்-தன்னடக்கம் பயிலுபவனாய், சர்வ கர்ம பலத் தியாகம்-அனைத்து கர்ம பலனையும் தியாகம், குரு செய்வாயாக!

### கருத்துரை

அதன்பின், ஒரு நிலைப்பட்ட மனத்துடன் எண்ணைக் குறித்த யோகம் செய்வதற்கும் இயலாதவனாய் இருப்பின், தன்னடக்கம் பயின்று, கர்ம பலன் முழுவதையும் துறந்த விடுவாயாக!

### விளக்கம்

முன் கூறிய மூன்று வழிமுறைகளையும் பின்பற்ற இயலாதவனுக்கு, எளிதான வேறொரு வழியினைக் கூறுகின்றார். காலையில், உறங்கி எழுந்தது முதல் இரவு படுக்கும் வரை மனிதன் செய்யும் செயல்கள் பல. எக்காரியத்தைச் செய்தாலும் இறை நினைப்புடன் தான் ஒரு 'நிமித்த மாதிரன்' - கருவி என எண்ணிக் கொண்டு அனைத்தையும் சர்வேசுவரனே நடத்திச் செல்கிறான் என்ற எண்ணத்துடன், தான் செய்யும் செயல்களின் பலனை ஈசுவரனுக்கு அர்ப்பணித்துச் செய்ய வேண்டும். அனைத்து கர்மங்கள் என்பதால், நற்காரியங்கள், தீய பாவ காரியங்களின் பலனைக் கூடத் தியாகம் செய்தல் வேண்டுமென நினைத்தல் கூடாது. ஏனெனில் பாவக்காரியங்களைப் புரிதல் கூடாது என்பது முன்பே சாஸ்திரங்களில் விதிக்கப்பட்டிருக்கிறது. தானதர்மங்கள், பூசை, விரதங்கள் தினசரி செய்யப்படும் காரியங்கள் ஆகிய அனைத்தையுமே இறை நினைப்புடனும் அதன் பலன்கள் யாவற்றையும் ஈசுவரார்ப்பணமோ, கோவிந்தார்ப்பணமோ, கிருஷ்ணார்ப்பணமோ, ராமார்ப்பணமோ செய்தல் வேண்டும்.

மேற்சொன்னவற்றில் ஒன்றில் ஒன்று எளிதான வழிகளைப் பற்றி கூறிக் கொண்டே போகிறார். அவற்றில் அவரவர் மனநிலைக் கேற்ப ஏதேனும் ஒன்றைத் தேர்ந்து கைக்கொள்ளுதல் வேண்டும். இறுதியில் கூறப்பட்ட வழிமுறையைச் சாமான்யன் கூட எளிதாகப் பின்பற்ற முடியும். ஒவ்வொருவரும் தான் நடக்கும் செயலை இறை

வனுக்குச் செய்யும் பிரதட்சிணமாகக் கருத வேண்டும். பேசும் போது அதனைத் தெய்வ சங்கீர்த்தனமாக எண்ண வேண்டும். 'மா மனு ஸ்மர யுத்யச' என்றவாறு இத்தகைய தெய்வீகப் பண்புடன் செயல்பட்டுச் செயல்களின் பலன்களை ஈசுவரார்ப்பணம் செய்தால் படிப்படியே பாவம் தொலைந்து, சித்த சுத்தியேற்பட்டு, ஞானோத யம் உண்டாகி மோட்சம் சித்திக்கும்.

ஆயின் இந்நிலையை யடைவதற்கு, அனைத்து கர்ம பலன்க ளையும் தியாகம் செய்வதற்குச் சிறிது மனத்தை நெறிப்படுத்துவ தற்கு முயற்சி செய்தல் அவசியமாகிறது. எனவேதான், 'யதாத் மவான்' என்று சொல்லப்பட்டது. ஈடுபாட்டுடன் மனத்தை நியமத் திற்குக் கொணர்ந்து, ஸர்வ கர்ம பலத்தியாகம் எனும் எளிதான ஆன்மீக சாதனையை ஜீவர்கள் நடைமுறையில் பழகுதல் வேண்டும்.

**வினா :** இதற்கு முன் சொல்லப்பட்ட சுலோகத்தில் தெரிவிக்கப் பட்ட தெய்வ காரியங்களைச் செய்வதற்கியலாதவர்கள் முக்தி பெறு வதற்கு ஏதேனும் வழிமுறைகள் உள்ளதா? இருப்பின் அது எது?

**விடை :** உள்ளது. நியமங்களைச் சரிவரக் கடைப்பிடித்து, தான் செய்யும் எல்லா கர்மங்களின் பலனையும், ஈசுவரார்ப்பணம் செய் தல் வேண்டும். அதுவே நிச்சயமான வழி.

**முன்னுரை**

அடுத்து கர்மயோகத்தின் சிறப்பு நிரூபிக்கப்படுகிறது.

*ச்ரேயோ ஹி ஞான மப்யா ஸாத் ஞானாத் த்யானம் விசிஷ்யதே!*
*த்யானாத் கர்ம பலத்யாக ஸ்தியாகாச் சாந்திரா னந்தரம்!!-* (12)

**சொற்பொருள்**

ப்யாஸாத்-(விவேகமற்ற) பயிற்சியைக் காட்டிலும், ஞானம்-சாஸ்திர ஞானம், ச்ரேய ஹி-சிறந்ததல்லவா? ஞானத்-ஞானத்தைக் காட்டிலும், த்யானம்-தியானம், விசிஷ்யதே-விசேஷமானது, த்யா னாத் த்யானம்-த்யான காலத்தில் மட்டுமே நிலைத்திருக்கும் மனத் தைக் காட்டிலும், கர்மபலத் த்யாகஹ்-கர்ம பலத்தியாகம் (செய்யும் காரியங்களின் குற்றமில்லாமல் இருப்பது) விசிஷ்யதே-உயர்ந்தது, த்யாகாத் அனந்தரம்-அவ்வாறு கர்ம பலத் த்யாகம் செய்த பின், சாந்தி-சாந்தி, பவதி-உண்டாகிறது.

### கருத்துரை

விவேகமற்ற அப்யாசத்தை விட ஞானம் சிறந்தது. ஞானத்தி லும் தியானம் சிறந்தது. தியானத்திலும் (தியான காலத்தில் மட்டுமே மனத்தைக் கட்டுப்படுத்தவல்லதாகையால்) கர்ம பலத் தியாகம் சிறந்தது. கர்மபலத் தியாகத்தினின்றும் விரைவில் சாந்தி கிடைக் கின்றது.

### விளக்கம்

இங்கு 'அப்யாசம்' என்ற விடத்து, விவேக மற்ற அப்யாசமென் றும், 'ஞானம்' என்றவிடத்து சாஸ்திர ஞானமென்றும், 'தியானம்' என்றவிடத்து முழுமையற்ற தியானமென்றும்-அதாவது தியான காலத்தில் மட்டுமே குற்றமற்ற தன்மை என்பதையும், தியானத் தைப் பயிற்சி செய்வோன் புரிந்து கொள்ளுதல் வேண்டும்.

'ஞான தியானம் விசிஷ்யதே'-'வாசக' ஞானத்தை விட அனுப வபூர்வமான ஞானம் மிக உயர்ந்தது. ஞானத்துடனும், ஒருமுனைப் பட்ட நிட்டையுடன் தியானித்தல், காண்கின்ற அனைத்தும் பரமன் மயம் என தியானித்தல் மேலானது. எனவே வெறும் கல்வி ஞானத் தைவிட சாஸ்திர ஞானத்தை விட தியானம் மேலானது என்பது பெறப்படுகின்றது.

'த்யானாத் கர்ம பலத் தியாகஹ்'-கர்மத்தைச் செய்கையில் செய் கின்ற செயல் தனக்காகவல்ல கடவுளுக்காகவே செய்யப்படுகின்றது என்ற நினைவுடன் செய்ய வேண்டும். தியானத்தைப் பயில்பவ னுக்கு தியான காலத்தில் மட்டுமே சித்தம் சுத்தியடைகிறது. அவ்வா றின்றி கர்ம பலத் தியானம் செய்பவனுக்கு சித்தம் எப்போதும் தூய்மையாக இருக்கின்றது. நிர்மலமாக இருக்கின்றது. தியாகிக்கு எப்போதும் தூய்மை நிலையிலே சித்தம் இருப்பதால்தான் கர்மப லத் தியாகம் தியானத்தை விட சிறந்தது. இதிலிருந்து, நிஷ்காம கர்ம யோகத்தின் உயர்வு தெரிகின்றது. கர்மாவைச் செய்யாதிருத்தல் மக்க ளில் பலருக்கும் இயலாது. ஆயின் ஒவ்வொருவனும் கர்மாவைச் செய்யும்போது கர்மபலனைத் தியாகம் செய்வதற்குப் பயின்று, பற் றில்லாமல் செய்து வருவானானால் மிகுந்த பயனடைவான். பக்தி, தியானம், ஞானம் இவற்றிற்கு சித்த சுத்தி மிக அவசியம். அது நிஷ்காம கர்ம யோகம் மூலமாகவும், கர்ம பலத் தியாகத்தின் மூலமா கவும் மிகவும் எளிதாகக் கிடைத்து விடுகிறது.

'த்யாகச் சாந்திரனந்தரம்' - கர்ம பலத்தியாகத்தினால், ஈசுவ ரார்ப்பணம் செய்யும் புத்தியினால் சித்தம் சுத்தியடைவதால் அமைதி உடனேயே கைகூடுகிறது. கர்ம பலனைத் தியாகம் செய்வ தாலும், தான், தனக்கு என்ற பற்றுதலை விட்டு விடுதலும், உலக விஷய சுகங்களில் பற்றுவிடுத்தலும் ஆகியவற்றால் அமைதி கிட்டு கிறது. சித்தத்தில் உள்ள அழுக்கினைப் போக்குவதே அமைதி கிடைப்பதற்கான வழி. (தேஷாம் ஸா நித்சரஸ்வதீ நேதரரேஷாம்). ஏனெனில், நிர்மலமான சித்தத்திலேதான் ஆன்மா வெளிப்படுகின் றது. துக்கம் நிறைந்த இந்த சம்சாரத்தில் ஒவ்வொருவனும் அமைதி வேண்டுமென்றே விழைகிறான். ஆனால் அதனை அடையும் விதம் தெரியாது தவிக்கிறான். 'த்யாகாத் சாந்தி'-தியாகம் செய்வதால் மட் டுமே அச்சாந்தியைப் பெறவியலும் என்று பகவான் இங்குத் தெளி வாகக் கூறுகிறார்.

**வினா :** கர்ம பலத் தியாகத்தின் மகிமை எத்தகையதோ கூறுங்கள்!

**விடை :** அது (விவேகத்துடன் கூடிய) அப்யாசத்திலும் (சாஸ்திர) ஞானத்தைக் காட்டிலும் தியானத்தைக் காட்டிலும் மேலானது.

**வினா :** அமைதி எங்ஙனம் கிட்டும்?

**விடை :** கர்மபலத் தியாகத்தினால்

**முன்னுரை**

இதுவரை பக்தியின் அங்கமாகிய பலவித சாதனை முறைக ளைப் பற்றிக் கூறி, இனி ஏழு சுலோகங்களின் வாயிலாகச் சிறந்த பக்தியின் இலக்கணத்தைக் கூறுகிறார்.

*அத்வேஷ்டா ஸர்வபூதானாம் மைத்ரஹ கருண ஏவச!*
*நிர்மமோ நிரஹங் காரஹ ஸமதுக்கஹ ஸுகஹ க்ஷமீ!! - (13)*

*ஸந்துஷ்டஹ ஸததம் யோகீய தாத்மா த்ருட நிஸ்சயஹ!*
*மய்யர்பித மனோ புத்திர்யோ மத்பக்தஹ ஸமே ப்ரியஹ!! - (14)*

**சொற்பொருள்**

ஸர்வபூதானாம்-எல்லா உயிர்களிடத்தும், அத்வேஷ்டா-வெறுப்பின்றி, மைத்ரஹ்-நண்பனாய், கருணஹஏவச-கருணையுடையவனாய், நிர்மமஹ்-அகங்காரம் இல்லாதவனாய், சமதுக்க சுகஹ்-இன்ப துன்பத்தைச் சமமாகக் கருதுபவனாய், க்ஷமீ-

பொறுமையுடையவனாய், ஸததம் ஸந்துஷ்டஹ-எப்போதும் சந்தோஷமுடையவனாய்; யோகீ-யோகியாய் (தெய்வத்திடம் சித்தத்தை நியோகிப்பவன்), யதாத்மா-தன்னடக்கம் உடையவனாய் (மனத்தையடக்கியவன்), த்ருட நிச்சய-திடமான புத்தியுடன் கூடியவனாய், மயி-என்னிடத்து, அர்ப்பித-சமர்ப்பித்த, மனஹ-மனம் புத்தி இவற்றையுடையவனாய், மத்பந்தஹ-இருப்பவன் எவன் என் பக்தனோ, யஹ-அவனே, ஸஹ-அவன், மே-எனக்கு, ப்ரிய-பிரியமானவன்.

## கருத்துரை

எல்லா உயிர்களிடத்தும் வெறுப்பின்றி நட்பும் கருணையும் உடையவனாய், மமகாரம் அகங்காரம் இவையற்று, இன்ப துன்பங்களைச் சமமாய்க் கருதி, பொறுமையுடனும், எப்போதும் மகிழ்ச்சியுடனும், யோகியாய், தன்னடக்கம் உடையவனாய் திடநிச்சயமுள்ளவனாய், என்னிடத்து அர்ப்பிக்கப்பட்ட மனம் புத்தியுடையவனாய் யார் என் பக்தனாகிறானோ அவன் எனக்குப் பிரியமானவன்.

## விளக்கம்

எத்தகையோன் தனக்குப் பிரியமானவன் என்பதை ஏழு சுலோகங்களில் பகவான் சொல்கிறார். முப்பத்தைந்து நற்குணங்களை வரிசைப்படுத்தி அக்குணங்கள் நிறைந்தவனே தனக்குப் பிரியமானவன் என்று ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மா சொல்கிறார். இக்குணங்களனைத்தையும் 'அத்வேஷ்டா' என்ற சொல்லுடன் தொடங்குவதால் 'அத்வேஷ்ட்ருத் வாதி' குணங்கள் எனப் புகழப் பெற்றவை. இம்முப்பத்தைந்து குணங்களும் 35 பாடங்கள் அல்லது

(Subjects) பாடத்தொகுதியாக உள்ளன. மாணவன் அனைத்துப் பாடங்களையும் நன்கு கற்று தேர்ந்தபின்தான் மேல்வகுப்புக்குப் போக தகுதி உடையவனாகிறான். அவ்வாறே இந்த 35 நற்குணங்களையும் உடையவன் மாத்திரமே இறைவனுக்குப் பிரியமானவனாகிறான். இந் நற்குணங்கள் இல்லாதவன் இறைவனது அருளுக்கு உகந்தவானாகைமையால் பிறப்பு இறப்புடன் கூடிய சம்சாரக் கடலில் அலைக்கழிக்கப்படுகிறான். துக்கத்தினின்றும் விடுபட வேண்டுமாயின் இறைவனது அருளைப் பெற வேண்டும். அவனது அனுகிரகமோ இந்நல்லிணக்கங்கள், நற்குணங்கள் உடையவனிடத்தே தான் பொழிகின்றது.

*ஸமோ ஹம் ஸர்வபூதேஷு நமே துவேஷ்யோ அஸ்திநப்ரியஹ!*
*யே பஜந்தி துமாம் பக்த்யா மயிதே தேஷு சாப்யஹம் (9-29)*

என்று பகவான் சொல்வது போல், உண்மையில் கடவுளுக்கு எவர் மீதும் தனிப்பட்ட முறையில் வெறுப்போ, அன்போ இல்லாவிடினும் எவர் அவனை பக்தியுடன் பூசிக்கிறார்களோ, அவர்களிடத்தே அவர் அருளைப் பொழிகிறார். அவரது அருளினால் பக்தர்கள் ஆத்ம ஞானமும் அதன் வழி முக்தியும் அடைந்தே தீருவார்கள். எனவே முக்தியை அடைய விரும்புபவன், சம்சார துக்கத்தினின்றும் விடுபட விரும்புபவன், இறைவனது அருளைப் பெற விரும்புபவன், இவ்வத்தியாயத்தில் கூறப்பட்டுள்ள பக்தனின் இலக்கணங்களை நன்கு அறிதல் வேண்டும். பலருக்குப் பகவானிடத்தில் அன்பு அதிகமுண்டு. ஆனால் அதுமட்டும் போதாது. பகவானுக்குத் தன்னிடத்தில் அன்பு உள்ளதா என்பதை அவன் அடிக்கடி பரிசீலித்துக் கொள்ள வேண்டும். பகவான் தான் சொல்லிய இந்நற்குணங்களையுடையவனிடத்தே தான் அன்புடையவனாய் இருப்பான் என்பதை 'யோமத் பக்தஹ ஸமே ப்ரியஹ' முதலான வாக்கியங்களில் கூறியுள்ளார். ஆதலால் ஜீவன் பக்தஹ கூறியுள்ளார். ஆதலால் ஜீவன் இந் நற்குணங்களை எவ்வாறாயினும் வளர்த்துக் கொள்ளுதல் வேண்டும்.

இங்ஙனம் எளிதாக அடையக்கூடிய பரமாத்மாவைச் சேர வேண்டும் என்கிற ஆசையுடையவன், சாதனைகளைச் சரிவர செய்து வருதல் வேண்டும். கீதை, நடக்கக்கூடியவற்றையும், அதற்கான சாதனை வழிகளையுமே கூறிச் செல்லும். அதனால்தான் இதனை நடைமுறை வேதாந்த கிரந்தம் என்கின்றனர். முதலில் 'ஸ்தித பிரக்ஞன்' இலக்கணங்களையும், வெறுப்பு முதலான குணங்கள் இல்லாத பக்தனின் இலக்கணம், அதன் பின்னர் 'அபயம்' முதலான தெய்வ குணங்கள் இவை யாவற்றையும் ஒன்றன் பின் ஒன்றாகச் சரிவரப் பின்பற்றுதல் வேண்டும் என்பதை கீதாச்சார்யன் வலியுறுத்திக் கூறுகிறார்.

எனவே முமுக்ஷுக்கள் இவையனைத்தையும் முறையாகப் பின்பற்றி பகவானின் அன்பிற்குப் பாத்திரமாகி, ஜன்ம ஈடேற்றமடைதல் வேண்டும். 'ஸர்வ பூதானாம்' என்று சொல்வதால் எதன் மேலும் வெறுப்பின்றி இருக்க வேண்டுமென்பதும், எல்லா உயிர்களிடத்தும் நட்பு கொள்ளுதல் வேண்டும் என்றும் போதிக்கப்பட்டுள்ளது.

'ஸந்துஷ்டஹ ஸகதம்'-ஏதோவொரு சமயத்தில் மாத்திரம் திருப்தியடைந்து, மறுபடியும் உலக விஷயங்களில் ஈடுபட்டு உழலு

தல் கூடாது. எப்போதும் மகிழ்ச்சியாக இருத்தல் வேண்டும்.

'த்ருடநிச்சய'-தெய்வ விஷயத்திலாவது, உலக விஷயத்திலாவது சரியான நோக்குடன் நிர்ணயத்திற்கு வந்து, சாதனையில் திடமான நம்பிக்கையுடனும் உறுதியான புத்தியுடனும் இருத்தல் வேண்டும். சாஸ்திரம், குருவின் சொற்கள் இவற்றில் திடமான நம்பிக்கை வேண்டும். இது 'முடியுமா முடியாதா' 'உள்ளதா இல்லையா' என்ற ஐயங்கள் எப்போதும் எழுதல் கூடாது. இறைவன் இருக்கிறான். அவனை நான் அடைந்தே தீருவேன் என்ற திடநிச்சயம் உள்ளவனாய் இருத்தல் வேண்டும். இல்லையெனில், 'மாயையின் வலையில் சிக்கி உழல நேரிடும்'.

'மய்யர்ப்பித மனோபுத்திஹ'- மனத்துடன் புத்தியையும் தன்னிடத்தே நிறுத்த வேண்டுமென கீதாச்சாரியன் எச்சரிக்கிறான். ஏனெனில் மனது நிலையில்லாதது. எனவே நிச்சயத் தன்மையுடைய புத்தி அதனுடன் சேராவிட்டால், அம்மனமானது சஞ்சலமுற்று இலக்கை அமைவதில் இடர் ஏற்படுத்துகிறது.

*யஸ்மான்னோத் விஜதே லோகோ லோகான்னோத் விஜதே சயஹ!*
*ஹர்ஷாமர்ஷ யோத்வேனாகர் முக்தோயஹ ஸ ச மே ப்ரியஹ!!* (15)

சொற்பொருள்

லோக - உலகமானது (மக்கள்), ந உத்விஜதே - பயத்தை அடைகிறதோ, யஸ்மாத் - எவனால் லோகாத் ச - உலகத்தினால், யஹ் - எவன் ந உத் விஜதே - பயத்தினை அடைவதில்லையோ, யஹ் - அவன், ஹர்ஷ, அமர்ஷ, பயம், மனக்கலக்கம் முதலானவற்றிலிருந்து, முத்தஹ் - விடுபட்டவனோ, ஸஹ்ச - அவனே, மே - எனக்குப் ப்ரியஹ் - பிரியமானவன்.

கருத்துரை

எவரால் இவ்வுலகம் துன்பப் படுவத்திலேயோ, இவ்வுலகத்தால் எவன் இடர்ப்படுவதில்லையோ, எவனொருவன், மகிழ்ச்சி, வெறுப்பு, பயம், மனக்கலக்கம், முதலானவற்றிலிருந்து விடுபட்டவனோ அவனே எனக்குப் பிரியமானவன்.

விளக்கம்

'லோகான்னோத் விஜதே' சத்ய மார்க்கத்தைப் பின்பற்றுபவன், உலக மக்களின் நிந்தைக்கோ போற்றுதலுக்கோஎவ்விதத்திலும் துன்

பமோ இன்பமோ அடைதல் கூடாது. பயமின்றி முன்னேறுதல் வேண்டும். (be fearless). 'விகத பீ' என்று ஒரு முறை பகவான் சொன்னதை இங்கு நினைவுபடுத்திக் கொள்ளுதல் வேண்டும்.

'ஹர்ஷா மாஷ்பயோத் வேகைஹ்' மகிழ்ச்சியோடிருந்தால் நல்லதே. ஆயின் மிழ்ச்சியில் அளவுக்கு மீறி உற்சாகமடைதல், நிந்தைக்கு மனக் கலக்கமடைதல், கோபத்திற்காளாகி மனவலிவு குறைதல் இவை கூடாது. கலக்கத்திற்குட்படாது தெளிந்த மனத்துடனும், உறுதியான மனத்துடனும் இருத்தல் வேண்டுமென்கிறார்.

*அனபே க்ஷஹ் சுசிர்தக்ஷ உதாஸீனோ கதவ்யதஹ!*
*ஸர்வாரம்ப பரித்த்யாகி யோமத் பக்தஹ் ஸமே ப்ரியஹ்!!* (16)

சொற்பொருள்

*அனப க்ஷ* - வேண்டுமென்ற எண்ணமில்லாதவன் (கோரிக்கையற்றவன்) *சுசி* - உள்ளும் புறமும் தூய்மையானவன், *தக்ஷஹ்* - திறமையுடையவன்; (சம யோசித புத்தியுடையவன்), *உதாசீனன்*, பற்றற்றவன், *கத வ்யதஹ்* - துக்கம் இல்லாதவன், *ஸர்வாரம்ப பரித்த்யாகி* - எல்லா காமிய கர்மங்களையும், சாஸ்திரங்களில் 'செய்தல் கூடாது' என விதிக்கப்பட்ட கர்மங்களையும் துறந்தவன், *மத்பக்திஹ்* - என்னிடத்து பக்தியுடையவன்; *யஹ்* - எவனோ, *ஸஹ்* - அவன், *மே* - எனக்குப் *ப்ரியஹ்* - பிரியமானவனாகிறான்.

**கருத்துரை**

கோரிக்கையற்றவனாய், உள்ளும் புறமும் தூயவனாய்த் திறமையுடையவனாய், ஓரம் சாராதவனாய், நடுவுநிலையோடிருப்பவனாய், பயம் துக்கம் இல்லாதவனாய், காமிய கர்மங்களைத் துறந்தவனாய் என்னிடத்துப் பக்தியுடையவனாய் எவன் இருக்கிறானோ, அவன் எனக்கினியவனாகிறான்.

**விளக்கம்**

'*சுசிர்தக்ஷ*' - கீதாச்சார்யன் மனத்தூய்மையை அவ்வப்போது வலியுறுத்திக் கூறுகிறார். உள்ளும் புறமும் தூய்மையைக் காப்பாற்றிக் கொள்ளுதல் வேண்டும். சரீரம், ஆடைகள், சுற்றுப்புறம், மனம் - இவையாவும் தூய்மையாக இருத்தல் வேண்டும். தூய்மையற்றவனிடத்துத் தூய்மையற்ற எண்ணங்களே இருக்கும். எனவே உடல் மனத் தூய்மையைப் போற்றுதல் வேண்டும்.

'தஹஹ்' - திறமையுடனும், சமயோசித புத்தியுடனும், ஆன்மீக சாதனைகளைச் செய்துவரல் வேண்டும். சிறிது கவனக் குறைவு ஏற்படினும் மாயையின் பிடியில் சிக்க நேரிடும்.

'கதவ்யதஹ்' - பக்தனானவன் அனைத்திற்கும் மூலாதாரமான பகவானைச் சரணடைந்தவனாதலால் இவ்வுலகில் அவன் பயப்படுவதற்கென்று எதுவுமிராது. துக்கம், பயம் இரண்டும் அவனை அணுகுவதில்லை.

'ஸர்வாரம்ப பரித்தியாகி' - செயல்கள் அனைத்தையும் முழுவதுமாகத் தியாகம் செய்தவன் என்றால் செயலற்றவன் என்பது பொருளல்ல. இறைவனுக்கு பிரியமான காரியங்களையே மேற்கொள்ளுபவன் என்றும், அனைத்து காரியங்களுக்கும் தானே கர்த்தா (doership) என்ற எண்ணத்தைத் துறந்தவன் என்பதும் பொருள் அல்லது காமிய கர்மங்களனைத்தையும் பற்றில்லாமல் செய்பவன், சாஸ்திரங்களில் ஒதுக்கி வைக்கப்பட்ட கர்மாக்களைச் செய்யாதவன் என்று பலவிதமாகப் பொருள் கொள்ளுதல் இயலும். காரியங்களில் தானே கர்த்தா என்ற எண்ணத்தினையும், சேர்க்கையையும் துறந்தவன் காரியத்தைச் செய்தாலும் செய்யாதவனேயாவான். எனவே அவன் 'ஸர்வ கார்ய பரித்தியாகி' ஆகிறான்.

*யோ ந ஹ்ருஷ்யதி ந்த்வேஷ்டி நசோசதி ந காங்க்ஷதி!*
*சுபாசுப பரித்தியாகீ பக்திமான்யஹ ஸமே ப்ரியஹ்!!*          *(17)*

சொற்பொருள்

யஹ் - எவனொருவன், ந ஹ்ருஷ்யதி - மகிழ்வடைவதில்லையோ, நத்வேஷ்டி - வெறுப்பதில்லையே, ந சோசதி - துயரப்படுவதில்லையோ, ந காங்ஹதி - ஆசைப்படுவதில்லையோ, யஹ் - அவன், சுபாசுபபரித் தியாகி - நன்மை, தீமை ஆகியவற்றை விட்டவன், ஸஹ் பக்திமான் - அத்தகைய பக்தன், மே - எனக்கு, ப்ரியஹ் - பிரியமானவன்.

**கருத்துரை**

எவனொருவன் மகிழ்தலும், வெறுத்தலும், துன்புறுதலும், அவாவுமின்றி நன்மை தீமைகளைத் துறக்கிறானோ அத்தகைய பக்தனே எனக்குப் பிரியமானவனாகிறான்.

**விளக்கம்**

'ந ஹ்ருஷ்யதி' - இங்கு மகிழ்ச்சியடையாதவன் என்பதற்கு, மனம் இன்பத்தில் ஈடுபடும்போது கட்டுப்பாடற்றுப் பொங்கிப் போகாதவன் என்பது கருத்து. மகிழ்ச்சியடைவது நன்றேயாயினும் இன்ப துன்பமெனும் இருமையில் சேர்ந்ததாகையாலும், அது மனத்தின் இயல்பாகையாலும், முழுமையான மனோலயத்திற்கு, நிரந்தரமான ஆத்ம நிலைக்கு அது ஒருவகையில் தடையாவதாலும் அங்ஙனம் கூறினார்.

'சுபாசுப பரித்யாகி' - இங்குப் படிப்பவர்க்கு ஒரு ஐயம் எழுதல் கூடும். இவ்வுலகில் அமங்கலமானவற்றை விடுதலே இயல்பல்லவா? ஆயின் அமங்கலத்தை மட்டுமின்றி மங்கலத்தையும் பரித்தியாகம் செய்பவன் என்று எங்ஙனம் கூறவியலும் என நினைக்கக் கூடும். கீதா வாக்கியங்களை வெகு எச்சரிக்கையாகப் பொருள் செய்து கொள்ள வேண்டும். முன் கூறப்பட்ட வாக்கியங்களை நினைவில் கொண்டு எவ்விடத்தில் எந்தப் பொருளில் கூறப்பட்டதோ அவற்றைக் கவனித்துப் பொருள் கொள்ள வேண்டும். இங்கு பக்தியின் மேல்நிலையைப் பற்றிக் கூறப்படுகின்றது. பக்தியின் முற்றியநிலை, ஞான நிலை இரண்டும் ஒன்றே, முழுமையான பக்தியுடைய மனிதன், ஞானி இருவரும் ஒரே தெய்வநிலையில், ஆன்ம நிலையில் நிலைக்க வல்லவர்கள். இந்நிலை மனம், மன விகாரங்கள் இவற்றைத் தாண்டிய ஜீவன் முக்த நிலை. அந்நிலையில் சீதோஷ்ணம், சுகதுக்கம், மகிழ்ச்சி சோகம், மங்கலம், அமங்கலம் ஆகிய இருமைகள் எவையும் இல்லாதநிலை. தெய்வசிந்தனை, ஆன்ம சிந்தனை இவையே அப்போது மேலோங்கி நிற்கும். எனவேதான் முழுமையான பக்தன் மங்கல அமலங்கலங்கள் இல்லாத 'சுபாசுப பரித்தியாகி' ஆகிறான். சாதகன் முதலில மங்கலமான காரியங்களையும், மங்கலமானவற்றையுமே உறுதியாகப் பின்பற்றி அதன் வழி, அமலங்கலமானவற்றை (செய்யக் கூடாதவற்றை) ஒதுக்கித் தள்ள வேண்டும். இறுதியில் இவையனைத்தும் அற்றுப்போய் தெய்வ நினைவு ஒன்றே நிலைத்து நிற்கும். 'சுபாசுப பரித்தியாகம்' என்பதற்கான சரியான பொருள் இதுவே. மங்கலமான நற்காரியங்களையும், புண்ய காரியங்களையும் விடுதல் வேண்டுமென்பதில்லை.

***ஸம: - சத்ரௌ ச மித்ரே சததா மானாபமான்யோ!***
***சீதோஷ்ண ஸுக துக்கேஷு ஸம: ஸங்க விவர்ஜித:!!*** (18)

*துல்ய நிந்தாஸ்துதிர் மௌனீ ஸந்துஷ்டோயேன கேனசித்!*
*அநிகேதஹ் ஸ்திர மதிர்பக்திமான் மே ப்ரியோ நரஹ!!* *(19)*

## சொற்பொருள்

*சத்ரௌக - பகைவனிடத்தும், மித்ரேச - நண்பனிடத்தும், ததா - அவ்வாறே, மான அவமான யோஹ் - மான அவமானங்களிலும், ஸமஹ் - சமமாயிருப்பவன், சீதோஷ்ண சுக துக்கேஷு - சீதம், உஷ்ணம், சுகம், துக்கம், சமஹ் - சமமாயிருப்பவன், சங்க விவர்ஜி தஹ் - எந்நிலையிலும் பற்றற்றவன், (ஆசை, மன ஈடுபாடற்றவன்), துல்ய நிந்தாஸ்துதி - பிறர் தூற்றுதல் போற்றுதல் இரண்டிலும் சமமா யிருப்பவன், மௌனீ - மௌனமாயிருப்பவன், யேனகேன சித் எதனிலும், ஸந்துஷ் - திருப்தியடைபவன்; அநிகேதஹ் - இருப்பிட மில்லாதவன், ஸ்திரமதி - நிலையான புத்தியுள்ளவன், பக்திமான் நரஹ் பக்திமானாகிய மனிதன், மே - எனக்குப் ப்ரியஹ் - பிரியமான வன்.*

## கருத்துரை

*பகைவனிடத்தும், நண்பனிடத்தும், மான, அவமானங்களி லும், தட்ப வெப்ப நிலைகளிலும் இன்ப துன்பங்களிலும் சமமாக இருப்பவனும், எதன் மீதும் பற்றில்லாதவனும், பிறர் இகழ்ச்சியை யும், புகழ்ச்சியையும் ஒன்றாகக் கருதும் மௌனியும், கிடைத்ததில் திருப்தியடைபவனும் இருக்க இடம் தேடாதவனும், உறுதியான உள்ளமுடையவனுமாகிய பக்தனே எனக்கு உகந்தவனாகிறான்.*

## விளக்கம்

*இவ்விரண்டு சுலோகங்களிலும் ஐந்துவிதமான இருமைகள் (எதிர்மறைகள்) சொல்லப்பட்டிருக்கின்றன. 1. பகை, நட்பு, 2. மான அவமானம், 3. குளிர், வெப்பம், 4. இன்ப, துன்பம், 5. இகழ்ச்சி, புகழ்ச்சி ஆகியவை இவைகள் நேர்கையில் எந்தவிதமான மனவிகா ரங்களையும் அடையாது சமநிலையில் இருப்பவன் என்பது பொருள்.*

*'மௌனி' - மௌனம் என்பது வாய் பேசாதிருப்பது மட்டு மன்று - மனம் கூட மௌனியாய் இருத்தல் வேண்டும். பக்தன் எப்போதும் தெய்வத்தினிடமே நிலைத்த சித்தத்துடன் இருப்பின் எவருடனும் அதிகம் பேசாதிருப்பான். மௌனீ என்ற சொல்லுக்கு எப்போதும் தெய்வத்தைக் குறித்து மனனம் செய்து கொண்டிருப்ப வன் என்ற பொருள் கொள்ளுதல் இயலும்.*

'அனிகேதஹ்' - நிகேதம் (வசிக்குமிடம்) வசிக்குமிடம் இல்லாதவன் அநிகேதன். அதாவது, எந்தவிடத்தில், எத்தகைய இடம் கிடைத்தாலும் அதில் திருப்தியடைபவன் அன்றி ஒரே இடத்தில் வசித்தாலும், அது வீடாயினும் மடமாயினும் தனது என்ற ஆசையற்று இவை இல்லாதவன் என்பது அதன் உட்பொருள் - அன்றியும் 'நிகேதம்' என்பதை 'தேகம்' என்றும் சொல்லலாம். 'அநிகேதன்' என்றால் தேகத்தின் மீது பற்றற்றவன் எனலாம்.

'ஸ்திரமதிஹ்' ஆன்மீக விஷயத்திலாயினும், உலக விஷயத்திலாயினும், நிலையான புத்தியுள்ளவனாய் இருப்பவன் என்பது பொருள்.

'பக்திமான்' - பக்தன் எத்தகைய இலக்கணங்கள் பொருந்தியிருத்தல் வேண்டுமென்பது இதற்கு முன்பே சொல்லப்பட்டது. முப்பத்தைந்து நற்குணங்களுடன் துவங்குபவன் பக்தன் என்று கூறப்படுவதால், இவையனைத்துமே ஞானியின் இலக்கணமாகவே தோன்றுவதால், உண்மையில் இறைபக்திக்கும், ஞானத்திற்கும் வேறுபாடில்லை என்பது இங்குத் தெளிவாக்கப்படுகிறது. பக்தன் முதல் நிலையில் தெய்வத்தினை, பூ, இவற்றால் அர்ச்சித்து, பூசித்து வருவான். ஆயின் சித்தம் விரிவடைந்து வருகையில் முறையாக, (சர்வந்தர்யாமியாம்) எங்கும் அனைத்திலும் உள் உறைபவனாகிய ஆன்ம இறைவனை, தன் மனமாகிய பூவினால் பூசை செய்கிறான்.

> " *சம ரைப்யக ஸ்ச்சேயத ஸ்ஸர சிஜமு மாநாத பவதே!*
> *அகே நாவஸ்தாதும் ஜனஇஹ ந ஜனாதி கி மஹோ*"

உமாபதியாம் ஓ பரமேஸ்வரா! சித்தமாகிய தாமரைப்பூவினை உனக்கு அர்ப்பித்து சுகமாக இருப்பதை மக்கள் தெரிந்து கொள்ளாமல் இருக்கிறார்களே!' என்று சங்கர பகவத்பாதர் சிவானந்த லஹரியில் சொல்லியதைப் போல், மனமாகிய மலரால் பக்தன் பகவானை ஆராதித்தல் வேண்டும். அம்மலர்கள் எவை? இந்த அத்தியாயத்தில் கூறப்பட்டுள்ள முப்பதைந்து நற்குணங்களே அம்மலர்கள்.

மேலும்

> *'அஹிம்சா ப்ரதமு புஷ்பம் புஷ்பமிந் திரியநிக்ரஹஹ*
> *சர்வபூத தயா புஷ்பம் க்ஷமா புஷ்பம் விசேஷதஹ*
> *சாந்தி புஷ்பம் தபஹ புஷ்பம் த்யான புஷ்பம் ததைவச*
> *சத்யம்ஷ்ட விதம் புஷ்பம் விஷ்ணோஹ ப்ரீதிகரம் பவேத்"*

என்று சொல்லப்பட்டது போல், அஹிம்சை இந்திரியக்கட்டுப்பாடு, எல்லா உயிர்களிடத்தும் தயை, மன்னித்தல், அமைதி, தவம், தியானம், சத்யம் என்ற எட்டு மலர்கள் விஷ்ணுவிற்கு மிகவும் விருப்பமானது. எனவே புறத்தே மலரும் மலர்கள் மட்டுமின்றி மனத்தில் மலரும் மலர்களாகிய நற்குணங்களோடும் பகவானை ஆராதிப்பது மிக உயர்ந்தது. எனவே இந்தஅத்தியாத்தில் தெரிவிக்கப்பட்ட நற்குணங்கள் அனைத்தையும் முமுக்ஷுக்கள் நன்கு பயின்று, இறைவனின் அன்புக்குப் பாத்திரமாதல் வேண்டும்.

இவ்வுலகில் சம்பாதித்துப் பெறவேண்டிய அனைத்துப் பொருள்களினும் மிகவும் விலையுயர்ந்தது இறை அன்பே. எனவே அதனைத் தப்பாது பெறமுயற்சித்தல் வேண்டும். அது எவ்வாறு கிடைக்கும்? இந்த அத்தியாத்தின் முதலிலும் கீதையின் பலவிடங்களிலும் தெரிவிக்கப்பட்ட நற்குணங்களைச் சார்ந்து நின்றால் பகவான் திருப்தியடைவான். 'பக்திமான் மேப்ரியோ நரஹ்'. (அவ்வாறான நற்குணங்கள் நிறைந்த பக்தன் எனக்குப் பிரிமானவன் என்கிறார். ஒருவனுக்கு இறைவனின் மேல் அன்பு இருக்கக்கூடும். ஆனால் இறைவனுக்கு இவன் மேல் அன்பு இருக்கிறதா என்பதை ஆலோசிக்க வேண்டும். பகவத் வாக்கியங்களுக்கும், சாஸ்திரங்களுக்கும் புறம்பாக ஒருவன் நடந்து கொள்வானேயானால் மனிதன் எக்காலத்தும் இறைவனின் அன்பை, அருளை அடைதல் இயலாது. எனவே பகவானால் கூறப்பட்ட இந்த முப்பத்தைந்து நற்குணங்களையும் மக்கள் பின்பற்றி தெய்வத்தின் அருளுக்குப் பாத்திரமாதல் வேண்டும்.

'நரஹ்' என்றதால் எந்தவொரு மனிதனும் அப்படிப்பட்ட நிலையை, அதாவது இறையருளை அடைய முடியும் என்றபதைத் தெரிவிப்பதாய்க் கொள்ளலாம்.

**வினா :** இந்த அத்தியாயத்தில் பக்தனின் இயல்புகள் மொத்தமாக எத்துணை கூறப்பட்டிருக்கிறது?

**விடை :** மொத்தம் 35 கூறப்பட்டுள்ளன. அவை வரிசைப்படி 1. எந்தவொரு உயிரின்மேலும் வெறுப்பு கொள்ளாதிருத்தல், 2. நட்பு, 3. கருணை, 4. சுயநலமின்றி இருத்தல், 5. அகங்காரமின்றி இருத்தல், 6. இன்ப துன்பங்களைச் சமமாகப் பாராட்டுதல், 7. பொறுமை, 8. எப்போதும் மகிழ்ச்சியாய் இருத்தல், 9. மனக்கட்டுப்பாடு, 10. தி நிச்சயம், 11. மனம், புத்தி இவற்றை தெய்வத்திற்கு அர்ப்பணித்த 12. இவ்வுலகத்தால் தானும், தன்னால் இவ்வுலகமும் பயப்

கையில் நடந்து கொள்ளுதல், 13. மகிழ்ச்சி, குரோதம், பயமின்றி இருத்தல், 14. எதன்மேலும் பற்றின்றிருத்தல் 5. தூய்மையோடிருத்தல், 16. செயல் திறமையுடன் இருத்தல், 17. நடுவுநிலைமை, 18. மனக்கலக்கமின்றி இருத்தல், 19. ஸர்வகர்ம பலபரித்தியாகம் செய்தல், 20. மகிழ்ச்சியின்றி இருத்தல், 21. வெறுப்பின்றி இருத்தல், 22. சோகமின்றியிருத்தல், 23. ஆசையில்லாதிருத்தல், 24. நன்மை தீமைகளைத் தியாகம் செய்திருத்தல், 25. எதிரிகளையும் சமமாக பாவித்தல், 26. மான அவமானத்தைச் சமமாகக் கருதுதல், 27. குளிர், வெப்பம் இரண்டையும் சமமாகக் கருதுதல், 28. இன்ப துன்பங்களில் சமபாவம் 29. பற்றின்றி இருத்தல், 30. போற்றுதலுக்கும் தூற்றுதலுக்கும் சமநிலையோடிருத்தல், 31. மௌனியாய் இருத்தல், 32. கிடைத்ததில் திருப்தியடைதல், 33. இருக்கும் இடத்தின் மீது பற்று கொள்ளாதிருத்தல், 34.மாறாத திட புத்தி, 35. இறைபக்தி.

**வினா :** பகவானுக்கு பிரியமானவன் யார்?

**விடை :** மேற்சொன்ன நற்குணங்களோடு பொருந்தியிருத்தலே.

**முன்னுரை**

இறுதியாக இந்த அத்தியாத்தின் பலனை எடுத்துரைக்கிறாய்.

*யேது தர்ம்யாம்ருதமிதம் யதோக்தம் பர்யுபாஸதே!*
*ச்ரத்ததானா மத்பரமா பக்தாஸ் தேஅதீவ மே ப்ரியாஹ!!* (20)

**சொற்பொருள்**

யேது - எவர், சிரத்தானாஹ் - சிரத்தையோடு கூடியவர்களாய், மத்பரமா என்னையே குறிக்கோளாகக் கொண்டு நம்பிய வரை, (என்னிடத்து ஈடுபாடுடையவராய்) இதம் - இந்த, தர்ம்யாம்ருதம் - அமிருத ரூபமான (மோட்ச சாதனமான) தர்மத்தை, யதோக்தம் - இங்கு உரைத்தபடி, பர்யுபாஸதே - நன்கு பின்பற்றுகிறார்களோ, தே பக்தாஹ் - அத்தகைய பக்தர்கள், மே - எனக்கு, அதீவ ப்ரியா - மிகவும் இனியவர்.

**கருத்துரை**

எவரொருவர் சிரத்தையுடன், என்னையே மேலான கதியாகக் கொண்டு, அமிர்தரூபமான (மோட்ச சாதனமான) தர்மத்தை, சொல்லப்பட்ட முறையில் கடைபிடிக்கிறார்களோ அத்தகைய பக்தர்கள் எனக்கு மிகவும் இனியவர்கள்.

**விளக்கம்**

மேற் கூறப்பட்ட தர்மங்களைப் பக்தி சிரத்தையுடன் பின்பற்று வோர் பெறும் பலன்களைப் பற்றிக் கூறுகிறார். ஏதேனும் ஒரு தர்மத் தைப் பற்றிக் கூறுகையில் அதன் பலனையும் சொல்வதால் அத னைப் பின்பற்றுவோர்க்கு அதன்மீது ஒரு நல்ல நம்பிக்கை ஏற்படும். அதனால் தானோ என்னவோ, பக்தனின் இலக்கணங்களைக் கூறிய பின் கடைசியில் அதனைப் பின்பற்றுவதால் ஏற்படும் பலன்களைக் கூறுகிறார். அப்பலன்கள் யாவை? 'தே அதீவ மே ப்ரியாஹ்' இறை வனுக்கு பிரியமானவனாக ஆகுதலே அந்நன்மை. இதனைவிட மேலான பலன் ஒரு ஜீவனுக்கு என்ன இருக்கக் கூடும்? அதைப் பெற்றுவிட்டால் அனைத்தையும் பெற்றாற் போன்றதே, இது இல் லாதவிடத்து அனைத்துமிருந்தும் ஒரு பலனுமில்லை. இறைவனின் அருளுக்கு மிஞ்சியது இவ்வுலகில் வேறெதுவுமில்லை. இருக்கவும் இயலாது. எவ்வாறெனின் அவ்விறைவனின் அருள் முக்திக்கு வழி காட்டக் கூடியது. இறையருள் பெற்றவர்க்கு புத்தியோகம் (தத்வ விசாரணை சக்தி) தன்னால் கிடைக்கும் (ததாமிபுத்தியோகம்) அத னால் அவனுக்கு மோட்சம் கைகூடும்.

'தர்ம யாம்ருதம்' - மேற்சொன்ன தர்மங்களை அமிர்தரூபமாக வர்ணிக்கிறார். ஏனெனில் பிறப்பிறப்பினின்றும் விடுவிக்கவல்ல தகுதி அதற்குண்டு. ஜீவனை அமரனாக்கும் சக்தி அதில் அடங்கியி ருக்கிறது. பகவான் மிகுந்த கருணையுடன் அமிர்த மழையைப் பொழிந்துள்ளார். அவரவர் அவரவர் புத்தியெனும் பாத்திரத்தில் அவ்வமிர்தத்தை ஏந்தி தாகம் தீர அருந்துதல் ஜீவர்களாகிய நம்தர் மம். எவர் அவ்வாறு செய்யவில்லையோ, அவர்கள் அந்த அமிர் தத்தை அருந்தும் சௌபாக்கியத்தை, கையில் ஏந்தியும் நழுவவிட்ட வர்கள் ஆவார்கள். அத்தகையோர் சம்சார தாகத்தினால் அவதியுறு வார்கள். அப்படியானால் அந்த தர்மத்தை எங்ஙனம் கடைபிடித்தல் வேண்டும்?

'சிரத்தானா' சிரத்தையுடன் பின்பற்றுதல் வேண்டும் எனக் கூறப்பட்டுள்ளது. ஒரு முறை இரண்டு முறையன்று பகவான் பல முறை சிரத்தையுடன் செயல்படுவதைப் பற்றிய அவசியத்தை கீதை யில் வலியுறுத்துவதை நாம் நினைவில் நிறுத்துதல் வேண்டும். இன் னும், 'மத் பரமாஹ்' - பராதிபரனே பரமகதியென்று நம்பிக்கை கொண்டு அவனை தியானித்து, நற்குணங்களையும் தர்மங்களையும் பின்பற்றுதல் வேண்டும். 'அதீவ மேப்ரியஹ்' என்று சொல்வதால்

இவ்விதமாகப் பின்பற்றியவர்கள் தனக்கு மிகவும் பிரியமானவர்கள் என்பது கீதாச்சார்யனின் கருத்தாகும். பள்ளியில் ஆசிரியனது அன்புக்குப் பாத்திரமான மாணவனது கல்வி முன்னேற்றம் இவற்றைப் பற்றிய கவலை எவ்வாறு இராதோ; தந்தையின் அரவணைப்பிலுள்ள ஒரு சிறு குழந்தையின் நலம் பற்றிய எந்த ஐயமும் இராதோ, அதைப் போன்றே இறைவனின் மிகுந்த அன்பிற்கு ஆளான ஜீவனுக்கு முக்தியைப் பற்றிய கவலையிராது. அவன் இவ்வுலக வாழ்வினின்றும் கடைத்தேறியவனேயாவான். எனவே முமுட்சுக்கள் பகவானால் கூறப்பட்ட தர்மாம்ருதத்தை தாகம்தீர அருந்தி அவனுக்கு உகந்தவராவதற்கு முயற்சி செய்தல் வேண்டும். 'யேது' என்ற 'யச்சப்த' பிரயோகம் செய்யப்பட்டதாலும் எவராயினும் சரி, அவர்கள் சிரத்தையுடன் பின்பற்றினால் முக்தியடைவர் என்பது பொருள்.

**வினா :** ஸ்ரீ கிருஷ்ணர் போதித்த இந்த தர்மங்கள் எத்தகையவை?

**விடை :** அமிர்த ரூபமான, பிறப்பிறப்பினின்றும் கடைத்தேற்றி ஜீவனை அமரனாக (முக்தனாக) ஆக்குவது.

**வினா :** அவ்வாறு பின்பற்றுவதால் அடையக் கூடிய பலன் என்ன?

**விடை :** இவற்றைப் பின்பற்றுவோர் இறைவனின் மிகுந்த அன்பிற்குப் பாத்திரமாகிறார்கள்.

ஓம்

இது உபநிஷத் வாக்கியங்களைக் கொண்டதும், பிரம்மவித்தையைப் புகட்டுவதும், யோக சாஸ்திரமானதும், ஸ்ரீ கிருஷ்ணார்ஜுன சம்வாதமாக வந்துள்ளதுமாகிய பகவத் கீதையின் பக்தியோகம் என்ற பன்னிரெண்டாம் அத்தியாயம்.

ஓம் தத்ஸத்

ஓம்

# ஸ்ரீ பகவத் கீதை

## பதின்மூன்றாம் அத்தியாயம்

## க்ஷேத்ர க்ஷேத்ரக்ஞ விபாக யோகம்

### இவ்வத்தியாயத்தின் பெயர் விளக்கம்

*'க்ஷேத்ர க்ஷேத்ரக்ஞவிபாகயோகம்' - க்ஷேத்ரமென்றால் சரீரம். க்ஷேத்ரக்ஞன் என்றால் ஆத்மா. ஜீவன் உண்மையில் க்ஷேத்ரக்ஞனே யன்றி க்ஷேத்ரமல்ல. ஆயின் அஞ்ஞானத்தின் காரணத்தினால் தான் சரீரமேயென்றெண்ணி ஜீவன் துக்கத்தினை அனுபவிக்கிறான். சரீரம் பஞ்ச பூதங்களின் சேர்க்கையாலானது, அழிவடையக்கூடியது, விகாரங்களை அடையக் கூடியது. க்ஷேத்ரக்ஞன் (அதாவது சரீரத்தை உணர்ந்த) சின்மய ரூபன், நிலையானவன் விகாரங்களற்றவன். இவ்விரண்டின் இயல்புகள் விவரிக்கப்பட்டு, இரண்டும் கலந்துள்ள தன்மையையும் பிரித்துக் கூறப்படும் அத்தியாயமாதலால் இதற்கு க்ஷேத்ர க்ஷேத்ரக்ஞவிபாக யோகமெனப் பெயர் பெற்றது.*

### இவ்வத்தியாயத்தில் கூறப்பட்டுள்ள முக்கிய விஷயங்கள்

1. *சரீரம், ஆத்மா இவற்றின் சொரூப விவரங்கள் (1 முதல் 7 வரை சுலோகங்கள்)*
2. *அமானித்வம் (தற்பெருமையின்மை) முதலான ஞானகுணங்கள் (8 முதல் 12 வரை)*

*3. அறியப்படும் பொருளைப் பற்றிய விளக்கம் (13 முதல் 18 வரை)*

*4. இயற்கை, புருஷன் வர்ணனை (19 முதல் 35 வரை)*

**இவ்வத்தியாயத்திற்கும் முன் அத்தியாயத்திற்குமுள்ள தொடர்பு**

*முன் அத்தியாயத்தில் ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மா சகுண பிரம்மத்தின் உபாசனையைக் குறித்தும், பக்தியின் இலக்கணத்தைக் குறித்தும் அர்ஜுனனுக்குப் போதித்தார். ஆயின் நிர்க்குண பிரம்மத்தின் தத்வத்தைக் குறித்தோ, ஞானசம்பந்தமான விசாரணையைக் குறித்தோ அங்கு விவரிக்கப்படவில்லை. எனவே சகுணபிரம்மத்தின் விஷயம் உண்மை பக்தியின் சொரூபம் இவை அனைத்தையும் அறிந்த பின் உடனேயே அர்ஜுனனுக்கு நிர்க்குண பரமாத்மாவின் தத்துவத்தையும், ஞான சம்பந்தமான விசாரணையையும் நன்கு நுணுக்கமாக அறியும் ஆர்வம் ஏற்பட்டு அவற்றைக் குறித்து பகவானைக் கேட்கவும், அவர் நிர்க்குண பரமாத்மா தத்துவத்தையும், அத்தகைய பரமாத்மாவை ஜீவன் அடைவதற்கான உபாயத்தையும் விரிவாக விளக்குகிறார். தத்துவ ஞானத்தைக் குறித்து அறியும் ஆர்வத்துடன் அர்ஜுனன் கேட்கும் கேள்வியுடன் இவ்வத்தியாயம் தொடங்குகிறது.*

**அர்ஜுன உவாச**

*ப்ரக்ருதிம் புருஷம் சைவ க்ஷேத்ரம் க்ஷேத்ரக்ஞ மேவச!*
*ஏதத் வேதி துமிச்சாமி ஞானம் ஞேயம்ச கேசவ!! (1)*

சொற்பொருள்

*கேசவ - கிருஷ்ணா! ப்ரக்ருதிம் - பிரகிருதியை, புருஷம் ச ஏவ - புருஷனை, க்ஷேத்ரம் - சரீரத்தை, க்ஷேத்ரக்ஞம் ஏவச - க்ஷேத்ரக்ஞனையும், ஞானம் - ஞானத்தையும், ஞேயம் - ஞேயத்தையும் (அறிய வேண்டிய பரமாத்மாவையும்) ஏதத்ம இவையனைத்தையும், வேதிதும் - அறிந்து கொள்ள, இச்சாமி - இச்சைப்படுகிறேன்.*

**கருத்துரை**

*கிருஷ்ணா! பிரகிருதி, புருஷன், க்ஷேத்ரம், க்ஷேரத்ரக்ஞன், ஞானம், ஞேயம் ஆகிய இவைகளை அறிந்து கொள்ள நான் விரும்புகிறேன்.*

### விளக்கம்

*சகுண பிரம்மத்தைக் குறித்து இதுவரை நன்கு கேட்டறிந்த அர்ஜுனனுக்கு நிர்குண பிரம்மதத்துவத்தைத் தெரிந்து கொள்ள ஆர்வம் ஏற்பட அதனைக் குறித்து பகவானைக் கேட்கிறான். கீதையின் முதல் ஆறு அத்தியாயங்கள் கர்மகட்கம் என்றும், இரண்டாவது ஆறு அத்தியாயங்கள் பக்திகட்கம் என்றும், மூன்றாவது ஆறு அத்தியாயங்கள் அதாவது 13 முதல் 18 வரை ஞான கட்கமென்றும் சொல்லப்படுகிறது. எனவே இப்போது ஞானசம்பந்தமான விசாரணை தொடங்கப்படுகிறது. ஞான மார்க்கத்தில் செல்வோர்க்கு இந்த அத்தியாயம் மிக முக்கியமானது.*

**வினா :** *அர்ஜுனன் எவற்றைக் குறித்து இறைவனிடம் கேட்டான்?*

**விடை :** *(1) இயற்கை (2) புருஷன் (3) க்ஷேத்ரம் (4) க்ஷேத்ரக்ஞன் (5) ஞானம் (6) ஞேயம் என்ற இவ்வாறு விஷயங்களைக் குறித்துக் கேட்டான்.*

### முன்னுரை

*அர்ஜுனனின் இந்த கேள்விக்குத் தக்க பதிலை பகவான் ஆறு விஷயங்களைக் குறித்தும் விவரமாகப் பதிலுரைக்கின்றார்.*

### ஸ்ரீ பகவானுவாச

*இதம் சரீரம் கௌந்தேய க்ஷேத்ரமித்யபிதீயதே!*
*ஏதத்யோ வேத்திதம் ப்ராஹுஹ் க்ஷேத்ரக்ஞ இதி தத்விதஹ!!* (2)

### சொற்பொருள்

*கௌந்தேய - குந்தியின் மைந்தனான அர்ஜுனா!, இதம் சரீரம் - இந்த சரீரம், க்ஷேத்ரம் - க்ஷேத்ரம் என்று அபீதியதே - சொல்லப்படுகின்றது, ஏதத் - எதனை, யஹ் - எவன், வேத்தி - அறிகின்றானோ, தம் - அதனை, க்ஷேத்ரக்ஞஹ் இதி - க்ஷேத்ரக்ஞன் என்று, தத்விரஹ் - அதனைக் குறித்து அறிந்தவர்; ப்ராஹுஹ் - சொல்வர்.*

### கருத்துரை

*ஸ்ரீ பகவான் சொன்னார் - குந்திதேவியின் மைந்தனான ஓ அர்ஜுனா! இந்த சரீரமே க்ஷேத்ரம் எனப்படுகிறது. அதனை அறிபவன் க்ஷேத்ரக்ஞன் என்று க்ஷேத்ர க்ஷேத்ரக்ஞனை அறிந்தவர்கள் சொல்வர்.*

**விளக்கம்**

க்ஷேத்ரமென்றால் வயல், பூமி. பயிர்கள் பெருகுவதற்கு, பலனைத் தருவதற்கு பூமி ஆதாரமாக உதவுகிறதோ அவ்வாறே ஜீவனது இதயத்தின் அந்தரத்தில் ஞானவித்து வளர்ந்து காலக் கிரமத்தில் மோட்சமெனும் பலனைத் தருவதற்காக இந்த சரீரம் ஆதாரமாக இருக்கின்றது. ஏனெனில், பலவிதமான சாதனை, அனுஷ்டானங்களை இந்த சரீரத்தினாலேயேதான் செய்ய வேண்டி வரும். இது தர்மவித்திற்கு, ஞானவித்திற்கு பூமியாக விளங்குகின்றது. எனவேதான் இதனை க்ஷேத்ரம் என்கின்றனர்.

ஜடமான இந்த சரீரத்தை ஒளி பொருந்திய ஒரு சக்தி அறிகின்றது. (ஏதத்யோ வேத்தி). அந்த பிரக்ஞையுடன் கூடிய வஸ்துவையே க்ஷேத்ரக்ஞன் என்கின்றனர். க்ஷேத்ரமான சரீரத்தை அறிபவன் க்ஷேத்ரக்ஞன். அவனே ஜீவாத்மா (பிரத்யகாத்மா) தேக இந்திரிய முதலியவற்றின் சமூகம் அனைத்திற்கும் அவன் சாட்சி. விகாரமற்றவன், சித்ரூபன், அவிநாசி, பஞ்ச கோசங்களுக்கு வேறுபட்டவன். ஜடமான அதனை ஜடமானது அறிய இயலாது. பிரக்ஞையே அதனை அறிய முடியும். (அறிகிறான்) என்று சொல்வதால் க்ஷேத்ரக்ஞன், 'வேத்தி' (அறிகிறான்) என்று சொல்வதால் க்ஷேத்ரக்ஞன் பிரக்ஞையுடையவனென்றும், ஜடவடிவினனல்லன் என்றும், தெளிவாகின்றது.

வயலைக் காண்பவன் வயலினின்றும் வேறாக நிற்கிறான். அவ்வாறே சரீரத்தை (உபாதியை) பார்ப்பவன் (க்ஷேத்ரக்ஞன்) சரீரத்தை விட வேறாக இருப்பான். அந்த ப்ரத்யகாத்மா தேகத்திலிருப்பினும் தேகத்தின் காட்சியாய், ஜாக்ரத், சொப்பனம் (விழிப்பு, கனவு) நிலையிலும், சுஷுப்தியிலும் விழித்திருந்து அனைத்தையும் காண்கிறது.

**வினா :** க்ஷேத்ரமென்றால் என்ன?

**விடை :** இந்த சரீரமே (உபாதியே) க்ஷேத்ரம்.

**வினா :** க்ஷேத்ரக்ஞன் யார்?

**விடை :** இந்த சரீரத்தை (உபாதி) அறிபவனே க்ஷேத்ரக்ஞன் (சித்ரூபனான ப்ரத்யகாத்மா).

**முன்னுரை**

எல்லா உயிர்களிடத்தும் க்ஷேத்ரக்ஞன் தானேயென்று பகவான் சொல்கிறார் -

*க்ஷேத்ரக்ஞம் சாபிமாம் வித்தி ஸர்வக்ஷேத்ரேஷு பாரத!*
*க்ஷேத்ர க்ஷேத்ரக்ஞயோர்ஞானம் யத்தஜ் ஞானம் மதம்மம!!* (3)

## சொற்பொருள்

*பாரத!* - அர்ஜுனா! *ஸர்வ க்ஷேத்ரேஷு* - எல்லா க்ஷேத்ரங்களிலும் (சரீரங்களிலும்), *மாம்* - என்னை, *க்ஷேத்ரக்ஞம்ச அபி* - க்ஷேத்ரக்ஞன் என்று, *வித்தி* - அறிகக்ஷேத்ரக்ஞ, *யோஹ* - க்ஷேத்ரக்ஷேத் - ரக்ஞங்களின், *ஞானம்* - ஞானம் *யத்* - எது உள்ளதோ, *தத்* - அதுவே, *ஞானம்* - ஞானமென்று, *மம* - என்னுடைய, *மதம்* - கருத்து.

## கருத்துரை

அர்ஜுனா! எல்லா சரீரங்களிலும் என்னை க்ஷேத்ரக்ஞனாக அறிக! க்ஷேத்ர க்ஷேத்ரக்ஞனைக் குறித்த ஞானமாக எது உள்ளதோ, அதுவே உண்மையான ஞானமென்பது என் கருத்து.

## விளக்கம்

இச்சுலோகத்தில் 'தத்வ மஸி' என்னும் மஹாவாக்கியத்தின் உபதேசத்தைச் சொல்கிறார். இதற்குமுன் 2-வது அத்தியாயத்தில் (நத்வே வாஹம் ஜாது நாஸம்...' (2-12) என்ற சுலோகத்தில் இவ்வாறே 'தத்வமஸி' என்னும் மஹாவாக்கிய உபதேசத்தினைக் கூறியுள்ளார். ஜீவன் சாட்சாத் சிவனே என்னும் மேலான இரகசியத்தை பகவான் இங்குத் தெரிவிக்கிறார். க்ஷேத்ரத்தில் அதாவது தேக இந்திரியங்களில் தொடர்பு (உபாதியில், பஞ்சகோசங்களில்), காட்சியாக ஒளிரும் ஜீவாத்மா எதுவோ, அது பரமாத்மாவை விட வேறானதல்ல என்றும், இரண்டும் ஒன்றே என்பதும் இங்குத் தெளிவாகிறது, க்ஷேத்ரத்தினை (உபாதியை) அறிந்த பிரக்ஞையுடன் கூடிய சைதன்யம், அதாவது க்ஷேத்ரக்ஞன் எவனோ அவனை 'மாம்வித்தி' - நானாகவே உணர்வாய் என்று பகவான் இங்குக் கருணையுடன் போதிக்கிறார். இதனால் பரமாத்மா வெகுதூரத்தில் அல்ல மிக மிக அருகிலேயே, அவரவர் இதயத்திலேயே வசிக்கிறார் என்பது தெரிகின்றது. இனி ஜீவன் துக்கப்படுவதற்கு? சம்சாரத்தைக் குறித்துப் பரிதாபப்பட வேண்டிய அவசியமென்ன? அவரவர் இதயத்தினை அலங்கரித்துள்ள தேவதேவனைக் காட்சி, காட்சிப் பொருள் என்றறியும் விவேகத்துடன் நன்கு அறிந்தது போதும், ஜீவாத்மாவை அறிந்தால் போதும், பரமாத்மாவை அறிந்தால் போன்றதே.

*இந்த உண்மையை அறிந்துவிட்டால், அதாவது தன் சரீரத்தில் சரீரத்தின் காட்சியாய் உள்ள பிரக்ஞை பரமாத்மாவே (ப்ரக்ஞானம் ப்ரஹ்மா) என்று அறிந்து விட்டால் இனி ஜீவனுக்கு மிக்க தைரியம், ஆனந்தம் இவை ஏற்படும். உலகில் எந்த வித்தையினாலோ, ஞானத்தினாலோ இத்தகைய பெரும் தைரியம் ஜீவனுக்கு ஏற்படாது. எனவே பலவிதமான ஞானங்கள் - சங்கீத ஞானம், சிற்ப அறிவு, அரசியல் ஞானம் முதலானவை உலகில் இருந்தாலும் எல்லா ஞானத்தையும் விட க்ஷேத்ரக்ஷேத்ரக்ஞ விபாக சம்பந்தமான ஞானமே உண்மையான ஞானமென்று பகவான் இங்குத் தெரிவிக்கிறார். அதுமட்டுமன்று 'மமமதம்' - இது என் நிச்சயமான கருத்து - என்பதால் இவ்வாக்கியத்தின் உண்மையைத் தெளிவுப்படுத்தியதாயிற்று. எனவே சாதகர்களின் உலகம் இத்தகைய பகவானின் முகக்கமலத்தினின்றும் வெளிப்பட்ட சத்தியபூர்வமான உண்மையை, த்ரிக், காட்சிப் பொருள் ஆகியவற்றின் விவேகத்தினை, ஏனைய வித்தைகளை விட முன்னதாகத் தப்பாது பெற்று, தன்னிடத்திலேயே உலகனைத்திற்கும் ஈசுவரனது இருப்பை அனுபவத்தில் உணர்ந்து ஜன்ம ஈடேற்றமடைடல் வேண்டும்.*

*மேலும் எல்லா க்ஷேத்ரங்களிலும் தானே க்ஷேத்ரக்ஞன் என்று சொல்வதால், ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மா வெறும் மனித உருவில் அவதரித்தவர் மட்டுமன்று, எல்லா பூதங்களிலும் இருப்பிடமாக ஒளிரும் பரமாத்வே என்பதும் தெளிவாகிறது. மேலும், 'ஸர்வ க்ஷேத்ரேஷு' என்று சொல்வதால், ஏதோவொரு பிராணியிடத்து மட்டுமன்று, சாதியன்று, வர்ணத்திலோ அன்றி எல்லா உயிர்களிடத்தும், பிராம்மணனிடத்தும், சண்டாளனிடத்தும், புழு பூச்சிகள் இடத்தும் எங்கும் சாமான்ய உருவில் பரமாத்மா இருக்கிறார் என்பது தெளிவாகிறது. 'க்ஷேத்ரக்ஞம்' என்பதால், பரமாத்மா பிரக்ஞையே உருவானவனேயன்றி, ஜட உருவானவன் அல்லன், சூன்ய உருக் கொண்டவன் அல்லன் என்பது தெரிய வருகிறது.*

**வினா :** *எல்லா உயிர்களிடத்தும் க்ஷேத்ரக்ஞ உருவில் (உபாதியை அறிந்தவனாக) இருப்பவன் யார்?*

**விடை :** *சாட்சாத் இறைவனே.*

**வினா :** *எனவே பரமாத்மா எங்கிருக்கிறான் என்று தெரிகிறது?*

**விடை :** *எல்லா உயிர்களின் இதயத்திலும், காட்சியாய் ஒளிருகிறான் என்பது தெரிகிறது.*

வினா : ஏதோவொரு உயிரிடத்து மட்டும் தான் அவன் இருப்பானா?

விடை : அல்ல. எல்லா உயிர்களிடத்தும் இருப்பான்.

வினா : இறைவன் ஜட உருவானவனா? சூன்யமா?

விடை : இல்லை - சின்மயரூபன் - ப்ரக்ஞை உருவானவன். எனவே தான் அவனை 'க்ஷேத்ரக்ஞன்' என்று சொல்வர்.

வினா : உலகில் உண்மையான ஞானமாகக் கருதப்படுவது எது?

விடை : 'க்ஷேத்ர க்ஷேத்ரகஞத்தைப் பிரித்து அறியும் ஞானமெதுவோ, அதாவது காட்சி, காட்சிப்பொருள் இவற்றின் விவேகம். அதுவே உண்மையான ஞானம் - 'இது என் கருத்து' என்று பகவான் கூறுகிறார். (மதம் மம-)

முன்னுரை

க்ஷேத்ர க்ஷேத்ரக்ஞத்தைப் பற்றி இனி விரிவாக விளக்குகிறார்.

*தத்க்ஷேத்ரம் யச்ச யாத்ருக்ச யத்விகாரி யதஸ்ச யத்!*
*ஸச யோ யத் ப்ரபாவஸ்ச தத்ஸமாஸேன மே ச்ருணு!! (4)*

சொற்பொருள்

தத்க்ஷேத்ரம் - அந்த க்ஷேத்திரமானது, யத்ச் - எதுவோ, யாத்ருக்ச - எத்தன்மையுடையதென்றும், யத்விகாரி - என்ன விகாரங்களையுடையதோ, யதஹ்ச யத் - எதனின்றும் எவ்வாறு தோன்றியதோ, ஸஹ்ச - அந்த க்ஷேத்ரக்ஞனும், யஹ் = யார், யத் ப்ரபாவஹ்ச - எத்தகைய மகிமையுடையவனோ, தத் - அவற்றை (அவ்விஷயங்களைத்தையும்), ஸமாசேன - சுருக்கமாக, மே - என்னிடமிருந்து, ச்ருணு - கேள்.

கருத்துரை

அந்த க்ஷேத்ரம் எது, எத்தன்மைகளையுடையது, எத்தகைய பிரிவுகளை உடையது, எதனின்றும் எவ்வாறு தோன்றியது, அந்த க்ஷேத்ரக்ஞன் யார், எத்தகைய மகிமையுடையவன்? இவ்விஷயங்களையும் சுருக்கமாகச் சொல்கிறேன் கேள் -

**விளக்கம்**

*பகவான் தான் சொல்லப் போகும் வாக்கியங்களனைத்தின் சாராம்சத்தை இங்கு ஆரம்பத்திலேயே கோடி காட்டுகிறார். ஏனெனில் க்ஷேத்ரத்தின் விகாரங்களனைத்தையும் (யத்விகாரி) க்ஷேத்ரக்ஞனின் மகிமைகளை (யத்ப்ரபாவஸ்ச) வர்ணிக்கிறார். உண்மையில் சரீரமான உபாதி அதிகமான விகாரங்களையுடையது, அழிவடையக் கூடியது. ஆத்மா நிலையானது மிக்க மகிமைகளையுடையதாகும்.*

*'ஸமாஸேன' மேச்ருணு - இவ்விசாரணையனைத்திற்கும் சுருக்கமான விடை அளிக்கிறேன் என்று பகவான் கூறுகிறார். காட்சி, காட்சிப் பொருள் இவ்விரண்டின் விசாரணையனைத்தும் ஒரு பெரிய நூல் ஆகும். யுத்த சமயமாதலால் அவையனைத்தையும் சொல்வது சாத்தியமில்லை. எனவே சுருக்கமாகச் சொல்லக் கருதினார்.*

*ருஷிபிர் பஹுதா கீதம் சந்தோபிர்விவிதைஹ ப்ருதக்!*
*ப்ரஹ்மஸூத்ரபதைஸ்சைவ ஹேதுமத்பிர் விநிஸ்சிதைஹ!!* *(5)*

**சொற்பொருள்**

*(அஞ்ஞானம்) ருஷிபிஹ - ரிஷிகளால், பஹுதா - பல விதங்களில், ப்ருதக் - வேறுவேறாக, விவிதைஹ - பலவிதமான, சந்தோபிஹ - சந்தங்களால், கீதம் - பாடப்பெற்றுள்ளது, ப்ரஹ்ம சூத்ர பதைஹ ஏவச - பிரம்மத்தைக் குறித்த வாக்கியங்களாகவும் (கீதம் - பாடப்பட்டிருக்கின்றது).*

**கருத்துரை**

*(சுந்த க்ஷேத்ர க்ஷேத்ரக்ஞ்ஞானம்) ரிஷிகளால் பலவிதமாக, பலவித சந்தஸ்களால் ஆன வேதங்களின் மூலம் வேறுவேறாகப் பாடப் பெற்றுள்ளது. மேலும் காரணத்துடன் கூடி (யுக்திகளுடன்) நன்கு நிச்சயிக்கப்பட்ட பிரம்மசூத்ர வாக்கியங்களினால் கூட பாடப் பெற்றுள்ளது.*

**விளக்கம்**

*தான் சொல்லக் கருதிய க்ஷேத்ர, க்ஷேத்ரக்ஞ ஞானத்தின் மகிமையைத் தெரிவிப்பதற்காக பகவான் அனுபவத்தில் அறிந்த ஞானிகளான பரம ரிஷிகளின் வாக்கியங்களை உதாரணமாகக் காட்டுகிறார் -*

'ருஷிபிர் பஹுதாகீதம்' - ரிஷிகள் என்றால் இந்திரியங்களை வென்றவர். ஆத்ம சாட்சாத் காரம் பெற்ற மகான்கள். அத்தகையோர் எதைச் சொன்னாலும் அதில் எத்துணையோ சாரம், மகிமை, மேன்மை தவறாது இருக்கும். அத்தகைய ரிஷிகள் ஒருமுறையல்ல, பலமுறை - 'பஹுதா' பலவிதமாக அந்த ஞானத்தைக் குறித்துச் சொல்லியுள்ளனர் எனக் கூறுவதால் அதற்கு எத்துணையோ பெருமையுண்டு என்பது தெளிவாகிறது.

'ஹேதுமத்பிர்விநிஸ்சிதைஹ் - வியாசர் முதலான மகரிஷிகள் சொன்ன பிரம்மசூத்திரம் முதலான பிரம்மத்தைப் பற்றிய வாக்கியங்கள் சாதாரணமானவையல்ல. ஹேதுவாதத்தின் (Logic, Science) பரீட்சைக்கு நிற்கக் கூடியது. ஆதாரபூர்வமானது, சுயஅனுபவத்தால் நன்கு நிச்சயிக்கப்பட்டது. எனவேதான் 'நிஸ்சிதைஹ்', என்று சொல்லாது 'விநிஸ்சிதைஹ்' (நன்கு நிச்சயிக்கப்பட்டவை) என்று சொல்கின்றனர். மாறாத உண்மை என்பது அதன் பொருள். எனவே ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மா சொல்லப் போகும் இந்த க்ஷேத்ர க்ஷேத்ரக்ஞ விபாக ஞானம் எத்துணை நம்பிக்கை வைத்தல் வேண்டுமென்பதே மேற்சொன்ன பகவானின் வாக்கியத்தினால் தெளிவாகிறது.

### முன்னுரை

இனி க்ஷேத்ரத்தின் சொரூபத்தினை விவரிக்கிறார் -

*மஹா பூ தான்ய ஹங்காரோ புத்திரவ்யக்த மேவச!*
*இந்திரியாணி தசைகம் சபஞ்ச சேந்திரிய கோசராஹ்!!* (6)

*இச்சாத்வேஷஹ ஸுகம் துக்கம் ஸங்காத ஸ்சேதனா த்ருதிஹ்!*
*ஏதத் க்ஷேத்ரம் ஸமாஸேன ஸவிகாரமுதா ஹ்ருதம்!!* (7)

### சொற்பொருள்

மஹாபூதானி - பஞ்சமாபூதங்கள், அஹங்காரஹ் - அகங்காரம், புத்திஹ் - புத்தி, அவ்யக்தம் ஏவச - மூலப்பிரகிருதி, தச ஏவம்ச இந்திரியாணி - பஞ்ச ஞானேந்திரியங்கள், பஞ்ச கர்மேந்திரியங்கள், மனம் ஒன்று - ஆக மொத்தம் பதினொன்று இந்திரியங்கள், இந்திரிய கோசராஹ் ச இச்சா - (சப்த ஸ்பர்சாதி) இந்திரிய விஷயங்கள் ஐந்து, இச்சா - இச்சை, த்வேஷாஹ் - துவேஷம், சுகம் - (காட்சி) சுகம், துக்கம் - துக்கம், ஸங்காதஹ - உடல் இந்திரியங்களின் கூட்டுப்பொருள்கள், சேதனா - அறிவு, (விருத்திஞானம்), த்ருதிஹ் - தைர்யம் (என்னும்), ஏதத் - இந்த, விகாரம் - விகாரங்களுடன் கூடிய, க்ஷேத்

ரம் - க்ஷேத்ரம், ஸமாஸேன - சுருக்கமாக உதாவ்ருதம் - சொல்லப் பட்டது.

**கருத்துரை**

பஞ்சமா பூதங்கள், அகங்காரம், புத்தி, மூலப்பிரகிருதி, பதினொன்று இந்திரியங்கள் (தச இந்திரியங்கள் + மனம்), ஆசை, துவேஷம், சுகம், துக்கம், தேக இந்திரியங்களின் கூட்டம், அறிவு (விருத்தி ஞானம்), தைரியம், என்ற இவற்றின் கூட்டம், விகாரத்துடன் கூடிய க்ஷேத்ரமாகமச் சுருக்கமாகக் கூறப்பட்டன.

**விளக்கம்**

க்ஷேத்ரமென்றால் வெறும் ஸ்தூலசரீரம் மட்டுமன்று. எல்லா விகாரப் பொருள்களும் க்ஷேத்ரமே. ஸ்தூல, சூட்சும பஞ்சமாபூதங்கள், மனம், புத்தி, மிக சூட்சுமமான அவ்யக்தம் (மூலப்பிரகிருதி) கூட க்ஷேத்ரமே. மனம், புத்தி கூட க்ஷேத்திரத்தின் பாற்பட்டதேயாதலால் அவற்றினின்றும் தோன்றும் துவேஷம் முதலான துர்குணங்கள், தைரியம் முதலான நற்குணங்கள் கூட க்ஷேத்ரமாகவே எண்ணப் படுகிறது. காட்சி விஷயங்களற்ற சங்கல்பமற்ற ஆத்ம நிலையில் தைரியம் முதலான நற்குணங்களைக் கூட தாண்டிச் செல்ல வேண்டியிருக்கும்.

'ஸவிகாரம்' என்று சொல்வதால் இந்தக் காட்சிப் பொருள்கள் அனைத்தும் (க்ஷேத்ரம்) மாறுபாட்டிற்கு உட்பட்டவையேயென்று காண்பவனான க்ஷேத்ரக்ஞன் ஒருவனே விகாரங்களற்றவன் என்பது இதன் பொருள். இந்த க்ஷேத்ரத்தில் சுகம் என்பது கூட சேர்க்கப்பட்டுள்ளதால், அத்தகைய சுகத்திற்காக அலையாமல், விகாரங்களற்ற ஆத்ம சுகத்திற்காக முயற்சி செய்தல் வேண்டும்.

'த்ரிஸ்யம்' - க்ஷேத்ரமென்றால் சாதாரணமாக இந்த சரீரம் இங்குக் காணப்படும் உலகமொன்று மாத்திரமே என்று மக்கள் எண்ணுவர். ஆயின் உண்மையில் சூட்சும பஞ்சபூதங்கள் மனம், புத்தி, மூல பிரகிருதி கூட காட்சிப் பொருள்களே, (க்ஷேத்ரமே) என்று இங்குத் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. எனவே அறிவாளியானவன் தான் காட்சியான ஆத்மாவேயென்று எண்ணி தேகமுதலான திரிஸ்ய வஸ்துக்களை, மனம், புத்தி, காமம் முதலான புத்தி விருத்திகளைக் கூட தன்னை விட வேறாக எண்ணி அவற்றுடன் ஒட்டாது, படிப்படியாக அவற்றைவென்று ஆத்ம சொரூபத்தில் நிலை பெறுதல் வேண்டும்.

பகவான் சொல்லிய க்ஷேத்ரத்தினைப் பற்றிய இவ்விவரம் ஆத்மா அநாத்ம விசாரணையில் உள்ளவர்க்கு மிகவும் உதவும். ஏனெனில், சாதகனுக்கு தன்னிடமிருந்து எதனை வேறுபடுத்த வேண்டுமென்பது இதில் தெளிவாகச் சொல்லப்பட்டுள்ளது. உலகம் மட்டுமன்றி, தேகம் மட்டுமன்றி, மனதைக் கூட தன்னிடமிருந்து வேறுபடுத்த வேண்டும் (அல்லது அதனை வேறாகக் காணுதல் வேண்டும்) இதனால் மிகச் சிறந்த பயிற்சி கிட்டுகிறது.

**வினா :** க்ஷேத்ரமென்றால் என்ன?

**விடை :** (1) பஞ்சமா பூதங்கள் (2) அஹங்காரம் (3) மூலப்பிரகிருதி (4) இந்திரியங்கள் (5) மனம் (6) இந்திரிய விஷயங்கள் (7) ஆசை (8) துவேஷம் (9) சுகம் (10) துக்கம் (11) தேக இந்திரியங்களின் கூட்டம் (12) அறிவு (விருத்தி ஞானம்) (13) தைரியம்.

**வினா :** க்ஷேத்ரம் எத்தகையது?

**விடை :** மாறுபாடுடையது.

முன்னுரை

இனி ஞானமென்றால் என்னவென்று 5 சுலோகங்களில் கூறுகிறார்.

*அமானித்வமதம் பித்வமஹிம்ஸா க்ஷாந்தி ரார்ஜவம்!*
*ஆசார்யோ பாஸனம் சௌசம் ஸ்தைர்ய மாத்ம விநிக்ரஹ!!* (8)

*இந்திரியார்த்தேஷு வைராக்யமனஹங்கார ஏவச!*
*ஜன்ம ம்ருத்யு ஜரா வ்யாதி துக்க தோஷானுதர்சனம்!!* (9)

*அஸக்திரனபிஷ்வங்கஹ புத்ரதாரக்ருஹா திஷு!*
*நித்யம்ச ஸமசித்தத்வமிஷ்டானிஷ்டோப பத்திஷு!!* (10)

*மயிசானன்ய யோகேன பக்திரவ்யபிசாரிணீ!*
*விவிக்த தேச ஸேவித்வ மாதிர்ஜனஸம்ஸதி!!* (11)

*அத்யாத்மஞான நித்யத்வம் தத்வஞானார்த்த தர்சனம்!*
*ஏதஜ்ஞான மிதி ப்ரோக்தமக்ஞானம் யததோ அன்யதா!!* (12)

சொற்பொருள்

அமானித்வம் - தன்னைத் தானே புகழாது இருத்தல் (தற்பெரு

மையின்மை) அதம்பித்வம் - தருக்கின்மை, அஹிம்சா - (மனம், வாக்கு, காயம் இவற்றால்) இதர உயிர்களுக்குத் தீங்கு விளைவிக் காமை, க்ஷாந்திஹ் - பொறுமை, ஆர்ஜவம் - நேர்மை ஆசார்யோபாச னம் - குருசேவை, ஶௌசம் - உள்ளும் புறமும் தூய்மையாயிருத்தல், ஸ்தைர்யம் - சாதனையில் விடாமுயற்சி, ஆத்மவினிக்ரஹ - மனவ டக்கம், இந்திரிய அர்த்தேஷு - இந்திரிய லோக விஷயங்களில், வைராக்யம் - விரக்தியுடன் இருத்தல், அனஹங்காரஹ் ஏவச - அஹங்காரமின்மை, ஜன்ம, ம்ருத்யு, ஜரா, வ்யாதி, துக்க தோஷானு தர்சனம் - பிறப்பு, இறப்பு, மூப்பு, வியாதி - இவற்றால் ஏற்படும் துக்கங்களையும், தோஷங்களையும் பலமுறை அடிக்கடி நினைத் தல், புத்ரதாரக்ருஹாதிஷு - புத்திரன், மனைவி, வீடு முதலியவற் றில், அஸக்திஹ் - பற்றின்றியிருத்தல், (மேலும்) அனபிஷ்வங்கஹ - அபிமானமின்மை (அவற்றால் ஏற்படும் இன்பதுன்பங்களைத் தனக்கே நேரிட்டதாகக் கருதாமை), இஷ்ட அனிஷ்ட உபபத்திஷு - வேண்டுவன வேண்டாதன (சுபம், அசுபம்) இவை விளைந்த போது, நித்யம் - எப்போதும், ஸமசித்தர்வம்ச - நடுவு நிலையில் நிற்பது, மயி - என்னிடத்து, அனன்ய யோகேன - பிறவற்றை எண் ணாத யோகத்தினால், அவ்யபிசாரிணீ - பிறழாத, பக்தி - பக்தியுடன் இருத்தல். விவிக்த தேச ஸேவித் வம் - தனியிடத்தை நாடுதல் (இடைஞ்சல்களற்ற தனியிடத்தை), ஜன ஸம்ஸதி - ஜனக் கூட்டத் தில், அரதிஹ் - விருப்பமின்மை, அத்யாத்மஞான நித்யத்வம் - ஆத்ம ஞானம் (ஆத்ம நிட்டை) எப்போதும் நிலை பெற்றிருத்தல், தத்வ ஞானார்த்த தர்சனம் - தத்துவ ஞானத்தின் பயனை ஆராய்ந்து அறிதல், ஏதத் - இவை (இவையனைத்தும்), ஞானம் இதி - ஞான மென்று, ப்ரோகிதம் - சொல்லப்பட்டது, யத் - எது, அதஹ்அன்யதா - இவைகளுக்கெல்லாம் வேறானதோ, (தத் - அது), அஞ்ஞானம் அஞ்ஞானம் (அஞ்ஞானமென்றறிக).

**கருத்துரை**

தற்பெருமையின்மை, தருக்கின்மை, (மனம், வாக்கு காயத் தால்) பிற உயிர்களுக்குத் தீங்கு செய்யாமை, பொறுமையுடன் இருத் தல், நேர்மை, தூய்மை (சன்மார்க்கத்தில், மோட்ச மார்க்கத்தில்) நிலையான விடாமுயற்சி, மனக்கட்டுப்பாடு, இந்திரிய விஷயங்க ளில், சப்த ஸ்பரிசம் முதலானவற்றில் விரக்தியுடன் இருத்தல், அகங் காரமின்மை, பிறப்பு, இறப்பு, மூப்பு, வியாதி - இவற்றால் நேரும் துக்கங்களையும், தோஷங்களையும் அவ்வப்போது எண்ணுதல், புத் திரர்கள், மனைவி, வீடு முதலானவற்றில் பற்றின்றிருத்தல் மேலும்

(அவர்களுக்கு நேரும் சுக துக்கங்களைத் தனக்கே நேர்ந்ததாகக் கரு தாதிருத்தல்), வேண்டுவன வேண்டாதவை கருதாதிருத்தல்), வேண் டுவன, வேண்டாதவை விளையுங்காலை (சுபம் அசுபம்) ஒருபோ தும் மாறாது சுயபுத்தியுடன் இருத்தல், என்னிடத்தே (இறைவனி டத்து) அனன்ய (சலனமற்ற) பக்தியுடன் இருத்தல், தனியிடத்தை (இடைஞ்சல்களற்ற இடம்) விரும்புதல், மக்கள் கூட்டத்தில் விருப் பமின்மை, ஆன்ம ஞானம் (ஆத்ம நிட்டை) எப்போதும் நிறைந்தி ருத்தல், தத்வ ஞானத்தின் பலனை அறிதல் என்பதனைத்தும் ஞான மெனப்படும். இதற்கு எதிரானவையனைத்தும் அஞ்ஞானம், (என்று அறிதல் வேண்டும்).

**விளக்கம்**

இவ்வத்தியாயத்தில் ஞானம், ஞேயம் என்ற இரண்டு சொல் லப்படுகின்றது. ஞானம் 'சாதனை' ஞேயம் 'சாத்யவஸ்து' (அடை யக்கூடிய பொருள்) பரமாத்மாவெனும் இலட்சியத்தை அடைவ தற்கு வேண்டிய, நைத்திக, ஆன்மீக செல்வமே ஞானமென்று இங் குச் சொல்லப்பட்டது. அத்தகைய ஞானத்தைப் பெற்று முதிர்ந்த நிலை எய்தாவிட்டால் ஞேய வஸ்துவான பரமாத்மாவை எவரும் அடைதல் இயலாது. கண்ணாடி தூய்மையாக இருந்தால் மாத்திரமே அதில் காண வேண்டிய பொருள் நன்கு பிரதிபலிக்கும். தூய்மையற் றிருந்தால் பிம்பம் தெரிவதில்லை. அவ்வாறே நற்குணங்களுடன் கூடி ஒளிர்ந்து சித்தம் எப்போது நிர்மலமாக இருக்கின்றதோ, அப் போதே அதிஷ்டமான ஆத்மா அதில் நன்கு வெளிப்படும். எனவே சாதகன் முக்கியமாக ஞானகுணங்களைப் பயிற்சி செய்வதில் முதல் முதல் தனது நோக்கைச் செலுத்துதல் வேண்டும். ஞானத்தின் உதவி யால் ஞேயம் தானாகவே வெளிப்படும். எனவேதான் கீதையில் பலவிடங்களில் பகவான் இந்த ஞானகுணங்களை (morality) அதிக மாக வலியுறுத்திச் செல்கிறார். இங்கு 20 நற்குணங்கள் சொல்லப்பட் டுள்ளன. சாதகன் ஒவ்வொன்றையும் நன்கு அப்யசித்து, படிப்படி யாக அவையனைத்தையும் தன்னில் ஏற்றி நற்குணங்களின் உருவா கவே ஆதல் வேண்டும்.

'ஆசார்யோ உபாசனம்' - குருசேவை தவறாது செய்தல் வேண் டுமென பகவான் கூறுகிறார். ஏனெனில் இறையருள், குருவருள் என்ற இரண்டும் இல்லாவிடில் மோட்ச மார்க்கத்தில் நுழைதல் கடினம். இவர்களின் அருள் சாதகனின் முன்னேற்றப் பாதைக்கு மிக்க உதவியாக இருக்கும்.

'சௌசம்' - தூய்மைக்கு கீதாச்சார்யன் அதிக முக்கியத்துவம் அளிக்கிறார். (அனபேக்ஷசுசித்தக்ஷஹ் - (12-16)) உள்ளும் புறமும் தூய்மையாய் இருத்தல் முமுக்ஷுக்களுக்கு மிகமிக அவசியம். வெளிப்புற அழுக்கு, சித்தத்தில் உள்ள அழுக்கு இரண்டையும் நன்கு கழுவித் தூய்மைப்படுத்துதல் வேண்டும்.

'ஸ்தைர்யம்' - இறை மார்க்கத்தில் சலனம் பயன் தராது. நிலையான நிர்ணயத்துடன் அவற்றை நன்கு மேற்கொள்ளுதல் வேண்டும். உலக விஷயங்களில் ஈடுபாடுடையாரின் வாக்கியங்களைக் கேட்டு இறைவனிடத்தும், தர்மத்தினிடத்தும், ஆன்மீக நெறியிலும் நம்பிக்கையைத் தளரவிட்டு விடக்கூடாது.

'ஆத்மவிநிக்ரஹஹ்' - இங்கு ஆத்மா என்றால் மனம், இந்திரியங்கள் என்று பொருள். மனக்கட்டுப்பாடு, இந்திரியக் கட்டுப்பாடு இரண்டையும் தவறாது கடைபிடித்தல் வேண்டும். 'நிக்ரஹம்' எனாது 'விநிக்ரஹம்' என்றதால் இந்திரிய மனங்களை முழுமையாகக் கட்டுப்படுத்துதல் வேண்டுமென்பது பொருள். ஏனெனில், சிறிதளவே கட்டுப்படுத்தி வைத்தால் பலம்பொருந்திய மாயை உள் நுழைந்து தீங்கு விளைவிக்கும்.

'இந்திரியத்தேஷு வைராக்யம்' - ஆத்ம சாட்சாத்காரத்திற்கு வைராக்யம் மிகவும் அவசியம். மனம் சப்தாதி விஷயங்களின் மீது சென்றால் தியானத்தில் ஒருமுனைப்பாடு கடினம். எனவே காட்சிப் பொருள்களின் போகங்களினின்றும் மனத்தினை உள்முகமாகத் திருப்புவதற்கு சாதகன் வைராக்யத்தைத் தவறாது மேற்கொள்ளுதல் வேண்டும்.

'ஜன்ம, ம்ருத்யு, ஜரா, வியாதி, துக்க தோஷானு தர்சனம்' - சாதாரணமாக மக்கள் மூப்பு, மரணம் இவற்றினால் துக்கத்தையும், தோஷத்தையும் அடைவர். ஆயின் பிறப்பில் இல்லை. பிறப்பினால் மகிழ்ச்சியுறுவரேயன்றித் துக்கித்தல் இல்லை. ஆயின் பகவான் இங்குப் பிறப்பிலும் தோஷத்தையே, தீங்கையே காணுதல் வேண்டுமென்கிறார். ஏனெனில் பிறப்பினால்தான் ஏனைய மூப்பு, வியாதிகள் இவை ஏற்படுகின்றன. எனவே ஜனனம், மரணம், மூப்பு, வியாதி இவற்றில் உள்ள தோஷங்களைப் பலமுறை சிந்தனை செய்தல் முமுக்ஷுக்களின் முதல் தர்மம். அவ்வாறு சிந்தித்து அவற்றினின்றும் தப்பிப்பதற்கு ஆத்ம ஞானம் பெறுதற்கு முயல வேண்டும். 'தர்சனம்' எனாது, 'அனுதர்சனம்' என்றதால் அத்தோஷங்களைப் பற்றி மறுபடியும் மறுபடியும் விசாரணை செய்துவரல் வேண்டுமென்பதும் அதனால் வைராக்யம், முமுக்ஷுத்வம் தீவிரமாக ஏற்ப

டும் என்பதும் பொருள். எனவே இந்த சாதனை முமுக்ஷுக்களுக்கு மிகமிக அவசியமென்பதை நினைவில் கொள்ள வேண்டும்.

'அஸக்தி ஏனபிஷ்வக்ஒஹ் புத்ரதாரக்ருஹாதிஷு' - 'ஆதிஷு' என்ற பதத்தில், செல்வம், வீடு முதலானவையும் சேரும். கிருஹஸ்தாஸ்ரமத்தில் இருப்பவர் இவ்வாக்கியத்தை நன்கு கவனித்தல் வேண்டும். குடும்பம், சுற்றம், செல்வம் இவையிருப்பதால் தவறில்லை. ஆயின் அவற்றின் மீது விருப்பம், பற்று - (attachment) இருத்தல் கூடாது.

'நித்யம்ச ஸமசித்தத்வம்' - வேண்டுவன வேண்டாதன இவற்றில் சமத்துவ புத்தியுடன் எப்போதும் இருத்தல் வேண்டும் என்பதால் 'நித்யம்' என்ற சொல்லால் குறிப்பிட்டுள்ளார். 'அனன்ய யோகேன' - இறைவனைத் தவிர இதர காட்சிப் பொருள்களைக் குறித்த எண்ணங்களே எவையும் மனத்தில் தோன்றாதிருத்தலே 'அனன்ய யோகம்', பக்தி யோகம், தியான யோகம் ஆகிய அனைத்துடன் இந்த அனன்ய யோகம் சேர்ந்தால்தான் சக்தி நிறைந்ததாகும்.

'பக்திரவ்ய பிசாரிணீ' - பக்தி சலனத்தோடிருத்தல் கூடாது, சலனமற்ற பக்தியையே கொள்ளல் வேண்டும். ஆரம்ப நிலையில் அத்தகைய சலனமற்ற பக்தி, அதாவது எப்போதும் இறை நினைப்புடனேயே இருத்தல் - இயலாது போயினும், பயிற்சியினால் அத்தகைய நிலையை (ஏகாந்த பக்தியை) அடைவதற்கு முயலுதல் வேண்டும்.

'விவக்த தேச சேவித்வம்' - ஆரம்பத்தில் உலக விஷயங்களில் உழலும் மக்களால் இடைஞ்சல்கள் தடங்கல்கள் நேரா வண்ணம் சாதனையைத் தனிப்பட செய்தல் நன்று. அத்தகைய தனிப்பட்ட இடத்தை அவரவர் வீட்டில் ஏற்பாடு செய்து கொள்ளலாம். ஒரு தனி அறையை தியானம் முதலானவற்றிற்கு ஒதுக்கலாம்.

'அவதிர்ஜனஸம்ஸதி' - முதலில் கெட்டவர்களின் சேர்க்கையை விடுத்து நல்லோரின் இணக்கத்தை நாடி, நற்போதனைகளைக் கேட்டு அவற்றை இதயத்தில் இருத்தி, அதனை முழுவதுமாகப் பின்பற்றுவதற்கு மக்கள் கூட்டம் இல்லாத தனியிடத்தில் சாதனை செய்ய வேண்டுமென்பதே பொருள். அதுவேயின்றி நல்லோர் இணக்கத்தினை கூட ஒதுக்க வேண்டுமென்பதில்லை.

'அத்யாத்மஞான நித்யத்வம்' - ஆன்மீக ஞானம், இறை சம்பந்தமான நினைப்பு ஏதோவொரு சமயத்தில் மட்டும் இருந்தால் போதாது. எப்போதும் அத்தகைய ஞானம் இதயத்தில் ஒளிந்து

கொண்டேயிருத்தல் வேண்டுமென இங்குப் போதிக்கப்பட்டது. இரவில் எந்தக் கணத்தில் கையிலிருந்து விளக்கு இல்லாமல் போகுமோ அந்தக் கணத்திலேயே இருள் சூழ்ந்து கொள்ளும். அவ் வாறே ஞானதீபத்தைக் கைவிட்டு விட்டால் உடனேயே அஞ்ஞான இருள் நுழைந்து ஜீவனை அதே கதிக்குத் தள்ளிவிடும். எனவே சாதகர்கள் மிக எச்சிரிக்கையுடன் இருந்து 'ஆன்மீக ஞானநித்யத்வம்' என்ற இந்த பகவத் வாக்கியத்தை பலமுறை எண்ணிப் பார்த்து மாயையை நம்வழிக்கு வரவொட்டாமல் பார்த்துக் கொள்ள வேண் டும்.

'தத்வ ஞானார்த்த தர்சனம்' - தத்த ஞானத்தை வெறும் வார்த்தை களால் சொல்லிவிட முடியாது, நேரில் அவரவர் தரிசித்தல் வேண்டு மென்றும், அனுபவத்தில் உணர வேண்டுமென்றும் போதிக்கப்பட் டுள்ளது.

'அஞ்ஞானம் யததே அன்யதா' - இந்தத் தற்பெருமையின்மை முதலான குணங்களுக்கு எதிரான குணங்கள் அனைத்தும் அஞ்ஞா னமே என்பது பொருள்.

**வினா :** ஞான குணங்கள் எவை? அவை யாவை? ஞான குணங்கள் இருபது. அவையாவன:

**விடை :** (1) தற்பெருமையின்மை (2) தருக்கின்மை (3) அஹிம்சை (4) பொறுமை (5) நேர்மை (6) குருசேவை (7) தூய்மை (8) விடாமு யற்சி (9) தன்னடக்கம் (10) இந்திரிய போக விஷயங்களில் வைராக்கி யம் (11) அஹங்காரமின்மை (12) பற்றின்மை (13, 14) மகன், மனைவி, வீடு இவற்றைத் தனதென்று அபிமானியாதிருத்தல் (15) வேண்டுவன வேண்டாதன நிகழ்ந்தவிடத்தும் மனம் நடுவுநிலை யில் நிற்பது (16) அனன்யயோகம் (17) தனியிடத்தை நாடுதல் (18) ஜனக்கூட்டத்தில் விருப்பமின்மை (19) ஆத்மஞானத்தில் நிலை பேறு (20)உண்மைப் பொருள் ஆராய்ச்சி ஆகியவை.

**வினா :** அஞ்ஞானமென்றால் எது?

**விடை :** மேற்சொன்ன குணங்களுக்கு மாறுபட்டவையனைத்தும் அஞ்ஞானமே.

**முன்னுரை**

இதுவரை ஞானத்தைக் குறித்துச் சொல்லி ஞேயமென்றால் எது என ஆறு சுலோகங்களில் கூறுகிறார்.

*ஞேயம் யத்தத் ப்ரவக்ஷ்யாமி யஜ்ஞாத்வா அம்ருத மச்னுதே!*
*அனாதிமத்பரம் ப்ரஹ்ம ந ஸத்தன்னாஸது அச்யதே!! (13)*

## சொற்பொருள்

யத் - எது, ஞேயம் - அறிய வேண்டிய பிரம்மசொரூபமோ, யத் - எதனை, ஞாத்வா - அறிந்து (மனிதன்) அமிருத சொரூபமான மோட்சத்தினை அடைகிறானோ, அதனை நன்கு சொல்லப் போகிறேன். ஆதியில்லாத பரபிரம்மமெனப்படும் அது ஸத் என்றோ, (இருப்பதாகவோ) அஸத் என்றோ (இல்லாதிருப்பதாகவோ), சொல்லப்படுவதில்லை.

## விளக்கம்

இது முதல் ஆறு சுலோகங்கள் ஞேயமான பரமாத்மா சொரூபத்தினை வர்ணிக்கிறது. ஞானத்தில் மட்டும் திருப்தியடைந்து விடாமல் ஞேயத்தினை கூட ஒவ்வொருவரும் அடைந்தே தீர வேண்டும். முதலில் துர்குணங்களை விடுத்து நற்குணங்களைப் பழகிவருதல் வேண்டும். அதன்பின் அந்நற்குணங்களையும் தாண்டி, நிர்க்குண பரமாத்மாவின் சந்நிதியை அடைதல் வேண்டும். அதுவொன்றே முழுமையான பரிபூர்ண நிலை. ஏனையவை யாவும் முழுமையற்றவையே. இத்தகைய நேய தத்துவத்தைப் போதிக்கும் மதங்கள் உலகில் மிக அரிது. ஏனெனில் மதங்களில் பலவும் நற்குணங்கள், நன்னடவடிக்கை (Ethics) மட்டுமே போதிப்பவையாக உள்ளன. அது நன்றேயாயினும் பரிசுத்தமடைந்து அதனோடு மட்டும் திருப்தியடைந்து விடாமல் இன்னும் முன்னேறிச் சென்று ஞேயவஸ்துவான பரமாத்மாவுடன் ஐக்கியமடைதல் வேண்டும். அதுவே ஜீவனின் இறுதிநிலை. அந்நிலையை அடையும் வரை சாதனையை எவரும் விட்டு விடுதல் கூடாது. எனவே கீதையில் பகவான் ஞானகுணங்களோடு திருப்தியடைந்து விடாமல் ஞேயத்தைக் குறித்தும் சொல்லி, ஜீவனை ஆன்மீகத்தின் மேலான நிலைவரைக்கும் அழைத்துச் செல்கிறார். இவ்விதமாக கீத த்வைதம், விசிஷ்டாத்வைதம், அத்வைதம் இவற்றின் தத்துவங்கள் மூன்றையும் போதிப்பதால் இது பரிபூர்ண சாஸ்திரமென்று அறிஞர்கள் கூறுகின்றனர்.

'ப்ரவக்ஷ்யாமி' - நன்கு விளக்குகிறேன் - ஆன்மீக போதனையில் ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மாவின் மிகுந்த உற்சாகம் இப்பதத்தினால் வெளிப்படுகிறது.

'யஞ்ஞாத்வா அம்ருதமிச்னுதே' - நேய வஸ்துவான பரமாத்மாவை அறிந்து விட்டால் கிடைக்கும் பலனை முதலிலேயே தெரிந்து கொண்டால் அதனை அடைவதற்கு சாதகன், மகிழ்ச்சியுடனும், உற்சாகத்துடனும் முன்னேறக்கூடும். எனவே தான் பகவான் இங்கு ஞேய சொரூபத்தினை வர்ணித்து முன்பாகவே அதன் பலனையும் கூறுகின்றார். அமிர்தத்வமே, மோட்சமே அதன் பலன் ஆஹா! எத்தகைய மேன்மையான பலன்! சின்ன சின்ன உலக விஷயங்களுக்காக அலைவதை விட மிக உன்னதமான ஞேய வஸ்துவினை அடைவதற்கு ஜீவன் ஏன் முயற்சித்தல் கூடாது?

'நஸத்ஸத் உச்யதே' - அது சத் அல்ல என்பதன் பொருள் காட்சி பொருள்களில் புலப்படுவதில்லை என்பதே. அது இல்லை என்பதல்ல.

*ஸர்வதஹ் பாணிபாதம் தத்ஸர்வதோ அக்ஷிசிரோமுகம்!*
*ஸர்வதஹ ச்ருதி மல்லோகே ஸர்வமாவ்ருத்ய திஷ்டதி!! (14)*

### சொற்பொருள்

*தத் - அது (பிரம்மம், ஆத்மா), ஸர்வதஹ் - எங்கும், பாணிபாதம் - கை, கால்களையுடையது, ஸர்வதஹ் - எங்கும், அக்ஷீசிரோமுகம் - கண்கள், தலை, முகம் உடையது, ஸர்வதஹ் - எங்கும் ச்ருதிமத் - காதுகளையுடையதாய் லோகே - உலகில், ஸர்வம் - எல்லாவற்றிலும் ஆவ்ருத்ய - வியாபித்து, திஷ்டதி - நிற்கிறது.*

### கருத்துரை

*அது (பிரம்மம், ஆத்மா) எங்கும் கை, கால்களையுடையது, எங்கும் கண், தலை, முகம் உடையது. எங்கும் காதுகளை உடையதுமாய் உலகமனைத்தும் வியாபித்துள்ளது.*

### விளக்கம்

அந்த பரபிரம்மமானது, (பரமாத்ம) எங்கும் கண்கள், செவி, முகமுடையது என்று சொல்வதால், ஜீவன் செய்யும் பாவ புண்ய காரியங்களை அனைத்தையும் எப்போதும் கவனித்துக் கொண்டேயிருக்கிறார் என்பது தெளிவாகிறது. இவ்வுண்மையை அறிந்து கொண்டால் பாவகாரியங்களை எவராலுடன் செய்ய முடியாது? மனதில் அப்பரமாத்மா வியாபித்திருப்பதால் ஜீவனது எண்ணங்கள் யாவையும் அவனது பார்வையில் பட்டுக் கொண்டேயிருக்கும் என்பது

கருத்து. இக்காரணத்தினால் எந்தக் காரியமாயினும், எந்த எண்ணமா யினும் அது எத்துணை இரகசியமானதாயினும் ஸர்வந்தர்யாமியாம் இறைவனுக்குத் தெரியாது போகாது. எனவே ஜீவர்கள் தம் நடவடிக் கையில் வெகு எச்சரிக்கையாயிருந்து, பாவகாரியங்களையும், பாவ எண்ணங்களையும் விடுத்து நன்னெறியையே பின்பற்றுதல் வேண் டும்.

இறைவன் எங்கிருக்கிறான் என்ற வினாவிற்கு எங்கும் வியா பித்திருக்கிறான் என்று விடையளித்துள்ளார்.

'சர்வமாவ்ருத்யதிஷ்டதி' - காணுமிடமெங்கும் வியாபித்திருக் கிறது என்று சொல்வதால் ஆத்ம காட்சிக்கு அப்பாற்பட்டது (அதீத மாய்) என்பது தெரிகிறது. வியாபித்துள்ள பொருள் வியாபிக்கப்பட் டுள்ள பொருளைவிட வேறாக இருக்க வேண்டுமல்லவா? காட்சி யான ஆத்மா (பிரம்மம்) காட்சி எங்கும் வியாபித்து தன்னிடைத்து அடக்கியுள்ளது. எனவே அற்பமான காட்சிப் பொருளை விரும் பாது, மிக உன்னதமான காட்சியையே அணுகுதல் வேண்டும்.

*ஸர்வேந்திரிய குணாபாஸம் ஸர்வேந்த்ரிய விவர்ஜிதம்!*
*அஸக்தம் ஸர்வ ப்ருச்சைவ நிர்குணம் குண போக்த்ருச!!* (15)

*பஹிரந்தஸ்ச பூதாணாம் அசரம் சரமேவச!*
*ஸூக்ஷ்மத்வாத்தத விக்ஞேயம் தூரஸ்தம் சாந்திகேசதத்!!* (16)

*அவி பக்தம் ச பூதேஷு விபக்த மிவ ச ஸ்திதம்!*
*பூதபர்த்ரு ச தஜ் ஞேயம் க்ரஸிஷ்ணு ப்ரப விஷ்ணுச!!* (17)

*ஜ்யோதிஷாமபி தஜ் ஜ்யோதிஸ்தமஸஹ பரமுச்யதே!*
*ஞானம் ஞேயம் ஞாணகம்யம் ஹ்ருதி ஸர்வஸ்ய விஷ்டிதம்!!* (18)

சொற்பொருள்

தத் - அந்த பிரம்மமானது, ஸர்வேந்திரிய குணபாஸம் - எல்லா இந்திரியங்களின் குணங்களையும் பிரகாசிக்கச் செய்வது, ஸர்வேந் திரிய விவர்ஜிதம் - எல்லா இந்திரியங்களும் அற்றது, அஸக்தம் - எதிலும் பற்றற்றது, ஸர்வப்ருத் சஏவ - எல்லாவற்றையும் பற்றித் தாங்குவது, நிர்க்குணம் - (சத்வ, ரஜோ, தமோ) குணங்களற்றது. குணபோக்த்ரு ச - குணங்களை அனுபவிப்பதும், பூதானாம் - உயிர்க ளின், பஹி - வெளியும், அந்தஹ்ச - உள்ளும், (ஸ்திதம் - இருப்ப தும்), அசரம் - அசையாததும், சரம் ஏவச - அசைவதும், சூக்ஷ்மத்வாத்

- சூட்சுமமாய் இருப்பதால், அவிச்ஞேயம் - அறியவொண்ணாதது (அஞ்ஞானிகளுக்கு), தத் - அப்பிரம்மமானது, தூரஸ்தம் தூரத்தில் இருப்பதும், அந்திகே ச - அருகில் இருப்பதும், பூதேஷு - உயிர்களிடத்து தத் - சுப்பிரம்மமானது, அவிபக்தம்ச - பிரிவுபடாததாயும், விபக்தம் இவச - பிளவுபட்டதாயும், ஸ்திதம் - இருப்பது பூத பர்த்ரு ச - உயிர்களைத் தாங்குவதும், யம் க்ரஸிஷ்ணு - லயத்தை உண்டாக்குவதும் ப்ரபவிஷ்ணுச - தோற்றுவிப்பதும் (என்று), நேயம் - அறியப்பட வேண்டியது (மேலும்) தத் - அப்பிரம்மமானது, ஜ்யோதிஷாம் அபி - பிரகாசிப்பவையான சூரிய, சந்திரன், அக்னி முதலான பொருள்களுக்குக் கூட, ஜ்யோதிஹ் - ஒளியைத் தருவதும், தமஸஹ் பரம் - தமஸ் (அஞ்ஞானம்)ஸிற்கு வேறானதும் (அல்லது அதீதமானதும்), ஞானம் - ஞானசொரூபமானதும் (சின்மய ரூபமானது), நேயம் அறியத்தகுந்ததும், ஞானகம்யம் - (தற்பெருமையின்மை முதான) ஞானகுணங்களால் அடையக்கூடியதும், ஸர்வஸ்ய (எல்லாப் பிராணிகளின், ஹ்ருதி - இதயத்திலும், விசிஷ்டிதம் - நிலைத்திருப்பதும் (இது என்று) சொல்லப்படுகின்றது.

**கருத்துரை**

(ஞேயவடிவான) அந்த பிரம்மம் எல்லா இந்திரியங்களின் குணங்களை ஒளிரச் செய்வதும், எல்லா இந்திரியங்களும் அற்றதும், எதிலும் பற்று கொள்ளாததும், எல்லாவற்றையும் தாங்குவதும், (சத்வ, ரஜோ, தமோ) குணங்களற்றதும், குணங்களை அனுபவிப்பதும், மிகவும் சூட்சுமமாக இருப்பதால் (அஞ்ஞானிகளினால்) அறியப்படாததும், தூரமாக இருப்பதும், அருகில் கூட இருப்பதும், அது பிளவுபடாததாயினும், உயிர்களிடத்துப் பிளவுபட்டது போல் இருப்பது உயிர்களைத் தோற்றுவிப்பதும், தாங்குவதும், விழுங்குவதும் அது என்றறியத்தக்கது. மேலும் அது பிரகாசிக்கும் சூரியன், சந்திரன், அக்னி ஆகிய பொருள்களுக்குக்கூட ஒளியைத் தருவது. தமஸை விட (அஞ்ஞானம்) வேறானது, (அமானித்வாதி) ஞான குணங்களினால் அடையக் கூடியது, எல்லாப் பிராணிகளின் இதயத்தில் நிலைபெற்றிருப்பது என்று சொல்லப்படுகிறது.

**விளக்கம்**

இச்சுலோகங்களில் ஞேய வஸ்துவான பரபிரம்மம் எத்தகையதென விவரமாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. 'ஞானகம்யம்' என்று சொல்வதால் அந்த ஞேய வடிவம் மேற்சொன்ன ஞான குணங்கள் நிரம்பப் பெற்றிருந்தால் மாத்திரமே அடைய முடியும் என்பது தெளி

வாகிறது. கர்ம மார்க்கத்திலோ, பக்தி, தியான மார்க்கத்திலோ எதனைப் பின்பற்றினாலும், இறுதியில் அனைவரும் இந்த ஞேயவடிவான பரமாத்மாவை அறிந்தபின்தான் முக்தியையடைய முடியும். எனவே முமுக்ஷுக்கள் ஞான குணங்களைப் பயில்வதுடன் ஞேய வடிவான பரமாத்மாவையும் நினைத்துப் பார்த்தல் வேண்டும்.

வாசனைகளற்ற தன்மையுடன், தத்துவஞானமும் பெற்றிருத்தல் வேண்டுமென்பது பொருள். அடைய வேண்டிய பொருளைப் பற்றிய ஞானம், சாதனை இரண்டும் இருத்தல் வேண்டுமென்பது கருத்து. கீதையின் சாரம், கீதையின் குறிக்கோள், இலக்கு இந்த ஞேய (பரபிரம்ம) தத்துவமே யாதலால் சாதகன் இந்த சுலோகங்களின் பொருளை நன்கு உணர்ந்து தாமும் அத்தகைய பரபிரம்ம வடிவினரே என்று சிந்தித்து தம் சித்தங்களை அந்த ஞேய பிரம்மத்தில் லயிக்கச் செய்து, பிரம்ம வடிவினராகவே மாறி ஒளிரும்படி முயற்சித்தல் வேண்டும். அதுவே வாழ்க்கையின் குறிக்கோள்.

அஸக்தம் - தர்க் - காட்சியான ஆத்ம காட்சி பொருள்களின் எம்மாத்திரமும் ஒட்டுவதில்லை.

'பஹிரந்தஸ்ச பூதானாம்' - இறைவன் எங்கிருக்கிறான் என்ற வினாவிற்கு இங்கு விடையளிக்கப்பட்டுள்ளது. எல்லா உயிர்களின் உள்ளும் புறமும் கூட பரமாத்மாயிருக்கிறார் என்பது தெளிவாக்கப் பட்டுள்ளது. எனவே மக்கள் தாம் செய்யும் பாவ புண்ணியங்களை இறைவன் நமக்கு மிக அருகிலேயேயிருந்து கண்காணிக்கிறார் என்றறிந்து பாவ காரியங்களைச் செய்தல் கூடாது.

'அசரம் சரமேவச' - ஒரே பொருள் அசைந்தும், அசையாதும் எங்ஙனம் இருக்க முடியும்? மனிதன் கனவில் அசைந்தும் உண்மையில் தன் படுக்கையிலிருந்து அசையாதும் இருக்கிறானல்லவா? அவ்வாறே கனவுலகைப் போன்ற இவ்வுலகமனைத்தும் உயிர்களின் உருவில் அசைந்து கொண்டிருந்தாலும், உண்மையில் பிரம்ம வடிவில் சலனமற்றே பரமாத்மா இருக்கிறான். அல்லது உயரிகளில் அசையும், பொருளாக மனிதன், பசு, பட்சி முதலிய வடிவிலும், அசைவற்று சிலை, மலை முதலிய வடிவில் இருக்கிறான் என்றும் சொல்லலாம்.

சூஷ்மாத்திவாத்த விக்ஞேயம் - ஸ்தூல ஆகாசம், சித்தாகாசம், சிதாகாசம் என்று மூன்று இருக்கிறது. இவை ஒன்றை விட ஒன்று மிகவும் சூட்சுமமானது. இவற்றில் மூன்றாவதான சிதாகாசமே

ஞேயமான பரபிரம்மம். எனவே அது மிகவும் சூட்சுமமானது. ஸ்தூலப் பார்வைக்கு, அஞ்ஞானப் பார்வைக்கு அது புலப்படுவதில்லை. ஞானக் கண்களால்தான் அதனைப் பார்க்கமுடியும்.

'அன்தி ச தத்' - பரமாத்மா மக்களுக்கு மிக அருகிலேயே இருக்கிறார் என்று இங்குத் தெரிவிக்கப்பட்டது. எனவே தண்டிக்கும் அதிகாரி பக்கலிலேயே இருக்கிறார் எனக்கருதி பாவகாரியங்கள் எதனையும் செய்தல் கூடாது.

'அவிபக்தம் ச பூதேஷு வியக்த மிவச ஸ்திதம்' - உண்மையில் பரமாத்மா உயிர்களிடம் வேறுவேறாக இல்லை. அவன் எப்போதும் பிளவு பட்டு இருப்பதில்லை. அவித்தையினால் அவ்வாறு பிளவு பட்டு இருப்பதாக நமக்குப் புலப்படுகிறது. எனவேதான் 'இவ' என்னும் சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது. கலச நீரில், நதி நீரில், கடல் நீரில் சூரியன் வெவ்வேறாகத் தோன்றினாலும் பிம்ப வடிவில் அவன் பிளவுபட்டேயிருக்கிறான் அல்லவா! அவ்வாறே பரமாத்மாவும் என அறிதல் வேண்டும். பூமாலையில் உள்ள நூலைப் போன்று எல்லா உயிர்களினிடத்தும் பிளவு படாது விளங்கும் அந்த பரமாத்மாவை அறிந்து ஜன்ம ஈடேற்றமடைதல் வேண்டும்.

'பூத பர்த்ரு ச க்ர ஸிஷ்ணு ப்ர விஷ்ணுச - தோற்றுவிப்பவன், காப்பதும், நிலைநிறுத்துவதும் பரமாத்மாவே. சிருஷ்டி, ஸ்திதி லயம் இவற்றைச் செய்வது அவனே; பிரம்ம, விஷ்ணு, சிவன் ஆகிய மூன்றும் அவனுடையவே.

'த மஸஹ் பரமுச்யதே' - இந்த பிரம்மாண்டம் அனைத்தும், மனம், புத்தி, முதலானவை தாமஸ குணத்தினிடத்து - அதாவது மாயையிடத்து, அவித்தையில் இருக்கின்றது. பரமாத்மா அந்த தாமதத்தற்கப்பால் உள்ளார். எனவே மாயையின் கறை எவையும் அவனிடத்து இருப்பதில்லை. முமுக்ஷு இவ்வாறு தன் உண்மை சொரூபத்தை அத்தகைய குற்றமற்ற பரபிரம்மமேயென்று எப்போதும் எண்ணி, மாயையின் குற்றங்கள் எதுவும் அணுகாதிருக்குமாறு பார்த்துக் கொள்ள வேண்டும்.

'ஞானம் ஞேயம் ஞானகம்யம்' - முதல் ஞானத்திற்கு சுத்த தைசன்யம் என்று பொருள். இரண்டாவது ஞானத்திற்கு தற்பெருமையின்மை முதலான ஞானகுணங்கள் என்று பொருள். இவ்வத்தியாயத்தில் பரமாத்மாவிற்கு ஞேயம் என்ற பெயர் வழங்கப்பட்டுள்ளது. அதாவது 'அறியத்தக்கது' என்பது பொருள். உலகில் ஏனைய

வஸ்துக்களைப் பற்றித் தெரிந்து கொண்டாலும், அறியத்தக்கதான பிரம்மத்தை அறிந்து விட்டால் ஏனையவையனைத்தும் உபயோக மற்றதேயாகும். ஏனெனில் உலகப் பொருள்களின் ஞானத்தினால் மக்கள் பிறப்பு இறப்பெனும் வெள்ளத்திலிருந்து தப்பித்துக் கொள் ளும் சக்தியைப் பெற முடியாது.

இறைவனை எவ்வாறு அடையக்கூடும் என்ற வினாவிற்கு 'ஞா னகம்யம்' என்று விடை இங்கு அளிக்கப்பட்டுள்ளது. 'அமானித் வம்' முதலான ஞானகுணங்களினால் அவனை அடைய முடியும் என்பது பொருள். எனவே எவராயினும் பகவான் தெரிவித்த இந்த ஞான குணங்களைப் பெற்றிருந்தால் அவன் ஞேயத்தினைத் தவ றாது அடைந்தே தீருவான்.

'ஹ்ருதி ஸர்வஸ்ய விசிஷ்டிதம்' அனைவரின் இதயத்திலும் இறைவன் உறைகிறான் என்று சொல்லப்பட்டது. ஸர்வஸ்ய என்ற தால் பிற உயிர்களின் இதயத்திலும், தாவர இனத்திலும் இறைவன் வசிக்கிறான் என்று பொருள். எனவே தன் இதயத்திலுள்ள பரமாத் மாவை அடைவதற்கு பாவி, சண்டாளன் இவர்களுக்குக் கூட உரிமை உள்ளது. ஆத்மா அனைவரின் பிறப்புரிமையாக உள்ளது. எனவே ஜாதி, மத வேறுபாடின்றி அனைவரும் தடையின்றி அவனை அடைவதற்கு முயலக்கூடும்.

இதயத்தில் வசிக்கிறான் என்பதால் இறைவன் மக்களின் சரீரத் திலேயே மிக அருகில் இருக்கிறான் என்பதை உணர்ந்து பாவ காரி யங்கள் எவையும் செய்யாது, இறைவனை அடைவதற்கான முயற்சி யில் எப்போதும் ஈடுபட்டிருத்தல் வேண்டும்.

**வினா :** 'ஞேய'மான பரபிரம்மத்தின் சொரூபத்தினை வர்ணிக்கவும்.

**விடை :** (1) பரபிரம்மமான ஞேயம் எங்கும் கைகள், கால்கள், கண்கள், சிரஸ், முகங்கள், செவிகள் உடையது. (2) எங்கும் வியாபித் திருப்பது. (3) இந்திரியங்களின் குணங்களை பிரகாசிக்கச் செய்வது. (4) இந்திரியங்கள் அற்றது. (5) எதிலும் ஒட்டாதது. (6) எல்லாவற் றையும் தாங்குவது. (7) சத்வ ரஜஸ், தமோ குணங்களற்றது. (8) குணங்களை அனுபவிப்பது. (9) உயிர்களின் உள்ளும் புறமும் இருப் பது. (10) அசைவற்றது. (11) அசைவது. (12) மிக்க சூட்சுமமாயிருப்ப தால் (அஞ்ஞானிகளால்) அறியக்கூடாதது. (13) தூரமாக இருப்பது. (14) மிகவும் அருகில் இருப்பது. (15) பிளவு படாததாயினும் உயிர்க ளிடத்து பிளவுபட்டது போல் இருப்பது. (16) உயிர்களைத் தோற்று

விப்பது, காப்பாற்றுவது, லயிக்கச் செய்வது. (17) சூரியன் முதலான ஒளிபொருந்திய வஸ்துக்களுக்கும் ஒளியூட்டக் கூடியது. (18) தமஸ் (அஞ்ஞானத்தை) விட வேறானது. (அதீதமானது) (19) சின்மய ரூபமுடையது. (20) அறியத்தக்கது. (21) ஞான குணங்களால் அடை யக்கூடியது. (22) எல்லா உயிர்களின் இதயங்களிலும் வீற்றிருப்பது என்று சொல்லப்படுகின்றது.

### முன்னுரை

இவ்வாறாக, க்ஷேத்ர க்ஷேத்ரக்ஞும் இரண்டையும் பற்றித் தெரி வித்து, அத்தகைய அறிவினால் ஏற்படும் பலனை அடுத்துக் கூறுகி றார்.

*இதி க்ஷேத்ரம் ததா ஞானம் ஞேயம் சோக்தம் ஸமாஸதஹ!*
*மத்பக்த ஏதத் விக்ஞாய மத்பாவயோப பத்யதே! (19)*

### சொற்பொருள்

இதி - இவ்வாறாக, க்ஷேத்ரம் - க்ஷேத்ரம், ததா - அவ்வாறே, ஞானம் - ஞானம், ஞேயம் ச - ஞேயத்தினைக் கூட, ஸமாஸதஹ் - சுருக்கமாக, உக்தம் - சொல்லப்பட்டன. மத்பக்தஹ - என்னிடத்தே பக்தியுடைய பக்தன், ஏதத் - இதனை, விக்ஞாய - அறிந்து, மத்பா வாய - என்னை அடைவதற்கு (மோட்சத்தை அடைவதற்கு), உபபத் யதே - தகுந்தவனாகிறான்.

### கருத்துரை

இவ்வாறாக, க்ஷேத்ரம், ஞானம், ஞேயம் இவை பற்றிச் சுருக்க மாகச் சொல்லப்பட்டன. இதை அறியும் என் பக்தன் என் வடிவை (மோட்சத்தை) அடையத் தகுந்தவனாகிறான்.

### விளக்கம்

'மத்பக்த ஏதத் விக்ஞாயே' - என் பக்தன் இதனை அறிந்து என்றதால், பக்தனல்லாதவன் அஞ்ஞானிகள் அறிய முடியாது என்ப தும், மேற்சொல்லப்பட்ட ஞான ஞேயம் முதலானவற்றை அறிவ தற்கு முன், ஒவ்வொருவரும் பக்தனாக வேண்டுமென்பதும் தெளி வாகிறது. பக்தியெனும் மலரினின்றும் ஞானமெனும் பலன் உண் டாகின்றது. எனவே முதலில் சர்வேசுவரனின் மீது, சத்குருவின் மீது சலனமற்ற பக்தி கொண்டு, ஜபம், தவம், பூசை, சங்கீர்த்தனம் இவற் றால் அவனை ஆராதிப்பவர்க்கு அவன் அருள் கூர்ந்து ஞான, ஞேயத்

தினை அறியக்கூடிய 'புத்தியோகத்தினை' அளிப்பார். அதன் மூலம் அந்த பக்தன் ஞானியாகி, பகவத் சாயுஜ்யத்திற்கு (மத்பாவயா) தகுந் தவன் ஆகிறான். அவ்வாறின்றி இறை பக்தியில்லாவிடின் அவர்கள் எத்துணை சிறந்த பண்டிதர்களாயினும், பௌதீக, விஞ்ஞான அறிவு இருப்பினும் இறைஞானம், ஞேயதத்வ அனுபவம் அவர்களுக்குக் கிடைக்காது என்பது இச்சுலோகத்தின் மூலம் தெரிய வருகிறது. மேலும் மக்கள் சாதாரணமான பக்தியினால் திருப்தியடைந்து விடா மல், சாதனைகளின் மூலம் படிப்படியே ஞான, ஞேயங்களைக் கூட அறிந்து மோட்சமடைதல் வேண்டுமென்பது தெளிவாகிறது.

மோட்சத்தினை எவர் அடையக்கூடும் என்ற வினாவிற்குச் சரி யான விடை இங்கு அளித்துள்ளார். ஞான, ஞேயம் முதலானவற்றை நன்கு அறிந்தவரே மோட்சத்தை அடையக் கூடியவர். மேலும் அந்த ஞானத்துடன் பக்தியும் சேர்ந்தவருக்கே மோட்சம் கிடைக்கும் எனத் தெரிவிக்கப்பட்டது.

வினா : பகவத் சாயுஜ்யத்தை (மோட்சத்தை) எவர் அடையக்கூடும்?

விடை : ஞான சொரூபத்தையும் ஞேயசொரூபத்தையும் நன்கறிந்த வன்.

வினா : ஞான, ஞேயத்தை எவர் அறிய இயலும்?

விடை : இறைபக்தியுடையவன் மந்திரமே.

முன்னுரை

இதுவரை ஞான ஞேயத்தைப் பற்றிக் கூறி இனி பிரகிருதி, புருஷன் இவற்றை வர்ணிக்கிறார்.

*ப்ரக்ருதிம் புருஷம் சைவ வித்த்யனாதீ உபாவபி!*
*விகாராம்ஸ்ச குணாம்ஸ்சைவ வித்தி ப்ரக்ருதி ஸம்பவான்!!* (20)

சொற்பொருள்

ப்ரக்ருதிம் - இயற்கையை, புருஷம் சஏவ - புருஷனை, உபௌ அபி - இரண்டினையும், அநாதி - ஆதியற்றது என்று, வித்தி - அறிக, விகாரான்ச - (மனம், புத்தி, இந்திரியங்கள்) விவரங்களை, குணன் ச ஏவ - (சத்வ ரஜோ தமோ) குணங்களை, ப்ரகிருதி சம்பவான் - இயற்கையினால் ஏற்பட்டவையாக, வித்தி - அறிக.

## கருத்துரை

ஓ அர்ஜுனா! இயற்கையை, புருஷனை என்ற இரண்டையும் ஆதியற்றதாக அறிக. (மனோபுத்தி இந்திரியங்கள் முதலான) விகாரங்களை (சத்வ, ரஜஸ், தமோ) குணங்கள் இயற்கையினால் ஏற்பட்டவையாக அறிக.

## விளக்கம்

மாயை, இந்த சம்சாரம், பந்தம் - எப்போது ஆரம்பித்தது என்று பலரும் கேட்கின்றனர். இரவில் உறங்கிய பின் கனவில் கனவு எப்போது தொடங்குகிறது? என்று கேட்பின் இந்த சமயத்தில் ஆரம்பித்தது என்று எங்ஙனம் சொல்ல முடிவதில்லையோ, அவ்வாறே இந்த விழிப்பு நிலையில் உள்ள உலகைக் குறித்தும் அறிதல் வேண்டும். எனவே தான் இம்மாயை, இயற்கையை அநாதி (ஆதியற்றது) என்கிறார். அநாதியென்றாரே தவிர 'அனந்தம்' - முடிவற்றது எனவில்லை. ஏனெனில் எந்தக் கணத்தில் மனிதனுக்கு, ஞானோதயம் ஏற்படுகின்றதோ அந்தக் கணமே 'மாயை', 'இயற்கை', 'பந்தம்' முடிவு பெற்று விடும். எனவே இயற்கை பந்தம் இவை ஆதியற்றது என எவரும் பயப்பட வேண்டிய தேவையில்லை. ஞானத்தைப் பெறுவதற்கு முயற்சி செய்தால் போதும் கனவுலகில் கனவு ஆதியற்றதாகத் தோன்றினாலும், விழிப்பு வந்துவிட்டால் முடிவுபெற்று வருகிறதல்லவா. இயற்கை அநாதி, சாந்தம் என்ற புருஷன் அநாதி, முடிவற்றவன் என்றறிதல் வேண்டும்.

'விகாராம்ஸ்ச குணாம்ஸ்சைவ வித்தி ப்ரக்ருதிஸம்பவான்' - இயற்கை, புருஷன் இருவரிலும், புருஷன் (ஆத்மா) நித்யசுத்தன். அவனிடத்து எந்தவிதமான விகாரமும் இருப்பதில்லை. காம, சுக, துக்கம், மோஹம் முதலான விகாரங்களனைத்தும் இயற்கையினின்றே பிறந்தவையாகும். எனவே ஜீவனுக்கு காம, குரோதம் முதலானவை இருக்கும் வரை தான் இன்னும் பிரகிருதியோடு தொடர்புடையவனே என்று எண்ணும் வரை, பந்தத்தில் கட்டுறுபவனேயென்றும், புருஷனான நிர்விகார பரமாத்மாவைச் சேரவில்லையென்றும் அறிதல் வேண்டும். ஜீவன் எப்போது முயற்சியினால் அந்த விகாரங்களை விடுத்து சித்தத்தினை வாசனையற்று செய்து கொள்கிறானோ, அப்போதே பந்த விமுக்தியடைந்து, புருஷனான இறைவனிடத்தில் வசிக்கிறான். மேலும் ஏதாவது துக்கமோ, மனக்கலக்கமோ ஏற்படின் 'இவை இயற்கையோடு (பிரகிருதி) தொடர்புடையவையே. எனக்கல்ல, இவை என் சொரூபமல்ல. நான் இவற்

றிற்கு சாட்சியானவன். விகாரமற்றவன்' என்று திடமாக எண்ணி துக்கமற்று மேருவைப் போன்று உறுதியான சித்தத்துடன் அவ்விகாரங்களை ஒதுக்கித் தள்ளுதல் வேண்டும்.

### முன்னுரை

பிரகிருதி, புருஷனைப் பற்றி இன்னும் சற்று விவரமாகத் தெரிவிக்கின்றார்.

*கார்யகாரண கர்த்ருத்வே ஹேதுஹ் ப்ரக்ருதிருச்யதே!*
*புருஷஹ ஸுக துக்கானாம் போக்த்ருத்வே ஹேதுருச்சயதே!!* (21)

### சொற்பொருள்

காரணகார்ய கர்த்ருத்வே - காரிய காரணங்களை ஏற்படுத்துவதில் (உண்டாக்குவதில்), ப்ரக்ருதிஹ் - பிரகிருதி (மாயை), ஹேதுஹ் - காரணமென்று, உச்யதே - சொல்லப்படுகின்றது. சுக துக்கானாம் - சுக துக்கங்களின், போக்த்ருத்வே - அனுபவிப்பதில், - புருஷஹ் - புருஷன், ஹேதுஹ் - காரணமென்று, உச்யதே - சொல்லப்படுகின்றது.

### முன்னுரை

பிரகிருதியின் குணங்களுடன் கலப்பதே ஜீவனின் பிறப்பிற்குக் காரணமென்றகிறார் -

*புருஷஹ ப்ரக்ருதிஸ்தோ ஹி புங்க்தே பரக்ருதிஜான் குணான்!*
*காரணம் குணஸங்கோ அஸ்ய ஸதஸத்யோனி ஜன்மஸு!!* (22)

### சொற்பொருள்

ப்ரகிருதிஸ்தஹ் - பிரகிருதியில் இருப்பதனாலேயே, புருஷஹ் - புருஷன் (ஜீவன்), பிரகிருதிஜான் - பிரகிருதியினால் பிறந்த, குணான் - (சுக, துக்கம் முதலான) குணங்களை, புங்க்தே ஹி - அனுபவிக்கிறான் அல்லவா!, குணஸங்கஹ் - (அவ்வக்) குணங்களின் மீதுள்ள பற்றே, அஸ்ய - இந்த ஜீவனுக்கு நல்ல,கேடுடைய பிறவிகள் பலவற்றிற்கும் காரணமாய் இருக்கின்றது.

### விளக்கம்

ஜீவன் இந்த சம்சார பந்தத்தில் சிக்கிக் கொள்வதற்கும், (உத்தம, அதம) மேலான கீழான பிறவிகளையடைவதற்கும் காரணம் என்

ணவோ அவை இந்த சுலோகத்தில் தெரிவிக்கப்படுகிறது. இயற்கையின் (சத்வ, ரஜஸ், தமோ) குணங்களுடன், அவ்வக்குணங்களால் பிறக்கும் உலக வஸ்துக்களுடன் சேர்க்கையே ஜீவனின் பந்தத்திற்குக் காரணமாகிறது. புருஷன் உண்மையில் விகாரமற்று, பிறவியற்று, காட்சியாய் இருப்பினும் காட்சிப் பொருள்களான தேக இந்திரியங்களில், உலக வஸ்துக்களில், அஹங்காரம், மமகாரம் இவற்றுடன், காட்சிப் பொருள்களின் உபாதியுடனும், அதன் குணங்களுடனும் சேர்க்கை இருப்பதால் விகாரமடைந்து, ஜனன, மரணம் இவற்றையடைந்து சம்சாரத்தில் நுழைகிறான்.

எனவே விசாரணை செய்யவே தன் பிறவி முதலான துக்கங்களுக்குக் காரணம் இந்த குணங்களின் சேர்க்கையேயென அறிந்து தன் சரீரம், சரீர குணங்கள், இவற்றுடன் பற்று, ஆசை, மமகாரம், அஹங்காரம் இவையன்றி, பற்றற்ற நிர்க்குண சித்ரூபமே தானென்றுணர்ந்து, அந்த உருவாகவே மாறிவிட்டால், இனிப் பிறவி முதலான பெருந்துன்பம் எங்கே? துக்கத்தின் இருப்பிடமான ஜனன மரணமென்ற வெள்ளத்தினின்றும் தப்பித்துக் கொள்வதற்கான உபாயம் இது ஒன்றேயாகும். பற்றே பந்தம்; பற்றின்மையே வீடுபேறு.

ஒரு பெரிய 'பாக்டரியில்' (Factory) பல சக்கரங்கள், இயந்திரங்கள் வேலை செய்து கொண்டிருந்தாலும், மூலஸ்தானத்தில் உள்ள பெரிய சக்கரம் (fly wheel) தில், பொருத்தப்பட்டுள்ள 'பெல்ட்' (Belt) அறுந்து விட்டால் ஆயிரக்கணக்கான இயந்திரங்களும் நின்றுவிடுமல்லவா! அவ்வாறே இந்தப் பிறபிறப்பெனும் சம்சார இயந்திரமனைத்தும், ஜீவன் குணங்களுடன், சரீரத்துடன், பிரகிருதியுடன் உள்ள பற்றினை விட்டுவிட்டால், அந்தக் கணமே நின்று போகும். ஜீவனுக்கு மோட்சம் உள்ளங்கை நெல்லிக்கனியாகும்.

**வினா :** ஜீவன் மேலான கீழான பிறவிகள் எடுப்பதற்கான காரணமென்ன?

**விடை :** குணங்களுடன், பிரகிருதியுடன், சரீரத்துடன் அவனது சேர்க்கையே அத்தகைய பிறவிகளுக்குக் காரணம்.

**வினா :** எனவே பிறவியின்மைக்கு உபாயம் எது?

**விடை :** விவேகத்தினால் பிரகிருதியுடன், குணங்களுடன், சரீரத்துடன், காட்சி விஷயங்களுடன் பற்றினை விடுவதேயாகும்.

முன்னுரை

இந்த தேகத்தில் புருஷன் (ஜீவன்) சாட்சாத் பரமாத்மாவே என்கிறார்.

*உபத்ரஷ்டானுமந்தா ச பர்தாபோக்தா மஹேச்வரஹ!*
*பரமாத்மேதி சாப்யுக்தோ தேஹேஅஸ்மின் புருஷஹ பரஹ!!* (23)

சொற்பொருள்

புருஷஹ - புருஷன் (ஆத்மா), அஸ்மின் தேஹே (ஸதி) அபி - இந்த சரீரத்தில் இருப்பினும், பரஹ் - சரீரத்தினும் வேறானவன், உபத்ருஷ்டா, - சாட்சியாய் இருப்பவன், அனுமந்தச - அனுமதிப்ப வன், பர்தா - தாங்குபவன், போக்தா - அனுபவிப்பவன், மஹேஸ்வ ரஹ - பரமேசுவரன், (தலைவன், ஆள்பவன்), பரமாத்மா இதிச - பரமாத்மா என்றெல்லாம், உக்தஹ் - சொல்லப்படுகிறான்.

கருத்துரை

புருஷன் (ஆத்மா) இந்த சரீரத்தில் இருப்பினும், சரீரத்தினும் வேறுபட்டவன், சாட்சியாய் இருப்பவன், அனுமதிப்பவன், தாங்கு பவன், அனுபவிப்பவன், பரமேசுவரன், பரமாத்மா என்றெல்லாம் சொல்லப்படுகிறான்.

விளக்கம்

'உபதிருஷ்டா' - யக்ஞத்தில் 'உபத்ருஷ்டர் என்பவன் சாட்சி யாக இருப்பான். அவ்வாறே ஆத்மா சரீரத்தில் இருப்பினும் 'பரஹ்' - சரீரத்தை விட வேறாக, அப்பாற்பட்டவனாய் தேக இந்திரியங்க ளுக்குச் சாட்சியாய் இருக்கிறான். எனவே ஜீவன் உண்மையில் தான் அந்த பரமாத்ம சொரூபமேயென்று தேக இந்திரியங்களல்லவென் றும் நன்கு மனத்தில் பாவித்துக் கொள்ள வேண்டும்.

'மஹேஸ்வரஹ், பரமாத்மா, தேஹோ அஸ்மின்' - என்று சொல்லப்பட்டதால் ஜகன்னாதனான பரமேசுவரன் பரமாத்மா இந்த தேகத்திலேயே இருக்கிறான் என்பது தெளிவாகிறது. இவ்வாறாக பகவான் ஜீவனுக்கு மிக அருகிலேயே இருப்பதால் முயற்சி செய் தால் எளிதாக அவனை அடைய முடியும். அவனை வெகு தொலை வில் தேடி அலைந்து துன்பப்பட வேண்டியதில்லை. மேலும் அவன் தண்டிப்பவன், காப்பாற்றுபவன் (ஈசுவரன்) அருகிலேயே இருப்ப தால் பாவிகள் இவ்விஷயத்தைக் கவனத்தில் வைத்து பாவ காரியங் கள் எவையும் செய்யாதிருத்தல் வேண்டும்.

'பரஹ் - என்று சொல்வதால் ஆத்மா தேகத்துடன், சரீரத்துடன், தொடர்பின்றி, வேறாக, அதீதமாக, இருக்கின்றது என்பது தெரிகின்றது. 'பரஹ்புருஷஹ்' என்னும் பதங்களுக்கு பரமபுருஷன், பரமாத்மா என்று பொருள் சொல்லக்கூடும்.

**வினா :** *பரமாத்மா எத்தகையவன்?*

**விடை :** *(1) சரீரத்தில் இருப்பினும் சரீரத்தை விட வேறானவன் (2) சாட்சியாய் இருப்பவன் (3) அனுமதிப்பவன் (4) தாங்குபவன் (5) அனுபவிப்பவன் (6) தலைவன், (பரமேசுவரன்) ஆக இருப்பவன்.*

**முன்னுரை**

*இவ்வாறாக பிரகிருதி, புருஷனைக் குறித்து அறிவதால் ஏற்படும் பலனைக் குறிக்கிறார்.*

*ய ஏவம் வேத்தி புருஷம் ப்ரக்ருதிம் ச குணைஹ் ஸஹ!*
*ஸர்வதா வர்தமானோ அபி ந ஸபூயோ அபிஜாயதே! (24)*

**சொற்பொருள்**

*யஹ் - எவன், ஏவம் - இவ்வாறு, புருஷம் - புருஷனை, குணைஹ்ஸஹ - குணங்களோடு கூடிய, (திரிகுணங்களோடு கூடிய), ப்ரகிருதிம்ச - பிரகிருதியை, வேத்தி - அறிகிறானோ, ஸஹ் - அவன், ஸர்வதா வர்த்தமானஹ அபி - எவ்வாறு வாழ்பவனாய் இருப்பினும், பூயஹ - மறுபடியும், ந அபிஜாயதே - பிறப்பதில்லை.*

**கருத்துரை**

*எவன் இவ்வாறாக புருஷனை (ஆத்மாவை), குணங்களுடன் கூடிய பிரகிருதியை அறிகிறானோ, அவன் எவ்விதமாக வாழ்பவனாய் இருப்பினும் மறுபடியும் பிறப்பதில்லை.*

**விளக்கம்**

*மறுபிறவி எடுக்காதிருப்பதற்கு, மோட்சத்தையடைவதற்கு, வழியென்ன என்பதற்கு இங்கு விடையளித்துள்ளார். புருஷன் (ஆத்மா) எத்தகையவன்? பிரகிருதி எத்தகையது? இவ்வாறான ஆத்மா அநாத்ம விசாரணையில் ஈடுபட்டுள்ள மனிதனுக்கு (த்ரிக், த்ருஸ்யம்), காட்சி, காட்சிப் பொருள் இவற்றை நன்கு பிரித்தறிய இயலும். எனவே அத்தகைய விசாரணையில் உள்ளோன் மூன்று*

குணங்களுடன் கூடிய, பந்தத்தை ஏற்படுத்தக்கூடிய, துக்கத்திற்குக் காரணமான பிரகிருதியைப் பின்பற்றாது குணங்களற்ற, பந்தங்க ளற்ற, பரமானந்தரூபமான புருஷனையே பின்பற்றுவான். எனவே அவன் இனிபிறவான், முக்தனேயாவான். ஏனெனில் பிரகிருதி, புரு ஷன் ஞானமுடையவன், அநாத்மாவை, அதாவது காட்சிப் பொருள் களை, பிரகிருதியைத் தன்னை விட (புருஷனை விட) வேறானதா கக் கருதி அதன்மீது பற்று கொள்ளான். எனவேதான் அத்தகையோன் முக்தியடைந்து மறுபடியும் பிறவான் எனப்பட்டது.

'ஸர்வதா வர்த்தமானோஅபி' - அத்தகையோன் எப்படியிருப்பி னும் - என்று சொல்வதால் சமாதி நிட்டையில் இருப்பினும் அல்லது உலக (மனிதர்களின் உபகார) காரியங்களில் ஈடுபட்டிருப்பினும், பிரம்மச்சரியம் முதலான எந்த ஆசிரமத்தில் இருந்தாலும், மறுபடி யும் பிறவான் என்பது பொருள். அவன் எப்படி வாழ்ந்திருந்தாலும் எப்போதும் முக்தனேயாவான். ஆயின் 'எப்படி வாழ்ந்திருந்தாலும்' என்பதற்குப் பொருள், செய்யக் கூடாதனவற்றை, மறுக்கப்பட்ட வற்றைச் செய்து கொண்டிருப்பினும் என்று எவரும் பொருள் கொள் ளலாகாது. ஏனெனில் கெட்ட நடவடிக்கையில் ஈடுபட்டிருப்பவர் ஒரு நாளும் ஆத்மா அநாத்மா விவேகியாக முடியாது. எனவே இத்த கைய வாக்கியங்களின் பொருளைக் கொள்வதில் மிகவும் எச்சரிக் கையாயிருத்தல் வேண்டும்.

### முன்னுரை

அவரவர் பண்பையனுசரித்து மக்கள் பல வழிகளின் மூலம் பரமாத்மாவை கண்டுணர்ந்து முக்தர்களாகிறார்கள் என்று இனிவ ரும் இரண்டு சுலோகங்களில் தெரிவிக்கிறார் -

*த்யானேனாத்மனி பச்யந்தி கேசிதாத்மானமாத்மனா!*
*அன்யே ஸாங்க்யேன யோகேன கர்மயோகேன சாபரே!* (25)

### சொற்பொருள்

ஆதாத்மானம் - ஆத்மாவை, (ப்ரக்யகாத்மா, அல்லது பரமாத் மாவை), கேசிந் - சிலர், ஆத்மனா - தூய்மையான மனத்தினால், த்யானேன - தியான யோகத்தினாலும், ஆத்மனி - தன்னிடத்தே, பச்யந்தி - காண்கின்றனர். அன்யே - மேலும் சிலர், சாங்க்யேன யோகேன - சாங்கிய யோகத்தினாலும், அவரே - இன்னும் சிலர், கர்ம யோகேன ச - கர்ம யோகத்தாலும், பஸ்யன்தி - காண்கின்றனர்.

**கருத்துரை**

*ஆத்மாவை (பரமாத்மாவை) சிலர் தூய்மையான மனத்தினாலும், தியான யோகத்தில் தன்னிடத்தேயே காண்கின்றனர். அவ்வாறே மேலும் சிலர் சாங்கிய யோகத்தாலும், இன்னும் சிலர் கர்ம யோகத்தினாலும் காண்கின்றனர் (அனுபூதி அடைகின்றனர்).*

விளக்கம்

மக்கள் அவரவர் மனப்பண்பையொட்டி வெவ்வேறு பண்பாடுடையவராயிருப்பர். அத்தகைய பண்பாட்டிற்கேற்ப அவர் இறைவனை அணுகுவர். சிலர் தியானத்தினாலும், சிலர் பக்தியினாலும், சிலர் ஞானத்தினாலும், மேலும் சிலர் கர்மயோகத்தினாலும் முயல்வர். எந்த மார்க்கத்தை அனுசரித்தாலும் தூய்மையான சித்தத்துடனேயே முயற்சித்தால்தான் இறைவனைக் காணுதல் முடியும் எனக் கூறப்பட்டுள்ளது. அனைத்தும் ஒரே இலக்கினை அடைவதற்கு உதவுவதால் எல்லா மார்க்கங்களும் சமமானவையேயாகும். அவரவர் மனோநிலையை அனுசரித்து அவ்வவ் மார்க்கங்களைப் பின்பற்றுவதற்கு அனைவர்க்கும் சுதந்திரம் உள்ளது என்றும், எதனைப் பின்பற்றினாலும் அனைவரும் ஒரே பரமாத்மா எனும் இலக்கினை அடைய முடியுமென்பதும் இச்சுலோகம், இனிவரும் சுலோகம் இரண்டினாலும் தெரிய வருகின்றது.

இங்கு தியான யோகம், சாங்க்ய யோகம், கர்ம யோகம் என்ற மூன்றும் சொல்லப்பட்டுள்ளது. பக்தி யோகத்தில், தியான யோகம் தொக்கி இருப்பதால் (தெரிகிறதால்) இங்குத் தனியாகக் குறிப்பிடப் படவில்லை.

'பஸ்யந்தி' - காண்கின்றான் என்று சொல்வதால் இறைவன் ஒரு காணமுடியாத பொருளல்ல. மக்கள் அதனை நேருக்கு நேர் காண்டல் இயலும் என்பதும், அனுபவத்தில் உணர்தல் கூடும் என்பதும் தெரிகிறது. எனவே இனித் தெய்வத்தை அடைவதற்கு மக்கள் எந்த வித ஐயமும் பட வேண்டியதில்லை. மேலும் இறைவன் இருக்கிறானா இல்லையா என்ற ஐயத்திற்கு இடமே இல்லை. ஏனெனில் 'நீ இறைவனைக் காணலாம்; மஹாத்மாக்கள் தியானத்தினால் இறைவனைக் காண்கின்றனர், என்று ஸ்ரீ கிருஷ்ணர் ஐயத்திற்கிடமின்றிச் சொல்லியுள்ளார்.

'ஆத்மனி' - தன்னிடத்திலேயே என்று சொல்வதால் பரமாத்மா எங்கோ இல்லை தன்னிடத்திலேயே இருக்கின்றான் என்பது தெளி

வாகிறது. இதனால் இறைவன் மிக அருகில் இருக்கிறான் என்பதும் தெளிவு. தன் இதயத்திலேயே பரமாத்மா இருக்கிறான் என்பதால் அவனுக்காக மேற்கொள்ளும் முயற்சி, வெளியில் தேடி அலை வதை மெல்ல மெல்லக் குறைத்துக் கொண்டு மனிதன் இதயத்தி னையே பரிசோதித்து அறிதல் வேண்டும். மேலும் 'ஆத்மனா' என்ப தால் எந்த மார்க்கத்தினை அனுசரித்தாலும் தூய்மையான சித்தத்தி லேயே ஆத்ம சொருபத்தை அடைவதற்கு ஒரே வழி என ஊகித்தறி தல் வேண்டும். அது ஒன்றே மோட்சத்தின் வாயிலைத் திறக்கும் திறவுகோல். எனவே மோட்ச சாதனம் அவரவர் கையிலேயே உள் ளது. தத்தம் மனத்தைத் தூய்மைபடுத்திக் கொண்டு அவரவர் பண்ப டுத்திக் கொண்டு பரமாத்மாவின் பக்கம் முன்னேறுவதே முக்தி சாதனம்.

சாதாரணமாகச் சிலர் கர்ம யோகத்தினைக் குறைவாகவும் ஞான யோகத்தினை மேலாகவும் கூறுவர். ஆயின் பகவான் இங்குக் கர்ம யோகம், ஞான, தியான யோகங்கள் அனைத்தையும் சமமாகவே கருதுகிறார். ஏனெனில் நிஷ்காம கர்ம யோகம் சித்த சுத்தியினால் ஞானம் தோன்றுவதற்குக் காரணமாகி ஞானயோகப் பலனான பக வத் சாட்சாத்காரத்தினை அடையச் செய்கிறது.

**வினா :** மக்கள் பரமாத்மாவை எங்குக் காணலாகும்?

**விடை :** தத்தம் இதயத்திலேயே.

**வினா :** எதன் மூலம்?

**விடை :** தூய்மையான மனத்தினால்.

**வினா :** எவ்வாறு?

**விடை :** சிலர் தியானம், சிலர் சாங்கிய யோகம், இன்னும் சிலர் கர்ம யோகம் இவற்றை அனுசரித்து பரமாத்மாவைக் காண்கின்றனர்.

*அன்யே த்வேவமஜாணந்தஹ ச்ருத்வான் யேப்ய உபாஸதே!*
*தேஅபி சாதிதரந்த்யேவ ம்ருத்யும் ச்ருதி பராயணாஹ்!!* (26)

**சொற்பொருள்**

அன்யேது - இன்னும் சிலரோ, ஏவம் - இவ்வாறு (தியான, சாங்க்ய, கர்ம யோகத்தினால்) அஜானந்த - அறியாதவர்களாயினும், அன்யேப்யஹ - பிறரிடம், ச்ருத்வா - (அப்பரமாத்மாவைக் குறித்து)

கேட்டு, (உத்தேசிக்கப்பட்டு), உபாஸதே - உபாசிப்பவர்கள் இருக்கின்றனர். ச்ருதிபராயணாஹ் - கேட்ட உபதேசத்தில் பற்று, நிட்டையுடையவராய், தேஅபிச - அவர்களும், ம்ருத்யும் - மரணத்தை (மரணத்தோடு கூடிய இந்த சம்சாரத்தினை, அதிதரந்தி ஏவ - நிச்சயமாகக் கடக்கின்றனர்.

**கருத்துரை**

இன்னும் சிலரோ, இங்ஙனம் (தியான, சாங்கிய, கர்ம யோகத்தினை) அறியாதவர்களாயினும், பிறரால் (அப்பரமாத்மாவைக் குறித்து) உபதேசிக்கப்பட்டு அவற்றைக் கேட்டு உபாசிக்கின்றனர். கேட்ட உபதேசத்தில் பற்று நிட்டையுடையவரான அவர்களும் மரணத்தினை (மரணத்தோடு கூடிய இந்த சம்சாரத்தினை) தவறாது கடக்கின்றனர்.

**விளக்கம்**

தியான ஞானம் முதலான யோகங்களைக் குறித்து தத்துவத்தை அறிய இயலாதவர்கள், சிரத்தையுடன் அனுபவ ஞானிகளாக ஏனையவர்களிடம் கேட்டு அதன்படி நடந்தால் அவர்களும் மேற்சொல்லப்பட்டவர்களைப் போன்றே மரணத்தோடு கூடிய சம்சாரத்தினைத் தவறாது கடக்கின்றனர் என்று சொல்லப்பட்டது. 'அஜானந்தஹ' - என்பதால் யோக பரிஞானம், வித்தை, பாண்டித்தியம் இல்லாவிடினும், சிரத்தை, பக்தி, அனுஷ்டானம், இவற்றால் சம்சாரக் கடலைக் கடத்தல் இயலும் என்பது தெளிவாகிறது. வைத்திய சாஸ்திர ஞானமில்லாவிடினும், வைத்தியர் அளித்த மருந்தினை அவர் சொன்னபடி கேட்டு உட்கொண்டால் வியாதி தீர்ந்து விடுமல்லவா! வைத்தியனுக்கு நோய் வந்தாலும் முறையாக மருந்து உட்கொண்டால் தான் வியாதி தீரும். எனவே எவருக்காயினும் அனுஷ்டானம் என்பது முக்கியம். எனவேதான் 'உபாஸதே' என்ற சொல் சேர்க்கப்பட்டது. வெறும் அறிவு மட்டுமோ, அல்லது கேள்வியறிவு மட்டுமோ இருந்து விட்டால் போதாது. இவ்விரண்டோடு அனுஷ்டானம் சேர வேண்டும். ஆயின் தத்துவ அறிவு, வித்தை இல்லாதிருப்பதை விட அவற்றைப் பெற்றிருப்பதே மேலானது. ஒரு வேளை எக்காரணத்தாலோ அத்தகைய அறிவு பெற முடியாவிடில், ஏனையோரிடம் தெய்வ தர்மங்களையும், ஆன்மீக உண்மைகளையும் கேட்டாவது அவற்றை அனுஷ்டித்துக் கடைத்தேற வேண்டுமென இங்குச் சொல்லப்பட்டது. எனவே சாஸ்திர ஞானமில்லாதவர், கல்வியறிவு இல்லாதவர் அதனால் பயப்படத் தேவையில்லை. 'அதிதரந்திஏவ' என்ற

தால் அவர்களும் ஏனையோரைப் போன்றே தவறாது சம்சார பந்தத் தினைக் கடக்கின்றனர் என்பது தெளிவாகிறது.

'ம்ருத்யும்' - சம்சார பந்தத்தினைக் கடப்பதற்கு எனாது 'மரணத் தினைக் கடப்பர் என இங்குச் சொல்கிறார். எனவே சம்சாரம் மரணத் தோடு கூடி, மரண மயமாக இருக்கின்றது என்பது வெளிப்படுகின் றது. இங்கு 'மரணம்', 'சம்சாரநிலை' என்ற இரண்டு சொற்களையும் ஒரே பொருளைக் குறிக்கும் இரண்டு சொற்களாகப் பயன்படுத்தி யுள்ளார். (Syonyms) இதனைச் சாதகர்கள் நினைவில் கொண்டு மர ணம் போன்றே சம்சார உலக விஷயங்களில் ஈடுபாடு கொள்ளாது மரணமற்ற பெருவாழ்வினைப் பெறவே முயற்சித்தல் வேண்டும்.

வினா : சாஸ்திர அறிவு, தியானம் முதலான யோக அறிவு இல்லாத வர் எங்ஙனம் கடைத்தேற இயலும்?

விடை : ஏனையோரிடத்துத் தத்துவங்களைக் கேட்டறிந்து, அவற்றை அனுசரித்துக் கடைத்தேறுதல் வேண்டும்.

வினா : இந்த சம்சார நிலை எத்தகையது?

விடை : மரணத்தோடு கூடியது.

வினா : மரணத்தை மனிதன் எங்ஙனம் கடக்க இயலும்?

விடை : இறை தத்துவத்தைப் பெரியோர்களிடம் கேட்டறிந்து அதன் படி நடந்து கொண்டால் மரணத்தைக் கடக்க இயலும்.

முன்னுரை

எல்லாப் பொருள்களும் க்ஷேத்ர க்ஷேத்ரக்ஞத்தின் சேர்க்கையா லேயே உண்டாகிறது என்கின்றார்.

*யாவத் ஸஞ்ஜாயதே கிஞ்சித்ஸத்வம் ஸ்தாவர ஜங்கமம்!*
*க்ஷேத்ர க்ஷேத்ரக்ஞ ஸம்யோகாத் தத்வித்தி பரதர்ஷப!!* (27)

சொற்பொருள்

பரதர்ஷப - பரதகுல சிரேஷ்டனான அர்ஜுனா! ஸ்தாவர ஜங் கம - சராசரத்தில் உள்ள நிலை, இயங்கு, ஸத்வம் - பொருள்கள், யாவத் கிஞ்சித் - எவையெவை, சம்ஜாயதே - தோன்றியுள்ளனவோ, தத் - அவை, க்ஷேத்ரக்ஷேத்ரக்ஞஸம்யோகாத் - க்ஷேத்ரக்ஷேத்ரக்ஞத் தின் சேர்க்கையால், வித்தி (நடக்கின்றது) என அறிக.

**கருத்துரை**

*பரதகுலத்தில் சிறந்த அர்ஜுனா! இவ்வுலகில் நிலையானதும், இயங்குவதுமாகிய பொருள்கள் எவை தோன்றியுள்ளனவோ அவை யனைத்தும் க்ஷேத்ரக்ஷேத்ரக்ஞத்தினுடைய சேர்க்கையால் என்றறிக.*

**விளக்கம்**

*உலகில் எப்பொருளாயினும், க்ஷேத்ரக்ஞனான பரமாத்மாவின் சேர்க்கையின்றித் தோன்ற முடியாது என்று தெரிவிப்பதால் சராசரத் திலுள்ள எல்லா உயிர்களும் பகவானின் உடையதென நிச்சயித்து 'ஸர்வபூததயை' அனைத்து உயிர்களிடத்து கருணையுடன் நடந்து கொள்ள வேண்டும். இறைவன் கல்லில் உள்ளானா? என்ற வினா விற்கு இறைவனின் சேர்க்கையின்றிக் கல்லே தோன்ற முடியாதென கீதை சொல்கிறது. நிலைபொருளான கல்லின் விஷயமே இவ்வாறா னால் இனி இயங்கு பொருளான மனிதன் முதலான பிற உயிர்கள் எங்ஙனம் தோன்ற முடியும்? எனவே செடி, கொடி, கல், எறும்பு, பறவை, மிருகம், மனிதன், சண்டாளன், பிராமணனிடம், அரக்கனி டம், தேவனிடம் ஆகிய அனைவரிடமும் பரமாத்மா வசிக்கிறான் என்ற நம்பிக்கைக் கொண்டிருத்தல் வேண்டும்.*

**வினா :** *நிலை, இயங்கு பொருள்கள் எங்ஙனம் உண்டாகின்றன?*

**விடை :** *க்ஷேத்ரம், க்ஷேத்ரக்ஞனின் சேர்க்கையினால் உண்டாகின் றன.*

**முன்னுரை**

*எல்லா பூதங்களிலும் சமமாக வியாபித்துள்ள பரமாத்மாவை அறிந்தவனே உண்மையில் அறிஞன் என்கிறார் -*

*ஸமம் ஸர்வேஷு பூதேஷு திஷ்டந்தம் பரமேச்வரம்!*
*விநச்யத்ஸ்வ விநச்யந்தம் யஹ் பச்யதி ஸ பச்யதி!!* (28)

**சொற்பொருள்**

*ஸர்வேஷு பூதேஷு - எல்லா உயிர்களிடத்தும், ஸமம் - சம மாக, திஷ்டந்தம் - இருக்கக்கூடிய, பரமேஸ்வரம் - பரமாத்மாவை, வினச்யத்ஸு - அவ்வவ் உயிர்களின் தேகங்கள் அழிவுற்றாலும், அவினாச்யந்தம் - அழிவற்றவனாக யஹ் - எவன், பச்யதி - காண்கின் றானோ, (அறிகிறானோ), ஸஹ் - அவன், பச்ய - (உண்மையை)க்*

காண்கிறான். (அவனே உண்மையை யுணர்ந்தவன் என்பது பொருள்).

**கருத்துரை**

எல்லா உயிர்களிடத்தும் சமமாக வியாபித்துள்ள பரமாத் மாவை, அவைகளின் தேகம் அழிந்தாலும் அழிவற்றவையாக எவன் காண்கின்றானோ அவனே உண்மையைக் கண்டவனாகிறான். (அறி ஞன் என்பது பொருள்).

**விளக்கம்**

இறைவன் சிலரிடம் அதிகமாகவும், சிலரிடம் குறைவாகவும் இருப்பதில்லை. பூமாலையில் உள்ள நூலைப் போன்று எல்லா உயிர்களிடத்தும் சமமாக வியாபித்துள்ளான். மேலும் 'ஸர்வேஷு' என்ற சொல்லால் ஏதோவொரு சில உயிர்களில் மாத்திரமன்று உல கில் உள்ள எல்லா உயிர்களிலும் இறைவன் உறைகிறான் என்பது தெளிவாகிறது.

'வினஶ்யத்ஸு அவிநச்யந்தம்' - தேக உபாதிகள் அழிந்தாலும் அதிலுள்ள ஆத்மாவான பரமேசுவரன் அழிவடைவதில்லை எனப் பட்டது. இதனால் தேகம் முதலான காட்சி உலகமனைத்தும் அழிவு டையவையென்பதும், அழியாத பொருள் ஆத்மாவொன்றே என்ப தும் தெளிவு. எனவே அழியக்கூடியவற்றின் மீது மமகாரமின்றி நிலையான ஆத்மாவிற்காகத் தேடல் வேண்டும்.

'யஹ்பச்யதி ய பச்யதி' - உபாதிகள் அழிந்தாலும் ஆத்மா அழிவ டைவதில்லை என்றறிபவரே உண்மையில் அறிந்தவர் என்கிறார். எனவே இவ்வுண்மையையறியாதவரனைவரும் கண்கள் இருந்தும் இல்லாதவர்களே என்பதும் தெளிவாகிறது. ஸ்தூல நேத்திரங்கள் அதாவது ஊனக் கண்கள் இருப்பினும் மேற்சொன்ன காட்சிப் பொருள்களின் அழிவையும், பிரம்மத்தின் அழிவற்ற தன்மையை யும் அறியாதவன் அதாவது ஞானக் கண்கள் இல்லாதவன் - அவன் எத்தனை உலக வித்தைகளைக் கற்றிருந்தாலும், செல்வந்தனாயி னும், அழகனாயினும், பலவானாயினும், அதிகாரமுடையவனாயி னும், அரசாயினும் - இறைவனின் பார்வையில் குருடனே என்பது வெளிப்படுகிறது. எனவே பகவானின் அருள்வாக்கான இச்சூத்திரத் தின் படி அஞ்ஞானத்தை ஒழிப்பதற்கு முயல வேண்டும். உலகப் பொருள்கள் அழியக்கூடியவை. பரமாத்மாவே நிலையானது என்று அறிவதே ஞானக்கண்களைப் பெறுவதாகும்.

**வினா :** *பரமாத்மா எங்குள்ளான்?*

**விடை :** *எல்லா உயிர்களிடத்தும் உறைகிறான்.*

**வினா :** *எவ்வாறு?*

**விடை :** *எல்லா உயிர்களிடத்தும் சமமாக.*

**வினா :** *சரீரத்தின் இயல்பு என்ன?*

**விடை :** *அவை அழியக்கூடியவை.*

**வினா :** *ஆத்மாவின் இயல்பென்ன?*

**விடை :** *ஆன்மா அழிவற்றது.*

**வினா :** *உலகில் கண்கள் பெற்றவன் யார்?*

**விடை :** *தேகம் முதலான காட்சிப் பொருள்கள் அழிவுற்றாலும் ஆன்மா அழிவதில்லை என்ற விவேகத்தினை, ஞானதிருஷ்டியைப் பெற்றவனே உண்மையில் கண்கள் பெற்றவன்.*

முன்னுரை

*பரமாத்மா எங்கும் சமமாக இருக்கிறான் என்றறிபவன் முக்தனாகிறான் என்கிறான்.*

*ஸமம் பச்யன்ஹி ஸர்வத்ரஸமவஸ்திதமீச் வரம்!*
*நஹிநஸ்த் யாத்மனாத்மானம் ததோ யாதிபராம் கதிம்!!* (29)

சொற்பொருள்

*ஹி - ஏனெனில், ஸர்வத்ர - எல்லா உயிர்களிடத்தும், ஸமவஸ்த்தம் - நிலைத்திருப்பவனாகிய, ஈஸ்வரம் - பரமேஸ்வரனை ஸமம் - ஸமானமாக பஸ்ச்யன் - கண்டு, (அறிந்து), ஆத்மனா - தன்னால், ஆத்மானம் - ஆத்மாவை (தன்னை), ந ஹினஸ்தி - அழித்துக் கொள்ள மாட்டான். ததஹ் - அதனால், பராங்கதிம் - மேலான கதியினை அடைகிறான்.*

கருத்துரை

*ஏனெனில் எல்லா உயிர்களிடத்தும் நிலைத்திருக்கும் பரமாத்மாவை ஸமமாக வியாபித்திருப்பவனாகக் காணும் மனிதன் தன்*

ஆத்மாவைத் தானே ஹிம்ஸித்துக் கொள்ள மாட்டான். எனவே மிக மேலான மோக்ஷகதியினை அடைகிறான்.

**விளக்கம்**

சமம், ஸர்வத்ர, ஸமவஸ்த்தம் - என்ற மூன்று சொற்களைப் பயன்படுத்தியமையால் இறைவன், (1) ஸமமாக இருக்கின்றான் (2) எங்கும் நிறைந்திருக்கிறான் (3) நன்கு நிலைத்திருக்கிறான் என்பது தெரியவருகிறது. இவ்வாறாக பரமாத்மாவை எல்லா உயிர்களிடத்தும் சமமாகக் காண்பவன், பரமாத்மாவை முயற்சியினால் எவ்வாறேனும் அறிந்து கொள்வதால் தன் ஆத்மாவைத் தானே அழித்துக் கொள்ள மாட்டான்; என்பது தெரிகிறது. ஆத்மாவை அறியாதிருப்பதே அதனை ஹிம்ஸித்ததாகும். அதுவே ஆத்மஹத்ய (தற் கொலை). மேலும் ஆத்மாவை அறிய இயலாதவன் பிறப்பு இறப்புடன் கூடிய ஸம்ஸார வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டு பலவிதமான துன்பங்களைப் படுவதால் தன் ஆத்மாவை தானே ஹிம்ஸித்துக் கொள்பவன் ஆகிறான். எனவே அவரவர் ஸம்ஸார துன்பங்களுக்கு அவர்களே காரணம் என்பது தெரிய வருகிறது. ஆத்மாவை அறிவதால், முக்தனாவதால், துன்பங்கள் மறைகின்றன. எனவே அறிவாளியானவன் தன் ஆத்மாவைத் தானே ஹிம்ஸித்துக் கொள்ளாது. அனைத்திலும் சமமாக வியாபித்துள்ள பரமாத்மாவை அறிந்து மோக்ஷகதியை அடைய வேண்டும். மோக்ஷத்தினை ''பாரங் கதிம்'' (உத்தமகதி) என்று சொல்வதால், உலகில் உள்ள பதவிகள் அனைத்திலும் ஆத்ம ஸாக்ஷாத்கார நிலையே மிகவும் மேலானதென்று தெரிகிறது.

**வினா :** பரமாத்மா அனைத்திலும் எவ்வாறு வியாபித்துள்ளார்?

**விடை :** ஸமானமாக வியாபித்துள்ளார்.

**வினா :** உலகில் ஜீவர்களின் ஸம்ஸார துன்பங்களுக்குக் காரணம் எது?

**விடை :** எங்கும் சமமாக வியாபித்துள்ள இறைவனை தரிசிக்க இயலாது போவதே.

**வினா :** அத்துன்பங்களுக்கு காரணம் யார்?

**விடை :** நமக்கு நாமே காரணம்.

ஆத்மாவை அதாவது தன்னைத் தானே அறியாது துன்பங்களுக்கு ஆளாகின்றனர்.

**வினா :** இதற்கு நிவாரணம் எது?

**விடை :** எங்கும் ஸமமாக வியாபித்திருக்கும் பரமாத்மாவை அறிவதே.

**வினா :** உலகில் உள்ள எல்லா பதவிகளையும் விட சிறந்தது எது?

**விடை :** மோக்ஷம்.

**முன்னுரை**

இயற்கையே எல்லா காரியங்களையும் நிறைவேற்றுகிறது ஆத்மா செயலற்றது என்றும் கூறலாம்.

*ப்ரக்ருத்யைவ ச கர்மாணிக்ரியமாணானி ஸர்வசஹ!*
*யஹ பச்யதி ததாத்மான மகர்தாரம் ஸ பச்யதி!!* (30)

**சொற்பொருள்**

யஹ் - எவன், கர்மாணி - கர்மங்களை, ப்ரகிருத்யாஏவ - இயற்கையினால், சர்வசஹ - எல்லாவிதத்திலும், க்ரியமாணானி - செய்யப்படுகின்றாப் போல, ததா - அவ்வாறே (மேலும்), ஆத்மானம் - ஆத்மாவை, அகர்த்தாரம் ச - செயலற்றது என்றும் பஸ்யதி - காண்கின்றானோ, ஸஹ் - அவன், பஸ்பதி - (உண்மையில்) காண்பவன் ஆகிறான்.

**கருத்துரை**

எவன் கர்மங்களை அனைத்தையும் இயற்கையினாலேயே செய்யப்படுகின்றனவாகவும் அவ்வாறே ஆத்மா செயலற்றது என்றும் காண்கிறானோ (அறிகிறானோ) அவனே உண்மையைக் காண்பவன் ஆகிறான்.

**விளக்கம்**

உலகில் எல்லாவிதமான காரியங்களையும் இயற்கையே நடத்துகின்றது. ஆத்மா செயலற்றதாக, காட்சியாய் உள்ளது. உண்மையில் ஆத்மாகர்த்தா அல்ல. அவனது அருளின் மஹிமையால் இயற்கையே காரியங்கள் அனைத்தையும் எல்லாவிதத்திலும் நிறைவேற்றுகிறது. இவ்வுண்மையை அறிபவனே, உண்மையான பார்வை உடையவன். ஏனையோர் கண்கள் இருந்தும் உண்மையைக் காண இயலாதவர். உலகில் பலரும் கர்த்ருத்வத்தினை ஆத்மாவிலேயே ஏற்றிக் கொண்டு 'நான் செய்கிறேன்', 'நான் துக்கமடைகிறேன்'

போன்ற வாக்யங்களைச் சொல்கின்றனர். இவர்கள் உண்மையை அறியாதவர்கள். இத்தகைய ஞானக் கண்களை அடைய முயற்சி செய்தல் வேண்டும். இல்லையேல் இறைவனின் பார்வையில் நாம் பார்வையற்ற குருடராக இருளில் வாழ்பவரே ஆகிறோம்.

வினா : உலகில் எல்லா காரியங்களும் எதனால் செய்யப்படுகிறது?

விடை : இயற்கையினால் செய்யப்படுகிறது.

வினா : அப்படியானால் ஆத்மா என்ன செய்கிறது?

விடை : அது எதுவும் செய்வதில்லை. ஆனால் அதன் அருளினால் தான் இயற்கை அனைத்தையும் நடத்துகின்றது.

வினா : இவ்வுலகில் உண்மையான கண்கள் உடையவர் எவர்?

விடை : இயற்கையினால் எல்லா காரியங்களும் நடக்கின்றன. ஆத்மா செயலற்றது என்னும் ஞானம் உடையவனே உண்மையில் கண்களைப் பெற்றவன்.

முன்னுரை

ஜீவன் ப்ரம்மத்தினை எப்போது அடையக்கூடும் என்பதைத் தெரிவிக்கின்றார் -

*யதா பூத ப்ருதக் பா வமேகஸ்தமனு பச்யதி!*
*தத ஏவச விஸ்தாரம் ப்ரஹ்ம ஸம்பத்யதே ததா!!* (31)

சொற்பொருள்

யதா - எப்பொழுது, பூதப்ருதக்பாவம் - பிராணிகளின் தனித் தனி வாழ்க்கையை (பலவிதமான மாறுபாடுகளுடன் கூடிய உலகினை), ஏகஸ்தம் - ஓர் ஆத்மாவில் இருப்பதாகவும், ச - மேலும், ததஹ் ஏவ - அதனின்றே, விஸ்தாரம் - விரிவாகத் தோன்றுவதாகவும், அனுபச்யதி - காண்கின்றானோ ததா - அப்போது (ஸஹ் - அவன்), பிரம்மா - பிரம்மத்தினை ஸம்பத்யே - அடைகிறான் (அல்லது பிரம்மமாகவே ஆகிறான்).

கருத்துரை

எப்போது வேறுவேறாக உள்ள இந்த உலகமனைத்தும் ஓர் ஆத்மாவிலேயே இருப்பதையும், அதனின்றே அவைகள் விரிவடை

*வதையும், காண்கின்றானோ, அப்போது மனிதன் பிரம்மத்தினை அடைகிறான் (அல்லது பிரம்மமாகவே ஆகிறான்.)*

**விளக்கம்**

*பலவிதமான உயிர்களுடன் வெவ்வேறாகத் தோன்றும் இவ்வுலகமனைத்தும் உண்மையில் ஒரே சொரூபமேயாகும்.*

*ஒரே பரமாத்மாவினிடத்து அது வெவ்வேறாகக் கற்பிக்கப்பட்டது. எனவே அவற்றில் வெவ்வேறான தோற்றம் உண்மையல்ல. அது எதனில் கற்பிக்கப்பட்டதோ, அத்தகைய ஆத்மாவே உண்மையானது. இந்த இரகசியத்தினை எவன் அறிகிறானோ அப்போது மனிதன் பிரம்மத்தையே அடைகிறான்.*

*'அனுபச்யரீ' - 'பச்யதி' என்னாது 'அனுபச்யதி' என்றதால் அத்தகைய ஏகத்வத்தைப் பலமுறை பயிற்சி செய்து நன்கு காண்டல் வேண்டும் என்பது பொருள்.*

*'பிரம்ம ஸம்பத்யதே ததா' - மனிதன் மோட்சத்தினை அடைய முடியும் என்ற சுபவேளை இங்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது. எந்த சமயத்தின் வெவ்வேறான இந்த உலகத்தினை பரமாத்மாவிடம் கற்பிக்கப்பட்டவையாகக் காண்கிறானோ, அதனின்றே அவை விரிவாக்கப்பட்டுள்ளதை அறிகிறானோ அந்தச் சமயத்திலேயே அவன் பிரம்மஞானத்தினால் பிரம்மத்தையே யடைகிறான். (பிரம்மத்தில் லயித்து பிரம்மமாகவே நிலைக்கிறான்).*

*இதனால் இவ்வுலகின் அநேகத்வத்தைப் பார்த்தல் பந்தத்திற்குக் காரணமென்பதும், ஏகத்வத்தைக் காண்டல் மோட்சத்திற்குக் காரணமென்பதும் புரிகின்றது. எனவே அறிவாளியானவன் நாம, ரூபங்களை விட்டு சச்சிதானந்தத்தை அறிவதால் 'பின்னத்துவத்தில் ஏகத்வத்தை' காண்பதற்கு முயலுதல் வேண்டும்.*

**வினா :** *மனிதன் பிரம்மத்தை எப்போது அடைகிறான்?*

**விடை :** *எப்போது பலவிதமான உருவங்களுடன் கூடிய எல்லா உலகத்தினையும் ஒரு பரமாத்மாவிடம் இருப்பதாகக் காண்கின்றானோ, அவனிடமிருந்தே அனைத்தும் விரிவடைகின்றன என்றும் காண்கின்றானோ (அத்தகைய பிரம்ம ஞானத்தால்) அப்போதே பிரம்மத்தை அடைகிறான்.*

முன்னுரை

இனி வரும் மூன்று சுலோகங்களில் ஆத்மாவின் மகிமை, இயல்பு இவற்றை வர்ணிக்கிறார்.

*அனாதித் வாந்நிர்குணத்வாத் பரமாத்மா யமவ்யயஹ!*
*சரீரஸ்தோஅபி கௌந்தேய நகரோதி நலிப்யதே!! (31)*

சொற்பொருள்

கௌந்தேய - அர்ஜுனா! அநாதித்வாத் - ஆதியற்றவன். (காரண மற்றவன்) ஆதலால், நிர்குணத்வாத் - (மூன்று) குணங்களற்றவனாத லால், அவ்யயஹ - அழிவற்றவனும் ஆன, அயம் பரமாத்ம - இந்த பரமாத்மா, சரீரஸ்தஹஅபி - சரீரத்தில் இருப்பவனாயினும், நக ரோதி - எதுவும் செய்வதில்லை. நலிப்யதே - எதனுடனுடனும் பற்றற்றது.

கருத்துரை

ஓ அர்ஜுனா! ஆதியற்றவன் ஆதலால் திரிகுணங்களற்றவனாத லால், கேடில்லாத, அழிவில்லாத இப்பரமாத்மா சரீரத்திலிருப்பி னும் அது செயலற்றது, பற்றற்றது.

விளக்கம்

உலகிலுள்ள பொருள்கள் அனைத்தும் ஆதி அந்தமுடையவை. பரமாத்மா ஒருவனே ஆதி அந்தமற்றவன். மேலும் அவன் குணங் களோ, அதனால் பிறக்கும் அழிவுகளோ அற்றவன். (அவ்யயன்). உண்மையில் அவன் எதுவும் செய்வதில்லை. எல்லாம் தானே யாவ தால், இனிப் போவது, வருவது, நிலைத்தல் ஆகியவை எவ்வாறு வாய்க்கும். அவன் தொடர்பற்றவன். எதனுடனும் ஒட்டாதவன். கனவுப் பொருள்களை விழித்திருப்பவன் எங்ஙனம் அடைவது. எனவே சரீரம், மனம், புத்தி முதலானவை பல காரியங்களைச் செய்து கொண்டிருப்பினும் ஆத்மாவானது காட்சியாய், செயலற்று, பற்றற்று, நிலைபெற்றிருக்கும் ஆனந்த நிலையிலேயே உள்ளது.

'சரீரஸ்தோஅபி' - என்பதால் பரமாத்மா வெகு தூரத்தில் இல்லை. மிகவும் அருகிலேயே அவரவர் சரீரத்திலேயே இருக்கிறார் என்பது தெளிவாகிறது. எனவே உடனேயே இதயக் குகையிலுள்ள தேவதேவனைக் கண்டு கொண்டு தன்யமடைவதற்கு அனைவரும் முயற்சித்தல் வேண்டும். சரீரம் ஒரு கோயில், ஆத்மா மூலஸ்தானம்

என்று பாவித்து புனிதமான எண்ணங்களைக் கொண்டும், பாவங்களின் தொடர்பு இல்லாதிருக்குமாறும் பார்த்துக் கொள்ள வேண்டும்.

*யதா ஸர்வகதம் ஸௌ க்ஷ்ம்யாதாகாசம் நோபலிப்யதே!*
*ஸர்வத்ரா வஸ்திதோ தேஹே ததாத்மா நோப லிப்யதே!! (33)*

சொற்பொருள்

ஸர்வகதிம் எங்கும் நிலைத்திருக்கும், ஆகாசம் - ஆகாசம், சௌக்ஷ்ம்யாத் - சூட்சுமமாய் இருப்பதால், யதா - எவ்வாறு, நலிப்யதே - களங்கமடைவதில்லை (தூசி முதலியவற்றால்), ததா - அவ்வாறே, ஸர்வத்ர தேஹே - சரீரமெங்கும் (அல்லது எல்லா சரீரங்களிலும்), அவஸ்திதஹ - நிறைந்திருக்கின்ற, ஆத்மா - பரமாத்மா, நயலிப்யதே - (சரீர குணதோஷங்களால்) களங்கமடைவதில்லை.

கருத்துரை

எங்கும் வியாபித்துள்ள ஆகாசம் மிகவும் சூட்சுமமானதால் எவ்வாறு (தூசி முதலியவற்றால்) களங்கமடைவதில்லையோ, அவ்வாறே சரீரமனைத்தும் (எல்லா சரீரங்களிலும்) நிறைந்துள்ள பரமாத்மா, (சரீர குணங்களால்) களங்கமடைவதில்லை.

விளக்கம்

இவ்வுலகில் அதிசூட்சுமமான பொருள் ஆகாசம். எனவே அதனை உவமையாகக் கொண்டு ஆத்மாவின், ஒட்டாத தன்மை எங்கும் வியாபித்துள்ள தன்மை, நுண்மை களங்கமற்ற தன்மை ஆகியவை விளக்கப்பட்டுள்ளன. சிறிய உவமானங்களால் மிக உயர்ந்த உண்மைகளை, போதனைகளை எளிதாகச் சொல்லி விளங்க வைத்தல் கீதையின் சிறப்பு. ஆகாசமென்றதால் ஆத்மாவை ஆகாசமென்கிறார் என எவரும் நினைத்தல் வேண்டாம். ஆகாசத்தைப் போன்று மிகவும் சூட்சுமமானது என்று மாத்திரமே கொள்ள வேண்டும். ஆகாசம், சேறு முதலானவற்றில் வியாபித்திருப்பினும், அவற்றின் குணதோஷங்களால் பாதிக்கப்படாததைப் போல, ஆத்மா தேகமனைத்திலும் வியாபித்திருப்பினும் அவற்றின் குணங்களால், அதன் தோஷங்களால் பாதிக்கப்படுவதில்லை. அவற்றின் சுக, துக்கங்கள், ஜனன, மரணம் போன்றவற்றால் எந்த நிலையிலும் பாதிப்படைவதில்லை. மேலும் மேகத்தால் எத்துணை இடிகள், மின்னல், தண்ணீர், ஆலங்கட்டி, கறுப்பு நிறம், குளுமை, ஆகியவை இருப்பினும் ஆகாசத்திற்கு அக்குணதோஷங்கள் எந்த விதத்திலும்

பற்றுவதில்லை என்பதை நன்கறிந்து கம்பீர ஆத்ம சொரூபனாக சாதகன் எப்போதும் நிலைபெறுதல் வேண்டும். தான் உண்மையில் ஆத்ம சொரூபனேயாதலால் தன்னை தேகத்திற்கு சாட்சியாகவும், தேகத்திற்கு அப்பாற்பட்டவனாகவும், சிந்தித்து, தேகத்தில் தொடர்பான பந்தங்கள், சுக, துக்கங்கள் தனக்கில்லை என்றெண்ணி, கம்பீரமாக, பயமின்றி, ஆனந்தமாயிருத்தல் வேண்டும்.

'ஸர்வத்ராவ்ஸ்திதோதேஹே' - என்றதால் (அடுத்த சுலோகத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதைப் போல்), இறைவன் மிக அருகில் - சரீரத்திலேயே உறைகிறான். எனவே புனிதமான நல்ல நடத்தையால் அவனை இதயத்திலேயே கண்டுணர வேண்டும். சரீரத்தினை இறைவனின் இருப்பிடம், சன்னிதி என்று எண்ணிக் கெட்ட காரியங்களை பாவ காரியங்களை, பாவ எண்ணங்களை ஒதுக்கித் தள்ளுதல் வேண்டும். மேலும் எந்த ஜாதியினராயினும், மதமாயினும், பெண்களாயினும், ஆண்களாயினும் தன் சரீரத்திலேயே இறைவனான ஜகன்னாதன் உறைகிறான் என்பதை உணர்ந்து தைரியத்துடன், அவனை நேரில் காண்பதற்கு வெகு விரைவாக முயற்சித்தல் வேண்டும். அவன் தேகத்தில் எங்குள்ளானோ என்று பஞ்ச கோசங்களைத் தேடி அலைந்து, மனதினைச் சோதித்து, இறுதியில் அவனைக் கண்டு வெற்றி பெறுதல் வேண்டும். முயற்சி செய்பவர்க்கு அவன் புலப்படாமல் போகான்.

**வினா :** பரமாத்மாவின் இயல்பு எத்தகையது?

**விடை :** அவன் சரீரத்தில் இருப்பினும் ஆகாசத்தைப் போன்று எதிலும் ஒட்டாதவனாய் தேகத்தின் தொடர்பான சுக துக்கங்களால் எம்மாத்திரமும் தீண்டப்படுவதில்லை.

*யதா ப்ரகாசயத்யேகஹ் க்ருத்ஸ்னம் லோகமிமம் ரவிஹ்!*
*க்ஷேத்ரம் க்ஷேத்ரீ ததா க்ருத்ஸ்னம் ப்ரகாசயதி பாரத!!* (34)

**சொற்பொருள்**

பாரத - அர்ஜுனா! ஏகஹ் - ஒரே ஒரு, ரவிஹ் - சூர்யன், இமம் - இந்த, க்ருத்ஸ்னம் - அகில, லோகம் - உலகத்தினையும், யதா - எவ்வாறு, ப்ரகாசயதி - பிரகாசிக்கச் செய்கிறானோ, ததா - அவ்வாறே, க்ஷேத்ரீ - க்ஷேத்ரக்ஞன் (பரமாத்மா), க்ருத்ஸ்னம் - எல்லா க்ஷேத்ரம் - க்ஷேத்ரங்களையும், ப்ரகாசயதி - பிரகாசிக்கச் செய்கின்றான்.

**கருத்துரை**

அர்ஜுனா! ஒரே சூரியனே, இவ்வுலகமனைத்தையும் எவ்வாறு ஒளியுறச் செய்கிறானோ, அவ்வாறே க்ஷேத்ரக்ஞன் ஆன பரமாத்மா எல்லா க்ஷேத்ரங்களையும் ஒளிபெறச் செய்கிறான்.

**விளக்கம்**

ஆத்மாவின் களங்கமற்ற தன்மையை ஆகாசத்தின் உதவியால் விளக்கி, இங்கு அதன் ஒளியினைச் சூரியனோடு ஒப்பிட்டுக் கூறுகிறார் - சூரியன் உலகமனைத்திற்கும் காட்சியாய் இருந்து, உலகத்தினை எவ்வாறு பிரகாசிக்கச் செய்கிறானோ, அவ்வாறே க்ஷேத்ரஜ்ஞனான பரமாத்மா தேகம், இந்திரியம், மனம், புத்தி முதலான காட்சியுலகான க்ஷேத்ரம் அனைத்தையும் பிரகாசிக்கச் செய்து அனைத்திற்கும் சாட்சியாய் விளங்குகிறான். சூரியன் இல்லாவிடில் உலகமனைத்தும் செயலற்றுப் போவதைப் போல ஆத்ம ஒளியில்லாவிடில் தேக, இந்திரிய, மனம், புத்தி முதலானவை சக்தியற்றுப் போகும்.

'க்ருத்ஸ்னம்' - என்றதால் ஜாக்ரத் வஸ்துக்கள் மட்டுமின்றி, ஸ்வப்ன, சுஷுப்தி வஸ்துக்கள், அவ்வாறே இறந்த கால, நிகழ்காலப் பொருள்கள் அனைத்தையும் கூட பரமாத்மா பிரகாசிக்கச் செய்கிறார் என்பது கருத்து.

ஆத்மாவின் இந்த ஒட்டாத தன்மை, ஒளிரும் தன்மை, காட்சியாய் நிற்பது ஆகிய இந்த இயல்புகளை பகவான் எடுத்துக்காட்டிய எடுத்துக்காட்டுகளை நினைத்துப் பார்ப்பதால் சாதகன் நன்கு உணர்ந்து தான் உண்மையில் அத்தகைய பற்றற்றவனே அன்றி, ஜடம், இந்திரியம் முதலான வஸ்துக்களல்ல என்று திடமான எண்ணம் கொண்டிருத்தல் வேண்டும்.

**வினா :** பரமாத்மா இவ்வுலகமனைத்தும் எவ்வாறு பிரகாசிக்கச் செய்கிறார்?

**விடை :** சூரியன் உலகமனைத்தும் பிரகாசிக்கச் செய்வதைப் போல.

**முன்னுரை**

க்ஷேத்ரன் க்ஷேத்ரக்ஞன் பற்றிய அறிவால் ஏற்படும் பலனைக் கூறி இவ்வத்தியாயத்தை முடிக்கின்றார்.

*க்ஷேத்ர க்ஷேத்ரக்ஞயோ ரேவ மந்த்ரம் ஞான சக்ஷுஷா!*
*பூதப்ரகிருதி மோக்ஷம் சயே விதுர் யாந்திதே பரம்!! (35)*

## சொற்பொருள்

*யே - எவர், ஞானசக்ஷுஷா - ஞானதிருஷ்டியினால், ஏவம் - இவ்வாறாக, க்ஷேத்ர க்ஷேத்ரக்ஞ யோஹ் - க்ஷேத்ர க்ஷேத்ரக்ஞனின், அந்தரம் - வேற்றுமைகளை, பூதப்ரகிருதி மோக்ஷம்ச - உயிர்கள் பிரகிருதியினின்று விடுதலையடைதலையும், விதுஹ் - அறிகிறார் களோ, தே - அவர்கள், பரம் - பிரம்மத்தை (மோட்சத்தை) யாந்தி - அடைகின்றார்கள்.*

## கருத்துரை

*எவர் ஞானக்கண்ணால் க்ஷேத்ர க்ஷேத்ரக்ஞன் இடையில் உள்ள வேற்றுமைகளை, உயிர்களுக்குத் தொடர்புடைய (அல்லது காரண மான) இயற்கை (அவித்தை)யினின்று விடுதலை பெறும் உபா யத்தை அறிந்து கொள்கிறார்களோ அவர்கள் பிரம்மத்தை (மோட் சத்தை) அடைகிறார்கள்.*

## விளக்கம்

*'ஏவம்' இவ்வாறாக என்பதனால் இந்த அத்தியாயத்தில் தெரி விக்கப்பட்ட காட்சி, காட்சிப் பொருள் பற்றிய விவேகமே க்ஷேத்ர க்ஷேத்ரக்ஞனைப் பற்றிய ஞானமே, கைவல்யத்தை அடைவதற்குக் காரணமென்று நிரூபிக்கப்பட்டுள்ளது.எனவே இது சாதாரணமான தல்லவென்பதும் பரமபதத்தை அடைவதற்கான மார்க்கம் என்பதை யும் முமுக்ஷுக்கள் நினைவில் கொண்டு, பகவத் வாக்கியத்தில் முழு நம்பிக்கைக் கொண்டு, அதனைச் சாதித்துப் பெற்றுக் கடைத்தேறு தல் வேண்டும்.*

*'அந்தரம்' - (வேற்றுமை) - சாதாரண மனிதர்கள் திரிக், திரிஸ்ய வஸ்துக்களை, க்ஷேத்ர க்ஷேத்ரக்ஞனை ஒன்றாகக் கருதுகின்றனர். 'நானே தேகம், நானே மனம், நான் அழகன், நான் இந்த ஜாதியைச் சேர்ந்தவன்' - என்று இவ்வாறாக ஜீவன் க்ஷேத்ரத்துடன் ஒன்றிப் போகிறான். அதுவே துக்கத்திற்குக் காரணம். பந்தத்திற்குக் கார ணம். உண்மையில் ஜீவன் க்ஷேத்ரக்ஞனே தவிர க்ஷேத்ரமல்ல. தான் க்ஷேத்ரத்திற்கு (சரீரம் முதலானவற்றிற்கு) காட்சியான க்ஷேத்ரக்ஞ னேயென்று, க்ஷேத்ரம் தன்னை விட வேறானதென்றும், துக்கம் இவற்றை அடைவது க்ஷேத்ரமேயன்றி, தானல்லவென்றும், தான்*

அதற்கு சாட்சியாக இருக்கிறான் என்றும் விசாரணையினால் அறிந்து, ஞானக்கண் பெற்று, அவ்விரண்டையும் வேறுபடுத்திக் காண்பதே இவ்வத்தியாயத்தில் சொல்லப்பட்டக் கருத்து.

'பூத ப்ரக்ருதி மோக்ஷம்ச' - ஜீவன் முன் காலத்திலிருந்தே பிரகிருதி (மாயை)யினால் கட்டுப்படுத்தப்பட்டுள்ளான். இப்போது ஞானம் முதலான சாதனைகளால் அதனின்றும் விடுதலை பெறுவதற்கு முயன்று வருகிறான். பிரகிருதியினின்றும் விடுதலை பெறுவதே ஒவ்வொரு ஜீவியின் முக்கியமான கடமையாகும். பிரகிருதியினின்று விடுபடுவதே மோட்சம். மோட்சமென்றால் ஆகாசமோ, பாதாளமோ, அல்லது வேறு எங்கோ இருப்பதல்ல. அஞ்ஞானத்தின் வசப்பட்டு இதுவரை பிரகிருதியுடன் ஒன்றியுள்ள தான் ஞானக்கண் பெற்று அதனின்றும் விடுதலை பெறுவதே மோட்சம் எனவேதான், 'ஞானசக்ஷுஹா' என்று சொல்லப்பட்டது. எனவே ஒவ்வொருவரும் பந்தத்தினின்றும் விடுதலை பெறுவதற்கு ஞானக்கண்கள். விசாரணை செய்து ஆய்ந்து அறியும் அறிவு இவற்றைத் தவறாது அடைதல் வேண்டும். வேறுவழியில்லை. 'எனக்கு இன்னும் ஏன் மோட்சம் கிடைக்கவில்லை' என வினாவுவோர் முதலில் ஞானக்கண்கள் பெற்றுள்ளோமோ என்பதைப் பார்த்துக் கொள்ள வேண்டும். அத்தகைய ஞானமோ, எப்போதும் இடைவிடாது இறைவனை பக்தி செய்வதாலும், ஆராதிப்பதாலுமே கிடைக்கும் (தேஷாம் ... ஸதத யுக்தானாம் ... ததாமி புத்தி (யோகம்). எனவே பக்தியினால், உபாசனையினால், பரோபகாரம் முதலிய புண்ணிய காரியங்களாலும் இறைவனை அன்புடன் சேவித்து, அவன் அருளாலே ஞானக்கண்களை (புத்தி யோகம்) பெற்று அதன் வழி, க்ஷேத்ரம் கொண்டு மோட்சத்தைப் பெறுதல் வேண்டும். துக்கத்தினின்றும் விடுதலை பெறுவதற்கு, பரமானந்தத்தை அடைவதற்கு ஜீவன் பின்பற்ற வேண்டிய வழி இதுவேயென்று இங்கு பகவான் ஐயத்திற்கிடமின்றிக் கூறியுள்ளார்.

'யே விதுர்யாந்தி தே பரம்' - என்று 'யச்சப்தம்' பயன்படுத்தியுள்ளமையால் எவராயினும் சரியே, எந்த மதத்தவராயினும், எந்த ஆசிரமத்தவராயினும், எக்குலத்தவராயினும் ஞானக்கண்களைப் பெற்றுவிட்டால் தவறாது முக்தியடைவர் என்பது தெளிவாகிறது. 'யாந்தி' என்ற சொல்லினால் அவர்கள் அந்நிலையை ஐயமின்றி அடைவர் என்று நிரூபிக்கப்பட்டுள்ளது. எனவே முமுக்ஷுக்கள் இனி தம் பந்த விமோசனத்திற்காக எந்தவிதமான ஐயமுமின்றி பகவத் வாக்கியத்தின் மீது முழுமையான நம்பிக்கை கொண்டு முயற்சியினால் ஞானக்

கண்களைப் பெற்று, பிரம்மசாயுஜ்ய பதவியை அடைதல் வேண்டும்.

**வினா :** மோட்சமென்றால் என்ன?

**விடை :** பிரகிருதி (மாயை, அவித்தை)யினின்றும் விடுதலை பெறுவதே மோட்சம்.

**வினா :** மோட்சத்தினை எவர் அடையக்கூடும்?

**விடை :** க்ஷேத்ர க்ஷேத்ரக்ஞனிடையேயுள்ள வேற்றுமையை அறிந்தவன் அடையக்கூடும்.

**வினா :** அவ்வேற்றுமையை எதனால் அறிய இயலும்.

**விடை :** ஞான திருஷ்டியினால், விவேகத்தினால்.

**வினா :** எனவே மோட்சத்தைப் பெறுவதற்கான வழியென்ன?

**விடை :** ஞான திருஷ்டியைப் பெற்று க்ஷேத்ர க்ஷேத்ரக்ஞனின் வேற்றுமைகளை நன்கு அறிவதே.

ஓம்

உபநிஷத்தும், பிரம்ம வித்தை, யோக சாஸ்திரமும் ஆன ஸ்ரீ கிருஷ்ணார்ஜுன சம்வாதமாக வந்துள்ள ஸ்ரீ பகவத் கீதையின் க்ஷேத்ர க்ஷேத்ரக்ஞ விபாக யோகமெனும் பதின்மூன்றாம் அத்தியாயம் முற்றிற்று.

ஓம் தத் ஸத்

ஓம்

# ஸ்ரீ பகவத் கீதை

## பதிநான்காம் அத்தியாயம்

## குணத்ரய விபாகயோகம்

### இவ்வத்தியாயத்தின் பெயர் விளக்கம்

*'குணத்ரய விபாக யோகம்' - ஸத்வ, ரஜோ, தமோ குணம் என்ற மூன்று குணங்கள் இவற்றின் இயல்பு, அவை எவ்வாறு ஜீவனை பந்தத்திற்குள்ளாக்குகிறது அவ்வக் குணங்களினால் ஜீவனுக்கு என்ன பலன் ஏற்படுகிறது இவையனைத்தையும் தாண்டிய குணங்களுக்கு அப்பாற்பட்ட ஜீவன் முக்தன் எவ்வாறிருப்பான் முதலான விஷயங்களனைத்தும் விரிவாக நிரூபிக்கப்பட்ட அத்தியாயமானதால் இதற்கு குணத்ரய விபாகயோகமென்ற பெயர் ஏற்பட்டது.*

### இவ்வத்தியாயத்தில் கூறப்பட்டுள்ள விஷயங்கள்

1. *ஞானமகிமை, பிரகிருதி புருஷன் இவற்றால் உலக உற்பத்தி (1 முதல் 4 வரையுள்ள சுலோகங்கள்).*

2. *சத்வ, ரஜஸ், தமோ குணங்களின் சொரூபம் இயல்பு ஆகியவை (5 முதல் 13 வரை)*

3. *அக்குணங்களின் பலன் (14 முதல் 18 வரை)*

4. *இறைவனை அடையும் வழி (19 முதல் 20 வரை)*

5. *குணாதீதனின் இலட்சணங்கள் (21 முதல் 27 வரை).*

## இவ்வத்தியாயத்திற்கும் முன் அத்தியாயத்திற்கும் உள்ள தொடர்பு

முன் அத்தியாத்தில் பகவான் க்ஷேத்ரம், க்ஷேத்ரக்ஞன் குறித்தும், பிரகிருதி, புருஷனைக் குறித்தும் சொல்லி 20ஆவது சுலோகத்தில் பிரகிருதியின் தொடர்பான திரிகுணங்களைக் குறித்துக் குறிப்பிட்டார். அது முதல் மூன்று சுலோகங்கள் அக்குணங்களைப் பற்றிய சர்ச்சையே நடந்தது. பிரகிருதியினின்று தோன்றும் சத்வ, ரஜோ, தமோ குணங்களே ஜீவனை மேலான, கீழான பிறவிகளுக்கும், காரணமென்றும், இக்குணங்களைக் குறித்து இன்னும் விவரமாக மக்கள் அறிய வேண்டுமென்றும் அவை ஜீவனை எவ்வாறு பந்திக்கின்றது, அதனின்றும் விடுதலை பெறுவது எங்ஙனம் அதற்கான வழி இவற்றைத் தெரிந்து கொள்ள வேண்டும் என்றும் ஆசை ஏற்படும். இக்காரணத்தினால் பகவான் அர்ஜுனன் கேட்பதற்கு முன்னரே தானே அக்குணங்களைப் பற்றி விவரமாகச் சொல்ல எண்ணி, முன் அத்தியாயத்தில் கூறப்பட்ட பரமார்த்த ஞானத்தினை இன்னும் விரிவாக போதிக்கக் கருதி அத்தகைய ஞானத்தின் மகிமையை முதலில் கூறி இவ்வத்தியாயத்தைத் தொடங்குகிறார்.

### ஸ்ரீ பகவானுவாச

*பரம் பூயஹ ப்ரவக்ஷ்யாமி ஞானானாம் ஞான முத்தமம்!*
*யஜ்ஞாத்வா முனயஹ ஸர்வே பராம்ஸித்தி மிதோ கதாஹ!!* (1)

### சொற்பொருள்

யத் - எதனை, ஞாத்வா அறிந்த, ஸர்வே முனயஹ - முனிவர்களனைவரும், இதஹ இந்த சம்சார பந்தத்தினின்றும் (விடுபட்டு), ராம் ஸித்திம் - மிக உத்தமமான மோட்ச நிலையை, கதாஹ அடைந்தார்களோ, பரம் - பரமாத்மா சம்பந்தமான (அல்லது மேலானது), ஞானனாம் - ஞானங்களுக்கெல்லாம், உத்தமம் - சிறந்ததும் (ஆன) ஞானம் - ஞானத்தினை, பூயஹ - மறுபடியும், ப்ரவக்ஷ்யாமி - சொல்கிறேன்.

### கருத்துரை

ஸ்ரீ பகவான் சொன்னது (அர்ஜுனா!) எதனை அறிந்த முனிவர்கள் இந்த சம்சாரத்தினின்றும் விடுபட்டு, மிக உத்தமமான மோட்சஸ்திதியை அடைந்தனரோ - அத்தகைய பரமார்த்த விஷயமான, ஞானங்களில் எல்லாம் சிறந்த ஞானத்தினை மறுபடியும் சொல்கி

விளக்கம்

பூயஹ்! - (மறுபடியும்) முன் அத்தியாயத்தில் சொல்லப்பட்ட விரிவான ஞானத்தினை மறுபடியும் சொல்கிறேன் கேள்! - என்று சொல்வதால் பகவானுக்கு பக்தர்களின் மீது எத்துணை கருணையுள் ளதோ அவர்களைக் கடைத் தேற்றுவதில் எத்தகைய உற்சாகம் உள் ளதோ அதனைத் தெளிவாக அறியமுடிகிறது. உத்தமமான குருவின் நம்பிக்கைப் பாத்திரமான மாணவனுக்கு மனதில் நன்கு பதிவதற்கு ஒரே பாடத்தை மறுபடியும் மறுபடியும் கூறுவார். 'வக்ஷ்யாமி' என்று சொல்லாது 'ப்ரவக்ஷ்யாமி' (நன்கு காண்கிறேன்) என்பதால் இவ்வத்தியாயத்தில் கூறப்பட்டுள்ள விஷயங்கள் இறைவனின் நோக்கில் எத்துணை முக்கியம் வாய்ந்ததென்பதை ஆலோசித்தறி தல் கூடும்.

''ஞானானாம் ஞான முத்தமம்'' - உலகில் பலவிதமான ஞானங் கள் (பௌதீக ஞானம், சங்கீத ஞானம், சிற்ப ஞானம், கணித ஞானம், முதலானவை) இருப்பினும், பகவானின் பார்வையில் அவையனைத்திலும் சிறந்தது ஆன்மீக ஞானமே என்பது இவ்வாக்கி யத்தினாலும், மேலும் 'பரம்' என்ற சொல்லாலும் தெளிவாகிறது.

'யக்ஞாதிவா முனியஹ் ஸர்வே'.

இந்த ஞானத்தைப் பெற்று இதற்கு முன் பல முனிவர்களும் பந்த விமுக்தி அடைந்துள்ளனர் என்று இங்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது. மருந்தின் மேன்மை ரோகிகளிடத்து அது உண்டாக்கும் பலனின்மீது ஆதாரப்பட்டுள்ளது. அவ்வாறே அக்காலத்துமுனிவர் பலரும் இந்த ஞானத்தைப் பெற்றதால் பந்தத்தினின்றும் விடுபட்டு நிலையான மோக்ஷ பதவியை அடைந்தனர் என்று தெரிவிப்பதால் இந்த ஞானத் தின் மகிமை வெளிப்படுகின்றது. வெளிப்படையான பலனை காண்பித்து அதன் மூலம் பகவான் மக்களுக்கு ஞானத்தின் மீது மு முநம்பிக்கையை உண்டாக்குகின்றார். 'சர்வே' - என்று சொல்வதால் இந்த ஞானத்தை அடைந்தவர் அனைவருமே மேன்மையுற்றனர் என்பது தெரிகிறது. ஆயின் 'முனையஹ்' (மனனசீலர்கள்) என்று சொல்வதால் அவர்கள் அனைவரும் தத்துவங்களை நன்கு மனனம் செய்தே மேன்மையுற்றனரே அன்றி வெறும் வாசா ஞானாத்தால் அல்ல என்பது தெளிவு.

'பராம்சித்திம்' - மோக்ஷசித்தி எல்லாவற்றையும் விட மேலான பதவி என்று சொல்வதால் சின்னச்சின்ன உலகியல் பதவிகளைப்

பெரிதாக எண்ணி மகிழ்ந்துவிடாமல் அவற்றை விட எத்துணையோ ஆனந்தம் அளிக்கவல்ல பரமாத்மா பதவியை, ஞானத்தைப் பெறுவதால் அடைந்து தன்யர்கள் ஆதல் வேண்டும்.

**வினா:** பகவான் சொல்லப்போகும் ஞானம் எத்தகையது?

**விடை :** 1. ஞானங்கள் அனைத்தையும்விட உத்தமமானது. 2. அதனை அறிவதால் முனிகள் அனைவரும் மோக்ஷத்தை அடைந்தனர்.

**வினா :** மோக்ஷநிலை எத்தகையது?

**விடை :** உலகியல் பதவிகள் அனைத்தைவிட மிகவும் மேன்மையானது.

*இதம் ஞான முபாச்ரித்ய மம ஸாதர்மயமாகதாஹ!*
*ஸர்கே அபி நோபஜயந்தே ப்ரலயே நவ்யதந்திச!!* (2)

**சொற்பொருள்**

இதம் ஞானம் - இந்த ஞானத்தினை, உபாச்ரித்ய - அனுஷ்டித்து, மம - என்னுடைய ஸாதர்ம்யம் - ஸ்வரூபத்தை (என்னுடன் ஐக்யத்தை), அகதாஹ் - அடைந்தவர்கள் ஸர்கே அபி - ஸ்ருஷ்டி காலத்திலும், ந உபஜாயந்தே - பிறப்பதில்லை, ப்ரயேசப்ரளை காலத்திலும், நவ்யதந்திச - துன்புறுவதில்லை ( அழிவதில்லை).

**கருத்துரை**

இந்த ஞானத்தை அனுஷ்டித்து மக்கள் என்னுடன் ஐக்யமடைந்தவர்களாய், என் ஸ்வரூபத்தையே அடைந்து ஸ்ருஷ்டி காலத்தில் பிறப்பதில்லை. ப்ரணயகாலத்தில் அழிவதில்லை. (புணர் ஜன்மம் இன்றி இருப்பர்).

**விளக்கம்**

'மம ஸாதர்ம்யம் ஸாதர்ம்யம் அதாஹ்' - ஞானத்தின் பரந்தமஹிமையைத் தெரிவிக்கிறார். இந்த ஞானத்தைப் பெற்றவர்கள் சாக்ஷாத் இறை ஸ்வரூபமாகவே ஆகிவிடுகின்றனர். (ஞானித்வாத தைவ மேமதம் (7-18)) என்று இப்பொருளிலேயே கீதாசார்யன் தெளிவுபடுத்துகிறார். இந்த ஞானத்தில் ஜீவன் சிவனாகிறான். பக்தன் பகவானாகிறான். 'சாதர்ம்யம்' - என்று சொல்வதால் ஞானி

இறைவனுடன் சரிசமமான உருவம், தர்மம் இவைகளைப் பெற்றி ருப்பான் என்பது தெளிவு. அத்தகைய நிலை ஐக்யத்திலேயே கிடைக்கக் கூடியது. ஏனெனில் ஒரே உருவத்துடன் 2 பொருள்கள் இருப்பது கடினம். ஒரே ஒரு வஸ்துவே உலகில் இருக்க முடியும். எனவே ஜீவன் ஞானத்திலும் பரமாத்மாவிடம் ஐக்கியமடைகிறான் என்பது நிரூபிக்கப்பட்டுள்ளது. இத்தகைய பெருமை வாய்ந்த உன் னத நிலையை இப்பிறவியிலேயே அடைய முடியும். இத்தகை இறைநிலையில் ஏற்படும் பலன் யாதெனில், புனர்ஜன்மம் இன்றி ச்ருஷ்டி காலத்தில் பிறப்பதோ ப்ரணயகாலத்தில் அழிவதோ துன் பம் அடைவதோ இல்லாதவராய் - புணரபி ஜனனம் புணரபிமரணம் - என்பதை தப்பித்துக் கொண்டவராய் சம்ஸார சக்கரத்தில் சுழற்சியி னின்று விடுபட்டு பரமானந்தம் அனுபவிப்பர்.

வினா : இந்த ஞானத்தைப் பெறுவதால் ஏற்படும் பலன் என்ன?

விடை : இதனைப்பெறுவதால் மக்கள் இறைவனுடன் ஐக்கியமுற்று அவனது சொரூபத்தையே அடைகின்றனர். 2. சிருஷ்டி காலத்தில் பிறப்பதில்லை பிரணய காலத்தில் அழிவதில்லை.

வினா : பகவத் சாயுஜ்யத்தை, மோக்ஷத்தை அடைவதற்கு உபாயம்.

விடை : பரமார்த்த ஞானத்தை அடைவதே.

## முன்னுரை

பிரக்ருதி புருஷன் ஆகியவற்றிலேயே இவ்வுலகம் தோன்று கின்றது என்று அடுத்த 2 சுலோகங்களில் தெரிவிக்கிறது.

*மமயோனிர் மஹத் ப்ரஹ்ம தஸ்மின் கர்பம் ததாம்யஹம்!*
*ஸம்பவஹ ஸர்வ பூதானாம் ததோ பவதி பாரத!!* (3)

## சொற்பொருள்

பாரத! - அர்ஜுனா - மஹத் ப்ரஹ்மா - சிறந்ததான மூலப்பிரகி ருதி (மாயை), மம, எனது யோனிஹ் - எல்லா பூதங்களின் உற்பத்தி ஸ்தானம் (உற்பத்தியின் இருப்பிடம்), தஸ்மின் - அதில், - அஹம் - நான், கர்பம் - கர்பத்திற்குக் காரணமான சைதன்ய ரூபமான பீஜத் தினை, தமி - வைக்கிறேன். ததஹ் - அதனால், ஸர்வபூதானாம் - எல்லாவுயிர்களின், ஸம்பவஹ - உற்பத்தி, பவதி - நடக்கிறது.

## கருத்துரை

*அர்ஜுனா! சிறந்ததான மூல பிரகிருதி (மாயை) என்னுடைய உற்பத்தி ஸ்தானம். அதில் நான் கர்பத்திற்குக் காரணமான சைதன்ய ரூபமான பீஜத்தினை வைக்கிறேன். அதனின்றும் எல்லாப் பிராணிகளும் உற்பத்தியாகின்றன.*

## விளக்கம்

*இவ்வண்ட சராசரமனைத்தும் - உயிர்கள் எங்ஙனம் உற்பத்தியாகின்றன? பிரகிருதியினால் மட்டுமல்ல. ஏனெனில் அது ஜடமானது. பிரகிருதி புருஷன் இரண்டின் சேர்க்கையினால், அதாவது ஜடமான பிரகிருதியுடன் சைதன்ய உருவான பரமாத்மாவின் சேர்க்கையினால் அதாவது உயிர்கள் உற்பத்தியாகின்றன. எனவே பரமாத்மாவே எல்லா உயிர்களின் தந்தை, எல்லா உயிர்களின் வித்தும் அவனே. இந்த ரகசியம் இச்சுலோகத்தில் தெளிவாக அறிவிக்கப்பட்டுள்ளது. எனவே எந்த உயிரும், எந்த ஜீவனும், எத்துணை அற்பமான ஜாதியைச் சேர்ந்ததாயினும் திகில் அடையாமல் தன்மூலம் சாட்சாத் இறைவனே என அறிந்து அவன்ன அடைவதற்கு, அவனில் ஒன்றுவதற்கு (ஞானம் முதலியவற்றால்) எல்லாவித முயற்சியும் மேற்கொள்ளுதல் வேண்டும். மேலும் எல்லா உயிர்களின் பீஜமும் அவனேயாதலால், எந்த உயிரைப் பார்த்தாலும் இறையுணர்வு ஏற்பட்டு ஜீவகாருண்யம், பரோபகாரம் இவை கொண்டிருத்தல் வேண்டும்.*

**வினா :** *உயிர்கள் எங்ஙனம் தோன்றுகின்றன?*

விடை : இயற்கை புருஷன் இவற்றின் சேர்க்கையால் தோன்றுகின்றன.

*ஸர்வயோனிஷு கௌந்தேய மூர்தய ஹஸம்பவந்தி யாஹ!!*
*தாஸாம் ப்ரம மஹத் யோனி ரஹம் பீஜப்ரதஹ பிதா"* (4)

## சொற்பொருள்

*கௌந்தேய - அர்ஜுனா! ஸர்வ யோனிஷு (தேவர், மனிதர் முதலான) எல்லாகர்ப்பாசயங்களிலும் யாஹ மூர்த்தயஹ - எந்த வடிவங்கள், சம்பவந்தி - பிறக்கின்றனவோ, தாஸாம் - அவற்றிற்கு, மஹத் பிரஹ்ம - மூலப் பிரகிருதி (மாயை) யோனிஹ் - காரணம், தாய் ஆவாள். அஹம் - நான், பீஜப்ரதஹ பிதா - வித்தை இடுகின்ற பிதாவும் நானே.*

### கருத்துரை

*அர்ஜுனா! (தேவர், மனிதர் முதலான) எல்லாவிதமான கர்ப்ப சாயங்களில், எந்த சரீரம் பிறக்கின்றனவோ, அவற்றிற்கு மூலப் பிரகிருதியே (மாயை) தாய் ஸ்தானம் நான் வித்தை இடுகின்ற தந்தை.*

### விளக்கம்

*முன் சுலோகத்தைப் போலவே இதுவும் உலகில் உயிர்கள் இறைசொரூபமே என்பதைத் தெளிவுபடுத்துகின்றது. அவர்களுக்கு பிரகிருதியே தாய், பரமாத்மாவே தந்தை.*

### முன்னுரை

*பிரகிருதியினின்றே (சத்வ, ரஜோ, தமோ) குணங்கள் பிறப்பதாகவும், ஜீவனின் பந்தத்திற்கு அவையே காரணமென்றும் சொல்கிறார்.*

*ஸத்வம் ரஜஸ்தம இதிகுணாஹ் ப்ரக்ருதிஸம்பவாஹ!*
*நிபத்னந்தி மஹா பாஹோ தேஹே தேஹினம்வ்யயம்!! (5)*

### சொற்பொருள்

*மஹாபாஹோ! - புஜபலம் பொருந்திய அர்ஜுனா! ப்ரகிருதிய ஸம்பவா - இயற்கையினின்றும் தோன்றிய, ஸத்வம் ரஜஸ்தம இதி - சத்வம் - ரஜஸ், தமஸ் முதலான, குணாஹ் - குணங்கள், அவ்யயம் - அழிவற்றவை. தேஹினம் - ஆத்மாவை, தேஹே - சரீரத்தில் (அல்லது சரீரத்திற்கு) நிபத்னந்தி - பந்தப்படுத்துகின்றன.*

### கருத்துரை

*தோள்பலம் பொருந்திய அர்ஜுன! பிரதிகிருதியினின்றும் தோன்றிய சத்வ, ரஜஸ், தமஸ் முதலான குணங்கள் மூன்றும் அழிவற்ற ஆன்மாவை தேகத்தில் (தேகியை தேகத்தில்) பிணிக்கின்றன.*

### விளக்கம்

*சத்வ, ரஜஸ், தமோ குணங்கள் மூன்றும் பிரகிருதியினால் ஏற்பட்டவை. அவை ஆத்மாவிற்கு அல்ல. ஆத்மாகுணங்களற்றவன். ஆயினும் ஜீவன்தன் உண்மை வடிவான ஆன்மாவை வேறுபடுத்தி தான் சத்வாதி குணங்களையுடையவனென எண்ணி, அக்குணங்களோடு ஒன்றிப் போய் தேகத்திடம், சம்சாரத்தில், கட்டுறுகிறான்.*

அம்மூன்று குணங்களில் ஏதேனும் ஒன்று இருந்தாலும் ஜீவன் இன்னும் பிரகிருதி (மாயையிலேயே)யிலேயே இருக்கிறானென்றும், மாயாதீததன் ஆன ஆத்மாவை இன்னும் சேரவில்லை என்றும் தெரிந்து கொள்ள வேண்டும். ஜீவனைப் பந்திப்பது இம்மூன்று குணங்களேயென்று இங்குத் தெளிவாகச் சொல்லப்பட்டதால் அவற்றினின்றும் முழுமையாக விடுதலை பெறுவதற்கு அவன் இடைவிடா முயற்சி செய்தல் வேண்டும். இங்கு ரஜோ, தமோ குணங்களுடன் சத்வ குணமும் ஜீவனைப் பந்திக்கின்றது என்று ஏன் சொல்லப்பட்டதென்றால் அவற்றினின்றும் முழுமையாக விடுதலை பெறுவதற்கு அவன் இடைவிடா முயற்சி செய்தல் வேண்டும். இங்கு ரஜோ, தமோ, குணங்களுடன் சத்வ குணமும் ஜீவனைப் பந்திக்கின்றது என்று ஏன் சொல்லப்பட்டதென்றால் முழுமையான நிச்சங்கற்ப நிலையில், அல்லது நிர்விகல்ப சமாதியில் சத்வகுணமும் பந்தமாகவே இருக்கும். ஆயின் ஆரம்ப நிலையில் ரஜஸ், தமோ குணங்களைத் தாண்டி முதலில் சத்வகுணத்திற்கு மாறி அதன் பின் அதனையும் தாண்டி முழுமையான நிர்விகல்ப நிலையைச் சேருதல் வேண்டும். அதுவே மோட்சம்.

'மஹா பாஹோ'' - அர்ஜுனா! உனது புஜ பல பராக்கிரமத்தினால் வெளிப்புற எதிரிகளை எவ்வாறு வெல்லுகின்றாயோ அவ்வாறே உன்னைப் பந்திக்கும் அகப்புற எதிரிகளையும் - திரிகுணங்களையும் வென்று, பந்தத்தின்றும் விடுதலை பெற்று, ஆத்ம சாம்ராஜ்யத்தின் தலைமையை அடைவாயாக என்று 'மஹாபஹோ' என்ற அடையினால் அர்ஜுனனுக்குத் தெரிவிக்கிறார்.

'தேஹே தேஹின மன்யயம்' - 'தேகத்தில்' என்று சொல்வதால் ஆத்மாவான இறைவன், அழிவற்றவனான பரஞ்சோதி, மிகவும் அருகில் தேகத்திலேயே உறைகிறான் என்பது தெளிவாகிறது. எனவே தீவிரமான பரிசோதனையால் விசாரணையால் அவனை இத்தேகத்திலேயே கண்டறிந்து மேன்மையடைதல் கூடும். மேலும் 'அவ்யயம்' என்பதால் தேகம் முதலானவை அழிந்தாலும் ஆத்மா அழிவதில்லை என்பது தெளிவாகிறது. உலகிலுள்ள எல்லாக் காட்சிப் பொருள்களும் அழியக்கூடியவை. ஆத்மாவொன்றே அழிவற்றது. நிலையானது. எனவே ஒவ்வொருவரும் அவரவர் நிலையை விசாரித்தறிந்து, தேகத்திலா அல்லது தேஹியிலா எனச் நிச்சயித்துக் கொண்டு தேகத்தில் ஆயின் முக்குணங்களைப் படிப்படியாக ஒதுக்கி அதற்கப்பாற்பட்ட எப்படியாயினும் பரமாத்மாவிடத்தில் சேர்தல் வேண்டும். அதுவே பிறவியின் பயன்.

**வினா :** *ஆத்மா எத்தகையது?*

**விடை :** *அழிவற்றது (அவ்யயமானத)*

**வினா :** *தான் உண்மையில் அத்தகைய அழிவற்ற ஆத்மாவாய் இருந்தும் அஞ்ஞானத்தின் வசப்பட்டு ஜீவன் எதனால் பந்திக்கப்படுகிறான்.*

**விடை :** *சத்வ, ரஜோ, தமோ குணத்தினால்.*

**வினா :** *அக்குணங்கள் எதனின்றும் பிறக்கின்றன?*

**விடை :** *பிரகிருதியினின்று பிறக்கின்றன.*

**வினா :** *எனவே ஜீவன் பந்தத்தினின்றும் விடுபடுவதற்கு என்ன செய்ய வேண்டும்?*

**விடை :** *திரிகுணங்களுக்கு அப்பாற்பட்ட பரமாத்மாவைச் சேர்த்தல் வேண்டும்.*

### முன்னுரை

*இனி சத்வம் முதலானவற்றின் இயல்புகளை மூன்று சுலோகங்களில் சொல்கிறார். முதன் முதலில் சத்வகுணத்தைப் பற்றிக் கூறுகிறார்.*

*தத்ர சத்வம் நிர்மலத்வாத் பரகாசகமனாமயம்!*
*சுகசங்கேன பத்நாதி ஞானசங்கேன சாநக!!* (6)

### சொற்பொருள்

*அனக - பாபமற்ற அர்ஜுனா, தத்ர ஸ்தவம், முதலான குணங்களில், ஸ்தவம் - ஸத்வகுணம், நபிர்மலத்வாத் - தூய்மையானதாகையால், ப்ரகாசகம் - ஒளி பொருந்திய, ஆனாமயம் - உபத்திரவம் உண்டு பண்ணாதது (ஆன), சுக சங்கேன - (இந்திரிய) சுகத்தில் பற்றுதலாலும், ஞான சசங்கேசை (தொழில்) ஞானத்தில் பற்றுதலாலும் பத்நாதி - (ஜீவனை) பந்தப்படுத்துகிறது.*

### கருத்துரை

*பாபமற்றவனான அர்ஜுனா! முக்குணங்களில் சுத்வகுணம் தூய்மையானதாகையால் ஒளியை அளிக்கக்கூடிய தொல்லைதரா*

தது; இந்திரிய சுகங்களில் பற்றுதலால், ஞானத்தில் பற்றுதல் உண்டாக்குகிறது.

**விளக்கம்**

முக்குணங்களும் இயற்கை (மாயை)யில் பிறப்பதனால் சுத்வகுணமும் மாயையின் பகுதியே ஆகும். ஆயின் தூய்மையான பகுதி. எனவே ஏனைய இரண்டைவிடச் சிறந்தது. மேன்மையானது. ஆயின் பற்றினை ஏற்படுத்தக் கூடியது. சிறிய சிம்னி விளக்கிற்குக் கருப்புக் கண்ணாடியாலான சிம்னியை பொருத்தினால் எவ்வாறிருக்குமோ, வெண்மையான கண்ணாடியைப் பொருத்தினால் எவ்வாறிருக்குமோ அவ்வாறே, முறையும், தமோ, ரஜோ, சத்வ குணங்களால் மூடப்பட்ட ஆத்மாவும் அவ்வவ் குணங்களால், பிரதிபலிக்கப்படுகிறது. வெள்ளைக் கண்ணாடி தூய்மையாய் இருப்பினும் அதுவும் ஒரு வலையமே ஆகும். அவ்வாறே சத்வகுணமும், சுகங்களின் மீதும், ஞானத்தின் மீதும் உள்ளபற்றுதலால், ஆத்மாவைப் பந்தப்படுகிறது என்பது தெரிவிக்கப்பட்டது. 'நான் சுகவான்' என்று தேக இந்திரியம், முதலான க்ஷேத்ர தர்மமான சுகத்தினை ஆத்மாவில் ஏற்றிக் கூறுதல் என்ற பற்றுதலாலும், உலக விஷயமான அதாவது கல்வி முதலான தொழில் முறை தர்மத்தினை ஆத்மாவில் ஏற்றிக் கூறுதல் என்னும், ஞானப்பற்றினாலும் அந்த சத்வகுணம் ஆத்மாவைப் பந்தப்படுத்துகிறது. எனவே அதற்கும் அப்பால் சென்று ஆத்மநிலையை அடைக என்று அர்ஜுனனுக்கு பகவான் போதிக்கிறார்.

'அனக' பாவமற்றவன் அர்ஜுனன், பாவமற்ற தன்மை தூய்மையான சித்தம் இரண்டும் பிரம்மவித்யா உபதேசத்திற்குத் தேவையான தகுதி, அத்தகைய தகுதியை அர்ஜுனின் பெற்றிருந்தான் என்பதற்கு 'அனசு' என்ற அழைப்பினால் தெளிவாகிறது.

**வினா:** சத்வகுணம் எத்தகையது?

**விடை:** 1. நிர்மலமானது 2. ஒளிதரக்கூடியது 3.தொல்லையற்றது.

**வினா:** அப்படியாயின், அது எவ்வாறு ஜீவனைக் கட்டுப்படுத்துகிறது?

**விடை:** சுகங்கள், ஞானம், இவற்றின் மீது உள்ளபற்றுதலால் பந்திக்கிறது.

**வினா:** எனவே அதன் பலன் என்ன?

**விடை :** *அத்தகைய ரஜோ குணத்தினை ஒதுக்குதல் வேண்டும்.*

*ரஜோ ராகாத்மகம் வித்தி த்ருஷ்ணா ஸங்கஸமுத்பவம்!*
*தன்னிபத் நாதிகௌந்தேய கர்மஸங்கேன தேஹிநம்!! (7)*

**சொற்பொருள்**

கௌந்தேய - அர்ஜுனா, ரஜஹ் - ரஜோகுணம், ராகாத்மகம் - காட்சிப்பொருள்களின் மீதான விஷயங்களில் ஆசை உண்டாக்கக் கூடியது, த்ருஷ்ணா ஸங்க ஸமுத்பவம் - வேட்கையையும், பற்றுதலையும் உண்டாக்கக் கூடியது என்று, வித்தி - அறிக, தத் - அந்தரஜோகுணமானது, கர்மஸங்கேன - வினைப் பற்றுதலால், தேஹினம் - ஆத்மாவை, நிபத்நாதி- பந்தப்படுத்துகிறது.

**கருத்துரை**

*அர்ஜுனா! ரஜோகுணம் விஷயங்களின் மீதான ஆசையை உண்டாக்குவது என்றும், வேட்கையையும் பற்றுதலையம் ஏற்படுத்துவது என்றும் அறிக, வினைப்பற்றினால் அது ஆத்மாவை (ஜீவனை) பந்தப்படுத்துகிறது.*

**விளக்கம்**

கிடைக்காத பொருள்களின் மேல் ஆசைப்படுவதையே 'த்ருஷ்ணா' என்பர். கிடைத்ததின் மீது மோகமே பற்று. இந்த வேட்கையையும் பற்றையும் ரஜோ குணம் ஏற்படுத்துகிறது. மேலும் பலவிதமான ஆடம்பர செயல்களாலும், விஷயங்களின் மீதுள்ள பற்றுதலாலும் புகழ்பெறுதல் வேண்டும் செயல்களினாலும் ரஜோகுணம் ஜீவனை பந்தப்படுத்துகிறது. 'நிபந்நாதி' - சத்வகுணத்தைப் பற்றி சொல்கையில் 'பந்த நாதி' என்று கூறி, ரஜோ தமோ குணங்களை வர்ணிக்கையில் 'நிபத் நாதி' என்று சொல்வது கவனிக்கத்தக்கது. அதாவது ரஜோ, தமோ குணங்கள் ஜீவனைப் பெரிதும் கட்டுப்படுத்துகிறது என்பது பொருள்.

**வினா :** *ரஜோகுணம் எத்தகையது?*

**விடை :** *1. விஷயங்களின் மீது ஆசையை உண்டாக்குடவது*
*2. வேட்கையை ஏற்படுத்துவது.*

**வினா :** *அது எவ்வாறு ஜீவனைப் பந்தப்படுத்துகிறது.*

**விடை :** 1. விஷயப்பற்றினாலும் 2. வினைப் பற்றினாலும் பந்திக்கி றது.

**வினா :** எனவே அதனால் பலன் என்ன?

**விடை :** அத்தகைய ரஜோ குணத்தினை ஒதுக்குதல் வேண்டும்.

*தமஸ்த்வக் ஞானஜம் வித்தி மோஹனம் ஸர்வ தேஹினாம்!*
*ப்ரமாதாலஸ்ய நித்ரா பிஸ் தன்னிபத்னாதி பாரத!* (8)

**சொற்பொருள்**

*பாரத* - அர்ஜுனா?! *தமஸ்து* - தமோ குணமோ, *அக்ஞானஜம்* - அக்ஞானத்தில் பிறந்தது, *ஸர்வ தேஹினாம்* - எல்லா உயிர்களுக்கும், *மோஹனம் (இதி)* - மோகத்தை (விவேகமின்மையை) உண்டு பண்ணுவது (என்று), *வித்தி* - அறிக, *தத்* - அது, *ப்ரமாதாலஸ்ய நித்ராபிஹ்* - அசட்டை, சோம்பல் உறக்கம் இவற்றால், *நிபத்னாதி* - பந்தப்படுத்துகிறது.

**கருத்துரை**

ஓ அர்ஜுனா! தமோ குணம் அஞ்ஞானத்தினால் ஏற்படுகின்றது. எல்லா உயிர்களுக்கு மோகத்தை உண்டு பண்ணுவது என்றறிக. மறதி, சோம்பல் முதலானவற்றால் ஜீவனைப் பந்தப்படுத்துகிறது.

**விளக்கவுரை**

தமோகுணம் அஞ்ஞானத்தினால் பிறக்கிறது. அது ஜீவனை மோகத்தில் ஆழ்த்தி அவனுக்கு விவேகத்தினைக் கெடுத்து, சம்சாரத்தினை அடையச் செய்து கட்டுப்படுத்துகிறது. தமோ குணத்தை உடைய ஜீவனின் நிலை, சூரியனை மூடி மறைக்கும் கருமேகத்தை ஒத்தும், கருப்புக் கண்ணாடியால் மூடப்பட்ட விளக்கினைப் போன்றும் இருக்கும். 'ஸர்வ தேஹினாம்' என்று சொல்வதால் விவேகிகளையும், ஆத்ம ஞானிகளையும் தவிர ஏனையவர் அனைவரையும் தமோகுணம் பீடிக்கும் என்பதை ஊகிக்கலாம். முமூட்சுக்களுக்கு அவரவர் முயற்சியின் தீவிரத்தைப் பற்றி அக்குணம் படிப்படியே விலகும். ஒருவனுக்கு தமோ குணம் உளளதா இல்லையா என்று அறிவது எங்ஙனம்? சோம்பல், அதிகமான உறக்கம், அஜாக்கிரதை, முட்டாள் தனம் இவை எவனுக்கு இருக்கிறதோ, அவனுக்கு தமோ குணம் முழுமையாக உள்ளது என அறியலாம். அதன் முன்பாகவே அறிந்து கொண்டு, அதனை விலக்குவதன் மூலம் இருளைப்

போன்ற அத்தமோ குணத்தினை இதயத்தினின்றும் தூரமாக விலக்கி வருதல் வேண்டும். இல்லையெனில் தமோ குணம், ரஜோ குணங்கள் நம்மைத் தெய்வத்தினின்றும் தூரமாக விளக்கிவிடும்.

'பாரத்' பாரத குலத்தில் உதித்த அர்ஜுனா! என்ற அழைப்பு இவ்வத்தியாயத்தில் பலமுறை பயன்படுத்தப்பட்டுள்ளமை கவனிக்கத் தக்கது. எவ்வாறென்னி,

1. ஸம்பவஹ ஸர்வபூதாணாம் ததோ பவதி பாரத! (13-3)
2. ப்ரமா தாலஸ்யநித்ராபிஸ் தன்னி பத்னாதி பாரத! (13-8)
3. ஸத்வம் சுபே ருஞ்சயதி ரஜஹ கர்மாணி பாரத! (13-9)
4. ரஜஸ்தமஸ்சா பிபூ ஸத்வம் பவதிபாரத (13-10)
5. ரஜஸ்யேதாணி ஜாயந்தே நிவிருந்தே பாதர்ஷப (13-12)

இவ்வாறாக ஒரே முறையான 'பாரத' எனும் அழைப்பினை பலமுறை பயன்படுத்துவதில் ஏதோவொரு சிறப்பு இருத்தல் வேண்டும். அது எதுவெனில் - (பா என்றால் ஒளி (ஞானம்) அதில் 'ரதஹ' - பொருந்தியவனாக ஆகுக! - என்ற பொருள் இச்சொல்லினால் காட்டப்பட்டுள்ளது. 'அர்ஜுனா! ஒளி பொருந்தியவனாய், முக்குணங்களைத் தாண்டி, மிகவும் தூய்மையான நீ உன் சொரூபத்தை உணர்வாயாக! நீ இருளின் வடிவான இம்முக்குணங்களோடு பொருந்தியவ ன் .அல்லன் அவை மாயையினின்றும் பிறப்பவை நீயோ திவ்ய **இலசணங்கள்** பொருந்தியவன். ஞானப்பிரகாசசச்சிதானந்த வடிவினன். எனவே அத்தகைய ஒளிவடிவான ஆன்ம தத்துவத்தில் நிலைத்துக் குணங்களுக்கப்பாற்பட்டவனாக ஆகுக! என்று போதிப்பதற்காகப் பலமுறை 'பாரத' என்று பகவான் பயன்படுத்துகிறார்.

**வினா :** தமோ குணம் எதனின்று பிறக்கிறது.

**விடை :** அஞ்ஞானத்தினின்றும்.

**வினா :** அதன் இயல்பென்ன?

**விடை :** அது ஜீவன்களை எவ்வாறு பந்தப்படுத்துகிறது?

**விடை :** மறதி, சோம்பல், சுறுசுறுப்பின்மை, அதிகமான உறக்கம் முதலியவற்றால் பந்தப்படுத்துகிறது.

## முன்னுரை

இவ்வாறாக மூன்று குணங்களும் ஜீவனை எவ்வாறு பந்தப்படுத்துகின்றன என்று சொல்லிக் குணங்களின் இலட்சணங்களை இனிக் கூறுகிறார்.

*ஸத்வம் ஸுகே ஸஞ்ஜயதி ரஜஹ கர்மணி பாரத!*
*ஞானமாவ்ருத்ய துதமஹ ப்ரமாதே ஸஞ்ஜயத்யுத!!* (9)

## சொற்பொருள்

பாரத! - அர்ஜுன!, ஸ்த்வம் - சற்குணம், ஸுகே - சுகத்தில், ஸஞ்ஜயதி - சேர்கிறது. ரஜஹ் - ரஜோகுணம், கர்மாணி கர்மத்தில் (ஸஞ்ஜயதி - சேர்கிறது!, தமஹ்து - தமோகுணமோ, ஞானம் - ஞானத்தை (விவேகத்தை) ஆவ்ருத்ய - மறைத்து, ப்ரமாதே தவற்றில் (கவன மின்மையில்) ஸஞ்ஜயதி - சேர்கிறது, உத - இது ஆச்சரியமானது.

## கருத்துரை

அர்ஜுன சத்வகுணம் சுகத்திலும், ரஜோ குணம் கர்மத்திலும், தமோ குணம், ஞானத்தை மறைத்தும் கவனமின்மையில், தவற்றில் ஜீவனைச் சேர்க்கின்றது. இது ஆச்சரியம்.

## விளக்கம்

இதுவரை சொன்னதையே போதனையாதலால் மறுபடியும் சொல்கிறார். சத்வகுணம் உலகியல் சுகங்களிலும் ரஜோகுணம், கர்மங்களிலும் தமோ குணம் உறக்கம் முதலானவற்றிலும் ஜீவனைச் சேர்க்கிறது.

*ஜீவனில் சத்வ குணம் மேலோங்கினால் விளக்கின் மீது கண்ணாடி சிம்னி வைத்ததுபோல் இருக்கும்*
*ஜீவனிடம் ரஜோகுணம், நிறைந்திருப்பின் விளக்கின்மீது*
*கூடையை வைத்து மூடியது போல் இருக்கம்*
*ஜீவனிடம் தமோகுணம் நிறைந்திருப்பின் விளக்கின்மீது*
*குடத்தை மூடியது போல் இருக்கும்.*

என்று ஸ்ரீ ராமகிருஷ்ண பரஹம்ஸர் சொல்லியிருக்கிறார். எனவே மூன்றும் ஞானதீபத்தை, ஆத்ம ஒளியை ஏதோவொருவித்தில் மறைப்பவையாகவே இருக்கும். அதனால் அவற்றையம் தாண்டி

ஜீவன் ஆத்ம நிலையை எட்ட வேண்டியிருக்கிறது. முக்குணங்களின் இயல்பை நோக்கியும், நித்ய நிர்மலமான ஜீவன் அவற்றின் வசப் பட்டு மயங்குதலைக் கண்டு பகவான் ஆச்சரியத்தைக் காட்டுகிறார் என்பதை 'உத' (ஆச்சரியம்) என்ற புதினத்தினால் விளக்குகிறார்.

*ரஜஸ்த மஸ்சாபிபூய ஸ்த்வம் பவதி பாரத!*
*ரஜஹ் ஸத்வம் தமஸ்சைவ தமஹ் ஸத்வம் ரஜஸ்ததா!!* (10)

## சொற்பொருள்

*பாரத - அர்ஜுன! ஸத்வம் - சத்வ குணம், ரஜஹ - ரஜோகுணத் தையும் - தமஹ்ச - தமோ குணத்தினையும், அபிபூய அடக்கி, பவதி - மேலெழுகிறது, ரஜஹ் - ரஜோகுணம், ஸத்வம் - சத்வகுணத்தை யும் மஹ்ச - தமோ குணத்தையும் (அபிபூய சக்கி) (பவதி - மேலெழு கிறது), தமஹ் - தமோ குணமானது, ஸத்வம் - சத்வகுணத்தினையும் ரஜஹ் - ரஜோ குணத்தினையும், (அபிபூய - அடக்கி) (பவதி மேலெ ழுகிறது).*

## கருத்துரை

*அர்ஜுனா! சத்வகுணம் மேலோங்கும் போது ரஜோகுணமும் தமோ குணமும் அடங்கி நடக்கிறது. அவ்வாறே ரஜோ குணம் மேலெழுகையில் சத்வ, தமஸ்; தமோ குணத்தில் சத்வ ரஜோகுணங் கள் அடங்கி நடக்கிறது.*

## விளக்கம்

*சத்வம் முதலான முக்கணங்களில் எது அதிகமாக ஜீவனிடத்து இருக்குமோ அது மிகுந்த இரண்டையும் அடக்கி ஆள்கிறது. எனவே சாதகன் முதன் முதலில் சத்வ குணத்தினைப் பயின்று, அதனால் ரஜோ, தமோ குணத்தினையடக்கி அந்த சத்வகுணத்தைக் கூட தாண்டி நிர்குண பரமாத்ம நிலைக்குச் சேர வேண்டும்.*

## முன்னுரை

*இனிவரும் மூன்று சுலோகங்களில் எந்தக் குணம் ஜீவனிடத்து அதிகமாக உள்ளது என்பதை விளக்குகிறார்.*

*ஸர்வத்வாரேஷு தேஹேறா அஸ்மின் ப்ரகாச உபஜாயதே!*
*ஞானம் யதாததா வித்யாத் விங்ருத்தம் ஸத்வ மித்யுத!!* (11)

## சொற்பொருள்

*யதா - எப்பொழுது, அஸ்மின் தேஹே - இந்த சரீரத்தில், ஸத்வத்வா ரேஷு எல்லாப் பொறி வாயில்களிலும், ப்ரகாசஹ் ஒளி வடிவாக (புத்தி, விருத்தி வடிவாக), ஞானம் - ஞானம், உபஜாயதே - உண்டாகிறதோ, ததா அப்போது, சத்வமலிருத்தும் - சத்வ குணம் ஓங்கியுள்ளது என்று, வித்யாத் அறிக.*

## கருத்துரை

*எப்போது சரீரத்தில் உள்ள பொறி வாயில்களனைத்திலும் ஒளிவடிவான ஞானம் அடைகிறதோ அப்போதே சத்வம் ஓங்கியுள்ளது என்பதை அறிதல் வேண்டும்.*

## விளக்கம்

ஒவ்வொரு குணம் மேலோங்கும்போதும் ஜீவன் செய்யும் காரியங்களும் அதற்கேற்பவே இருக்கும். அவன் புசிக்கும் உணவு, பேசும் பேச்சு, நடவடிக்கை அனைத்தும் அக்குணங்களை ஒத்தே இருக்கும். அதாவது சத்வகுணம் மேலோங்கி இருக்கையில் அவனது செயல்கள் யாவும் சாத்விகமாக, ஒளியுடன் கூடி, ஞானத்துடன் இருக்கும். ஒரு பழம் நன்கு பழுத்திருப்பின் அதனை எந்தப் பக்கம் தின்று பார்த்தாலும், இனிப்பாகவே இருப்பது போல் சத்வகுணம் மேலோங்கி இருப்பவன் பேசும் பேச்சு எப்போதும் ஒளிமயமாகவே இருக்கம். அமைதியாகவே இருக்கும்; சாத்வீக உணவையே உட்கொள்வான். மேன்மையான நூல்களையே படிப்பான். நல்லவிதமான எண்ணங்களையே கொண்டிருப்பான். இச்சுலோகத்தில் இவ்வுண்மையே சொல்லப்பட்டது. இத்தகைய அமைதி, ஞான ஒளி எல்லா இந்திரியங்களினின்றும் எப்போது வெளிப்படுகின்றதோ அப்போது அந்த மனிதனிடத்து சத்வ குணம் மேலோங்கியுள்ளது என்பதைக் கண்டு முன்னேற்றம் அடைந்துள்ளன என்பதை அவனது நடவடிக்கையினாலேயே புரிந்து கொள்ள முடியும். இந்த சுலோகத்திலும், இனிவரும் இரண்டு சுலோகங்களிலும் ஜீவனின் தூய்மையான நடவடிக்கை, அவனது நிலை இவற்றைக் கணிப்பதற்குச் சரியான அளவுகோல் (meter) எதுவெனச் சொல்கிறார். அவரவர் நடவடிக்கையே அதன் அளவுகோல். எனவே ஒவ்வொருவரும் தினசரி நடவடிக்கையைப் பரீட்சித்துக் கொண்ட தம்மிடத்து எந்த குணம் மேலோங்கியுள்ளது என்பதை அறிந்து, தமோ குணத்தினின்றும், ரஜோ குணம், ரஜோ குணத்தினின்றும் சத்வ குணம், சத்வ குணத்தி

னின்றும் விசுத்த சத்வகுணம் அல்லது குணாதீத நிலை ஆகியவற் றிற்கு மாறுவதற்கு முயல வேண்டும். சத்வ குணத்திற்கு விபீஷ் ணனை உதாரணமாகச் சொல்லலாம்.

**வினா :** சத்வகுணம் மேலோங்கி நிற்கையில் ஜீவன் எவ்வாறிருப் பான்?

**விடை :** அவனது பொறிவாயில்களினின்றும் ஒளிவிடும் ஞானம், சாத்வீகத் தன்மையை வெளிப்படுத்தும். அத்தகைய நிலை எவனி டத்துக் காணப்படுகிறதோ அவனிடத்து சத்வ குணம் மேலோங்கி நிற்கிறது எனலாம்.

**முன்னுரை**

ரஜோ குணம் மேலோங்குகையில் ஜீவன் எவ்வாறிருப்பான் என்பதை விளக்குகிறார்.

*லோபஹ் ப்ரவ்ருத்திராரம்பஹ கர்மணாம சமஹ ஸ்ப்ருஹா!*
*ரஜஸ்யேதானி ஜாயந்தே விவ்ருத்தே பரதர்ஷப!!* (12)

**சொற்பொருள்**

பரதர்ஷ! - பரத குல சிரேஷ்டனே! ரஜஸி - ரஜோ குணம், நிவருத்தே (ஸதி) மேலோங்கி நிற்கையில், லோஹ - பேராசை, ப்ரவ்ருத்திஹி - காரியங்களில் ஈடுபாடு, கர்மாணாம் - (காம்ய, நிஷித்த) கர்மங்களின், ஆரம்ப - தொடங்குவதற்கு, ஆசமஹ் - மனவ மைதியின்மை, (அல்லது இந்திரியக் கட்டுப்பாடின்மை), ஸ்பருஹ ரைவில் நாட்டம் (எனும்), ஏதானி, இத்தகைய இலட்சியங்கள் ஜாயந்தே - பிறக்கின்றன.

**கருத்துரை**

பரதகுல சிரேஷ்டனே! ரஜோ குணம் மேலோங்கி நிற்கையில் மனிதனிடத்துப் பேராசை, காரியங்களைச் செய்யும் நாட்டம் (காமிய நிஷித்த) கர்மங்களை ஆரம்பித்தல், அமைதியின்மை, (அல் லது இந்திரியக் கட்டுப்பாடின்மை), ஆசை எனும் இவை பிறக்கின் றன.

**விளக்கம்**

ரஜோகுணம் மேலோங்குகையில் மனிதன் வேண்டாத செயல்

கள், வியவாகாரங்களில் ஈடுபாடு கொள்வான். அதன் பலனால் அவனுக்கு அமைதி இருப்பதில்லை. ஏதோவொரு செயல் செய்ய வேண்டுமென எண்ணுவானே தவிர செயல் அற்று இருப்பதில்லை. அவனது உணவும், ராஜஸ ஆகாரமாக இருக்கும். அவனது இதயத்தில் பலவித விஷய ஆசைகள் உலவிக் கொண்டிருக்கும். இந்திரியக் கட்டுப்பாடு இருப்பதில்லை. பழுக்காத புளிப்புச்சுவையையுடைய மாங்காய்க்கு இவனை உவமையாகக் கூறலாம். இச்சுலோகத்தில் ரஜோ குணம் உடையவர்க்கு அமைதி இருப்பதில்லை என்று தெரிவிக்கப்பட்டதால், அமைதி அடைவதற்கு ரஜோகுணத்தை வெளியேற்றுவதே வழி என்பது புலப்படுகின்றது.

**வினா :** ரஜோ குணம் மேலோங்கும்போது மனிதன் எப்படி இருப்பான்.

**விடை :** அவன் 1. பேராசை, 2. காரியங்களில் விருப்பம், 3. (காம்யந்ஷித்த) கர்மங்களைத் தொடங்குதல். 4. மன அமைதியின்மை, 5. விஷயங்களின் மீது ஆசை இவற்றுடன் இருப்பான்.

**வினா :** அமைதி எவருக்குக் கிட்டும்?

**விடை :** ரசோகுணத்தை மோகங்களை நீக்கியவர்களுக்குக் கிட்டும்.

முன்னுரை

இனி தமோ குணம் மேலோங்குகையில் ஜீவன் எவ்வாறிருப்பான் என்பதை விளக்குகிறார்.

*அப்ப்ரகாஸோ அப்ரவிருத்திச் சப்ரமாதோ மோஹஏவச!*
*தமஸ்யேதானி ஜாயந்தே விவ்ருத்தே குருநந்தன!! (13)*

சொற்பொருள்

குருநந்தன - குருகுலத்துதித்தவனே! தமஸி - தமோகுணம், விவ்ருத்தே - மேலோங்குகையில் அப்ப்ரகாஸஹ - ,விவேஹமின்மை (புத்திமந்தம்), அப்ப்ரவர்த்திஸ்ச்ச - சோம்பல், ப்ரமாதஹ் - அஜாக்ரதை, மேஹஹ் ஏவச - மதிமயக்கம் (மூடத்வம் அல்லது விபரீத ஞானம்) ஏதானி - என்னும் இவை, ஜாயந்தே - உண்டாகின்றன.

**கருத்துரை**

குருகுலத்துதித்தவனே! தமோ குணம் மேலோங்குகையில் மனிதனிடத்து விவேகமின்மை, சோம்பல், அஜாக்ரதை, அஞ்ஞானம் என்பன ஏற்படுகின்றன.

**விளக்கம்**

தமோகுணம் மேலோங்குகையில், ஜீவனிடத்து விவேகமின்மை, சோம்பல், அஜாக்ரதை, புத்திமந்தம், ஆகிய லக்ஷணங்கள் தோன்றும். அவனது உணவு பேச்சு இவற்றிலும் தமோகுணம் வெளிப்படும். மாம்பிஞ்சிக்கு தமோ குணம் நிலையை ஒப்பிலாம். கும்பகர்ணனை இக்குணத்திற்கு உதாரணமாகக் கூறலாம். ஒவ்வொருவரும் தம்மைத்தாமே பரிசோதித்துக் கொண்டு எந்தக் குணங்களின் லக்ஷணம் தம்மிடத்து உள்ளதோ அதனை அறிந்து சாதனையின் மூலம் படிப்படியே உயர்ந்த நிலையை அடைதல் வெண்டும். செடியின் வேருக்கு நீர்ப்பாய்ச்சினால் பிஞ்சின் துவர்ப்புமாறி புளிப்புச் சுவை கொண்டு அதன்பின் இதுவே இனியதாக மாறிப் பக்குவப் பட்டு இறுதியில் கீழே விழுந்துவிடும். அதுவே ஜீவன் முக்திநிலை. அதன்பின் அவனுக்கு சம்ஸாரபந்தத்தினின்று விமுக்கி கிடைக்கிறது. ஆயின் பழத்தின் பக்குவநிலை அதாவது கீழே விழும்நிலை, செடியின் வேருக்கு நீர் ஊற்றியதால் வந்ததைப் போல, இறைத்தியானம் இடைவிடாத ஆன்மீக சாதனை முதலானவற்றின் மூலமாகவே ஜீவன் முறைப்படி வளர்ச்சி அடைந்து குணாதீத நிலையைச் சேர்தல் வேண்டும்.

**வினா** : தமோகுணம் மேலோங்குகையில் ஜீவன் எவ்வாறு இருப்பான்?

**விடை** : 1. விவேகமின்மை, 2. சோம்பல், 3. அஜாக்கிரதை, 4. அஞ்ஞானம் முதலிய லக்ஷணங்கள் பொருந்தி இருப்பான்.

**முன்னுரை**

மரணத்தருவாயில் எந்தக் குணம் மேலோங்கி இருப்பின் அந்தப் பலன் கிடைக்கும் என அடுத்துவரும் 2. சுலோகங்களில் கூறுகிறார். முதலில் சத்துவ குணத்தைக் கூறுகிறார்.

*யதா ஸத்வே ப்ரவிருத்தே து ப்ரலயம் யாதிதேஹ ப்ருத்!*
*த தோத்தம விதாம் லோகாமைலான் ப்ரதி பத்யதே!! (14)*

### சொற்பொருள்

எதாது - எப்பொழுது, ஸத்வே - ஸத்வ குணம், ப்ரவிருத்தே (ஸதி) மேலோங்கி இருக்கையில், தேஹவ்ருத் - ஜீவனானவன், ப்ரலயம் - மரணத்தை, யாதி - அடைகிறானோ, ததா - அப்போது உத்தமவிதான் - உத்தம ஞானத்தை உடையவர்களின், அமலான் குற்றமற்ற, தூய்மையான லோகான் - உலகங்களை, ப்ரதிபத்யதே - அடைகிறான்.

### கருத்துரை

எப்போது ஜீவன் ஸத்வ குணம் மேலோங்கி நிற்கையில் மரண மடைகிறானோ அப்போது அவன் மேலான ஞானம் உடையவர்களின் தூய்மையான உலகத்தினையே அடைவான்.

### விளக்கம்

இறுதிக்காலத்தில் சித்தத்தில் சத்துவ, ரஜோ, தமோ குணங்களில், எந்த குணம் மேலோங்கி நிற்கிறதோ அவ்வவ்குணங்களின் இயல்பினை உடைய உலகமோ, பிறவியோ, ஜீவனுக்குக் கிட்டும் எனப்பட்டது. இறுதிக்காலத்தில் ஸத்வகுணம் அதிகமாக இருந்தால் ஞான உலகத்தை அடைவர். சத்வகுணம் என்பது ஒரு கணத்தில் ஏற்படுவது அல்ல. அதற்கு எத்துணையோ சாதனை முயற்சி தேவை, வாழ்நாள் முழுதும் அத்தகைய முயற்சியில் ஈடுபட்டிருந்தால்தான் புண்ணிய காரியங்கள் செய்தல் பரோபகார சிந்தனை, முதலான குணங்கள் இருந்தால்தான் இறுதிக் காலத்தில் சித்தத்தில் சத்வகுணம் மேலோங்கி இருக்கும். அதுவே அன்றி சத்வகுணம் ஒரு கணத் திலோ திடீரென்ற எண்ணத்திலோ தோன்றுவதல்ல. வாழ்நாள் முழு தும் பாவகாரியங்கள் செய்து கொண்டிருந்தால் இறுதிக் காலத்தில் தமோகுணமே மேலோங்கி இருக்கும். 'தேஹவிருத் '- (தேஹத்தை எடுத்தவன்), என்ற சொல்லினால் உண்மையில் ஜீவனானவன் தேஹத்தினின்றும் வேறாவன் என்பது தெரிகிறது. தேஹத்தை அணிந்து கொண்டவனிடமிருந்து அணியப்படுவது வேறானதே அல்லவா? க்ரீடத்தை அணிந்தான், வஸ்த்ரத்தை அணிந்தான் என்று சொல்கையில், க்ரீடம் வஸ்தரம் முதலானவை மனிதனைவிட எவ்

வாறு வேறாக உள்ளதோ அவ்வாறே தேஹத்தை அணிந்துள்ள ஜீவனைவிட தேஹம் வேறானது. இவ்வுண்மையை அறிந்து மனிதன் தேஹத்தின் பற்றை விட்டு தேஹசாக்ஷியான ஆத்ம பாவனை கொண்டிருத்தல் வேண்டும்.

உத்தம விதான் அமலான் என்பதால் அத்தகைய சத்வ குணத்துடன் மரணமடைபவன் ஞானிகள் உள்ள தூய்மையான உலகத்தை அடைவான் என்பது தெளிவாகிறது. ஆன்மீக முன்னேற்றத்திற்கு, நிலையான பந்தவிமுக்திக்கு உதவுகிறது.

**வினா :** சத்வ குணம் மேலோங்கி நிற்கையில் மரணமடைபவன் எத்தகைய உலகை அடைகிறான்?

**விடை :** **உத்தமமான ஞானிகளது தூய்மையான உலகை அடைகிறான்.**

முன்னுரை

ரஜோகுணம் தமோகுணம் மேலோங்கி நிற்கையில் மரணிப்பவன் அடையும் கதிகளை விவரிக்கிறார்.

*ரஜஸி ப்ரலயம் கத்வாகர்மஸங்கிஷு ஜாயதே!*
*ததா ப்ரலீனஸ்தமஸி மூடயோனிஷு ஜாயதே!!* (15)

சொற்பொருள்

ரஜஸி - ரஜோகுணம் (ப்ரவ்ருத்தே மேலோங்கி நிற்கையில்), பரலயம் - மரணத்தினை, கத்வா - அடைந்தவன், கர்மஸங்கிஷு - கர்மப்பற்று உடையவர்களிடத்து, ஜாயதே - பிறக்கின்றான், ததா - அவ்வாறே, தமஸி - தமோ குணம் மேலோங்கி நிற்கையில், ப்ரலீனஹ - மரணமடைபவன், (மூர்க்கர்களின், விவேகமற்றவர்களின்), கர்ப்பத்தில் அல்லது பசுபக்ஷி முதலியவற்றின் கர்ப்பத்தில் பிறக்கின்றான்.

கருத்துரை

ரஜோகுணத்தில் காலமாகின்றவன் கர்மப்பற்று உடையவர்களிடத்தில் பிறக்கிறான். அவ்வாறே தமோ குணத்தில் இருக்கின்றவன், அறிவிலிகள் கர்பத்தில் அல்லது பசுபக்ஷி முதலான ஈன ஜாதியில் பிறக்கின்றான்.

### விளக்கம்

ரஜோகுணத்தில் மரணிப்பவன் தனது சம்சாரத்திற்குத் துணைபுரியக் கூடிய கர்மப்பற்று உடையவர்களிடத்தில் பிறக்கிறான். அவ்வாறு பிறந்து வெளி உலகில் மறுபடியும் மரணமடைந்து - இவ்வாறு சம்ஸார சுழற்சியினின்றும் விடுபட இயலாது அமைதி இன்றித் தவிக்கிறான். இனி தமோ குணத்தில் பிறக்கிறவன் மூடர்களுக்கு இடையில் அல்லது விலங்கு பறவை முதலான ஈனப்பிறவிகளில் பிறக்கிறான்; அத்தகையோர் இன்னும் எத்துணை துன்பம் அனுபவிக்க வேண்டுமோ அத்தகைய ஈனநில்லை நேரிடாமல் ஜீவனானவன் மிக எச்சரிக்கையாக வாழ்நாளில் முயற்சித்து ரஜோ, தமோ குணங்களை இதயக் குகையினின்று விரட்டி இறை பக்தி வைராக்யம் ஆத்மஞானம் முதலான நற்குணங்களைப் பழக்கப்படுத்திக் கொண்டு, முக்தியடைந்து ஜன்ம ஈடேற்றம் பெறுதல் வேண்டும்.

வினா : ரஜோ குணத்தில் இறப்பவன் எங்குப் பிறக்கிறான்?

விடை : கர்மபற்று உடையவர்களிடத்தில்

வினா : தமோ குணத்தில் இறக்கிறவன் எங்குப் பிறக்கிறான்?

விடை : மூடர்கள் கர்ப்பத்தில் அல்லது விலங்கினத்தில் பிறக்கிறான்.

*கர்மணஹ ஸுக்ருதஸ்யாஹுஹு ஸாத்விகம் நிர்மலம் பலம்!*
*ரஜஸஸ்து பலம்துஹ்க மக்ஞானம் தமஸஹபலம்!!* (16)

### சொற்பொருள்

க்ருதஸ்யகர்மணஹ - ஸாத்வீகமான நற்கர்மத்திற்கு (புண்ணிய காரியங்களுக்கு, ஸாத்விகம் - ஸத்வகுண ஸம்பந்தமான, நிர்மலம் - தூய்மையான சுகம், பலம் - பயன் என்று, ஸமஸஹ - தமோ குணமான கர்மத்திற்கு, அக்ஞானம் - விவேகமின்மை, பலம் - பயன் என்றும் அஹுஹ் - (பெரியோர்) பகர்கின்றனர்.

### கருத்துரை

சாத்வீக கர்மங்களுக்கு சத்வகுணத் தொடர்புடைய தூய்மையான சுகம் என்றும், ரஜோகுண கர்மத்திற்குத் துக்கம், பலன் என்றும், தமோ குண கர்மத்திற்கு விவேகமின்மை பலன் என்றும் பெரியோர்கள் சொல்கின்றனர்.

**கருத்துரை**

அனைவரும் விரும்புவது சுகமே அன்றி துக்கத்தை அல்ல. அப்படியாயின் சுகத்தினை எதனால் பெறமுடியுமோ அத்தகைய காரியங்களையே செய்ய வேண்டும். தூய்மையான ஸாத்வீக கர்மத்தினாலேயே அத்தகைய சுகம் கிடைக்கும். ராஜோ, தமோ குணங்களினால், துக்கம் விவேகமின்மை இவையே கிடைக்கும். எனவே அறிவாளியானவன் சாத்வீக கர்மங்களையே செய்ய வேண்டும். நெருப்பில் கைவைத்தால் சுடும் எனறு அறிந்தவன் மறுபடியும் அதன்மீது கைவைக்கத் துணியான். அவ்வாறே ராஜஸ, தாமஸ கர்மங்களினால் துக்கம், விவேகமின்மை ஆகியவையே பலன் என்பதனால் பகவான் முமுக்ஷுக்களை எச்சரிக்கை செய்தவர் ஆகிறார்.

'ரஜஸஸ்து பலம் துக்கம் - ரஜோ குணவடிவான தீராத ஆசை காமக்ரோதம் இவற்றின் பலம் துக்கம் என்பதால் அவ்விஷயத்தில் சாதகன் எச்சரிக்கையாக இருந்து அவற்றை விலக்கவேண்டும். இதனைத் தவிர துக்க நிவாரணத்திற்கு வேறு வழியில்லை. 'அஞ்ஞானம் தாமஸஹ பலம்' - எல்லா துர்குணங்களுக்கும் விவேஹமின்மையே காரணமாதலால் ரஜோ குணத்தின் பலனான துக்கம் இவ்வக்ஞானத்திலேயே மறைந்துள்ளது. எனவே இது மிகவும் பயங்கரமானது.

**வினா** : ஸாத்வீக கர்மத்தின் பலனென்ன?

**விடை** : தூய்மையான சுகம்

**வினா** : ரஜோகர்ம பலன் என்ன?

**விடை** : துக்கம்

**வினா** : தமோ கர்மபலன் என்ன?

**விடை** : அஞ்ஞானம்

**வினா** : எனவே துக்கம் தீர, சுகத்தை அடைவதற்கு வழி என்ன?

**விடை** : ரஜோ குண தமோ குணகாரியங்களை விடுத்து சாத்வீக காரியங்களைச் செய்ய வேண்டும்.

**முன்னுரை**

குணங்களினால் ஏற்படும் பலன்களை மேலும் கூறுகிறார்.

*ஸத்வாத் ஸஞ்ஜாயதே ஞானம் ரஜஸோ லோப ஏவச!*
*ப்ரமாதமோஹௌ தமஸோ பவதோ அக்ஞான மேவச!!* (17)

## சொற்பொருள்

சத்வாத் - சத்வ குணத்தினால், ஞானம் - ஞானம், ஸஞ்ஜாயதே - உதிக்கின்றது. ரஜஸஹ - ரஜோ குணத்தினால், லோபரவச - பேராசை (ஸஞ்ஜாயதே - பிறக்கின்றது) தமஸஹ தமோ குணத்தினால், ப்ரமாதமோஹௌ - அஜாக்கிரதை (மறதி), விபரீத ஞானம், (பிரணம்), பவதஹ - ஏற்படுகின்றது ச- மேலும், அக்ஞானம் ஏ - அஞ்ஞானமே , (தஸ்மாத் பவதி அதனின்றும் பிறக்கின்றது).

## கருத்துரை

சத்வ குணத்தினால் ஞானம், ரஜோ குணத்தினால் பேராசை, தமோ குணத்தினால் அஜாக்கிரதை (மறதி), பிரமை அஞ்ஞானம் இவை ஏற்படுகின்றன.

## விளக்கம்

தத்துவம் நன்கு விளங்குவதற்காக உபாத்தியாயர் மாணவருக்குப் போதிப்பதைப் போல பகவான் அர்ஜுனனுக்கு இதற்குமுன் சொல்லிய விஷயத்தையே மறுபடியும் மறுபடியும் சொல்கிறார். பேராசை, அஞ்ஞானம் முதலானவை துக்கத்தினைத் தருபவையாதலால் விரும்பத்தகாதவை. எனவே அவை எதனால் ஏற்படுகின்றனவோ அத்தகைய ரஜோகுணம், தமோ குணங்களை விரட்டி ஞானத்தை அளிக்கவல்ல சத்வ குணத்தினையே அறிஞன் எய்துதல் வேண்டும்.

**வினா :** சத்வ குணத்தினால் என்ன நேரிடும்?

**விடை :** ஞானம்?

**வினா :** ரஜோ குணத்தினால் என்ன ஏற்படும்?

**விடை :** பேராசை

**வினா :** தம குணத்தினால் என்ன பலன்?

**விடை:** அஜாக்கிரதை (மறதி) பிரமை, அஞ்ஞானம் இவை ஏற்படும்

### முன்னுரை

அக்குணங்களையுடையவன் மரணத்தின் இறுதியில் எவ்வுலகையடைவர் என்பதைக் கூறுகிறார்.

*ஊர்த்வம் கச்சந்தி ஸத்வஸ்தா மத்யே திஷ்டந்தி ராஜஸாஹ்!*
*ஜகன்யகுண வ்ருத்திஸ்தா அதோ கச்சந்தி தாமஸாஹ்!! (18)*

### சொற்பொருள்

ஸத்வஸ்தா - சத்வகுணத்திலுள்ளவர்கள், ஊர்த்தவம் - மேல் நோக்கி, கச்சந்தி - போகிறார்கள், ராஜஸாஹ் - ரஜோ குணத்திலுள்ள வர்கள், மத்யே - மத்தியில் (மனித உலகத்தில்) திஷ்டந்தி - நிற்கிறார் கள், (பிறக்கிறார்கள்). ஜகன்யகுண வ்ருத்திஸ்தா கடையான குணம் உடையோர், தாமஸாஹ் - தமோ குணத்திலிருப்பவர், அதஹ - கீழ்நோக்கி, கச்சந்தி - செல்கிறார்கள்.

### கருத்துரை

சத்வகுணமுடையோர் மேலுலகில் மேலான கதியையே அடைகின்றனர் என்று சொல்வதால் அக்குணத்தையே பெறுக என்றும், ரஜோகுண தமோ குணம்முறையே இடைப்பட்ட, கீழான உலகையே அளிக்கும் என்றும் சொல்வதால், அக்குணங்களை ஒதுக்குதல் வேண்டும் என்பது தெளிவாகிறது. இதனின்றும் மேலுலகமோ, கீழுலகமோ அவரவர் கையிலே அடங்கியுள்ளது என்பதும் தெரிகிறது. எனவே முயற்சியினால் சத்வகுணத்தினையே கொள்வதன் மூலம் மேல்கதியை யடைவதற்கு அனைவரும் பயிலுதல் வேண்டும்.

### சொற்பொருள்

**வினா :** சத்வ குணமுடையோர் எக்கதியையடைவர்?

**விடை :** மேலுலகையடைவர்

**வினா :** ரஜோ குணமுடையவர்?

**விடை :** மத்யமமான (இடைப்பட்ட) மனிதர் உலகை அடைவர்.

**வினா :** தமோ குணமுடையவர்?

விடை : அதோகதி (கீழ் உலகை) அடைவர்

## முன்னுரை

மோட்சத்தினை பெறுவதற்கான உபாயத்தைக் கூறுகிறார்.

*நான்யம் குணேப்யஹ கர்தாரம் யதா த்ரஷ்டானு பச்யதி!*
*குணேப்யஸ்ச பரம் வேத்தி மத்பவாம் ஸோ அதிகச்சதி!!* (.19)

## சொற்பொருள்

யதா - எப்பொழுதும் (மனிதன்). த்ருஷ்ட (பூத்வா) - விவேகமுடையவனாகி (தான் என கிரகித்து), குணேப்யஹ் (சத்வம்) முதலான குணங்களை விட, அன்ய வேறான கர்த்தாரம - கர்த்தாவை, ந அனு பச்யதி - பார்ப்பதில்லையோ, (ஆத்மானம் - தன்னை) குணோப் பஹ - ச குணங்களைவிட, பரம் - வேறானவனாக, (சாட்சியாக), வேத்தி - அறிகிறானோ, ஸஹ் - அவன், மத்பவாம் - என் சொரூ பத்தை, அதிகச்சதி - அடைகிறான்.

## கருத்துரை

எப்போது விவேகி (சத்வம் முதலான) குணங்களைவிட வேறான கர்த்தாவைக் காண்பதில்லையோ, குணங்களுக்கும், மேலாகப் பரம்பொருளைக் காண்கிறானோ, அப்போது அவன் பிரம்ம சொரூபத்தையடைகிறான்.

## விளக்கம்

இச்சுலோகமும் அடுத்து வரும் சுலோகம் இரண்டும் மிக முக்கியமானவை. விசாரணை செய்து வரும் சாதகர்கள் இவ்வெண்ணத்தை மறுபடியும் மறுபடியும் நினைவிற்குக் கொணர்தல் வேண்டும். ஏனெனில் சம்சார பந்தத்தினின்றும் விடுபடுவதற்கு பரமாத்மாவின் சொரூபத்தை அடைவதற்கான இராஜமார்க்கம் இங்குச் சொல்லப்பட்டிருக்கிறது. ஜீவன் புரியும் எல்லாவிதமான கர்மங்களுக்கும் கர்த்தாவானது முக்குணங்களே. அதாவது முக்குணங்களாகிய மனமே காரணம். அம் முக்குணங்களே மனதே தேகம், இந்திரியங்கள் இவற்றால் கர்மங்களைச் செய்விக்கிறது. பந்தப்படுவதும் மனமே, மோட்சத்தினை அடைவதும் அதுவே. கர்த்தா, போக்தா, செய்பவன், செய்விப்பவன் இவர்களைத் தவிர வேறொருவன் எவரும் இல்லை. ஆத்மா மாத்திரமே சாட்சியாயுள்ளது.

எனவே விவேகத்துடன் ஜீவன் தான் உண்மையில் குணங்களுக்கு அப்பாற்பட்டவன். குணங்களுக்கு தேக இந்திரியங்களுக்குச் சாட்சியான ஆத்மாவே தான் என்றும், ஆதலால் அவ்வக் கர்மங்களுக்குத் தான் கர்த்தாவல்ல என்பதையும், எவன் தெரிந்து கொள்கிறானோ அப்போதே அவன் காண்பவனாக மட்டுமே பரமாத்மாவின் வடிவினையே இறை சொரூபத்தையே அடைகிறான் என்று இங்குச் சொல்லப்பட்டது. எனவேதான் முன்பே அறிபவன் (த்ரஷ்ட) ஆதல் வேண்டும் என்பதற்கான காரணம் ஜீவனே! நீ காட்சியின் வடிவான முக்குணங்களினால் மனத்தினால், தேக இந்திரியங்களுடன் ஒன்றுதல் வேண்டும். அவற்றிற்குச் சாட்சியான காண்பவனாக மாறுவாயாக! என்று பகவான் கருணையுடன் போதிக்கிறார்.

இவ்வுலக நாடகத்தில் மனமே, முக்குணங்களே கர்த்தாவாகும். தான் நாடகத்தில், விளக்குபோல அனைத்திற்குள் சாட்சியாகவுள்ளான். குணங்களுக்கு அப்பாற்பட்டு இருக்கிறான். சினிமாவில் முன்புள்ள திரையைப் போன்று அனைத்திற்கும் ஆதரமாக, சுகதுக்கங்களுக்கப்பாற்பட்டு, ஒட்டாது தனியே ஒளிர்கிறான்.

இதுவே மாறாத உண்மை. உலகிலுள்ள எல்லாவிதமான துன்பங்களுக்கும் இக்குணங்களோடு ஐக்கியப்படுதல், அதாவது ஜீவன் குணங்களினால், மனத்தினால், சரீரத்தினால் ஒன்றி நான் செய்கிறேன். நான் பிறக்கிறேன். நான் இறக்கிறேன் முதலான கர்த்தருத்வம் தானே கர்த்தா என்ற எண்ணம் கொண்டுள்ளான். பந்தத்திற்குக் காரணம் இதுவே. அதனைவிடுத்த மறுகணமே ஜீவன் இறைவடிவை அடைகிறான் என்று ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மா கூறுகிறார்.

'மத்பவம் சோ அதிகச்சதி' - என்று சொல்வதால் எந்த ஜீவனானவன் கிரியைகள் அனைத்திற்கும் குணங்களே காரணமென்று, தான் உண்மையில் குணங்களினின்றும் மாறுபட்டவன் என்றும் அறிகிறானோ அவன் எந்த ஜாதியினைச் சேர்ந்தவனாயினும், ஆணாயினும், பெண் ஆயினும் இறைவடிவினை அடைவான் என்பது தெளிவாகிறது. எனவே ஜீவன் சிவனாவதற்கு, நரன் நாராயணன் ஆவதற்கு, ஜனங்கள் ஜனார்த்தனனாவதற்கு இது நல்ல வழி. மோட்சத்திற்கு அதுவே நல்ல பாதை. இனி ஜீவன் தான் அற்பமானவன் என்றும், பலமற்றவன் என்றும் எண்ணாது தான் உண்மையில் நிரஞ்சன் (ஈர்க்கப்படாதவன் என்றும்) மனசாட்சி, குணங்களுக்கப்பாற்றபட்டவன் இறைவடிவினன் என்றும் நிச்சயித்துக் கொண்டு தைரியத்

துடன் அத்தகைய விவேகத்தினைப் பெறுவதற்கு முயலுதல் வேண்டும்.

'அதிகச்சதி' - என்ற சொல்லினால் பிரம்ம ஐக்கியத்தினை அத்தகையோன் தவறாது பெறுவான் என்று பகவான் வலியுறுத்திச் சொன்னதாயினற்று. எனவே முமுட்சுக்கள் இறை ஐக்கியத்தில் நம்பிக்கை கொண்டு கோழைத்தனத்தை விட்டு, முக்குணங்களை அறுத்து எறிந்து குணங்களுக்கு அப்பாற்பட்ட இறைவடிவினனாக ஒளிர்தல் வேண்டும்.

'பச்யதி' என்னாது 'அனுபச்யதி' என்று சொல்வதால் 'தான் கர்த்தாவல்ல என்ற எண்ணத்தினைப் பலமுறை எண்ணிச் சிந்தித்து மனத்தைத் திடப்படுத்திக் கொள்ள வேண்டும் என்பது பொருள்.

இவ்வாக்கியத்தின் உண்மைப் பொருளை நன்கு புரிந்து கொள்ளுதல் வேண்டும். ஏனெனில் சிலர் விவேகமற்றவர்கள் 'இந்திரியங்கள் என்ன செய்தாலும், எதனை அனுபவித்தாலும் எனக்கு எவ்வித மான சம்பந்தமுமில்லை' என்ற இவ்வாக்கியத்தினைத் தவறாகப் புரிந்து கொண்டு இந்திரியங்களினால் செய்யக்கூடாதவற்றைச் செய்து துக்க வடிவமான சம்சாரமெனும் பள்ளத்தில் விழுந்து விடுகிறார்கள். அத்தகைய தவறான கருத்தை எவரும் நம்புதல் கூடாது. தமோகுணம், ரஜோ குணம் இவற்றைத் தான் அவற்றினும் வேறாகத் தன்னைக் கருதுபவன் மறுபடியும் எக்காரணத்தைக் கொண்டும் ஈனமான செயல்களைப் புரிய மாட்டான் என்று நன்குணர்தல் வேண்டும்.

**வினா :** தான் செய்யும் காரியங்கள் யாவற்றிற்கும் உண்மையில் கர்த்தாவானவன் யார்?

**விடை :** முக்குணங்கள்

**வினா :** மனிதன் உண்மையில் எத்தகையவன்?

**விடை :** கர்த்தாவல்லன், சர்வ சாட்சியானவன், குணங்களற்றவன்.

**வினா :** இவ்வாறு அறிவதால் ஏற்படும் பலன் என்ன?

**வினா :** எவனொருவன் தான் குணங்களினின்றும் வேறுபட்டவன், கர்த்தாவல்லன் என்று அறிகிறானோ, அக்கணமே அவன் இறைவடிவத்தை (மதாபவம்) அடைகிறான். முக்தியடைகிறான்.

**வினா :** இதனால் மோட்சத்திற்கு, இறை ஐக்கியத்திற்கு வழி என்ன?

**விடை :** முக்குணங்களே கர்த்தா, தான் கர்த்தா அல்லன் என்று கருதி ஜீவன் குணங்களுக்கு அப்பாற்பட்டவன் என்பதே மோட்சத்திற்கு வழி.

**முன்னுரை**

இவ்வாறாகக் குணங்களைத் தாண்டியவன் பிறப்பு இறப்பு முதலான துக்கங்களினின்றும் விடுதலை பெற்று மோட்சத்தினை அடைவான் என்று கூறுகிறார்.

*குணானேதான தீத்ய த்ரீன் தேஹீ தேஹஸமுத் பவான்!*
*ஜன்ம ம்ருத்யு ஜராதுக்கைர் விமுக்தோ அம்ருத மச்னுதே!!* (20)

**சொற்பொருள்**

தேஹி - ஜீவன், தேஹஸமுத்பவான் - தேக உற்பத்திக்குக் காரணமான, ஏதான் - இந்த, த்ரீன் குணான் - முக்குணங்களையும், ஏதான் - தாண்டி (போக்கிக் கொண்டால்), ஜன்ம, ம்ருத்யு ஜரா துக்கைஹ் - பிறப்பு இறப்பு மூப்பு துன்பம் என்ற இவற்றினின்றும், விமுக்தஹ் - விடுபட்டவனாய், அம்ருதம் - மோட்சத்தினை (ஆத்ம நிலையை) அச்னுதே அடைகிறான்.

**கருத்துரை**

ஜீவனானவன் தேக உற்பத்திக்குக் காரணமான இம்மூன்று குணங்களையும் தாண்டி, பிறப்பு, இறப்பு, மூப்பு, துக்கங்கள் இவற்றினின்றும் விடுபட்டு, மோட்சத்தினை அடைகிறான்.

**விளக்கம்**

'குணான்' என்று சொன்னதால் ரஜோ, தமோ குணங்களுடன் சத்வ குணத்தையும் தாண்டி குணங்களற்ற பரமாத்மாவினை அடைதல் வேண்டுமென்பது பொருள். முதன் முதலில் தமோ குணத்தை விட்டு சத்வ குணத்தினை நன்கு பயிற்சித்து வர வேண்டும். அதன் பின் நிச்சங்கல்ப ஆத்ம நிலையில் சத்வ குணம் அதுவாகவே விடுபடும்.

குணங்களினால் ஏற்படும் தீமை எதுவோ அவற்றை விலக்குவ தால் ஏற்படும் தன்மை எதுவோ அவை இச்சுலோத்தில் சொல்லப் பட்டது. தேஹ ஸமுத்பவான் தேகத்தினை உண்டாக்குவதே அவற் றால் ஏற்படும் தீமை. அதனால் ஜீவன் பிறப்பு, இறப்பு, மூப்பு முதலான சம்சார சக்கரத்தில் சிக்கித் தவிக்கிறான். ஒரு தேகம் போனாலும் வேறொரு தேகத்தினை எடுக்கிறான். இதுவரை எத்து ணையோ கோடிப் பிறவிகள், சரீரங்கள், முக்குணங்களின் வடிவான வித்தினின்றே மூலத்தினின்றே தோன்றின. அம்மூலம் அழிந்தா லொழிய இன்னும் எத்துணையோ பிறவிகள் கணக்கின்றித் தொட ரும்.

அப்படியாயின் பிறவியினால் என்ன நஷ்டம்? என்று கேட்க லாம்? அது என்னவென பகவானே இங்குக் குறிப்பிட்டுள்ளார். மூப்பு, வியாதி, இறப்பு, துக்கம் முதலான பலவிதமான அவஸ்தை கள், சரீரம் தோன்றுவதாலேயே ஜீவனுக்கு ஏற்படுகின்றன. எனவே சரீரமே எடுக்காது; அதாவது பிறவியின்றிச் செய்து கொள்வதே மிக வும் சிறந்தது. அத்தகைய பிறவியின்மையோ இம் முக்குணங்க ளைத் தாண்டினால் தான் கிடைக்கும் என்ன இங்கு மிகத் தெளிவாக எடுத்துக் காட்டப்பட்டுள்ளது. எனவே முமுட்சு படிப்படியே முக்கு ணங்களையும் தாண்டி மோட்சத்தினை அடைதல் வேண்டும். மரண மில்லாப் பெருவாழ்வு ஆனதால் மோட்சத்தினை 'அம்ருதம்' என்று பகவான் குறிக்கின்றார்.

'முத்தஹ்' எனாது 'விமுக்தஹ்' என்றதால் முக்குணங்களையும் தாண்டியவன் பிறப்பு இறப்பு துக்கத்தினிறும் முழுமையாக விடுப டுவான் என்பது பொருள்.

**வினா :** இந்த தேகம் எதனால் உண்டாகிறது?

**விடை :** முக்குணங்களால்

**வினா :** மரணமற்ற பெருவாழ்வான கைவல்யப் பதம் எவ்வாறு கிடைக்கும்?

**விடை :** இம் மூன்று குணங்களையும் தாண்டினால்.

**வினா :** தேகம் (பிறப்பு) எடுப்பதால் நஷ்டமென்ன?

**விடை :** மூப்பு, வியாதி, பிறப்பு, இறப்பு, துக்கம் முதலான குணங்க

ளிலேயே ஏற்படுவதால், அது மிகவும் தீமையை அளிப்பதாகவுள் ளது. எனவே தேகம் இல்லாத ஆத்ம நிலையையே, ஜீவன் அடைதல் வேண்டும்.

**வினா :** மோட்ச நிலை எத்தகையது?

**விடை :** பிறப்பு இறப்பில்லாத நிலை (அமிருத மயமானது)

**முன்னுரை**

முக்குணங்களையும் தாண்டியவன் மோட்ச பதவியை அடை வான் என்று கிருஷ்ண பகவான் சொன்ன உடனேயே, அவ்வாறு தாண்டியவன் எத்தகைய இலட்சணங்களைப் பொருந்தியவனாக இருப்பான் என்பதை அர்ஜுனன் பகவானிடம் கேட்கிறான்.

**அர்ஜுனா உவாச**

*கைர்லிங்கைஸ்த்ரீன் குணானேதாதீதோ பவதி ப்ரபோ!*
*கிமாசாரஹ கதம் சைதான்ஸ்த்ரீனன் குணானதி வர்த்தே!!* (21)

**சொற்பொருள்**

ப்ரபோ - பிரபுவே ஓ கிருஷ்ணா! ஏதான் - இந்த, த்ரீன்குணான் - முக்குணங்களையும், அதீதஹ - கடந்து நிற்பவன், கைர்லிங்கை - எந்த இலட்சணங்களும் (உபலக்ஷிஹ - கூடியிருப்பவனா), பவதி - ஆகிறான்? கிமாசாரஹ (பவதி) - எத்தகைய ஆசாரமுடையவனாக ஆகிறான்? ஏதாத்திரரீலின் குணான் - இம் மூன்று குணங்களை, கதம் ச - எவ்வாறு (எந்த உபயாத்தினானல்) அதி வர்த்தே - கடக்கிறான்?

**கருத்துரை**

அர்ஜுனன் கேட்டான் இறைவா! இந்த மூன்று குணங்களையும் கடந்து நிற்பவன் எந்த இலட்சணங்களைக் கொண்டிருப்பான்? எத்த கைய நடத்தையை உடையவனாய் இருப்பான். மேலும் அவன் இம்முக்குணங்களை எவ்வாறு கடக்கிறான்?

**விளக்கம்**

முக்குணங்களையும் கடந்தவன் பிறப்பு, மூப்பு, வியாதி இவற் றினின்றும் விடுபட்டு அமிருதத்தை (மோட்சத்தினை) அடைகி றான் என்ற பகவானின் வாக்கைக் கேட்டவுடன் அர்ஜுனனுக்கு

அக்குணங்களை எவ்வாறு கடத்தல் இயலும், அவன் எத்தகைய நடவடிக்கையுடன் இருப்பான், எந்த அடையாளத்துடன் இருப்பான் என்ற ஐயம் எழ உடனேயே பகவானைக் கேட்டான் 'கைர்லிங் கைஹ' எந்த இலட்சணத்தினால், எந்த அடையாளங்களால் குணாதீதனைக் கண்டு கொள்ள முடியும்? என்று அர்ஜுனன் கேட்பது மிகவும் ஆச்சரியப்படத்தக்க விஷயம். ஏனெனில் சிலர் தாம் கீழ்நிலையில் இருப்பினும், காட்சி முதலான வாசனைகள் இன்றும் அழியாத நிலையிலும், தாம் சித்த புருஷன் என்றும், குணங்களுக்கு அப்பாற்பட்டவர்களென்றும், ஜீவன் முக்தர்கள் என்றும் சொல்லிக் கொண்டு மக்களை ஏமாற்றித் திரிகின்றனர். குணாதீதனின் உண்மையான இலட்சணங்கள் சின்னங்களை அறிந்தால் அத்தகைய வீண் பெருமைக்கு இடமேயில்லை. மேலும் அந்த இலட்சணங்களை அறிந்தால், மனிதன் தானும் அந்நிலையையடைவதற்கு ஏதுவாகும். இவையனைத்தையும் கருதியே அர்ஜுனன் சமயோசிதமாக இவ்வினாவை எழுப்புகிறான். கீதையின் இரண்டாவது அத்தியாயத்தில் 'ஸ்திரபிரஜ் ஞ்ய காபாஷா' என்ற இம்மாதிரியான வினாவை அர்ஜுனன் எழுப்பியது இச்சந்தர்ப்பத்தில் நினைவிற்குக் கொணர்தல் அவசியமாகிறது. இந்த ஸ்திதபிரக்ஞனின் இலட்சணமோ, குணாதீதனின் இலட்சணமோ, விருப்பு வெறுப்பற்ற பக்தனின் இலட்சணமோ, அமானித்தவம் முதலான ஞான குணங்களையுடையவனின் இலட்சணமோ ஒரே மாதிரியான அளவையை உடையது (barometer) பரோ மிட்டர் (உஷ்ணமானி) யினால் சீதோஷ்ண நிலை அளக்கப்படுகிறதோ அவ்வாறே மனிதனின் ஆன்மீக நிலையை இந்த இலட்சணங்களால் அளந்து பார்க்க வேண்டியுள்ளது. இதனால் மக்களில் எவர் ஆன்மீக சக்தியுடையவர். வேஷதாரிகள் எவர் எனத் தெரிந்துவிடும். வேட வேதாந்திகளை அறிவதற்கு, ஆன்மீக நிலையில் சோம்பேறிகளால் கற்பிக்கப்பட்ட வீண் விளையாட்டுத்தனமான சூழ்நிலையைப் பார்த்து அறிவதற்கு இத்தகைய வினாக்கள் எத்துணையோ அவசியமாகின்றன.

'கிமா சாரஹ' குணாதீதனின் நடவடிக்கை எத்தகையது என அர்ஜுனன் அறிய விரும்புகிறான். 'சிமாசீதவ்ரஜேத சிம்' என்ற இத்தகைய நடத்தையைக் குறித்து இதற்கு முன் கேட்டான். ஆன்மீக உலகில் நடவடிக்கைக்கு ஆகாரத்திற்கு முக்கியத்துவம் அளிக்கப்படுகின்றது. அடையக்கூடிய பொருளைக் குறித்து இலட்சியத்தை குறித்து அறிந்து கொள்வது அவசியமாயினும், அந்த இலட்சிய

சாதனையால் அடைய முடியும் என்பதை அறிதல் இன்னும் முக்கியம். ஏனெனில் சாதனையைச் சரிவரச் செய்தால் அடையக்கூடிய இலக்கு தானாகவே வந்து சேரும். எனவேதான் அர்ஜுனனன் குணாதீதனின் இலட்சணத்தை, நடத்தையை அறிய வேண்டுகிறான். அர்ஜுனனின் கேள்வி, அதற்காக பகவானின் விடை சாதக உலகிற்கு மிகவும் முக்கியமானவை. எனவே இந்த முக்கியமான கூட்டத்தினை சாதகன் நன்கு மனத்தில் இறுத்தி இலக்கினை அடைதல் வேண்டும்.

**வினா :** *அர்ஜுனன் பகவானிடமிருந்து எந்தெந்த விஷயங்களை அறிய விரும்பினான்?*

**விடை :** *1. குணாதீதனின் இலட்சணங்கள் யாவை? 2. அவனது நடவடிக்கை எத்தகையது - ஆகியவை.*

**முன்னுரை**

*இனிக் குணங்களைக் கடந்தவனின் இலட்சணத்தினைப் பகவான் விபரமாகக் கூறத் தொடங்குகிறார்.*

**ஸ்ரீ பகவானுவாச**

*ப்ரகாசம் ச ப்ரவ்ருத்திம் ச மோஹமேவ ச பாண்டவ!*
*நத்வேஷ்டி ஸம்ப்ரவ்ருத்தானி ந நிவ்ருத்தானி காங்க்ஷதி!! (22)*

*உதாஸீன வதாஸீனோ குணைர்யோ ந விசால்யதே*
*குணா வர்தந்த இத்யேவ யோ அவதிஷ்டதி நேங்கதே!! (23)*

*ஸமதுக்கஸுக: ஸ்வஸ்தஹ ஸமலோஷ்டாச்ம காஞ்சனஹ!*
*துல்யப்ரியா ப்ரியோ தீரஸ்துல்ய நிந்தாத்ம ஸம்ஸ்துதிஹ! (24)*

*மானாபமானா யோஸ்து ல்யஸ்துல்யோ மித்ராரி பக்ஷயோஹ!*
*ஸர்வாரம்ப பரித்யாகீ குணாதீத ஹ ஸ உச்யதே!! (25)*

**ஸ்ரீ பகவான் சொன்னது**

**சொற்பொருள்**

*பாண்டவ அர்ஜுனா! யஹ் எவன், ஸம் ப்ரவ்ருத்தாணி - நேர்ந்தவிடத்து (வாய்த்தவிடத்து) ப்ரகாசம் ச - சத்வகுணத்தின் தொடர்பான ஒளியினை (சுகத்தினை), ப்ரவ்ருத்திம் ச - ரஜோ குணத்தின் சம்பந்த*

மான செயல்களை, மோஹம் வெச - தமோ குணத்தினால் ஏற்படும் மோகத்தினை (உறக்கம் முதலானவை) நத்வேஷ்டி - வெறுப்ப தில்லை. நிவிருத்தானி அக்குணங்களால் ஆன காரியங்கள் இவ்வி டத்து , ந காங்ஹதி - வேட்கையுறுவதில்லை, உதாஸீன வத - நடுவுநிலையானதாக, ஆஸீனஹ - இருந்து கொண்டு, குணைஹ் - குணங்களினால் (குணங்களின் காரியமான சுகங்களினால்), த விசால்யதே அசைகப்படுவதில்லை. குணாங் - குணங்கள், வர்தந்தே - தொழில் புரிபவையென்று, இதி ஏவ - என்று, யஹ் - எவன், அவதிஷ்டதி - தெரிந்து கொண்டிருக்கிறானோ, ந இங்கதே (எந்த நிலையிலும்) அசைகிறதில்லையோ, ஸமதுக்கஸுஹ - துக்கத்தை யும், சுகத்தையும் சமமாகக் கருதுபவன், ஸ்வஸ்தஹ் - ஆத்மாவி லேயே நிலைத்திருப்பவன், ஸமலோஷ்ட மகாஞ்சனஹ் - மண், கல், பொன் இவைகளைச் சமமாகக் கருதுபவன் துல்ய ப்ரிய அப்ரிய ஹ - இனியதையும் இன்னாததையும், நிகராகக் கருதுபவன், (அல்லது ஆத்மா, அநாத்மா விவேகமுடையவன்), துல்ய நிந்தாத்மாஸம் ஸ்துதி - புகழ்ச்சி இகழ்ச்சியினால் மன விகாரமடையாதவன், மான அவமான யோஹ - மானத்திலும் அவமானத்திலும், துல்யஹ் - சமபுத்தியுடையவனும், மித்ராரிபஹயோ - எதிரி, நண்பன் இருவரி டத்திலும், காம்யகர்மங்களில் தானே கர்த்தா வென்ற எண்ணத்தில் தியானம் செய்தவனும் ஆன ஸஹ் - அவன் குணாதீகஹ - குணங்க ளைக் கடந்தவன் என) உச்யதே - சொல்லப்டுகிறான்.

## கருத்துரை

அர்ஜுனா எவன் தனக்கு சத்துவத்தின் செயலான ஒளி, ரஜஸின் தொடர்பான செயல்கள் தமவின் செயலான - மயக்கம் - இவை வாய்த்தவிடத்து வெறுப்பும், ஒழிந்தவிடத்து வேட்கையும் அடைவ தில்லையோ, எவன் வெறும் சாட்சியாய் இருந்துகொண்டு குணங்க ளால் அசைக்கப்படுவதில்லையோ குணங்களே தொழில் புரிகின்ற வென அறிந்து ஆத்மாவிலேயே நிலையாக அசையாது இருக்கின் றானோ, எவன் மான அவமானத்தை, நட்பு, பகை இவற்றில் ஒரே மனநிலையுடையவனோ, தனக்கெனத் தொழில் செய்யாது காமிய கர்ம பலனைத் தியாகம் செய்கிறானோ அவன் குணாதீதன் எனப்படு கிறான்.

## விளக்கம்

இங்குக் கூறப்பட்டுள்ள குணாதீதனின் இலட்சணங்களைக்

கொண்டு மனிதன் முக்குணங்களைக் கடந்தவனா இல்லையா என்பதை அறியலாம். குணாதீதன் சமநிலையில் நின்று எக்காரணத்தாலும், சத்வகுண சம்பந்தமான ஒளி (சுகத்தினை)யோ, அல்லது ரஜோ குண சம்பந்தமான தொழில்களோ, தமோ குண சம்பந்தமான (நித்திரை முதலானவை) நேர்ந்தபோது அவற்றின் மீது வெறுப்போ அவை இல்லாத விருப்போ கொள்ளமாட்டான். குணாதீனனின் சமநிலையை, பொறுமையைத் தெரிவிப்பதற்காக இங்கு இவ்விஷயம் போதிக்கப்பட்டதேயன்றி அம்மோகம் முதலான குணங்கள் பின்பற்றக்கூடியவை என்பதற்காகவல்ல. மேலும் இங்கு மோகம் என்றால் அஞ்ஞானமென்ற பொருள் அல்ல. ஏனெனில் குணாதீதனுக்கு அஞ்ஞானம் எப்போதோ விலகியிருக்கும். இங்கு பகவான் சொன்ன குணாதீதனின் இலட்சணங்களில் 'சலனமற்றதன்மை' - 'சமநிலை' இரண்டும் முதன்மையாகப் புலப்படுகின்றன.

1. 'சலனமற்ற தன்மை' - ஏதேனும் சிறிய நிகழ்ச்சி நேரிடினும் அஞ்ஞானி பயப்படுகிறான். தன் சமநிலையினின்றும் விலகிவிடுகிறான். ஆயின் குணாதீதன் மேருவைப் போன்று நிமிர்ந்து, எந்நிலையிலும் சலனமற்றிருப்பான். (ந விசால்யதே, நிங்கதே) மூச்சுக்காற்று அல்லது சிறிய அலைகள் பெரிய மலையை அணுக முடியாததைப் போல, மேகத்திற்கு மேல் உள்ள சூரியனை மேகத்தினின்றும் தோன்றும் இடி, மின்னல், மழை இவையனைத்தும் பாதிக்காததைப் போல, முக்குணங்களைக் கடந்து மனத்திற்குத் தொடர்பானவை. குணங்களோடு தொடர்புடையவை, சரீரத்தோடு தொடர்புடையவை. 'நான்கு குணங்களைவிட வேறானவன்', மனத்திற்கு அப்பாற்பட்டவன் என்றெண்ணி மிக்க தைரியத்துடன் விளங்குவான். குணாதீதின் அடையாளம் இதுவே.

2. சமத்துவம் - மான அவமானங்களில் புகழ்ச்சி, இகழ்ச்சி, சுகம், துக்கம், விருப்பம், விருப்பமிலாதது, பகை, நட்பு முதலானவற்றில் குணாதீதன் சமபுத்தியுடன் இருப்பான். குணாதீதன் ஆன சுக முனிவர் ஜனகரின் அரசவைக்குச் சென்றபோது அவரைச் சோதனை செய்வதற்காக ஜனகனால் அளிக்கப்பட்ட இன்ப துன்பங்களை அவர் எவ்வாறு சமத்துவத்தைக் காட்டினார் என்பதை இந்த சந்தர்ப்பத்தில் நினைவிற்குக் கொணர்தல் வேண்டும். அத்தகைய மகான்கள் எப்போதும் ஆத்ம நிலையிலேயே (சதிவவஸ்தவிலேயே) நிலைத்திருப்பர். எனவே மாயையான உலகிலுள்ள இத்தகைய இருமைகள் அவர்களை எதுவும் செய்யாது. மேலும் புகழ்ச்சி, இகழ்ச்சி, இன்ப.

துன்பம் முதலானவை மனத்தைப் பொறுத்தே யாதலால் மனசாட்சியா எப்போதும் நிலைத்திருக்கும் குணாதீதர்களை, ஞானிகளை அவை அசைக்க இயலாது. அப்படியாயின் ஒருவருக்கு ஏற்படும் இன்ப துன்பங்கள் வேறொருவனை எங்ஙனம் பாதிக்க இயலாதோ, அவ்வாறே உபாதியை தன்னைவிட வேறாக்கிக் கொண்ட ஞானியை, குணாதீதனை அவ்விருமைகள் பாதிப்பதில்லை.

'ஸர்வாரம்ப பரித்தியாகீ - இச்சொல்லிற்கு எல்லாக் காரியங்களிலும் தானே கர்த்தா என்ற எண்ணத்தை விட்டவன் என்று பொருள் சொல்வதே பொருத்தமானது. அல்லது காம்ய கர்மாக்கள் அனைத்தையும் விட்டவன் எனச் சொல்லலாம். அல்லது ஏனைய காரியங்கள் அனைத்தையும் ஒதுக்கி எப்போதும் பிரம்ம நிட்டையில் இருப்பவன் எனலாம்.

இத்தகையோன் எவனோ அவன் குணாதீதன் என்று சொல்லப்படுகிறான் - என்பதால் அதாவது யச்சப்தம் பிரயோகிக்கப்பட்டிருப்பதால் எவராயினும் சரியே அந்நிலையை அடைதல் கூடும் என்பதும், அத்தகைய நற்குணங்களைப் பெறுபவனே குணங்களுக்கப் பாற்பட்டவன் என்பதும் ஏனையவர் அல்லர் என்பதும் தெளிவு. எனவே அனைவரும் அத்தகைய மேன்மையான நிலையை அடைதல் வேண்டும்.

வினா : குணாதீதனின் இலட்சணங்கள் யாவை?

விடை : எவன் தனக்கு நேரிட்ட சத்வகுணத் தொடர்பான ஒளி (சுகத்தினையும், தொழில்களையும் தமோ குணத்துடனான மோகத்தினாலேயே வெறுப்பதோ விரும்புவதோ செய்யாது சமபுத்தியுடன் அத்தொழில்களால் அசைவுறாத ஆன்மாவிலேயே நிலைபெற்று, மண், கல், பொன் முதலானவற்றைச் சமமாக நோக்குதல், இன்ப துன்பங்களில் சம மனநிலை கொண்டிருந்தால், எல்லாக் காரியங்களையும் கர்த்தாவென்ற எண்ணம் இல்லாது செய்தல் ஆகிய இலட்சணங்கள் பொருந்தியவன் குணாதீதன் எனப்படுவான்.

**முன்னுரை**

சலனமற்ற பக்தியுடன் தன்னைச் சேவிப்பவன் முக்குணங்களைக் கடந்து பிரம்ம சாட்சாத்காரத்தினை அடைவான் என்கிறார்.

*மாம் ச யோ அவ்யபிசாரேண பக்தியோகேன் ஸேவதே!*
*ஸ குணான் ஸமதீத்யைதான் ப்ரஹ்மபூயாய கல்பதே!! (26)*

**சொற்பொருள்**

*யஹ் - எவன், மாம்ச - என்னையே, அவ்யபிசாரண - சலனமற்ற, சிதைவுபடாத, பக்தி யோகன - பக்தி யோகத்தினால், ஸேவதே - சேவிக்கின்றானோ, ஸஹ் - அவன், ஏதான் - இந்தக் குணான் - குணங்களை, சமதீத்ய கடந்து, ப்ரஹம் பூயாய - பிரம்மமாக மாறுவதற்கு, கல்பதே - தகுதியுடையவனாகிறான்.*

**கருத்துரை**

*எவர் என்னை மாறாத பக்தியோகத்தினால் சேவிக்கிறார்களோ, அவர் இக்குணங்களனைத்தினையும் கடந்து பிரம்மமாகவே மாறுவதற்கு (ஜீவன் முக்தாவதற்கு) தகுதியுடைவராகிறார்.*

**விளக்கம்**

*முக்குணங்களுக்கு அப்பால் இறைவன் உள்ளான். முக்குணங்களைக் கடந்தால் இறைவனைக் காணமுடியும். அதற்கு ஞானவிசாரனை, மனக்கட்டுப்பாடு பொறுமை, அவசியம். ஆயின் பக்தியொன்றின் உதவியால் இத்தகைய ஞானநிலை எளிதாகக் கிட்டும். எனவேதான் கீதாச்சார்யன் ஒவ்வொரு அத்தியாயத்திலும், ஒவ்வொரு யோகத்திலும் இப்பக்தி யோகத்தைப் பற்றிச் சொல்கிறார். இப்பதினான்காம் அத்தியாயம் விரிவான ஞான உபதேசத்தைச் செய்துள்ள போதிலும் இறுதியில் பக்தியோகத்தின் அவசியத்தை நிரூபித்துள்ளார். ஆயின் சாதாரண பக்தி போதாது என்பதும், மாறாக சலனமற்ற பக்தி 'அவ்ய விசாரி ணீபக்தி' இடைவிடாத பக்தி வேண்டுமென்றும் போதிக்கிறார். அதாவது வேறு விஷயங்கள் எதிலும் ஈடுபடாத பக்தி தேவை என்பது பொருள். பக்தி மார்க்கம் அனைவர்க்கும் எளிதான வழியாதலால் அத்தகைய மேன்மையான பக்தியினால் ஒவ்வொருவரும் இறைவனின் அருளைப் பெற்று அதனால் பிரம்ம ஞானத்தையடைந்து, அதனால் பிரம்மானுபூதியைப் பெறுவதற்கு அனுகூலமாய் இருக்கும் என்ற விஷயமே இங்குச் சொல்லப்பட்டது.*

*பிரம்மதத்துவத்தை எவர் அடைய இயலுமோ என்பதை இச்சுலோகம் நன்கு நிரூபிக்கின்றது. சலனமற்ற பக்தியுடையவனே மோட்சத்தை அடையும் தகுதியுடையவன் எனத் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது.*

'அதீதய' என்று 'ஸமதீத்ய' என்றதால் நிர்மலமான பக்தியுடையவன் முக்குணங்களை எளிதாகக் கடக்க இயலும் என்பது தெரிகிறது.

'கதம் சைதான்ஸ்த்ரீன் குணானதிவர்ததே' - இக்குணங்கள் எவ்வாறு கடக்கப்படுகின்றன? என்ற அர்ஜுனனின் வினாவிற்கு இச்சுலோகம் விடையளிக்கிறது. சலனமற்ற பக்தியினால்தான் முக்குணங்களையும் கடந்த மனிதன் பிரம்ம ஐக்கியத்தை அடைய முடியும் என்று இங்குச் சொல்லப்பட்டது. எனவே எளிதான பக்தியோகத்தின் உதவியால் சாதகன் ஆத்ம ஞானமடைந்து முக்குணங்களைக் கடந்து முக்தியை விரைவில் அடைய முடியும்.

முன்னுரை

நான் சாட்சாத் பிரம்மமேயென்று ஸ்ரீ கிருஷ்ணர் தெரிவிக்கின்றார்.

*ப்ரஹ்மணோ ஹி ப்ரதிஷ்டா ஹமம் ருத்வாய்ய யஸ்யச!*
*சாச்வதஸ்ய சதர்மஸ்ய ஸுகஸ்யை காந்தி கஸ்ய ச!!* (27)

சொற்பொருள்

ஹி - ஏனெனில், அஹம் - நான், அம்ருதஸ்ய - அழியாத, அவ்யயஸ்யச - விகாரமற்றதை, சாச்வதஸ்ய தர்மஸ்யச - நிலையான தர்மத்துக்கும், ஏகாந்தி கஸ்யஸுக்ஸ்யச - ஒப்பற்ற சுகத்துக்கும், ப்ரதிஷ்டா - இருப்பிடம்.

கருத்துரை

ஏனெனில், நான் அழிவற்ற விகாரமற்ற நிலையான தர்மத்தின் வடிவான நிரதிசய (சஞ்சலமற்ற) ஆனந்த வடிவமான பிரம்மத்தின் இருப்பிடம் (அதாவது பிரம்மத்தின் வடிவாய் இருக்கிறேன்)

விளக்கம்

சலனமற்ற பக்தியுடன் என்னை வணங்குவோன் முக்குணங்களைக் கடந்து பிரம்மத்தை அடைவான் என்று முன் சுலோகத்தில் தெரிவித்து பகவான் நான் உண்மையில் யார், எனது வடிவு யாது என்பதை இச்சுலோகத்தில் விவரிக்கின்றார். ஸ்ரீ கிருஷ்ணன் சாமான்ய மனிதன் அல்லர். சாச்சாத் இறைவனே. பரபிரம்மமே அவன். யசோதா தனயன் மாத்திரமல்லன்; அழிவற்ற நிலையான தர்மத்தின் வடிவாய், நிரதிசய ஆனந்தவடிவினனான பிரம்மமே என

பகவான் கூறுகிறார். இதனால் அவனை இடைவிடாத சலனமற்ற பக்தியுடன் தியானிப்பவர் (பிரமகீடக நியாயத்தை) அனுசரித்து அவனிடத்தையே லயித்து பிரம்மவடிவினனாகவே ஆகிவிடுவான். தியானிப்பவன் தேய வஸ்துவாகவே மாறிவிடுவான். பரபிரம்ம னின் சொரூபம் எத்தகையது என்பது இங்கு விரிவாகச் சொல்லப்பட் டுள்ளது. அது (1) அம்ருதம், அவ்யயம் - அதாவது மரணமில்லாதது, விகாரமில்லாதது இதனின்றும் பிரம்மத்தின் 'சித்' வடிவம் புலனா கின்றது. (2) நிலையான தர்மசொரூபம் - இதனின்றும் பிரம்மத்தின் 'சத்' சொரூபம் விளக்கப்பட்டது. இவ்வாறான 'சத்' 'சித்' ஆனந்த மான பரபிரம்மமே தான் என்று ஸ்ரீ கிருஷ்ண பகவான் தெரிவிக்கி றார். வழிபடுவதற்கு ஏற்ற வகையில் ஆரம்பத்தில் யசோதா தனய னாகவோ, கௌசல்யா தனயனாகவோ வழிபட்டு தியானித்து வந்தா லும் உண்மையில் அவர்களிருவரும் நிர்குண, நிராகார, சச்சிதானந்த பரபிரம்ம வடிவினனாகவே என்பது தெரிந்து கொள்ள வேண்டும். இச்சுலோகத்தின் மூலம் துவைத, வசிஷ்டாத்வைத, அத்வைத, ஆகிய மூன்றின் இலட்சியமும் உண்மையில் ஒன்றே என்பது தெளி வாகிறது. ஏனெனில் த்வைத வசிஷ்டாத்வைதிகள் எந்த ரூபத்தை வழிபடுகிறார்களோ அந்த வடிவம் உண்மையில் சச்சிதானந்தமாக வயிருக்கின்றது என்பது தெளிவானது. எனவே இனி இவ்வழிக ளைச் சேர்ந்தவர்கள் ஒருவருக்கொருவர் விமர்சித்துக் கொள்ளாமல் அனைவரும் தியானித்து ஒரே பரபிரம்மமேயென்று நிச்சயித்து அவ ரவர் பண்பிற்கேற்ப உபாசனை வழிகளை, ஏற்படுத்திக் கொண்டு இறுதியில் அனைவரும் அப்பர பிரம்மத்தையே சேரக்கூடும்.

**வினா :** ஸ்ரீ கிருஷ்ணர் உண்மையில் எத்தகையவர்?

**விடை :** பரபிரம்ம வடிவினன்.

**வினா :** பரபிரம்மம் எத்தகையது?

**விடை :** 1. அழிவற்றது, விகாரமற்றது (சத்)
2. நிலையான தர்ம வடிவையுடையது (சித்)
3. நிரதிசய ஆனந்த வடிவானது (ஆனந்தம்)

ஓம்

இது ஸ்ரீமத் பகவத் கீதையெனும் உபநிஷத், பிரம்மவித்தை, யோக சாஸ்திரம் இவற்றுடன் கூடிய ஸ்ரீ கிருஷ்ணார்ஜுன சம்வாதகமாக வந்துள்ள ஸ்ரீ பகவத் கீதையின் குணத்ரய விபாகயோகமென்னும் பதினான்காம் அத்தியாயம்.

ஓம் தத் ஸத்

ஓம்

# ஸ்ரீ பகவத் கீதை

## பதினைந்தாம் அத்தியாயம்

## புருஷோத்தம பிராப்தி யோகம்

### இவ்வத்தியாயத்தின் பெயர் விளக்கம்

*புருஷோத்தம பிராப்தி யோகம் - புருஷோத்தமன் என்றால் பரம்பொருள். 'உபாதி' அதாவது உடல் முதலான 'க்ஷரபுருஷன்' - அழியக்கூடும் புருஷனைக் காட்டிலும், ஜீவன் என்னும் அழிவற்ற புருஷனைக் காட்டிலும் வேறுபட்டு (இங்கு அக்ஷரபுருஷன் என ஜீவனைக் கூறுவது அக்ஷரபரபிரம்மமான பரமாத்மாவையல்ல. பௌதிக சரீரம் அழிவுற்றாலும் அழியாத ஜீவனது ஆத்மா என்றே பொருள்படும்) அவ்விரண்டினும் உயர்ந்தவனாய் விளங்குவதால் பரம்பொருளுக்குப் புருஷோத்தமன் என்ற பெயர் உண்டாயிற்று. அத்தகைய புருஷோத்தமனின் வடிவம் எத்தகையது? அவன் எப்படிப்பட்டவன்? அவனை அடையும் வழி யாது? அவனை அடைவதால் விளையும் நன்மை என்ன? ஆகிய இவற்றை விளக்கும் அத்தியாயம் ஆதலால் இதற்கு 'புருஷோத்தம பிராப்தியோகம்' என்ற சிறப்புப் பெயர் ஏற்பட்டது.*

### இந்த அத்தியாயத்தில் சொல்லப்பட்டுள்ள முக்கிய விஷயங்கள்

1. *சம்சார மரத்தின் வர்ணனை - இறைவனை அடையும் உபாயம் - (1 முதல் - 6 வரை)*

2. *ஜீவனைப் பற்றிய சிந்தனை (7 முதல் 11 வரை)*

3. *எங்கும் இறைவன் நிறைந்திருப்பதை உணர்த்துதல். அவனது மகிமையை வர்ணித்தல். (12 முதல் 15 வரை)*

4. *நிலையில்லா புருஷனைப் பற்றியும் அழிவற்ற புருஷனைப் பற்றியும் புருஷோத்தமனைப் பற்றியும் விளக்குதல் (16 முதல் 20 வரை)*

## முன் அத்தியாயத்திற்கும் இவ்வத்தியாயத்திற்குமுள்ள தொடர்பு

*முந்தைய அத்தியாயத்தில் முக்குணங்களைப் பற்றியும், அவற்றைக் கடப்பதற்கான வழிகளைக் குறித்தும் தெரிவித்து, மாறுபடாத பக்தி அக்காரியங்களை நன்கு கைகூடச் செய்யுமென்றும், அப்பக்தியின் வாயிலாக, மனிதன் முக்குணங்களையும் கடந்து பரம்பொருளை நேரில் கண்டு, அவனைச் சேர்வான் என்றும், 26-ஆவது சுலோகத்தில் விவரமாக எடுத்துரைத்துள்ளார். அப்படிப்பட்ட மாறாத, ஈடற்ற பக்தியை ஊக்குவிக்கும் பொருட்டும், அத்தகைய பக்தி ஜீவர்களிடத்துத் தோன்றுவதற்கு உதவுமாறும், புருஷோத்தமனான பரமாத்மாவின் வடிவினையும், அவனை அடையக் கூடிய வழியையும், அடைவதால் ஏற்படும் நன்மையையும் தெரிவிக்கும் இவ்வத்தியாயத்தினைத் தொடங்க வேண்டியதாயிற்று. மேலும் இறைபக்தி பெருக வேண்டி அதற்கு விஷயங்களின் மீதான விரக்தி தோன்றுதல் அவசியமாகையாலும் அத்தகைய வைராக்கியத்தினைப் போதிப்பதற்காக முதன்முதலில் காட்சி வடிவான சம்சாரத்தின் மீது வெறுப்பு தோன்றுதல் அவசியமாதலாலும், அதனை ஒரு அரச மரமாக உருவகப்படுத்தி அதனைச் சேர்க்கையின்மை என்ற வாள் கொண்டு அறுத்து விடுதல் வேண்டும் என்று அறிவுறுத்துகிறார். அத்தகைய சம்சார மரத்தின் வருணனையுடன் இவ்வத்தியாயம் தொடங்குகிறது.*

### ஸ்ரீ பகவானுவாச

*ஊர்த்வமூலமதஹ சாகமச்வத்தம் ப்ராஹு௨ ரவ்யயம்!*
*சந்தாம்ஸி யஸ்ய பர்ணானி யஸ்தம் வேதஸ வேதவித்!!* (1)

*ஸ்ரீ பகவான் சொன்னது.*

### சொற்பொருள்

*யஸ்ய* - எதற்கு, *சந்தாம்ஸி* - வேதங்கள், *பர்ணானி* - இலைக

ளாக இருக்கின்றனவோ, (அப்படிப்பட்ட), அஸ்வத்தம் - சம்சாரமெ னும் அரசமரத்தை, ஊர்த்தவ மூலம் - மேலே வேர்களுள்ளது, அதவி தாசாகம் - கீழே கிளைகளுள்ளது, அவ்யயம் - (ஞானம் ஏற்படும் வரையில்) அழிவற்றதுமாக, ப்ராஹு - (பெரியோர்கள்) சொல்வர். (அல்லது வேதங்கள் சொல்கின்றன). தத் - அதனை, யஹ் - அவன், வேத வித் - வேதப்பொருளை யறிந்தவனாகிறான்.

**கருத்துரை**

எதற்கு வேதங்கள் இலைகளாகவுள்ள சம்சாரமெனும் அரசமரம் மேலே வேர்களுள்ளதும், கீழே கிளைகள் உள்ளதும், (ஞானம் ஏற்படும் வரை) அழிவற்றதுமாகப் (பெரியோர்கள்) கூறுவர். அதனை எவன் அறிகின்றானோ, அவன் வேதத்தினை அறிபவன் ஆகிறான்.

**விளக்கம்**

சம்சாரம் ஒரு மரமாக உருவகப்படுத்தப்பட்டுள்ளது. ஆயின் அது எல்லா மரத்தையும் போன்று வேர்கள் கீழாகவும், கிளைகள் மேலாகவும் இருப்பதல்ல. அதற்கு நேர்மாறாகக் கிளைகள் கீழாக வும், வேர்கள் மேலாகவும் இருப்பது. இந்த அசாதாரண நிலைக்குக் கீழ்க்கண்ட காரணங்களைச் சொல்லலாம்.

(1) இறைவனிடமிருந்தே கண்ணுக்குப் புலப்படாத அகங்கா ரம் முதலானவைகளும், இவ்வுலகமனைத்தும் தோன்றியிருப்பதி னால், மேலாக விளங்குகின்ற அந்தப் பரமனே, கீழுள்ள இவ்வுல கிற்கும் காரணமென்று நிரூபிப்பதற்காக மேலே மூலமான வேர்க ளும், கீழே கிளைகளும் இருப்பதாக இந்தப் பெரிய மரம் உவமையா கக் கூறப்பட்டிருக்கலாம்.

(2) அல்லது, மாயையின் செயல் எவ்வாறு தலைகீழாக இருக் குமோ அவ்வாறே இந்த சம்சார மரம் விளங்குகிறது. நல்லதைத் தீயதாகவும், தீயதை நல்லதாகவும், இருப்பதை இல்லாததாகவும், இல்லாததை இருப்பதாகவும் காட்டுவதாக இருப்பதால் நீரில் பிரதி பலிக்கும் மரத்தைப் போல் இந்தச் சம்சார மரமானது தலைகீழாக வர்ணிக்கப்பட்டது.

(3) மரம் சாலையோரம் இருக்கும் போது அதனால் வழிப் போக்கர்களுக்கு எந்தத் தொல்லையும் நேராது. ஆனால் காற்றில் சாய்ந்து தலைகீழாக விழுந்து விட்டால் கிளைகள் கீழும் வேர்கள்

மேலாகவும் இருக்கும். அப்போது அந்த மரத்தினால் வழிப் போக்கர்களுக்கு இடையூறு நேரும். அவ்வாறே இந்தச் சம்சார மரம் பிரம்ம வழியில் போக நினைப்போருக்கு மிகப் பெரிய இடைஞ்சல் உண்டாக்குவதால் அது தலைகீழாக வர்ணிக்கப்பட்டிருக்கலாம்.

'அஸ்வத்தம்' - ச்வஹ என்றால் நாளை, 'நஸ்தக' என்றால் - இல்லாதது - அஸ்வத்தஹ - அரச மரம் அதாவது நாளை இருக்குமோ இராதோ என்ற ஐயத்துடன் கூடியதே இந்த சம்சார மரம். அதாவது அழியக்கூடியது என்பது பொருள். கண நேரத்தில் அழியக்கூடிய உடல்கள், பொருள்கள் இவற்றை உடையதாய்; அழிவது என்றும் அருவருப்பான இயல்புடையதாதலால் 'அஸ்வத்தம்' என்ற காரணப் பெயர் இதற்குப் பொருத்தமுடையதாகவே அமைந்திருக்கிறது. ஆனால் 'அவ்யயம்' - அழிவில்லாதது என்று இங்குக் கூறப்பட்டதன் பொருளாவது - இடைவிடாது ஓடும் தன்மையதாய் நிலையானதாகப் புலப்படுவதேயன்றி நிலையானதல்ல. மேலும் ஆத்ம ஞானம் அடையும் வரை இந்தப் பிறப்பு இறப்பு ஆகியவை ஜீவனை ஓட வைத்துக் கொண்டேயிருப்பதால், ஞானம் அடையும் வரை நிலைத்திருப்பதாகையால், அஞ்ஞானிகளுக்கு இறுதி வரை பிறப்பு, இறப்பு, மூப்பு முதலான துக்கங்களை உண்டாக்கிக் கொண்டே இருப்பதாலும் இந்தச் சம்சார மரமானது நிலையானது என்று சொல்லப்பட்டதேயன்றி அப்பழுக்கற்ற நிலைத்த தன்மை அதற்கு இல்லை. அவ்வாறு இல்லையாயின், அடுத்த சுலோகத்திலேயே 'அசங்கத்வம்' சேர்க்கையின்மையென்னும் ஆயுதத்தால் அந்த மரத்தை அறுத்துவிட வேண்டும் என்று பகவான் ஏன் சொல்ல வேண்டும்?

'யஸ்தம் வேத ச வேதவித்' - சம்சாரத்தின் இரகசியத்தை அறிந்தால் வேதங்களின் சாரத்தையுணர்ந்ததாகவே ஆகும். பிரதிபிம்பமான இவ்வுலகிற்கு மூலாதாரம் பிம்பமான பரமாத்மாவேயாகும் என்று வேதங்கள் கோஷிக்கின்றன. எனவே பரமாத்மாவினிடமிருந்தே இவ்வுலகம் தோன்றியது என்றறிபவன், அத்தகைய பிரம்ம வித்தினின்றே உலக மரம் தோன்றியது என்றும் அறிபவன் வேதத்தின் பொருளை நன்கறிந்தவனே யாவான்.

**வினா :** சம்சார மரம் எத்தகையது என்று வர்ணிக்கவும்?

**விடை :** அது (1) வேர்கள் மேலாகவும், கிளைகள் கீழாகவும் கொண்டிருப்பது (2) (ஞானம் பெறும் வரை) அழிவில்லாதது (3) வேதங்களையே இலைகளாகக் கொண்டிருப்பது.

**வினா :** வேதப்பொருளையுணர்ந்தவன் யார்?

**விடை :** மேற்கூறிய சம்சார மரத்தைப் பற்றி அறிபவன் - அதாவது பிரம்மத்திலிருந்தே உலகம் தோன்றியது என்றறிபவன்; இவ்வுலகிற் கான ஆதாரம் பரம்பொருளே என்று தெளிவாக உணர்ந்தவனே வேதப் பொருளை அறிந்தவன்.

### முன்னுரை

சம்சார மரத்தையே மேலும் வர்ணிக்கிறார்.

*அதஸ்சோர்த்வம் ப்ரஸ்ருதாஸ்தஸ்ய சாகா குணப்ரவ்ருத்தா விஷய ப்ரவாலாஹ்!*
*அதஸ்ச மூலான்யனுஸந்த தானி கர்மானுபந்தீனி மனுஷ்ய லோகே!!* (2)

### சொற்பொருள்

*தஸ்ய* - சம்சார மரத்தினுடைய, *சாகா* - கிளைகள், *குணப்ரவகித் தாஹ்* - (தத்வ, ரஜோ, தமோ) குணங்களினால் வளர்க்கப்பட்டவை யும், *விஷப்ரவாலாஹ்* - (சப்தாதி) விஷயங்களெனும் தளிர்கள் உடையவையாய், *அதஹ* - கீழ்நோக்கியும், *ஊர்த்வம்ச* - மேல்நோக் கியும் (பிரம்ம லோகம் வரை) *பரஸ்ருதாஹ்* - வியாபித்திருப்பவை, *மனுஷ்ய லோகே* - மானிடவுலகில், *கர்மானுபந்தீனி* - கர்மத் தொடர்பை ஏற்படுத்துபவை, *மூலானி* - அதன் வேர்கள், *அதஹச* - கீழும் (மேலாகவும் கூட), *அனுசந்ததானி* - நன்கு வேரூன்றிக் கொண்டிருக்கின்றன.

### கருத்துரை

சம்சார மரத்தின் கிளைகள் (சத்வ, ரஜோ, தமோ குணம் ஆகிய வற்றால் செழிப்படைந்தும் சத்தாதி விஷயங்கள் எனும் தளிர்கள் கொண்டிருக்கும் கீழே (தாவரப் பொருள் முதல்) மேலே (பிரம்ம லோகம் வரை) வியாபித்திருக்கின்றன. மானிடவுலகில் வினைத் தொடர்பை (கர்ம வாசனைகளை) ஏற்படுத்துபவை ஆகிய அதனு டைய வேர்கள் மேலும் கீழுமாக நன்கு பரவி உறுதியாக வேரூன்றி இருக்கின்றன.

### விளக்கம்

இந்த சம்சார மரமானது சிறியதல்ல. மிகவும் பரந்தது. தொன் மையான காலத்திலிருந்தே கோடிக்கணக்கான பிறவிகளாக நன்கு வேரூன்றி, பல கிளைகளாக விரிந்துள்ளது. கர்ம வாசனைகளால்

இதன் வேர்கள் சத்வ, ரஜோ, தமோ குணங்களினால் இதன் கிளைகள் செழிப்படைந்துள்ளன. சப்தாதி விஷயங்களைத் துய்த்து இதன் தளிர்கள் பெருகியுள்ளன. இதனால் முக்குணங்களை ஒழிப்பதால் இதன் கிளைகள், விஷயங்களின் மீதான விரக்தியால் இதன் தளிர்கள், வாசனைகளை அற்றுப் போகச் செய்வதால் இதன் வேர்கள் என இச்சம்சார மரம் முழுமையாக அழிந்துபடக்கூடும் என்பது தெளிவாகிறது. மரத்திற்கு முக்கிய ஆதாரம் வேர்களே ஆவதைப் போல இச்சம்சார மரத்திற்கு கர்ம வாசனைகளே மூலம் எனவே அறிவாளியானவன் வைராக்கியம், விசாரணை இவற்றால் இவ்வாசனைகளை அற்றுப்போகச் செய்து சம்சார பந்தத்தினின்றும் முக்தியடைதல் வேண்டும். அவ்வாறின்றி, விருப்பு, வெறுப்புகளால் அவ்வாசனைகளை இன்னும் பலப்படுத்திக் கொண்டால் சம்சார துக்கம் எந்நாளும் ஜீவனை விடுவதில்லை.

**வினா :** சம்சார மரத்தினை இன்னும் சற்று வர்ணித்துக் கூறுவாயாக?

**விடை :** (1) அதன் கிளைகள் (சத்வ, ரஜோ, தமோ) குணங்களால் வளர்பவை, சப்தாதி விஷயங்களால் மேலும் கீழுமா எங்கும் பரவியுள்ள தளிர்களைக் கொண்டவை (2) மனிதவுலகில் கர்மத் தொடர்பினை ஏற்படுத்தக் கூடியவையான அவற்றின் வேர்கள் கூட கீழும் மேலுமாக எங்கும் பரவியுள்ளவை.

**முன்னுரை**

அத்தகைய சம்சார மரத்தினை 'பற்றின்மை' என்ற வாளால் வெட்டி மோட்சத்தினை நாடுதல் வேண்டுமென்கிறார்.

*ந ரூபமஸ்யேஹ ததோபலப்யதே நாந்தோ ந சாதிர்ந சஸம்ப்ரதிஷ்டா!*
*அச்வத்த மேனம் ஸுவிரூடமூலம - ஸங்க சஸ்த்ரேண த்ருடேன சித்வா!!* (3)

*ததஹ பதம் தத்பரிமார்கிதவ்யம் யஸ்மின் கதாந நிவர்தந்தி பூயஹ!*
*தமேவ சாத்யம் புருஷம் ப்ரபத்யே யதஹ ப்ரவ்ருத்திஹ ப்ரஸ்ருதாபுராணீ!!* (4)

**சொற்பொருள்**

அஸ்ய - இச்சம்சார மரத்தின், ரூபம் - வடிவமானது, ததா - இவ்வாறென்று (இப்போது வர்ணிக்கப்பட்டவிதமாக), இஹ - இவ்வுலகில் (சம்சாரத்தின் மீது வேட்கையுடையவர்களால்) நஉபலப்யதே - அறியக்கூடியதாக இல்லை. அன்தஹ - (அதன்) முடிவு, ந - காணக் கூடுவதாக இல்லை. ஆதிச ந - முதலும் காணவியலாததாக

உள்ளது. ஸம்ப்ரதிஷ்டாக ந - இருப்பும் (இடையும்) புலப்படுவ தில்லை. ஸீவிரூடமூலம் - நன்கு வலுத்து வேரூன்றிய, ஏனம் - இந்த, அஸ்வத்தம் - சம்சாரமெனும் அரச மரத்தினை, த்ருடேன - பலமான, அஸங்கசஸ்த்ரேண - பற்றின்மை என்னும் வாளால் (உலக விஷயங்களின் மீதான வேட்கை, பற்றினை விடுத்தல்), சித்வா - வெட்டி, ததஹ - அதன் பின், யஸ்மின் - எங்கு, கதாஹ் - நுழைந் தால், பூயஹ - திரும்பவும், நிவர்தந்தி - வருவதில்லையோ (சம்சாரத் திற்கு) யதஹ - எவரிடமிருந்து, புராணி - மிகவும் அநாதியாக, ப்ரவிருத்திஹி - இந்த சம்சார மரமென்னும் தொழில், ப்ரஸ்ருதா - பெருக்கெடுத்ததோ, தம்ஏவ ச ஆத்யம் புருஷம் - அந்த ஆதிபுருஷ னான பரமாத்மாவையே, ப்ரபத்யே - சரணடைகிறேன். (இதி - என்னும் எண்ணம் கொண்டு), தத்பதம் - அந்த பிரம்ம பதமொன்றே பரிமார்கிதவ்யம் - தேடத்தக்கது.

## கருத்துரை

சம்சார மரத்தின் வடிவம் இன்னதென (இங்கு வர்ணிக்கப்பட்ட விதமாக), இவ்வுலகில் (சம்சாரத்தில் வேட்கையுடையவர்களால்) அறியப்படாமல் உள்ளது. அதன் முதல், முடிவு, இருப்பு எதுவும் காணவியலாமல் இருக்கின்றது. திடமாக வேரூன்றியுள்ள இச்சம்சா ரமெனும் ஆலமரத்தினைப் பற்றின்மை என்னும் பலமான வாளி னால் வெட்டி அதன் பின் எந்நிலையில் நுழைந்தால் மறுபடியும் பிறப்பெடுப்பதில்லையோ, எவரினின்றும் அநாதியான இந்த சம் சார மரத்தின் இயல்பு பரவியதோ அத்தகைய மூலாதார புருஷனா கிய பரமாத்மாவையே சரண் அடைகிறேன் - என்னும் இத்தகைய பக்தி பாவத்துடன் அந்த பரமாத்வினைத் தேடுதல் வேண்டும்.

## விளக்கம்

முன் சுலோகத்தில் வர்ணிக்கப்பட்டது போல (வேர்கள் மேலும் கிளைகள் கீழுமாக) இந்த சம்சார மரம் ஏன் தென்படுவ தில்லை? சம்சாரத்தின் மீது பற்றுடைய அஞ்ஞானிகளுக்கு அத்த கைய உருவம் தெரிவதில்லை அதன் தொடக்கம், இடை முடிவுக ளும் தெரியாது. ஏனெனில் சம்சாரத்தில் முழுகியிருப்பதால் உண் மையை உணர வியலாமல் இருக்கின்றனர் (இருளில் இருப்பவர்க் குப் பொருள்கள் புலப்படாது போவதைப் போல). ஒளியில் பொருட்கள் நன்கு புலப்படுவதைப் போல வைராக்கியம், வீடுபேற் றின் மேல் ஆர்வம், ஆத்மஞானம் இவையுடையார்க்கு அதன் வடி வம் புலப்படக்கூடும்.

இந்த சம்சார விருக்ஷமானது முன் காலத்திலிருந்தே இருந்து வந்து மிகவும் விரிவாகப் பல கிளைகளுடன் வியாபித்து நன்கு வேரூன்றி இருக்கின்றது. எனவே தான் அதனை வேர்களைப் பற்றி வர்ணிக்கும் போது பகவான் 'ரூடமூலம்' என்றோ 'விரூடமூலம்' என்றோ கூறாமல் 'சுவிரூடமூலம்' என்கிறார். அதன் வேர்கள் நன்கு ஆழமாக ஊன்றியிருக்கின்றன என்பது பொருள். ஆயின் அதனால் வருந்த வேண்டிய அவசியமில்லை. மரம் எத்துணைப் பெரிதாயி னும், பலமான ஆயுதத்தால், தரைமட்டமாகச் செய்து விட முடியும். அவ்வாறே இந்த சம்சார மரத்தை வெட்டிச் சாய்ப்பதற்கு பகவான் ஏற்ற ஆயுதத்தினைக் கோடி காட்டியுள்ளார். அதுவே 'சேர்க்கையின் மை'. உலக விஷயங்களின் மீதான பற்று, வேட்கையுடன் இருப் பதே சேர்க்கை. அவையின்றியிருப்பதே 'சேர்க்கையின்மை' பற் றின்மை - வைராக்கியம் என்பது பொருள். ஆயின் முதன்முதலில் வைராக்கிய எண்ணத்துடன் இந்தப் பெரிய சம்சார மரத்தினை வெட்டி வீழ்த்துவது இயலாத காரியம். தீவிரமான விரக்தி, முழுவது மான தனிமை மிகவும் அவசியம். எனவே தான் 'த்ருடேன' என்ற சொல்லைப் பகவான் கையாண்டிருக்கிறார்.

ஒரு பெரிய தொழிற்சாலையில் மூல இயந்திரத்தின் பட்டை யைச் சுழலவிட்டால் பிற இயந்திரங்கள் அனைத்தும் இணைப்பின் மையால் நின்று விடும். மகான்கள் இவ்வுலகச் செயல்களில் ஈடுபட் டிருந்தாலும் இத்தகைய தனிமை எண்ணம் கொண்டவராய் சம்சார துன்பங்கள் எதுவுமின்றி இருப்பர். ஆயினும் பற்றின்மை, சேர்க்கை யின்மை புறத்தே மட்டுமின்றி அகத்திலும் இருத்தல் வேண்டும். அப்போதே அது முழுமை பெற்று விளங்கும்.

இத்துடன் வேலை முடிந்து விட்டதா? இல்லை. சம்சார மரத் தினை வெட்டி வீழ்த்திய பிறகு, அதாவது காட்சியைத் துறந்த பிறகு - நோக்கினைப் பின்பற்றுதல் என்னும் முக்கியமான செயல் ஒன்று உள்ளது. கடன் தீர வேண்டும். அதன் பிறகு சிறிதளவேனும் சொந்த மாகப் பணம் சேர்த்தல் வேண்டும். அப்போதே மனிதன் சுகமாக இருக்க முடியும். காட்சியைத் துறத்தல் என்பது கடன் தீர்ந்ததற்குச் சமானம். நோக்குடன் இருத்தல் என்பது சிறிதளவு பொருள் சேர்த்த லுக்கு ஒப்பாகும். காட்சியின்பால் அருவறுப்பு, ஆன்ம நிலையைய டைதல் ஆகிய இவ்விரண்டும் இருப்பின் பகவான் சம்சார மரத் தினை வெட்டி வீழ்த்துதலைத் தெரிவித்தபின் பிறகு 'பரிமார்கிதவ் யம்' - பரம்பொருளைத் தேட வேண்டும் எனப் போதிப்பதற்கு ஏதுவாயிற்று.

உலகியலில் பல பதவிகள் இருப்பினும், அனைத்திலும் சிறந்தது பரமாத்மா பதவிதான். அதனால் அதனையே வேண்டும் என்று இங்கு வலியுறுத்தப்படுகின்றது. ஏனெனில் அவ்வுயர்ந்த பதவியையடைந்தவன் மீண்டும் துயரம் நிறைந்த இந்த சம்சாரத்திற்கு இறங்கி வரமாட்டான். (யஸ்மின் கதான நிவர்தந்தி பூயவா). பிரம்மாண்டத்தில் எவ்வுலகிற்குச் சென்றாலும் திரும்பி வர வேண்டியதுதான். மீண்டும் பிறக்க வேண்டியதுதான். ஆனால் பகவானை அடைந்தவர்கள், ஆன்மப் பதவியில் அமர்ந்தவர்கள் மீண்டும் பிறக்கமாட்டார்கள். அது நிரந்தரமான பதவி. துயரம் முழுவதும் அதனால் அழியும். எனவே எல்லாப் பதவிகளையும் விட அது மேலானது. எனவே அறிஞர்கள் அனைவரும் அதனையே கடைபிடித்துக் கடைத்தேறுவாராக!

ஆயின், 'பரம புருஷனையே சரணடைகிறேன்' (தமேவ புருஷம் ப்ரபத்யே) என்ற பக்தி எண்ணத்துடனும், அகந்தை முழுவதுமாக இன்றி அந்த ஆன்ம நிலையை எட்ட வேண்டியிருக்கிறது. தூய பக்தியுடையவர்க்கு அத்தகைய ஆன்ம அறிவு எளிதில் கிட்டும்.

**வினா :** சம்சார மரம் எவ்வாறுள்ளது?

**விடை :** நன்கு வேரூன்றி இருக்கிறது.

**வினா :** அதனை வெட்டி வீழ்த்துதல் எங்ஙனம்?

**விடை :** சேர்க்கையின்மை (உலகியல் பொருட்களின் மீது பற்று, ஆசை இல்லாமல் இருத்தல்) என்ற பலமான கத்தியினால் அதனை வெட்டி வீழ்த்தலாம்.

**வினா :** அங்ஙனம் வெட்டிய பின் என்ன செய்ய வேண்டும்?

**விடை :** ஆன்ம நிலையையடைய முயற்சித்தல் வேண்டும்.

**வினா :** அந்த பரமாத்மா எப்படிப்பட்டவன்?

**விடை :** (1) அவனை அடைந்தோர் மீண்டும் பிறப்பதில்லை.
(2) அவனிடமிருந்தே இவ்வுலகனைத்தும் தோன்றியது.
(3) அவனே முழு முதல் கடவுள்.

## முன்னுரை

எத்தகையவர் மோட்சத்தை அடைகின்றனர் என்று கூறப்படுகிறது.

*நிர்மான மோஹா ஜிதஸங்க தோஷா அத்யாத்ம நித்யா விநிவ்ருத்த காமா!*
*த்வந்த்வைர் விமுக்தாஹ் ஸுகதுக்க ஸம்ஞைர் கச்சந்த்ய மூடா ஹ் பதமவ் யயம்தத்!! (5)*

## சொற்பொருள்

நிர்மான மோஹா - அகங்காரத்தையும், அபிவேகத்தையும் நீக்கினவர்களாய், ஜித சங்க தோஷா - பற்று என்னும் குற்றத்தை வென்றவர்களாய், அத்யாத்ம நித்யா - இடைவிடாத ஆன்ம நிட்டையுடையவர்களாய், விநிவ்ருத்த காமாஹ் - வாசனைகள் அற்றவராய், ஸுக துக்கஸம்ரைஹ - இன்ப துன்பங்கள் என்ற, த்வந்த்வைஹ - இருமைகளினின்றும், விமுக்தாஹ் - விலகியமுக்தர்களாய், சுமூடாஹ் - மயக்கத்தை ஒழித்தவர்களாய், தத் அவ்யயம் பதம் - அந்த அழிவில்லாத நிலையை, நச்சந்தி - அடைகிறார்கள்.

## கருத்துரை

ஆணவமும், அவிவேகமுமற்றவர், பற்று என்னும் குற்றத்தை வென்றவர், பரமாத்ம ஞான நிட்டையர், ஆசையற்றவர், இன்ப துன்பமெனும் இருமைகளைக் கடந்தவர், மயக்க மொழிந்தவர் ஆகிய இவர்கள் அவ்வழியா நிலையை எய்துகின்றனர்.

## விளக்கம்

மறு பிறப்பற்ற நிலையான பிரம்மானந்தத்தை (மோட்சத்தை) எவர் அடையக்கூடும் என்பது இச்சுலோகத்தில் நன்கு நிரூபிக்கப் பட்டுள்ளது. ஆறு நற்குணங்கள் உடையவர். அத்தகைய உன்னதமான நிலையை அடையக்கூடும். அவையெவையெனின் :

(1) அகந்தை அவிவேகம் இன்மை.

(2) பற்று எனும் குற்றத்தினை வெல்லுதல் ('சங்கம்' பற்று என்றால் காட்சிப் பொருள்களின் மீது ஆசை மோகம். 'அஸங்கம்' பற்றின்மை என்றால் அவை இல்லாதிருந்தால் அவற்றைத் தீண்டாதிருத்தல்).

(3) எப்போதும் ஆன்ம நிட்டையில் இருத்தல். இங்கு நிரந்தரம்

- (நித்யா) என்ற சொல் ஏதோவொரு சமயத்தில் மட்டும் தெய்வ சிந்தனை செய்தால் மட்டும் போதாது, சிறிது சிறிதாகப் பயிற்சி செய்து இடைவிடாத நிட்டையைக் கைக்கொள்ளுதல் வேண்டும். ஏனெனில் தெய்வீக எண்ணம் எனும் ஒளியில்லையேல் மாயையெனும் பேரிருள் உடனடியாக வந்து கவ்விக் கொள்ளும். இடைவிடாத ஆன்மீக நிட்டையினால் மாயைக்குச் சிறிதேனும் இடம் கொடாமல் இருத்தல் வேண்டும். இரவும் பகலும் இடைவிடாது ஆன்ம நிட்டையில் இருப்போர் உத்தமர். சிலர் சிறிதளவு மட்டும் தெய்வச்சிந்தனை உடையவராய்ப் பிறகு உலகியல் செயல்களில் ஈடுபடுவர். இவர்கள் இடைப்பட்டவர்கள். இவர்கள் சிறிதளவு முயற்சி செய்தால் முதல் வருமான உத்தமர் ஆகிவிடுவர். எப்போதும் காட்சிப் பொருள்களின் மோகத்தினால் இறைவனைச் சற்றும் நினையாதவர் கீழ்த்தரமானவர். இந்நிலை இகழ்ச்சிக்குரியது. எனவே அறிவுடையோர் இதனைக் கைவிடுதல் வேண்டும்.

(4) இனி மோக்ஷத்தை அடைவதற்குத் தேவையான நான்காவது நற்குணம், ஆசைகளை முற்றுமாக, வாசனைகள் அற்று ஒழித்தல் (வினிங்குத்த காமாஹ்) 'நிவ்ருத்த' எனாது 'வானிவிருத்த' என்று சொல்வதால் ஆசைக்ள் முற்றுமாக சிறிதும் மீதமில்லாமல் அறவே ஒழித்தல் வேண்டுமென்பது பொருள். 'அத்யாத்ம நித்யாவினிவ்ருத்த காமா' என்ற இவ்வரிகளை முமுக்ஷுக்கள் எப்போதும் சிந்தித்த வண்ணம் இருத்தல் வேண்டும். ஏனெனில் ஆன்மீக சாதனை அனைத்தும் இவ்விரண்டு வரிகளில் அடங்கியுள்ளது. முதலாவது ததவக்ஞானம் (அத்யாத்ம நித்யா) இரண்டாவது வாசனைகளை அழித்தல் (வினிவ்ருத்த காமா) முன்னது நோக்கத்தின் இயல்பு பின்னது காட்சி ஒழிப்பு. இவை இரண்டையும் ஒரே சமயத்தில் பயின்று வருதல் வேண்டும் என்று சாத்திரங்கள் பறைசாற்றுகின்றன.

(5) இனி ஐந்தாவது சாதனை. இன்பதுன்பம் முதலான இருமைகளை ஒழித்தல்.

(6) ஆறாவது மடமை இன்மை. அதாவது அக்ஞானத்தை ஒழித்தல். அக்ஞானம் அவித்யை இரண்டையும் நெருங்கவிடாமல் ஞானத்திலேயே நிலைத்து இருத்தல். இங்ஙனம் பகவான் தெரிவித்த இவ்வாறு சாதனைகளையும் நன்கு பின்பற்றுவோர் அடையும் பலன் என்ன? குறைவில்லாத மோக்ஷமே. (கச்சந்தி பதமவ்யயம்) உலகியல் பதவிகள் அனைத்தும் பறிபோகக்கூடிய இயல்புடையவையே, அழியக்கூடியவையே, நசிப்பவையே. பரம்பொருள்

நிலை ஒன்றுதான் நிலையானது குறைவில்லாதது எனவே அறிஞர் கள் அதனையே நாடுதல் வேண்டும்.

**வினா :** பரம்பொருள் நிலை எத்தகையது?

**விடை :** பறிபோகாதது, அழிவற்றது.

**வினா :** அதனை எவர் அடையக்கூடும்?

**விடை :** (1) அகந்தை விவேகமின்மை இல்லாதவர்கள் (2) பற்றற்ற வர் (3) இடைவிடாத ஆன்ம நிட்டையில் இருப்போர் (4) ஆசை களை முழுமையாகத் துறந்தவர் (5) இன்பதுன்பம் முதலான இரு மைகளினின்றும் விலகியவர்கள் (6) மடமையற்றவர்கள் ஆகியோர் மோக்ஷத்தை அடைவர்.

## முன்னுரை

மோக்ஷத்தை அடைந்தவர்கள் மீண்டும் பிறவார் என்பது அடுத் துக் கூறப்படுகிறது.

*நதத் பாஸயதே ஸூர்யோ நசசாங்கோ ந பாவகஹ!*
*யத்கத்வா ந நிவர்தந்தே தத்தாம பரமம் மம!!* (6)

## சொற்பொருள்

தத் - அதை (பரமாத்ம நிலையை), ஸூர்யேஹ - சூரியன், ந பாஸயதே - ஒளிறச் செய்வதில்லை, சசாங்கஹ - சந்திரனும், ந (பாஸயதே) ஒளிறச் செய்வதில்லை, பாவக - அக்னியும், ந (பாஸ யதே) - ஒளிறச் செய்வதில்லை, யத் - எதனை, கத்வா - அடைந்து, ந நிவர் தந்தே - மறுபடியும் திரும்பி வருவதில்லையோ, (மறுபடி யும் பிறப்பதில்லையோ) தத் - அது, மம - என்னுடைய, பரமம் - மிகச் சிறந்து, தாம் - நிலையாகிறது.

## கருத்துரை

எதனை (பரமாத்ம நிலையை) சூரியனோ, சந்திரனோ, அக் னியோ ஒளிரச் செய்வதில்லையோ, எதனை அடைந்தால் (மக்கள்) மறுபடியும் (இந்த சம்சாரத்திற்குத்) திரும்புவதில்லையோ அதுவே என் மிகச் சிறந்த நிலையான பரமபதம் (ஆகி இருக்கின்றது).

விளக்கம்

சூரியனும், சந்திரனும், அக்னியும் காணும் பொருள்கள் யாவற்றையும் பிரகாசிக்கச் செய்கின்றன. கண்கள் சூரிய சந்திரன்களை ஒளிரச் செய்கின்றன. புத்தியானது அக்கண்களை பிரகாசிக்கச் செய்கின்றது. ஆத்மா அப்புத்தியினை ஒளிரச் செய்கின்றது. எனவே சூரிய, சந்திரர்கள் ஆன்மாவை எங்ஙனம் பிரகாசிக்கச் செய்யும். முண்டகோவநிஷத்தில் இவ்விஷயம் நன்கு நிரூபிக்கப்பட்டுள்ளது. (நதத்ர சூர்யோ பாதி...)

'யத்கத்வா நிவர்தந்தே' - ஆன்ம நிலையை எட்டியவர்கள் மறுபடியும் பிறவியெனும் சங்கிலியிலும், சம்சார துக்கமெனும் குழியிலும் பிணிப்புறுவதில்லை. பிரம்மாண்டத்தில் எவ்வுலகிற்குச் சென்றாலும் மறுபடியும் பிறக்க வேண்டியதே. துக்கத்தினை அறவே அழிக்கும் சக்தி அவற்றிற்கு இல்லை. ஆயின் பரமாத்மா நிலையொன்றிற்கே அத்தகைய சக்தியுண்டு. அதனை அடைந்தவர் திரும்பார். மறுபடியும் துக்கமயமான இச்சம்சாரத்தில் பிறக்க மாட்டார். மீண்டும் சுழற்சியற்ற நிலையான முக்தி நிலையே அது. இவ்விஷயத்தையே முன் சுலோகத்தில் 'யஸ்மின்கதா ந நிவர்தந்தி பூயஹ' என்று தெரிவித்துள்ளார்.

தனது நிலையை வர்ணிக்கையில் பகவான் 'ப்ரமம்' என்று குறிப்பிட்டிருப்பதால் எல்லா நிலைகளையும் விட ஆன்ம நிலையே பிரம்ம வடிவே சிறந்தது, மேன்மையானது என்பது தெரிகிறது. பகவானின் பார்வையில் எது மேன்மையானதோ அதனையே அறிஞர்கள் கடைபிடித்தல் வேண்டும். அவாவுதல் வேண்டும். உலகியல் பொருட்களையல்ல.

முன்னுரை

ஜீவன் உண்மையில் தன்னில் ஒரு பகுதியே என்பதை இனிக் கூறுகிறார்.

*மமைவாம்சோ ஜீவலோகே ஜீவபூதஹ ஸநாதனஹ!*
*மனஹ் ஷஷ்டானீந்த்ரியாணி ப்ரக்ருதிஸ்தாணி கர்ஷதி!!* (7)

### சொற்பொருள்

*மமஏவ - எனது அம்சமே, சநாதனஹ - மிகவும் புராதனமான (நிலையான) அம்சம், ஜீவலோகே - ஜீவர்களின் உலகத்தில், ஜீவ பூதஹ - ஜீவனாகத் தோன்றி, ப்ரக்ருதிஸ்தானி - இயற்கையிலேயே இருக்கின்ற, மனஹ்ஷஷ்டானி. மனதை ஆறாவதாகயுடைய, (கண், மூக்கு, செவி, நா, தோல், மனம்), இந்திரியானி புலன்களை, கர்ஷதி - கவர்கிறது.*

### கருத்துரை

*எக்காலத்தும் எனது அம்சமே ஜீவனாகத் தோன்றி ஜீவலோகத்தில் இயற்கையிலே இருக்கின்ற மனம் உட்பட்ட ஆறு இந்திரியங்களையும் கவர்கின்றது.*

### விளக்கம்

***'மனமவாம்சோ'*** *ஜீவனும் பரமாத்மாவும் உண்மையில் வேறுபட்டவர்கள் இல்லை. இறைவனின் ஒரு பகுதியே ஜீவன். ஜீவனும் சாட்சாத் இறைவனே. இருவரும் தொன்மையானவர்களே, நித்தயர்களே. ஆயினும் அஞ்ஞானத்தின் விளைவாக, உடலின் தொடர்பினால், ஜீவன் அவ்வுடலை, அதற்கான குணங்களைத் தன்னுள் இருப்பதாகக் கருதி அந்த உடலைச் சார்ந்த புலன்களுடன் சேர்ந்தவனாகத் தன்னைக் கருதிக் கொள்கிறான். பானையில் உள்ள வெளி கடாகாசம் எனப்படும். பரந்து எங்கும் நிறைந்துள்ள வெளி மஹாகாசம் எனப்படுகிறது. கடாகாசம் எப்போதும் மஹாகாசத்துள்ளேயே இருக்கிறது. மஹாகாசத்தின் தன்மைகள் கடாகாசத்தில் உள்ளன. அவ்வாறே பரமாத்மாவின் தொன்மை ஜீவாத்மாவிற்கும் உண்டு. எப்போது ஜீவன் தன் உடலை விட்டு தனது சுய வடிவத்தைப் பற்றிச் சிந்திக்கிறதோ அப்போது அவன் சாகாத நிலை அடைந்து பரமாத்மாவுடன் இணைகிறான்.*

***'மமைவாம்சோ'*** *என்று ஜீவனைப் பற்றி பகவானின் அம்சம் எனச் சொல்வதால், ஜீவர்கள் அனைவரும் சமம் என்பதனையும் அனைவரும் இறை அம்சத்தின் வடிவங்களே என்பதையும் எண்ணிப் பார்த்து, அறிவுடையோர் அனைவரிடத்தும் அன்பு, தயை, கருணை, நடுநிலை ஆகியவற்றைப் பேணிக் காப்பர். பகவானின் இந்த வாக்கியத்தினால் ஜீவர்களுக்கு மிக்க தைரியமும், உற்சாகமும்*

ஏற்படும். ஏனெனில் இதுவரை தான் அறியாமையால் கட்டுண்ட வன், அற்பன், துயருறுபவன் என்றும் எண்ணி வந்தவன். இனி ஆறுதலுற்று உற்சாகமடைவான். தான் அற்பன் அல்லன், ஜீவனும் அல்லன், அழிபவன் அல்லன். தொன்மையான பரமாத்மாவே. மாயையினால் இயற்கைக்குட்பட்டு, கடவுளை மறந்து, புலன்களு டன் ஒன்றிப் பொழுதை வீணாகக் கழித்து, அவற்றைக் கவர்கிறான். (கர்ஷதி) அஹோ! இதற்குமுன் (அஞ்ஞான காலத்தில்) மனிதன் எவ்வளவு பெரிய தவற்றைச் செய்து கொண்டிருந்தான். பகவானின் இந்த வாக்கினால் ஞானம் எய்தின் இனித் தவறு செய்ய வாய்ப் பில்லை. மீண்டும் ஆனந்தமயமான ஆன்ம வடிவைச் சிந்தனை செய்து அதனுடன் ஐக்கியமடைவான். அதுதான் முக்தி நிலை.

ஜீவன் தனது இருப்பிடம் இவ்வுலகமில்லை ஆன்மாவே உல கம் எனக் கருதுதல் வேண்டும். இப்புலன்களையே இயற்கையையே நம்பினால் பிறவித் தொடர் தப்பாது. துன்பங்களைத் தவிர்க்க இய லாது என்ற திடஎண்ணத்துடன் ஜீவன் தனது உண்மை நிலையாகிய ஆன்மாவை, பரமனை நினைந்து அவனாகவே எஞ்சி நின்று தன்யம டைதல் வேண்டுமென்பது இச்சுலோகத்தின் உட்பொருள்.

வினா : ஜீவன் உண்மையில் எத்தகையவன்?

விடை : பகவானின் ஒரு அம்சத்தைத் தன் வடிவாக உடையவன். தொன்மையானவன்.

வினா: ஆயின் அவன் அஞ்ஞானத்தால் என்ன செய்கிறான்?

விடை : தான் தனது உடலே என்றெண்ணி இந்திரியங்களுடனும், மனதுடன் சேர்ந்து வீணே பொழுதைக் கழிக்கின்றான்.

வினா : எனவே ஜீவன் என்ன செய்ய வேண்டும்?

விடை : காட்சிப் பொருள்களின் மீது விரக்தியுற்று தனது உண்மை வடிவான பரமனை நினைந்து அவனாகவே மாறிவிடும். அதுவே மோட்சம்.

முன்னுரை

ஜீவன் தன் உடலை விட்டுச் செல்லும் போதும், புதிய உடலில் புகும் போதும், இப்புலன்களை அவற்றின் குணங்களைத் தன்னு டன் இட்டுச் செல்வான் என்கிறார்.

*சரீரம் யதவாப்னோதி யச்சாப்யுத் க்ராமதீச்வரஹ!*
*க்ருஹத்வைதானீ ஸம்யாதி வாயுர் கந்தானிவாசயாத்!!* (8)

**சொற்பொருள்**

ஈசுவரஹ் - உடல், புலன்கள் ஆகியவற்றிற்கு இறைவன், யத்ச - எப்போது உத்க்ராமதிஅபி - விட்டுச் செல்கிறானோ, யத் - அப்போது சரீரம் வேறோர் உடலை, அவாப்னோதி - அடைகிறானோ, ததா - அப்போது, ஆசயாத் - இருப்பிடத்திலிருந்து (பூவின்று), வாயுஹ் - காற்று, கந்தான் இவ - மணங்களைப் போல, ஏதானி - இந்த ஆறு இந்திரியங்களை, க்ருஹீத்வா - கிரகித்துக் கொண்டு, ஸம்யாதி - போகிறான்.

**கருத்துரை**

உடல் புலன்கள் ஆகியவற்றை ஆளும் தன்மையுடைய (ஈசுவரான) ஜீவன், மலர்களினின்றும் மணங்களைக் காற்றெடுத்துக் கொண்டு போவது போல, உடலை விட்டு வேறோர் உடலுக்குச் செல்கையில், இந்திரியங்களைப் பற்றிக் கொண்டு போகிறான்.

**விளக்கம்**

ஜீவன் உடலை விட்டுப் போதல். வேறு புதிய உடலை அடைதல் - என்பதன் வாயிலாக, ஜீவன் உடலல்ல என்பதும், உடலைக் காட்டிலும் வேறானவன் என்பதும், ஆடையைப் போல உடலை தரித்துக் கொள்கிறான் என்பதும் தெளிவாகிறது. எனவே தேகப் பற்றை விட்டுவிட வேண்டும். (தான் ஆத்மாவே என்ற எண்ணம் கொண்டிருக்க வேண்டும்.)

மேலும் 'ஈசுவரன்' என்ற ஜீவன் உண்மையில் தேகம், புலன், மனம் ஆகிய எல்லாவற்றையும் ஆளும் தன்மையுடைய ஈசுவரனே யன்றித் தொண்டன், அல்லன், அடிமையல்லன் என்பதும் தெளிவு, ஆயின் அஞ்ஞானியானவன் தலைவனாக இராமல், தொண்டனாக, இந்திரிய, மனங்களுக்கு அடிமைப்பட்டு அவலமாக வாழ்கின்றான். அவை சொற்படி ஆடுகின்றான். தான் 'ஈசுவரன்' என்பதை எப்போதுப் நினைவிற் கொண்டு புலன்களுக்கு ஆட்படாமல் இருத்தல் வேண்டும்.

'க்ருஹீத்வைதானி ஸம்யாதி' ஜீவன் உடலை விட்டுச் செல்லும் போது, மனம், புலன்களையும் உடன் கொண்டு செல்கிறான் எனப் பட்டது. ஜீவன் தன் வாழ்நாள் முழுவதையும் பற்பல உலகியல் பொருட்களைத் திரட்டுவதிலும் அனுபவிப்பதிலும் காலத்தை வீணாக்குகிறான். ஆனால் அவற்றில் ஒன்றைக் கூட அவன் கொண்டு செல்ல அவனுக்கு உரிமையில்லை என பகவான் தெளிவாகச் சொல்லி விட்டார். ஆனால் இந்த ஆறு பொருட்களை, மனம், ஐம்பு லன்கள் இதனை மட்டும் கொண்டு செல்லலாம். எனவே அவற் றைத் தூய்மையாக, புனிதமாக, தெய்வப்பண்பு நிறைந்ததாகக் கொண்டு செல்ல வேண்டும். அவ்வாறு செய்வதற்கு எத்துணையோ முயற்சி தேவையாக இருக்கிறது. ஏனெனில் அவை மட்டுமே ஜீவ னுடன் சென்று புதுப்பிறவியை ஏற்படுத்தும். இந்திரியங்களும், மனமும் தூய்மையாக இருந்தால் தூய பிறவி. தூய்மையற்றிருந்தால் புழு பூச்சிகள் போன்ற அற்ப பிறவிவரும். எனவே வரும் பிறவி நம் கையில்தான் இருக்கின்றது. இப்போதே இந்திரிய, மனங்களை ஆன் மீகச் சிந்தனையால் தூய்மையாக்கிக் கொண்டு சரிவிலிருந்து நம் மைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டும்.

இந்திரிய மனமாகிய ஆறுதான் மரணத்திற்குப் பிறகு ஜீவனுக்கு வழிச்செலவு. அவை தவிர ஒரு புல் கூட உடன் வராது. இறுதியில் யாரைக் கூப்பிட்டாலும் யாரும் மறுமொழி கூறமாட்டார்கள். யாரும் தேவைக்கு உதவார். மனைவி, சுற்றத்தார், மகன், வீடு, செல் வம், பசுக்கள், நிலபுன்கள் அனைத்தும் அப்போது அவனுக்கு உதவி புரிய மாட்டா. உடன் வராது. வருவதற்கு உரிமை கிடையாது. தூய்மையான மனமும், புலன்களுமே அப்போது ஜீவனுக்கு உதவ முடியும். அவற்றிற்கு மட்டுமே ஜீவனுக்கு உதவி செய்வதற்கு அனு மதி உள்ளது. அவையே அவனைப் பாதுகாத்தற்கு மெய்காப்பாளர் போல் (Body Guards) உடன் வரும். எனவே வாழ்நாள் முழுவதும் மனிதன் எச்சரிக்கையுடன் இந்திரிய மனங்களை முயற்சியின் வழி தூய்மைபடுத்திக் கொள்ள வேண்டும். நமது வருங்காலத்தை நாமே இப்போது உருவாக்கிக் கொள்ள வேண்டும். கீழ் பிறவியோ, மேல் பிறவியோ அல்லது பிறவியின்மையோ அனைத்தும் நம் கையில் தான் இருக்கின்றன. மூன்றவதான பிறவியின்மையைப் பெற பாடு பட்டு, அதற்கான சூழலை உருவாக்கிக் கொள்ள வேண்டும்.

'வாயுர்கந்தாணிவாசயாத்' - பகவான்தான்போதிக்க விரும்பிய கருத்தை நன்கு பதிய வைப்பதற்காக, அழகிய உவமையைக் கையாண்டுள்ளார். நறுமணத்தையோ, துர்நாற்றத்தையோ, காற்று அவ்வப் பொருட்களினின்றும் கிரகித்துக் கொண்டு வேறோர் இடத்திற்குச் செல்கின்றது. அதன் சூட்சுமமான அணுக்களை அது தாங்கிக் கொண்டு நகர்ந்து - செல்லும். மிகத் தொலைவிலிருக்கும் மலர், தூபம் முதலியவற்றின் நறுமணம், அழுகிய பொருட்களிலிருந்து, மலத்தில் இருந்து துர்நாற்றம் நமது நாசியைத் தொடுவதற்கு இதுவே காரணமாகும். இதில் காற்றிற்கு வேறுபாடு எதுவுமில்லை. செய்திகளைக் கொண்டு செல்பவனைப் போல அது தன் கடமையைச் செய்யும். அவ்வாறே ஜீவனானவன் மரணத்திற்குப் பின் புலன்களையும், மனத்தையும் தன்னுடன் கொண்டு செல்வான், புதிய உடலில் நுழைவான். புலன்களும், மனமும் தூய்மை அற்றிருந்தால், ஜீவன் தன் மரணத்திற்குப் பின், துர்நாற்றத்துடன் கூடிய இந்திரியங்களையே, பாவ அணுக்களையே கொண்டு சென்று, அவற்றுடன் புதிய உடலில் அற்பமான பிறவியில் பிறப்பான். இந்திரிய மனங்கள் தூய்மையாக இருந்தால் மரணத்திற்குப் பின் நறுமணத்துடன் கூடிய புண்ய அணுக்களைக் கொண்டு புதிய தூய உடலை அடைவான். எனவே இங்கு பகவானுக்கோ, கர்ம தேவதைகளுக்கோ எந்தவிதமான வேறுபாடும் எவரிடத்தும் இல்லை. மனத்தின் குணம் பற்றியே பிறவி ஏற்படும். மனம் எந்தவிதமான எண்ணங்களுமற்ற நிலையை அடைந்தால் பிறவியேயின்றி மோட்சத்தை அடைவான், ஜீவாத்மாவும், பரமாத்மாவும் ஒருங்கிணைவர். எனவே முயற்சியினால் அவரவர் எதிர்காலத்தை அவரவரே உருவாக்கிக் கொள்ள வேண்டும். வாழ்க்கையின் ஒவ்வொரு நிமிடத்தையும் இந்திரிய மனங்களைத் தூய்மைப்படுத்துவதில், அடக்குவதில் பயன்படுத்தினால் அதுவே ஜீவனை நற்கதிக்கு இட்டுச் செல்லும். பிறவியற்ற பேரின்ப நிலையை அளிக்கும்.

**வினா :** உடலை விட்டுச் செல்லும் போதும், வேறோர் உடலில் புகும் போதும் ஜீவன் தன்னுடன் எவ்வப்பொருள்களை எடுத்துச் செல்வான்?

**விடை :** மனத்தையும், இந்திரியங்களையும் அவற்றின் குணக்கூறுகளையும் எடுத்துச் செல்வான். வேறெவற்றையும் அல்ல.

**வினா :** எதனைப் போல?

**விடை :** நறுமணப் பொருள்களிடமிருந்து, துர்நாற்றம் வீசும்

பொருள்களிடமிருந்தோ காற்று அவ்வவற்றின் அணுக்களைக் கொண்டு செல்வது போல்.

முன்னுரை

ஜீவன் எந்த இந்திரியங்களைக் கொண்டு என்ன செய்கிறான் என்பதற்கான விடை அடுத்து வருகிறது.

*ச்ரோத்ரம் சக்ஷுஹு ஸ்பர்சனம் சரஸனம் க்ராணமேவ ச!*
*அதிஷ்டாய மனஸ்சாயம் விஷயானுபஸேவதே!! (9)*

சொற்பொருள்

அயம் - அந்த ஜீவனானவன், ச்ரோத்ரம் - செவி, சக்ஷுஹு - கண், ஸ்பர்சனம் - மெய், ரஸனம் - நாவு, க்ராணம்ச - நாசியையும், மனஹ்ச - மனதும், அதிஷ்டாய் - தனதாக்கிக் கொண்டு, விஷயான் - விஷயங்களை, உபஸேவ தே - அனுபவிக்கிறான்.

விளக்கம்

'அதிஷ்டாய மனஸ்சாயம்' - மனதையும் இந்திரியங்களையும் பின்பற்றி - என்று கூறுவதால் ஜீவன் உண்மையில் மனம் இந்திரியங் களுக்கு அப்பாற்பட்டவன் என்பதும், இந்திரிய, மனங்கள் சரீர வடி வானவையே என்பது, (அஞ்ஞான வசத்தால்) இச்சரீரத்தை ஏற்று அவன் இன்ப துன்பங்களை அனுபவிக்கிறான் என்பதும் தெளிவாகி றது. எனவே மன விகாரங்களோ, இந்திரிய விகாரங்களோ ஆன்மா வைப் பொறுத்ததல்ல. தன்னைக் காட்டிலும் வேறான இந்திரிய மனங்களை, சரீர வடிவமான உடுப்பை உடுத்தி ஆத்மா அதாவது ஜீவன், விஷயங்களை இன்ப துன்பங்களை அனுபவிக்கிறான். எனவே உண்மையில் சரீரத்துடனோ, சரீரத்தில் தோன்றும் மாற்றங் களோ அவ்வாத்மாவிற்கு எத்தகைய தொடர்புமில்லை.

வினா : ஜீவாத்மா எவ்வெவ் இந்திரியங்களை ஏற்று விஷயங்களை அனுபவிக்கிறார்?

விடை : ஐம்புலன்கள், மனம் ஆகியவற்றால்.

முன்னுரை

ஆன்மாவை அறியக்கூடியவர் யார், கூடாதவர் யார் என்பதை அடுத்து வரும் இரண்டு சுலோகங்களில் தெரிவிக்கிறார்.

*உத்க்ராமந்தம் ஸ்திதம் வாபி புஞ்ஜானம் வா குணான்விதம்!*
*விமூடா நானுபச்யந்தி ஞான சக்ஷுஷஹ!! (10)*

## சொற்பொருள்

உத்க்ராமந்தம் - ஒருடலிலிருந்து இன்னொரு உடலுக்குப் போகின்றவனை, ஸ்திதம் - அல்லது ஓர் உடலிலேயே இருக்கும் போதும், வா - அல்லது, புஞ்ஜானம் - அனுபவிப்பவனை (விஷயங்களை), குணான்விதம் அபி - சத்வம் முதலிய குணங்களோடு கூடியவனும், ஏனம் - இந்த ஜீவாத்மாவை, விமூடாஹ் - அஞ்ஞானிகள், ந பஸ்யந்தி - அறிய இயலாது. ஞானசக்ஷுஷஹ - ஞானக் கண் உடையவர், பச்யந்தி - அறிகிறார்கள்.

## கருத்துரை

உடலிற்குச் செல்பவனும், உடலிலேயே இருக்கும் போதும், அனுபவிக்கும் பொழுதும், குணங்களோடு கூடியிருக்கும் பொழுதும், ஜீவனை மூடர்கள் (அஞ்ஞானிகள்) அறியார்; ஞானக் கண்ணுடையார் அறிவர்.

## விளக்கம்

கடவுள் நமக்கு ஏன் புலப்படவில்லை எனப் பலரும் கேட்கின்றனர். அதற்கு விடையாக நீ ஞானக் கண்ணை (ஆன்ம ஞானத்தை) அடைந்தால் இங்கேயே, இவ்வுலகிலேயே, இவ்வுடலிலேயே பரமாத்மாவைப் பார்க்கலாம் எனப் பகவான் கூறுகின்றார். அவனை மிகத் தொலைதூரத்தில் தேட வேண்டிய அவசியமில்லை. ஜீவனின் உடலிலேயே, உண்டு, பருகியபடி அனுபவித்துக் கொண்டு உலவி வரும் ஜீவனிலேயே, பகுத்தறிவும் ஆன்ம அறிவினால், ஞானக் கண்ணின் நுட்பமான பார்வையினால் மனிதன் காணமுடியும் (பஸ்யந்தி ஞானசக்ஷுஷஹ) உலகியல் காட்சியின் ஆதிக்கத்தால் அஞ்ஞானிகள் அவனை அறிய முடியாது இருக்கின்றனர். கண்ணாடியை உலகத்தை நோக்கித் திருப்பிப் பிடித்துக் கொண்டால் முகம் அதில் புலப்படாது. நம்மை நோக்கித் திருப்பினால் நம்முகம் புலப்படும். அவ்வாறே மனதை வெளிமுகமாகத் திருப்பி அதனை சலனமும், வாசனைகளும் உடையதாக ஆக்கினால் ஆன்மவஸ்து அதில் புலப்படாது. உட்புறமாகவும், சலனமற்றதாகவும், வாசனைகள் அற்றதாகவும் ஆக்கினால் புலப்படும். சலனமற்ற மனம், ஆத்மா அநாத்மா விவேகம் உடையோருக்கே கடவுட் காட்சி புலப்படும். இங்கு 'பகவத் தரிசனம்' என்றால் பகவானின் அனுபவம் என்று பொருள்.

'உத்க்ராமந்தம்' என்று கூறியதால் ஆன்மா ஜீவனின் வடிவில் இந்த சரீரத்தில் இருந்தபடி, பருகியபடி வேறொரு சரீரத்தை அடைகிறது என்பது தெளிவாகிறது. எனவே மோட்சத்தை நாடுவோர் பகவானுடைய தரிசனத்தினை அடைய தொலைதூரம் செல்ல வேண்டியதில்லை. ஞானக் கண்ணால் மகான்கள் தவறாது பார்க்கவியலும் என்று கூறுவதால் வாழ்க்கையில் ஒவ்வொரு மனிதனின் முதற் கடமை அவிவேகத்தைப் போக்கி, விஷய விரக்தியுற்று மனத்தை புறம் ஓடாதபடி செய்து, ஞானச் சிந்தனையின் வாயிலாக ஆன்மாவை அறிவதேயாகும். ஞானக்கண் இல்லாத பெறாத வாழ்க்கை பயனற்றதேயாகும்.

**வினா :** ஆன்மாவை எவர் காண்பார்? காணாதார் யார்?

**விடை :** ஞானக்கண் உடையோர் காண்பர். அஞ்ஞானிகள் காண மாட்டார்கள்.

முன்னுரை

மனத்தூய்மை இல்லாதவர் முயன்றாலும் ஆன்மாவைக் காண வியலாது என்கிறார்.

*யதந்தோ யோகினஸ்சைனம் பச்யந்த்யாத் மன்யவஸ்திதம்!*
*யதந்தோ அப்யக்ருதாத்மானோ நைனம் பச்யந்த்ய சேதஸ!* (11)

சொற்பொருள்

யதந்தஹ - ஆத்ம சாட்சாத்காரத்திற்காக முயலுகின்ற, யோகினஹ் - யோகியர், ஆத்மனி - தம்முள், அவஸ்திதம் - வீற்றிருக்கும், ஏனம் - இந்த ஆன்மாவை, பஸ்யந்தி - பார்க்கின்றனர். (அனுபவத்திற்குக் கொண்டு வருகிறார்கள்), யதந்தஹ அபி - முயற்சியுடையவராயினும், அக்ருத ஆத்மானஹ - மனம் பண்படாதவர், அசேதஸஹ - அறிவிலிகள், ஏனம் - அந்த ஆத்மாவை, நபச்யந் - பார்க்கிறார்களில்லை.

கருத்துரை

முயற்சியுடைய யோகிகள் தம்முள் இருக்கும் ஆன்மாவைப் பார்க்கிறார்கள் (அனுபவத்திற்குக் கொண்டு வருகிறார்கள்) அவ்வாறு முயற்சியுடையவராயினும் அறிவிலிகள் அந்த ஆத்மாவை பார்க்கிறார்களில்லை.

**விளக்கம்**

*பலர் பகவானை அடைய முயற்சிப்பினும் சிலர் பயனை அடைவதற்கும், சிலர் தோல்வியுறுவதற்குமான காரணம் இங்கு விளக்கப்படுகிறது. மனத்தூய்மையுடன் முயற்சிப்பவர் தவறாமல் பயன்பெறுவர். அதாவது பரமாத்மாவைத் தன்னுள்ளேயே காண்கின்றனர், ஆயினும் அதேயளவு தியானம், முயற்சி முதலியவற்றைச் செய்யினும் தூய்மையற்ற மனம் உடையார், பண்படாத மனம் உடையவர் ஆன்மாவைக் காண முடியாது. சிலர் சாத்திரப்புலமை பெற்று இதயத்தூய்மையற்று ஆன்மாவைத் தேட முயலுகிறார்கள். மற்றும் சிலர் வெறும் வேடம் தாங்கி தியானம் முதலியவற்றைச் செய்வது போல் தோற்றமளிப்பர். அத்தகையோர் புலன் அடக்கமின்மையால், மனத்தூய்மையின்மையால் ஆன்மாவைக் காண்டல் முடியாதென்பது இச்சுலோகத்தில் ஆணித்தரமாகச் சொல்லப்பட்டது. நிலத்தை நன்றாக உழுது, களை எடுத்து, சுத்தம் செய்து, உரமிட்டு அதன் பிறகு விதைத்தால் நன்கு பயிர் விளையும். அவ்வாறின்றி நன்கு உழவு செய்யாது, களை எடுக்காது, களர் நிலத்தில் விதைப்பினும் அந்த விதை முளைக்காது, ஒருகால் முளைத்தாலும் வளராது. ஒருகால் வளர்ந்தாலும் விளைச்சலைத் த ாது. அவ்வாறே, சாதனை, 'சதுஷ்டயசம்பத்தி' முதலானவற்றின் மூலம் முதலில் சித்தத்தினை தூய்மைப்படுத்திக் கொண்டால் ஆன்ம சிந்தனை, தியானம், இவற்றால் ஆன்ம அனுபவம் மிக எளிதில் கிட்டும். அவ்வாறு செய்யாதவர் எவ்வளவு முயன்றாலும் ஆன்ம தரிசனம் கிட்டாது. இறைவனை தரிசிப்பதற்கு (1) முயற்சி (2) சித்த தூய்மை ஆகிய இரண்டும் மிகத் தேவை. 'யத்ந்தந்த' என்று கூறப்படுவதால் ஆன்மீகப் பாதையில் முயற்சி மிகத் தேவை, ஆயின் மனத்தூய்மையிருந்தால்தான் அம்முயற்சி மேலும் பிரகாசிக்கும்.*

*'அசேதஹ' என்பதற்கு வெறும் மூடர்கள் என்றோ அஞ்ஞானிகள் என்றோ, நாத்திகர் என்றோ பொருள் கொள்ளக்கூடாது. ஏனெனில் முயற்சி செய்பவனுக்குக் கடவுளை அடைய வேண்டுமென்ற எண்ணம் இருக்கிறது; இல்லையெனில் அவர்கள் கடவுளையடையும் முயற்சியிலேயே இறங்கியிருக்க மாட்டார்கள் அல்லவா? இவர்கள் முயற்சி நேர்வழியில் இல்லை. ஒழுங்கற்ற முறையில் செல்கிறார்கள். அத்தகையோர் அனுபவம் வாய்ந்த சான்றோரின் துணை கொண்டால் சத்ய மார்க்கத்தைக் கண்டு கொண்டு எளிதாகக் கடைத்தேறுவார்கள். முயற்சியுடன் மனத்தூய்மையிருந்தால்தான் பலன் கிடைக்கும். வெறும் முரட்டுத்தனமாகச் சாதனை செய்தால் மட்டும்*

போதாது. சாதனை முறைகளை, இரகசியங்களை, பகவானின் வாக்கினால், நல்ல நூல்களால், மகான்களின் நட்பினால் அறிந்து முக்தியடைய விரும்புவோர் ஒழுங்கான முறையில் தியானித்துக் கடைத்தேற வேண்டும்.

**வினா :** பரமாத்மா எங்கிருக்கிறார்?

**விடை :** அவரவர் இதயத்தினுள்.

**வினா :** அவனை எவர் பார்க்கக்கூடும்?

**விடை :** மனத்தூய்மையுடன் தியானம் முதலிய முயற்சியில் ஈடுபடுவோரால் பார்க்க முடியும்.

**வினா :** எவரால் பார்க்கவியலாது?

**விடை :** மனத்தூய்மையற்று முயற்சிப்போரால்.

**வினா :** ஆகவே கடவுளின் காட்சிக்கு எது அவசியம்?

**விடை :** (1) மனத்தூய்மை (2) முயற்சி

முன்னுரை

பரமாத்மாவின் மகிமையை இனிவரும் நான்கு சுலோகங்கள் தெரிவிக்கின்றன.

*யாதித்யகதம் தேஜோ ஜகத்பாஸயதே அகிலம்!*
*யச்சந்த்ரமஸி யச்சாக்னௌதத்தேஜோ வித்தி மாமகம்!!* (12)

சொற்பொருள்

ஆதித்ய கதம் - சூரியனிடத்துள்ள, யத்தேஜஹ - எந்த வெளிச்சம், அகிலம் ஜகத் - உலக முழுவதையும், பாஸயதே - பிரகாசிக்கச் செய்கிறதோ, சந்திராமஸி ச - சந்திரனிலும், யத் (தேஜஸஹ) - எந்த ஒளி இருக்கிறதோ, அக்னௌச - அக்னியிலும், யத் - எந்த வெளிச்சம், தத் தேஜஹ - அத்தேஜஸை, மாமகம் - என்னுடையதென்று, வித்தி - அறிக!

கருத்துரை

சூரியனிடத்திருந்து வந்து உலகம் முழுவதையும் பிரகாசிக்கச் செய்கின்ற ஒளியும், சந்திரன், அக்னி ஆகியவற்றிடமிருந்து வரும்

ஒளியும் என்னிடமிருந்து வந்தவை என அறிவாயாக.

**விளக்கம்**

சூரியன் முதலிய ஒளிரும் பொருட்களில் உள்ள 'தேஜஸ்' தன்னுடையது என பகவான் கூறுவதால், எந்தப் பொருளைக் கண்டாலும் அது இறைவனின் மகிமையே என்ற எண்ணம் உடையவர்களாக இருத்தல் வேண்டும். உலகில் பலவிதமான ஒளிரும் பொருட்கள் இருப்பின் அவற்றிற்குப் பிறவற்றைப் பிரகாசிக்கச் செய்யும் திறமை கிடையாது. சூரியன், அக்னி, சந்திரன் ஆகியவற்றிற்கு மட்டுமே அத்திறமை உண்டு. அவை தாமும் ஒளிர்ந்து பிறவற்றையும் ஒளிரச் செய்யும். அவற்றில் உள்ள ஒளிரும் சக்தி, தேஜஸ் இறைவனின் மகிமையே என்பது இச்சுலோகத்தினால் விளங்குகிறது.

**வினா :** சூரியன், சந்திரன், அக்னி முதலியவற்றிலுள்ள தேஜஸ் எத்தகையது?

**விடை :** இறைவனுடன் தொடர்புடையது. தெய்வத்திற்கு உடமையானது.

*காமாவிச்ய ச பூதானி தாரயாம்யஹமோஜஸா!*
*புஷ்ணாமி சௌஷதீஹ்ஸர்வாஹ் ஸோமோ பூத்வா ரஸாத்மகஹ்!!* (13)

**சொற்பொருள்**

ச - மற்றும், அஹம் - நான், காம் - பூமியினுள், ஆவிச்ய - நுழைந்து, ஓஜஸா - சக்தியினால், பூதானி - உயிர்களைத் தாரயாமி - தாங்குகிறேன், ரஸாத்மகஹ் - இனிய வடிவாகிய, ஸோமஹச - சந்திரனாகவும், பூத்வா - ஆகி, ஸர்வாஹ் எல்லாம் ஓஷத் - ஹ் - பயிர்களையும், புன்ணாமி - போஷிக்கிறேன்.

**கருத்துரை**

மற்றும் நான் எனது வலிவால் பூமியினுள் பிரவேசித்து உயிர்களைத் தாங்குகிறேன்; இனிமை வடிவாகிய சந்திரனாகவும் ஆகிப் பயிர்களையெல்லாம் போஷிக்கிறேன்.

**விளக்கம்**

தாரயாமிஓஜசா' என்று கூறுவதால் உலகிலுள்ள பொருட்கள் அனைத்திற்கும், கோடிக்கணக்கான உயிர்கட்குச் சக்தியையும், ஆற்

றலையும், பலத்தையும் அளிப்பது பரம்பொருளே என்பது விளங்கு கிறது. மேற்சொன்ன வாக்கியத்தினின்றும் ஸ்ரீ கிருஷ்ணர் வசுதேவ னுக்குப் பிறந்த ஒரு 'உபாதி' மட்டுமல்ல, உலகெங்கும் வியாபித் துள்ள உலகத்தலைவன் என்பதும் தெளிவாகிறது. மேலும் பயிர் களை வளர்ப்பது தானே என்று சொல்வதால் உயிர்கள் உண்ணும் உணவு பரம்பொருளின் அருளினால் தான் கிடைக்கிறது என்பது தெரிகிறது. எனவே உண்ணும் போது அவ்வுணவு நமக்கு யாரால் கிடைத்தது என்பதை எண்ணிப் பார்த்து, அதனை அளிக்கும் பரம னுக்கு நன்றி செலுத்த நாம் கடமைப்பட்டவர்களாவோம். எனவே உண்பதற்கு முன் அதனைப் பரம்பொருளுக்கும் சமர்ப்பித்து தெய்வீ கமான எண்ணத்துடன் அதனை உட்கொள்ள வேண்டும். பயிர்களை பகவான் வளர்க்காவிடில் மக்களுக்கு உணவு கிடைக்காது. சூரியன், சந்திரன், அக்னி ஆகியவை ஒளியைத் தராவிடில் உலகம் காரிருளில் சூழ்ந்து காணப்படும். எனவே எத்துணையோ உதவிகள் செய்து உயிர்களைத் தாங்கும் அந்த உலகத் தாய்க்கு மக்கள் என்றும் நன்றி உடையவர்களாய் நடந்து கொள்ள வேண்டும். எக்காலத்தும் அவன் நினைவாய், அவன் புகழ்பாடி வாழ வேண்டும்.

வினா : பகவான் எவ்வெவ்வழிகளில் மக்களுக்கு நன்மை புரிகிறான்?

விடை : (1) பூமியில் நுழைந்து அவனது ஆற்றலால் எல்லா உயிர்க ளையும் தாங்குகிறான். (2) சந்திரனின் உதவியால் பயிர்களை வளர்க் கிறான்.

வினா : எனவே உயிர்கள் என்ன செய்தல் வேண்டும்?

விடை : அவனுக்கு நன்றியுடையவர்களாகயிருந்து அவனைத் துதித்து, ஜபம் செய்து, பூசை செய்து எப்போதும் அவன் நினைவாக வேயிருத்தல் வேண்டும்.

முன்னுரை

உயிர்கள் உண்ணுதல் உணவைச் செறிக்கச் செய்வதும் தானே என்கிறார்.

*அஹம் வைச் வானரோ பூத்வா ப்ராணினாம் தேஹமாச்ரிதஹ!*
*ப்ராணா பானஸமாயுக்தஹ பசாம்யன்னம் சதுர்விதம்!!* (14)

**சொற்பொருள்**

*அஹம் - நான், வைச்வானரஹ் - வைஸ்வானரன் என்கிற உதரக்கனல், பூத்வா - ஆகி, ப்ராணினாம் - உயிர்களுடைய, தேகம் - தேகத்தில், ஆச்ரித ஹ - இருந்து கொண்டு, ப்ராண அபான ஸமாயுக் தஹ - பிராணன், அபானனனுடன் கூடி, சதுர்விதம் அன்னம் - நான்கு விதமான அன்னத்தை, பசாமி - ஜீரணம் செய்கிறேன்.*

**கருத்துரை**

*நான் வைஸ்வானரன் என்னும் உதரக் கனலாகி உயிர்களின் உடலில் இருந்து கொண்டு, பிராண அபான வாயுக்களுடன் கூடி நான்கு விதமான உணவு வகைகளைச் செறிக்கச் செய்கிறேன்.*

**விளக்கம்**

*முன் சுலோகத்தில் பகவான் தான் பயிர்களை வளர்ப்பதன் வாயிலாக உயிர்கள் உட்கொள்ளும் உணவைப் படைக்கிறேன் என்று கூறி, இப்போது அவ்வுணவைத் தானே செரிப்பதாகச் சொல் கிறார். உடல் உணவால்தான் உதரக் கனலால் பக்குவம் செய்யப்ப டாவிடில் ரத்தம் உடலில் பரவ முடியாது. எனவே உதரக்கனல் உடலுக்கு மிகத் தேவை. பகவான் தானே உதரக் கனலா உயிர்களின் உடலில் உள்ளேன் எனக் கூறுவதால் உடலைப் படைப்பதும், காப்ப தும் அவனே என்பது தெளிவாகிறது. உணவைப் படைத்து, உண் ணும் அவ்வுணவைச் செரிக்கச் செய்து உயிர்களுக்கு உதவும் அப்பர மனுக்கு நன்றி செலுத்தாமல், அவனுக்கு அதனைப் படைக்காமல் உண்பவன், எத்தகைய நன்றிகெட்டவன். அத்தகையோன் திருடனே என இதற்கு முன்பே பகவான் கீதையில் சொல்லியிருக்கிறார். (3-12) எனவே தான் உண்பதற்கு முன் கடவுளுக்குப் படைக்கும் (நைவேத் யம்) வழக்கம் ஏற்பட்டது. தெய்வீக எண்ணமற்ற உண்ணும் உணவு தூய்மையற்றதேயாகும். எனவே ஒவ்வொருவரும் தாம் உண்ணும் உணவை தெய்வத்திற்கு அர்ப்பித்து விட்டு அல்லது தம் உணவில் ஒரு சிறிதளவையாவது இறைவனின் படைப்பான ஏனைய உயிர் கட்கு அளித்துவிட்டு இறை எண்ணத்துடன் உண்ண வேண்டும். அப்போதே உண்ணும் அச்செயல் வேள்வியாகவும், உண்ணும் உணவு அமுதமாகவும் மாறிவிடும்.*

*'பிராணினாம் தேமாஸ்ரிதாசர்' - என்று கூறுவதால் பகவான் மிக அருகில் நமது தேகத்திலேயேதான் இருக்கிறான் என்பது திண் ணமாகத் தெரிகின்றது. எனவே தன் உடலிலேயே உள்ள தெய்வத்*

தின் அருளை அனுபவித்தபடி, இறைபக்தியுடையவர்களாய், பாவங்கள் ஏதும் செய்யாமல் தூய வழியில் நடத்தல் வேண்டும்.

'பசாமன்னம் சதுர்விதம்' - பரமன் உயிர்களின் உடலில் உதரக் கனலாக இருந்தபடி அவர்கள் உண்ணும் நான்கு விதமான உணவைச் செரிக்கிறான் என்பது தெரிகிறது.

நான்கு விதமான உணவுகள் (1) மென்று தின்பவை (2) நக்கப்படுபவை (3) உறிஞ்சுபவை (4) விழுங்கப்படுபவை.

(1) மென்று தின்பவை - பற்களால் கடித்து உண்ணப்படும் கடின பதார்த்தங்களே, காய்கறி முதலியவை (2) நக்கப்படுபவை - நாவினால் சுவைக்கப்படும் துவையல் முதலியவை (தேன்) (3) உறிஞ்சுபவை - பாயாசம், ரசம், மோர் முதலியவை. இனி ஆகார விஷயத்தின் எவ்வளவு எச்சரிக்கையாக இருக்க வேண்டுமென்பதை ஆலோசித்துக் கொள்ளலாம். ஆகார சம்பந்தமாக கீழ்க்கண்ட எச்சரிக்கையை மேற்கொள்ளுதல் சிறந்தது - (1) அதிகமாக உட்கொண்டு ஜீரணகர்த்தாவான பகவானுக்கு அதிக வேலையையளித்தல் ஆகாது (2) சாத்வீகமான ஆகாரத்தையே உட்கொள்ளுதல் வேண்டும் ராஜஸ, தாமச உணவுகளை ஒதுக்குதல் வேண்டும் (சாத்வீக, ராஜஸ, தாமச உணவுகளைக் குறித்து 17-ஆவது அத்தியாயம் 8, 9, 10 சுலோகங்களைப் பார்க்க) (3) உண்ணும் உணவை முதலில் இறைவனுக்கு பக்தியுடன் அர்ப்பித்தில் வேண்டும் (4) உணவு நியாயமான வகையில் பெற்றதாக இருத்தல் வேண்டும். அதர்ம வழியில், சம்பாதித்த செல்வத்தில் பஞ்ச பட்ச பரமான்னத்தைப் புசிப்பதை விட, நியாய வழியில் சம்பாதித்துப் பெற்ற கஞ்சியைக் குடித்து வாழ்தல் சிறந்தது. பகவான் ஒவ்வொருவரின் வயிற்றிலும் மறைந்திருந்து அனைத்தையும் கவனித்து வருகிறார். எனவே ஆகார நியமத்தில் மக்கள் வெகு விழிப்புடன் இருத்தல் வேண்டும்.

இவ்வாறாக இவ்வத்தியாயத்தின் ஆகார விஷயத்தைப் பற்றிக் குறிப்பாகச் சொல்லப்பட்டதால் உணவு உட்கொள்கையில் இவ்வத்தியாயத்தைப் படிக்கும் வழக்கம் ஏற்பட்டது. பல ஆசிரமங்களிலும், மடங்களிலும், வீடுகளிலும் இவ்வத்தியாயத்தைச் சேர்ந்தோ, தனித்தோ போஜன காலத்தில் மக்கள் படித்துப் பின்னரே உணவு உண்பர். இவ்வாறாக இறை எண்ணத்துடன் உண்பவனுக்கு அளிக்கும் அன்னம் சாட்சாத் இறைவனுக்கேயளிப்பதாகும். அதற்கான புண்ணியம் அவனுக்குத் தவறாது கிடைக்கும். மேலும் தெய்வ தியானத்துடன் உண்பதால் மனிதனின் சரீரத்திலுள்ள ஒவ்வொரு அணு

வும் தெய்வசக்தியுடன் கூடியிருக்கும்.

உண்பதற்கு முன்பாக 15 ஆவது அத்தியாயம் அனைத்தையும் சொல்லி இறுதியில் கையில் தீர்த்தத்தைவாங்கி 'பிரம்மார்ப்பணம் பிரம்மஹவிஹி...' 24 ஆவது சுலோகத்தினை பக்தியுடன் சொல்லிய பின்பு நீரை அன்னத்தின் மீதும் தெளித்த பின் புசித்தல் சிறந்தது.

**வினா** : பரமாத்மா ஜீவர்களின் சரீரத்தில் எந்த வடிவில் இருக்கின்றார்?

**விடை** : (வைஸ்வானரனாக) உதரக்கனலாக உள்ளார்.

**வினா** : அங்கு இருந்தபடி என்ன செய்கிறார்?

**விடை** : பிராணஅபான வாயுவுடன் கூடி ஜீவர்கள் புசிக்கும் ஆகாரத்தினை ஜீரணிக்கிறார்.

**வினா** : எனவே மக்கள் என்ன செய்தல் வேண்டும்?

**விடை** : தம் சரீரத்திலேயே உள்ள இறைவனை பக்தியுடன் தியானித்து, தாம் உண்பதற்கு முன்பாக அவனுக்கு அர்ப்பணித்துத் தெய்வ எண்ணத்துடன் புசித்தல் வேண்டும்.

## முன்னுரை

எல்லா ஜீவர்களின் இதயத்திலும் தான் இருப்பதாக அனைத்திற்கும் தானே ஆதாரமென்று பகவான் தெரிவிக்கிறார் -

*ஸர்வஸ்ய சாஹம் ஹ்ருதி ஸன்னிவிஷ்டோ மத்தஹ ஸ்ம்ருதிர் ஞானமபோஹனம்ச!*
*வேதைஸ்ச ஸர்வைரஹமேவ வேத்யோ வேதாந்த க்ருத் வேத விதேவ சாஹம்!!* (15)

## சொற்பொருள்

அஹம் - நான், ஸர்வஸ்ய - எல்லா உயிர்களுடைய, ஸ்ருதி - இதயத்தினிள்ளும், சந்நிவிஷ்டஹ - தங்கியிருக்கிறேன், மத்தஹ - என்னால், ஸ்ம்ருதி - ஞாபகம், (அறிவு) அபோஹனம்ச - அவற்றின் அழிவும், (பவந்தி - ஏற்படுகின்றது) ஸர்வைஹ - எல்லாமுமான, வேதைஸ்ச - வேதங்களினாலும், வேத்யஹ - அறியக் கூடியவனாக, அஹம்ஏவ - நானே, வேதாந்தக்ருத் - வேதாந்தத்தைச் செய்தவனும், வேதவித் ஏவ ச - வேதத்தை அறிந்தவனும், அஹம்ஏவ - நானே (ஆக இருக்கிறேன்).

**கருத்துரை**

எல்லோருடைய உள்ளத்திலும் நான் வீற்றிருக்கிறேன். நினைவும், ஞானமும் அவற்றின் அழிவும் என்னிடமிருந்தே உண்டாகின்றன. வேதங்கள் எல்லாவற்றிலும் அறியப்படும் பொருளாக இருப்பவனும் நானே. வேதாந்தத்தைச் செய்தவனும், வேதத்தை அறிந்தவனும் நானே.

**விளக்கம்**

'ஸர்வஸ்ய' - சாதி, மத, குல, இன வேறுபாடின்றிச் சராசரி உயிர்களனைத்தினும் இறைவன் உறைகிறான் என்பதால் இனி எவரும் அதைரியப்பட வேண்டிய அவசியமில்லை. மகாபாவியாயினும், சண்டாளனாயினும், தன்னிடத்தில் தெய்வத்தினை உன்னிப் பார்த்து, புனிதமான நடவடிக்கைகளால் அவனைக் கண்டுகொள்ள முடியும். அத்தகைய பாவியும் தன் பின்னாலும் தனக்கு ஆதாரமாகவும் உள்ள அகண்டமான தெய்வத்தன்மையை நினைவில் வைத்திருந்தால் தன் உண்மை உருவை, தெய்வத்தன்மையை நினைவிற் கொண்டால் புண்ணியாத்மாகவே உலவுவான்.

இத்தகைய ஒரு சந்தர்ப்பத்தை ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மா அனைவருக்கும் வழங்கியுள்ளார். எத்தகையோராயினும் மேன்மையுறுவதற்கான அவகாசம் அளித்துள்ளார். அலைகள் சிறியதாயினும், பெரிதாயினும் அவற்றின் பின் பெரிய சமுத்திரமே இருக்கின்றது. எனவே சிறிய அலைகள் (உயிர்கள்) அதைரியப்பட வேண்டிய அவசியமில்லை. தன்னிடம் அந்தர்யாமியாயுள்ள பரமாத்மாவை அறிந்து கொண்டால் போதும். அவரை அறிதல் அனைவரின் 'பிறவி உரிமை' என்று தெரிவிப்பதற்காகவே கீதாச்சாரியன் 'சர்வஸ்ய' என்ற சொல்லால் முழங்குகின்றான்.

'ஹ்ருதி' (இதயத்தினுள்) - என்று சொல்வதால், பகவான் ஒவ்வொருவருக்கும் மிக அருகில் இதயத்திலேயே குடிகொண்டுள்ளார் என்பது பொருள். எனவே தண்டிப்பவன் பக்கலிலேயே இருக்கிறான் என்பதையுணர்ந்து, பாவகாரியங்களைச் செய்யாது இறைவனுக்குத் திருப்தியளிக்கக் கூடிய காரியங்களையே செய்தல் வேண்டும். (தர்ம காரியங்களையே செய்தல் வேண்டும்).

'மத்த ஹ ஸ்ம்ருதிர் ஞானம் போஹனம்ச' - நினைப்பு, ஞானம், மறதி - இவையனைத்தும் மனத்தின் பலவித நிலைகள். பரமாத்மாவோ மனத்தினை இருப்பிடமாகக் கொண்டு அதற்கு ஆதாரமாக வுள்ளார். எனவே அவனால்தான் அவை உண்டாகின்றன எனப்பட்டது. இதனால் ஸ்தூலப் பொருட்களேயன்றி மிகவும் சூட்சுமமான மனதின் செயல்களைக் கூட இறைவன் கண்காணிக்கின்றான். எனவே அவனுக்குத் தெரியாமல் மனதில் கூட நினைத்தல் நடக்காது என்பது தெளிவாகிறது. எனவே ஒவ்வொருவரும் தம் மனத்தில் எத்தகைய தீய எண்ணங்கள், விஷயவாசனைகள் முதலிய தூய்மை யற்ற பற்றை அருகில் நாடவிடாமல் கவனமாகப் பார்த்துக் கொள்ள வேண்டும்.

'வேதைஸ்ச ஸர்வைரஹமேவ வேத்யஹ் - வேதங்களில், சாஸ்திரங்களில், அநேக தேவர்கள், தேவதைகள் சொல்லப்பட்டிருப்பினும், அறியத்தக்கவன் பரமாத்மா ஒருவனேயாவான். பிரம்மா, விஷ்ணு, மஹேஸ்வரன் முதலான பல தேவர்களனைவரும் ஒரே பரமாத்மாவின் பல வடிவங்களே, உலகில் இறுதியான இலட்சியம், அறியத் தக்கப் பொருள் ஒன்றுள்ளது - அது சச்சிதானந்த பரபிரம்மமேயாகும்.

'வேதாந்த க்ருத்' - வேதங்களனைத்தினையும் உண்டாக்கியது. பரமாத்மாவேயன்றி மனிதர்கள் அல்லர் என்பது மிகத் தெளிவாகக் கூறப்பட்டிருப்பதால், வேதங்களில் கூறப்பட்ட உண்மைகளனைத்தும் (இவை இறைவனால் உண்டாக்கப்பட்டதால், அதன்மீது மாறாத அசையாத நம்பிக்கையிருத்தல் வேண்டும். பரம்பரையைப் பற்றிச் சொல்கையில், 'ஓம் நாராயணம் பத்மபுவம்...' என்று முதன் முதலில் பரமாத்மாவையே, ஸ்ரீமன் நாராயணனையே குறிப்பிடும்.

வினா : இறைவன் எங்கிருக்கிறான்?

விடை : அனைவரின் இதயத்திலும் உறைகிறான்.

வினா : நினைப்பு, ஞானம், மறதி எவரால் ஏற்படுகிறது?

விடை : பரமாத்மாவினாலேயே.

விடை : வேதங்களினால் அறியத்தக்கவன் யார்? வேதாந்தங்களை சிருஷ்டித்தவர் யார்? வேதங்களை நன்கறிந்தவன் யார்?

விடை : பரமாத்மாவே.

முன்னுரை

அழிவுடையது, அழிவற்றதுமான புருஷர்களின் வடிவினை வர்ணிக்கிறார் -

*த்வாவிமௌ புருஷௌ லோகே க்ஷரஸ்சாக்ஷர ஏவச!*
*க்ஷரஹ ஸர்வாணிபூதானி கூடஸ்தோ அக்ஷர உச்யதே!!* (16)

சொற்பொருள்

லோகே - உலகில்; க்ஷரஹ்ச - க்ஷரன் என்றும், அக்ஷரஹ் ஏவச - அக்ஷரன் என்றும், தௌஇமோ புருஷோ (ஸ்தஷ) - என இவ்விரண்டு புருஷர்கள் இருக்கிறார்கள். ஸர்வாணி பூதானி - எல்லா பிராணிகளின் தேகங்கள் (உபாதிகள்), க்ஷரஹ் - க்ஷரனென்றும், (உச்யந்தே - சொல்லப்படுகின்றனர்), கூடஸ்தஹ - கூடஸ்த புருஷன் அக்ஷரஹ - அக்ஷரன் என்றும், உச்யதே - சொல்லப்படுகிறான்.

கருத்துரை

உலகில் க்ஷரன் என்றும் அக்ஷரன் என்றும் இரண்டே புருஷர்கள் இருக்கிறார்கள். வடிவெடுத்த உயிர்கள் அனைத்தின் சரீரமும் (உபாதிள்) க்ஷரன் என்றும், கூடஸ்தனான ஜீவன் அக்ஷரன் என்றும் சொல்லப்படுகிறான்.

விளக்கம்

க்ஷர புருஷன், அக்ஷரபுருஷன், புருஷோத்தமன் - ஆகிய மூன்று புருஷர்களைப் பற்றிக் கூறத் தொடங்கி, முதன்முதலில் க்ஷர, அக்ஷரர்களைக் குறித்து பகவான் இச்சுலோகத்தில் தெரிவிக்கிறார். அழியக் கூடிய தேகம், காட்சிப் பொருள்கள் அனைத்தும் அதாவது சராசரத்தில் உள்ள ஜீவர்களின் சரீரமனைத்தும் க்ஷர புருஷர்கள் என்றும் ஆன்ம சைதன்யத்தின் பிரதிபிம்பான ஜீவர்கள் அக்ஷர புருஷர்கள் என்றும் இங்குக் கூறப்படுகிறார்கள். க்ஷர தேகத்துடன் ஒப்பிட்டுப் பார்த்தால் மோட்சம் அடையும் வரை பல பிறவிக் காலம் வரை அழிவுறாது இருப்பவனாதலால் ஜீவன் அக்ஷரன் என்றும், கூடஸ்தன் என்றும் சொல்லப்படுகிறான். ஆயின் இவ்வக்ஷரன் 8 ஆவது அத்தியாயத்தில் சொல்லப்பட்ட அக்ஷர பிரம்மமென்றோ, கூடஸ்தன் என்றதோ [illegible] கூடாது; ஜீவனை

னில் அவர்களிவருக்கும் ஆகாசத்திற்கும் பாதாளத்திற்கும் உள்ள வேறுபாடு உள்ளது. ஒருவன் பிம்பம்; மற்றொருவன் பிரதிபிம்பம். இவ்வத்தியாயத்தில் சொல்லப்பட்ட அக்ஷரன் பிரதிபிம்பம் - அதாவது ஜீவன், இந்த க்ஷரன் அக்ஷரன் இரண்டினும் வேறுபட்ட, அதாவது சரீரத்தை விட, சித்ர பிரதிபிம்பமான ஜீவனை விட, வேறாக உள்ள உத்தம புருஷனைக் குறித்து அடுத்த சுலோகத்தில் சொல்லப்படும். அவனே பரமாத்மா.

**வினா :** இவ்வுலகில் புருஷர்கள் எத்துணை பேர்? அவர்கள் எவர்?

**விடை :** இருவர் உள்ளனர் (1) க்ஷரன் (2) அக்ஷரன்

**வினா :** அதில் க்ஷரபுருஷன் என்பவன் யார்?

**வினா :** எல்லா உயிர்களில் சரீரங்களும் க்ஷரன் எனப்படும்.

**வினா :** அக்ஷரபுருஷன் யார்?

**விடை :** கூடஸ்தான ஜீவாத்மா.

**முன்னுரை**

அவர்களிருவரினும் வேறான உத்தம புருஷனைக் குறித்துச் சொல்கிறார்.

*உத்தமஹ புருஷஸ்த்வன்யஹ பரமாத்மேத் யுதாஹ்ருதஹ!*
*யோ லோகத்ரய மாவிச்ய பிவர்த்யவ்யய ஈச்வரஹ!* (17)

**சொற்பொருள்**

யஹ் - எவன், லோகத்ரயம் - மூன்று உலகங்களிலும், ஆவிஸ்ய - நுழைந்து, பிவர்தி - தாங்குறாரோ, (அத்தகைய) அவ்யயஹ - அழிவற்றவனும், ஈசுவரஹ - உலக நியமனனும் ஆன, அன்யஹ - (மேற்சொன்ன க்ஷரஅக்ஷர புருஷர்களைக் காட்டிலும்) வேறானவனும் (ஆன), உத்தமனை புருஷஹ - உத்தம புருஷன் (புருஷோத்தமன்) பரமாத்மேதி - பரமாத்மாவென்று, உதாஹ்ருதஹ் - அழைக்கப்படுகின்றார்.

**கருத்துரை**

எவர் மூவுலகினும் புகுந்து அவற்றைத் தாங்குகின்றாரோ, அத்த

கைய அழிவற்ற, உலக நியமனனும் (அக்ஷர க்ஷர புருஷர்களை விட) வேறானவனும் ஆன உத்தம புருஷன் பரமாத்மாவென்று அழைக்கப்படுகிறான்.

**விளக்கம்**

மேற்சொன்ன அழியக்கூடிய தேகத்தினை விட சித்தின் பிரதி பிம்ப வடிவினனான ஜீவனை விடவும், வேறாக ஆன்ம இருக்கிறான். அவனே உத்தம புருஷன் எனப்படுகிறான். ஏனெனில், கண நேரமே இருக்கக்கூடிய தேகத்தை விட, மோட்சசாதகனான ஜீவனை விட முக்தனான ஆத்மா சிறந்தவனேயல்லவா!

ஜீவன் முக்குணங்களையுடையவன். பரமாத்மா முக்குணங்களுக்கப்பாற்பட்டவன். 'குணாதீதன்' இக்காரணத்தினால் அவன் ஏனைய இரு க்ஷர, அக்ஷர புருஷனை விட உத்தமனாக; புருஷோத்தமனாகக் கருதப்படுகிறான்.

உலகில் சிலர், 'தேக நிலை'யினும், சிலர் ஜீவநிலையிலும் இருக்கின்றனர். அவர்களிருவரும் சாதாரண புருஷர்கள். ஆத்மாவில் இருப்பவனே உத்தம புருஷன். அத்தகைய புருஷோத்தம நிலையைப் பெறுவதற்கு அனைவரும் முயற்சித்தல் வேண்டும். எக்காலத்தும், எப்போதும் 'புருஷ்' (ஜீவ) நிலையிலேயே இருப்பது அறிவுடையோர்க்குக் கடினமல்ல. முறையாக தேக நிலையை, ஜீவ நிலையை (மனநிலை, புருஷ நிலை)க் கடந்து காட்சியான ஆன்ம நிலையை அதாவது, புருஷோத்தமனின் நிலையை அடைந்தவரே தன்யர்கள், மிகச் சிறந்தோர். அத்தகைய நிலையே வாழ்க்கையின் முக்கியக் குறிக்கோள், இலட்சியம். அதனால் ஜன்ம ஈடேற்றம் கிட்டும். ஏனைய இதர கிரியைகளினால் இம் மனிதப்பிறவியினின்றும் கடைத்தேறவியலாது.

'அன்யஹ' - என்று சொல்லப்பட்டதால், பரமாத்மா தேகத்தினை விட ஜீவனை விட (மனதை விட) வேறாக இருக்கின்றான் என்பதும், அவனுக்கு சாட்சியாகயுள்ளான் என்பதும் தெரிகிறது. எனவே ஜீவன் அத்தேகத்தின் ஜீவனின் தொடர்பும் உண்மையில் இல்லை. தான் நிர்விகார அழிவற்ற ஆன்மாவென்று நிச்சயித்துக் கொண்டு அத்தகைய ஆன்ம நிலையிலேயே சதா நிலைபெற்று இருத்தலைப் பயிற்சி செய்தல் வேண்டும்.

பரமாத்மா எத்தகையவன் என அறிந்தால், அவனின் மகிமையையுணர்ந்தால் அவன் மீது நம்பிக்கை நன்கு வளரும். இங்குப் பரமாத்மாவிற்கு இரண்டு சிறப்பு அடைகள் கொடுக்கப்பட்டுள்ளன. அவன் (1) சர்வலோக தாரகன் (அனைத்துலகையும் தாங்குபவன்) (2) அழிவற்றவன். மூவுலகிலும் நன்கு நுழைந்து அவற்றுள் அந்தர்யாமியாக இருந்து அவற்றைத் தாங்கி, அவற்றிற்குத் தலைவனாக உள்ளான். மூவுலகிலும் எல்லாவிடங்களில் நிறைந்து வியாபித்துள்ளான். மேலும் அவன் அழிவற்றவன், நாசமற்றவன், தேகம் முதலான காட்சிப்பொருள்கள் யாவும் இறுதியில் சித் - பிரதிபிம்பமான ஜீவனும் (மோட்சம் அடைந்த பின்னர் ஜீவத்வம் அழிந்துபடும் ஆதலால்) பரமாத்மாவோ எக்காலத்தும் அழிவுறான். எனவே அத்தகைய அழிவற்ற ஆன்ம பதத்திற்கே, புருஷோத்தம நிலைக்கே அனைவரும் முயற்சித்தல் வேண்டும். கணநேரமே நிலைக்கக்கூடிய அற்ப உலகியல் பொருட்களுக்கு, பதவிகளுக்கு ஆசைப்பட்டு ஓடுதல் சிறந்ததல்ல.

**வினா :** க்ஷர, அக்ஷரங்களை விட வேறானவன் எவரேனும் உளரா?

**விடை :** உள்ளான். அவனே உத்தம புருஷன். (புருஷோத்தமன்)

**வினா :** அவன் எப்படிப்பட்டவன்?

**விடை :** (1) மூவுலகங்களிலும் நுழைந்து அவற்றைத் தாங்குபவன். உலக நியமனன் (2) அழிவற்றவன்.

**வினா :** எனவே அதன் பலன் என்ன?

**விடை :** க்ஷர (தேகம்) அக்ஷர (ஜீவன் என்ற நிலையைக் கடந்து புருஷோத்தம நிலையை, பரமாத்ம நிலையை எட்ட வேண்டும்.

**முன்னுரை**

பரமாத்மா புருஷோத்தமன் என்று ஏன் சொல்லப்படுகிறான் என்பதைத் தெரிவிக்கின்றார்.

*யஸ்மாத்க்ஷர மதீதோ (அ) ஹம க்ஷராதபி சோத்தமஹ!*
*அதோஸ்மி லோகே வேதே ச ப்ரதிதஹ புருஷோத்தமஹ!* (18)

**சொற்பொருள்**

யஸ்மாத் எக்காரணத்தினால், அஹம் நான், க்ஷரம் க்ஷர

வடிவினனைக் அதீதஹ - கடந்தவனோ, அக்ஷராத்அபி - அக்ஷர வடிவினனை (ஜீவனை) விடவும், உத்தமஹச - சிறந்தவனாக உள்ளேனோ, அதஹ் - அக்காரணத்தால், லோகே - உலகிலும், வேதேச - வேதத்திலும் 'புருஷோத்தமன்' என்று புகழ்பெற்றிருக்கிறேன்.

## விளக்கம்

க்ஷர அக்ஷர புருஷன்கள் இருவரைக் காட்டிலும் மேலானவனாக இருப்பதால் பரமாத்மா புருஷோத்தமன் என்று புகழ் பெற்றுள்ளான். ஜீவனும் தன் ஜீவத்வத்துடன் திருப்தியடைந்துவிடாமல் புருஷோத்தமனாக மாற, ஆத்மநிலைக்கு முயற்சி செய்தல் வேண்டும். அப்போதே அவன் பவபந்தங்களின்றும் விடுபட்டு சாட்சாத் பகவானைப் போன்று உலகில் புகழ் பெறுவான்.

**வினா :** பகவான் புருஷோத்தமன் என ஏன் புகழ் பெற்றான்?

**விடை :** அவன் க்ஷர அக்ஷர புருஷர்களை விட மேலானவன் என்பதால்.

## முன்னுரை

இவ்வாறாக புருஷோத்தமனாக பரமாத்மாவை அறிந்தவன் அவனைத் தூய்மையான பக்தியுடன் வணங்குவான் என்கிறார்.

*யோ மாமேவமஸம் மூடோ ஜாணாதி புருஷோத்தமம்!*
*ஸ ஸர்வவித்பஜதி மாம் ஸர்வபாவேன பாரத!! (19)*

## சொற்பொருள்

பாரத! பரதகுலத் துதித்தவனே! அர்ஜுனா! யஹ் - எவனொருவன், அஸமமூடஹ - அஞ்ஞானமற்றவனாய், ஏவம் - இவ்வாறாக, மாம் - என்னை, புருஷோத்தமம் - புருஷோத்தமனாக, ஜானாதி - அறிகின்றானோ, ஸஹ் - அவன், ஸர்வ வித் = முழுதுமறிந்தவனாய், ஸர்வ பாவேன - முழு மனத்துடன், (எல்லாவிதத்திலும்), மாம் - என்னை, பஜதி • பூசிக்கிறான் (தியானிக்கிறான்).

## கருத்துரை

அர்ஜுனா! யார் அஞ்ஞானமற்று, இங்ஙனம் என்னைப் புருஷோத்தமன் என்று அறிகிறானோ, எல்லாம் அறிந்த அவன் என்னை முழுமனதோடு பூசிக்கிறான்.

**விளக்கம்**

இறைவனின் மீது பக்தி ஏற்பட வேண்டுமாயின், அவன் எத்தகையோன் என்பதை முதலில் தெரிந்து கொள்ள வேண்டும். ஒரு பொருளின் மகிமை, சிறப்புத் தெரியாவிடில் அதன் மீது எவருக்கும் பிடித்தம் ஏற்படாது. ஒரு வேளை பிடித்திருந்தாலும் முழுமையான வேட்கை ஏற்ப்டாது. எனவே இறைவனின் மீது முழுமையான பக்தி ஏற்பட வேண்டுமாயின், அவன் நிலையானவன், ஆனந்த வடிவினன், க்ஷரம், அக்ஷரம் இவற்றிற்கு (தேகம், ஜீவன்) அப்பாற்பட்டவன்' என்று நன்கு உணர்ந்திருத்தல் வேண்டும். இவ்விஷயமே இச்சுலோகத்தில் சொல்லப்பட்டுள்ளது. 'எவன் அஞ்ஞானத்தை ஒழித்து என்னை புருஷோத்தமனாக, க்ஷரசக்ஷரம் இவற்றிற்கு அப்பாற்பட்டவனாக அறிகிறானோ, அவன் முழுமையான பக்தியுடன் என்னைப் பூசிப்பான்' என்று பகவான் இங்குத் தெரிவிக்கிறார்.

'அஸம்மூடன்' என்றால், காட்சிப் பொருள்கள் நிலையானவை என்று கருதும் மடமை இல்லாதவன்; ஆன்மாவே நிலையென்ற ஞானம் உடையவன் என்பது பொருள்.

'ஸஸர்வவித்' - உலகில் எத்துணை பௌதிக வித்தைகளைக் கற்றுணர்ந்தாலும், எத்துணை திறமை பெற்றிருந்தாலும், எத்துணை கலைகள் கற்றிருந்தாலும் மனிதன் அனைத்தும் அறிந்தவனாக, அறிஞனாக ஆக முடியாது.

'யஸ்மின் விஞ்ஞாதே ஸர்வமிதம் விஞ்ஞாதம் பவதி' என்பதைப் போல் எதனை அறிந்திருந்தால் அனைத்தும் அறிந்ததாகுமோ அத்தகைய பரமாத்மாவை அறிந்தவனே உலகில் அனைத்தும் அறிந்த அறிஞன் ஆக முடியும்.

பிரம்மாண்டங்களனைத்தும், எல்லாவித்தைகளும், சாஸ்திரங்களும், கலைகளும், பகவானின் வயிற்றிலேயே அடங்கியிருப்பதால், அவனை அறிந்திருந்தால் அனைத்தும் அறிந்தவனே யாவான். எனவே தான் 'ஸ ஸர்வமித்' - அத்தகையோன் 'அனைத்தும் அறிந்தான்' - 'ஞானி' என இங்குச் சொல்லப்பட்டது.

'ஸர்வபாவேன' - அங்ஙனம் இறைவனது உண்மை வடிவையுணர்ந்தவன் இறைவன் மீது மாறாத சலனமற்ற பக்தி பூண்டவனாய், எல்லா விதத்திலும் அவனையே பூசிப்பான், சேவிப்பான். காட்சிப் பொருள்களனைத்தும் அழியக்கூடியவையே என அறிந்தவன் இயல்பாகவே நிலையான ஆன்மாவினையே சேவித்திருப்பான். 'ஸர்வபா

வேன' என்பதால் அத்தகையோன் முழுமையான மனத்துடன், அவனைப் பூசிப்பான் என்பது பொருள். அத்தகைய முழுமையான பக்தி இறைவனின் உண்மை வடிவையுணர்ந்தாலொழிய ஏற்படாது. எனவே முதன்முதலில் பரமாத்மாவின் வைபவம், உண்மை வடிவம் இவற்றை நன்கறிதல் வேண்டும். மேலும் 'ஸர்வ பாவேன' என்ற பதத்தினால் உலகில் சாதகர்கள் இறைவனை எவ்வாறு பூசித்தல் வேண்டுமென்பது இங்குச் சொல்லப்பட்டது. முழுமையான பக்தியுடன், மாறாத முழு நம்பிக்கையுடனும் பூசித்தல் வேண்டும். பக்தியையும், எண்ணத்தையும் பிரித்தல் கூடாது. உலகியல் பொருள்களின் மீது சிறிது, இறைவனின் மீது சிறிது எனப் பிரித்தால் அது ஸர்வ பாவத்துடன் கூடிய பக்தியல்ல. ஆயின் முதலில் அத்தகைய முழுமையான பக்தி ஏற்படாவிடினும், பயிற்சியினால் முழுமையான பக்தி (100%)யைப் பெற்றே தீருதல் வேண்டும்.

**வினா :** இறைவனை முழுமனத்துடன் பூசிப்பவர் யார்?

**விடை :** எவனொருவன் அஞ்ஞானத்தை ஒழித்து இறைவனைக் கூடி அக்ஷரங்களுக்கு அப்பாற்பட்டவனாக புருஷோத்தமனாக உணர்கிறானோ அவனே முழுமனத்துடன் இறைவனைப் பூசிப்பான்.

**வினா :** இறைவனை எங்ஙனம் பூசித்தல் வேண்டும்?

**விடை :** சலனமற்ற பக்தியுடன், முழுமனத்துடன் பூசித்தல் வேண்டும். (ஸர்வ பாவேன).

### முன்னுரை

அத்தியாத்தின் பலனைக் கூறுகிறார்.

*இதி குஹ்யதமம் சாஸ்த்ரமிதமுக்தம் மயா(அ)கை!*
*ஏதத்புத்த்வா புத்திமான் ஸ்யாத் க்ருதக்ருத்யஸ்ய பாரத!!* (20)

### சொற்பொருள்

அனக - பாபமற்ற ஓ அர்ஜுனா! இதி இவ்வாறாக, குஹ்யாமம் - மிகவும் இரகசியமான, இதம் - இந்த, சாஸ்திரம் - சாஸ்திரமானது, மயா - என்னால், உக்தம் - சொல்லப்பட்டது. பாரத! - அர்ஜுனா! ஏதத் - இதனை, புத்வா - அறிந்து (மனிதன்), புத்திமான் - ஞானம் பெற்றவனாக, க்ருத க்ருதயஹச - கிருதார்த்தனாகவும், (முக்தனாக) கஸ்யாத் - ஆகிறான்.

**கருத்துரை**

குற்றமற்றவனே! இவ்வாறாக ஆழ்ந்த இரகசியமான இச்சாஸ்திரம் என்னால் உரைக்கப்பட்டது. அர்ஜுனா இதை அறிபவன் ஞானியும், கிருதார்த்தனுமாகிறான்.

**விளக்கம்**

இதுவரை சொல்லப்பட்ட இந்த கீதா சாஸ்திரம் அனைத்தும் நன்கு அறிந்தவனுக்கு ஏற்படும் பலனை இங்குக் கூறுகிறார். தான் சொல்லிய இந்தப் போதனை யனைத்தும் மிகவும் இரகசியமானது (குஹ்யதமம்) என்று முதன்முதலில் பகவான் இங்குச் சொல்கிறார். எனவேதான் 'குஷ்யம்' என்றோ, 'குஹ்யதரம்' என்றோ சொல்லாது, 'குஹ்யதமம்' என்று 'தம' சொல்லைப் பயன்படுத்திப் போதனையின் ஆழ்ந்த இரகசியத்தினையும் வெளிப்படுத்துகிறார். சாதாரணமாக மிகவும் இரகசியமான விஷயத்தை மகனீயர்கள் அனைவருக்கும் சொல்வதில்லை. அதற்குத் தக்கத்தகுதியுடைவரிடத்தே தான் சொல்வர். அர்ஜுனனுக்கு அத்தகைய தகுதி உள்ளதா? அவனுக்கு சித்தத் தூய்மை உள்ளதா? என்று மக்கள் வினவுவரோ என்னவோ எனக் கருதியே பகவான் உடனேயே 'அனக' பாபமற்றவனே என அர்ஜுனனை அழைத்து நமது ஐயத்தைப் போக்கி வைக்கிறார். அர்ஜுனன் பாபமற்றவன், தூய்மையான சித்தத்தையுடையவன், ஆன்மிக போதனையைக் கேட்பதற்கு, கிரகித்துக் கொள்வதற்கு எவ்வகையிலும் தகுதி பெற்றவன், அர்ஜுனனைப் போன்றே எவராயினும் தம் சித்தத்தின் குற்றங்களை, பாவங்களைப் போக்கிக் கொண்டால் அவர்களுக்கும் அல்லது ஏதோ ஒரு நிமித்தம் மூலமாகவோ, பிரம்மதத்துவத்தை உபதேசிப்பான். அல்லது தானே சுயமாகவே அத்தகைய ஆன்மிக அறிவை, ஞானத்தைப் பெறக்கூடிய தகுதியை, வேட்கையை உண்டுபண்ணுவான். (ததாமி புத்தியோகம் தம்).

பகவானின் வாக்கான இப்போதனையை அறிவதால் பலன் என்ன? மனிதன் (1) ஞானவானாகவும் (சுயவடிவை அனுபவித்தறிவோன்), (2) கிருதார்த்தனாகவும் ஆவான். இதனை அறிவதால் இறைவனின் மீது இடைவிடாத மாறாத (அனன்யம்), பக்தியுடையவனாய் அதன்மூலம் புத்தியோகத்தினை அதாவது ஞான அனுபவத்தைப் பெறுவான். அதன் வழி கிருத்தார்த்தனாவான். உலகில் ஏனைய காரியங்கள் எதனைச் செய்தாலும் முக்தியடைதல் முடியாது. பிரம்ம வித்தையினால் தான் ஆன்ம ஞானத்தினால்தான் கிருதார்த்தனாக முடியும் என்று பகவான், 'ஏதத் புத்த்வா புத்திமான்

ஸ்யாத் க்ருதக்ருத்யஸ்ச' என்று மிகத் தெளிவாகக் கூறியுள்ளார். எனவே கிருதார்த்தர்கள் ஆக, முக்தர்கள் ஆக நினைப்போர், பிறவிப் பெருங்கடலைக் கடக்க நினைப்போர், இறைவனின் இவ்வாக்கியத்தில் முழு நம்பிக்கை வைத்து கீதையில் சொல்லப்பட்ட இறை இரகசியத்தினை நன்கு கற்று பயிற்சி செய்து வரல் வேண்டும். அங்ஙனம் செய்யாது மரணமடைந்தால் பிறவித் தொடர் அவர்களை விடாது. துக்கம் அவர்களைத் தொடர்ந்து கொண்டேயிருக்கும்.

**வினா :** இறைவன் போதித்த இவ்வத்தியாய சாஸ்திரம் எத்தகையது?

**விடை :** மிகவும் இரகசியமானது (குஹ்யதமம்)

**வினா :** அதனை அர்ஜுனனுக்கே ஏன் போதித்தார்?

**விடை :** அவன் பாவங்களற்றவன் (அனகன்) ஆதலால்.

**வினா :** இப்போதனையை அறிவதால் ஏற்படும் பலன் என்ன?

**விடை :** அதனை அறிவதால் மனிதன் (1) ஞானவானாகவும் (2) கிருதார்த்தனாகவும் ஆவான்.

**வினா :** எனவே ஞானவான் ஆவதற்கு, கிருதார்த்தன் ஆவதற்கான உபாயம் என்னவெனத் தெரிகின்றது?

**விடை :** இறைவன் போதித்த இவ்வான்மீக இரகசியத்தை நன்கு பயின்று பின்பற்றுதலே அதற்கான உபாயம்.

ஓம்

இது உபநிஷத்து, பிரம்ம வித்தை யோக சாஸ்திரம் இவற்றைப் புகட்டுவதும், ஸ்ரீ கிருஷ்ணார்ஜுன சம்வாதமாக வந்துள்ளதுமாகிய பகவத்கீதையில் புருஷோத்தமயோகமெனும் பதினைந்தாம் அத்தியாயம்.

ஓம் தத் ஸத்

